# நமது
# நியாயமற்ற
# அனுகூலம்

உங்கள் தொழிலில் பரிசுத்த
ஆவியானவரின் வல்லமையை
கட்டவிழ்த்துவிடுங்கள்


## டாக்டர் ஜிம் ஹாரிஸ்

“The Impacter” நூலாசிரியர்

# நமது நியாயமற்ற அனுகூலம்

உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியானவரின்
வல்லமையை கட்டவிழ்த்துவிடுங்கள்

## நமது நியாயமற்ற அனுகூலம் புத்தகத்திற்கான பாராட்டு

"பரிசுத்த ஆவியானவருடன் எவ்வாறு பங்கேற்பது என்பதைக்குறித்த டாக்டர் ஜிம் அவர்களின் போதனைகளை நமது நியாயமற்ற அனுகூலமாக பயன்படுத்துவதால், உங்களுடைய பணி வாழ்வில் ஒரு பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கலாம்."

**— எல். ஹெய்ன்,**
கலிஃபோர்னியா, அமெரிக்கா

“உள்ளத்தில் வசிக்கும் பரிசுத்த ஆவியின் ஆற்றலுக்குள் நாங்கள் பலரும் நுழைந்து, எங்கள் வணிக நோக்கை முழுமையாக நிறைவேற்றுவதற்கான பாதைக்கு நீங்கள் வழி வகுத்திருக்கிறீர்கள்.”

**— எஸ். ஹார்டி,**
எமரால்ட் தீவு, அயர்லாந்து

“பரிசுத்த ஆவியானவரைப் பற்றிய இவ்வளவு பயனுள்ள, நடைமுறை புத்தகத்தை நான் இதுவரை கடந்து வந்ததே இல்லை. இந்தப் புத்தகத்தின் தாக்கத்தை நான் ஏற்கனவே உணர்கிறேன். இதைப் பரவலாக பரிந்துரைப்பேன் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவு அவசியமான செய்தியை எழுதியதற்கு நன்றி! நன்றி!”

**— ஏ. ஹீல்,**
ஆஸ்திரேலியா

“உங்கள் ஆழமான பார்வைகள் என் வணிக முன்னேற்றத்தை துரிதமாகவும், நான் சேவை செய்யும் மக்களிடம் அதிக தாக்கத்தை ஏற்படுத்தவும் உதவியுள்ளது — இதனால் எனக்கு தனிப்பட்ட மற்றும் தொழில்முறை நிறைவு கிடைத்துள்ளது. எவ்வளவு எளிமையாகவும், அதேசமயம் ஆழமாகவும்

விஷயங்களை எடுத்துரைக்கிறீர்கள் என்பதற்கு எனது பாராட்டுக்கள்.”

**— எம். சொலோ,**

ஆப்ரிக்கா

"ஒரு வழக்கறிஞராக, நான் நமது நியாயமற்ற அனுகூலம் என்ற உங்கள் புத்தகத்தின் கொள்கைகளை தினமும் காலை, வேலைக்கு செல்லும் முன் பயன்படுத்துகிறேன். சமீபத்தில், உங்கள் புத்தகத்தை ஒரு நீதிமன்ற வழக்கில் நடைமுறைப்படுத்தினேன். நீதிமன்றத்திற்கும், வழக்குரைஞர் அலுவலகத்திற்கும் இடையிலான கலந்துரையாடல் அறையில், அடையாளங்களும் அதிசயங்களும் வெளிப்பட்டன. இப்போது, நான் வேலை இடத்தில் சந்திக்கும் அனைவருக்கும் உங்கள் புத்தகத்தை பரிந்துரைக்கிறேன்."

**— எஸ். வில்லியம்ஸ்,**

அரிசோனா, அமெரிக்கா

"இந்தப் புத்தகம் ஒரு பொக்கிஷம். மிக அழகாக எழுதப்பட்டுள்ளது, வேதாகமத்தோடு ஒத்திசைவானது, படிக்க எளிதானது. இதில் உள்ள பயிற்சிகள் மற்றும் குழு கலந்துரையாடல் கேள்விகள் மிகப் பயனுள்ளவை."

**— சி. லுட்ஸ்,**

சூரிச் , சுவிட்சர்லாந்து

"நமது நியாயமற்ற அனுகூலம் புத்தகம், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுதல் என்னும் நிலைக்குலையாத சத்தியத்தை, புதிய சிந்தனையுடனும் புத்துயிர்ப்புடனும் முன்வைக்கிறது."

**— எஸ். சாட்டர்ஃபீல்ட்,**

ஜார்ஜியா, அமெரிக்கா

"இந்த அற்புதமான புத்தகத்தில், டாக்டர் ஜிம், கடவுள் சந்தைத் துறையில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு, காலத்தால் அழியாத வணிகக் கொள்கைகள் கொண்ட

விதிமுறைகள் அடங்கிய புத்தகத்தை மட்டுமல்ல, அதைவிட மேலான ஒன்றை வழங்குகிறார் என்பதை கற்பிக்கிறார். சந்தையில், நமது நியாயமற்ற அனுகூலமாகிய பரிசுத்த ஆவியானவருக்கு என் வணிகத்தின் மீது அதிக கட்டுப்பாட்டைக் கொடுக்க அவர் எனக்கு உதவினார்."

**— டி. ஷியரர்,**

நார்த் கரோலினா, அமெரிக்கா

# நமது நியாயமற்ற அனுகூலம்

உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியானவரின்
வல்லமையை கட்டவிழ்த்துவிடுங்கள்

**டாக்டர் ஜிம் ஹாரிஸ்**

HIGH BRIDGE
BOOKS & MEDIA

நமது நியாயமற்ற அனுகூலம் :
உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை கட்டவிழ்த்துவிடுங்கள்
- டாக்டர் ஜிம் ஹாரிஸ்
அமெரிக்காவில் அச்சிடப்பட்டது

ISBN (பேப்பர்பேக்): 978-1-940024-47-9
ISBN (மின்புத்தகம்): 978-1-940024-48-6
பதிப்புரிமை 2015 & 2024 - டாக்டர் ஜிம் ஹாரிஸ்

இந்தப் புத்தகம், தேவனுடைய சத்தத்தை எவ்வாறு கேட்க வேண்டும் என்பதை வணிகத்துறையினர் கற்றுக்கொள்ள உதவும் ஒரு கருவியாக, பரிசுத்த ஆவியால் உந்துதல் பெற்றது. இது உலகத்துடன் பகிர்ந்து கொள்ளப்படும் ஒரு விதையாகும். ஆகையால், இப்புத்தகத்தில் உள்ள பகுதிகளையும், போதனைகளையும், நீங்கள் விரும்பும் எந்த விதத்திலும் பகிர்ந்து கொள்ள முழு அனுமதியையும் உங்களுக்கு அளிக்கிறோம். ஏனெனில், இந்தப் பாடங்கள் நல்ல நிலத்தில் விதைக்கப்படும் போது, இயேசு உலகெங்கும் தம் ராஜ்யத்திற்காக ஒரு பெரிய அறுவடை பெறுவார்.

ஹை பிரிட்ஜ் புத்தகங்கள் நிறுவனத்தின் புத்தகங்களை கல்வி, வணிகம், நிதி திரட்டல் அல்லது விற்பனை ஊக்குவிப்பு போன்ற தேவைகளுக்காக அதிக அளவில் வாங்கிக் கொள்ளலாம். மேலும் தகவலுக்கு, www.HighBridgeBooks.com/contact என்ற முகவரி மூலம் தொடர்பு கொள்ளவும்.

அனைத்து வரையறைகளும் Merriam-Webster, Incorporated நிறுவனத்தின் 2015 பதிப்புரிமை கொண்ட டிஜிட்டல் பயன்பாட்டிலிருந்து எடுக்கப்பட்டவை.

வேதாகம மேற்கோள்கள் தமிழ் வேதாகமத்திலிருந்து எடுக்கப்பட்டவை.

அட்டை வடிவமைப்பு: High Bridge Books
ஹூஸ்டன், டெக்சாஸ் நகரில் High Bridge Books மூலம் வெளியிடப்பட்டது

# உள்ளடக்கம்

அறிமுகம் ______ 1

1. எது உங்களை வழிநடத்துகிறது? ______ 3
2. பெரிய நகர்வு ______ 25
3. வழித்தடைகள் ______ 45
4. ஆயத்தமாவது எப்படி ______ 67
5. உங்கள் நியமற்ற அனுகூலத்தை கட்டவிழ்த்துவிடுங்கள் ______ 105
6. தொடருங்கள் ______ 187

1001 கேள்விகளுக்கான பதில் ______ 209
முக்கிய வேத வசனங்கள் ______ 211
ஒரு அழைப்பு ______ 217

# நன்றியுரை

முதன்மையாகவும் முக்கியமாகவும், இந்தப் புத்தகத்தை எழுதுவதில் என்னை வழிநடத்தியதற்காக, என் தேவனாகிய இரட்சகர் இயேசுவுக்கும், பரிசுத் ஆவியானவருக்கும் நான் நன்றி தெரிவிக்கிறேன். என் ஒரே விருப்பம், உமது வார்த்தைகளை நம்பிக்கையுடன் பதிவு செய்து, உமது எழுதுகோலாக இருப்பதே. இந்தப் புத்தகம் உமக்கு பிரியமானதாக இருக்கட்டும்.

என்றும் என்னோடு இருக்கும் எனது மனைவியும், என் வாழ்க்கைத் துணையுமான பிரெண்டாவுக்கும் — அவள் தடுக்க முடியாத ஒரு ஆவிக்குரிய போர்வீரராக வளர்ந்திருக்கிறாள் — என் நன்றிகள். நீயும், உன்னுடைய முடிவில்லாத ஆதரவும் இல்லாமல், ஆண்டவரால் எனக்கு கொடுக்கப்பட்ட அழைப்பை நிறைவேற்ற முடியாது. பரலோகம் வரை பெருமையுடன் உன் கையை பிடித்துக் கொண்டு செல்வேன்!

என் நெருங்கிய நண்பரும் ஆவிக்குரிய சகோதரனுமான கைல் வின்க்லருக்கு ஒரு சிறப்பு நன்றி. அவரின் அமைதியான ஆவி, ஆழ்ந்த அறிவு, நிலையான சாட்சியம் ஆகியவை, பல ஆண்டுகளாக என்னை வழிநடத்தி, கற்றுக் கொடுத்து, உற்சாகப்படுத்தி வருகின்றன.

பெரும் நன்றிகளை ஆயர்களான ஆர்னி மெக்கால், பியூஃபோர்டு லிப்ஸ்கோம், ரிக் மற்றும் ஜெனிஃபர் கர்ரி ஆகியோருக்கு சொல்கிறேன்— கடுமையான சோதனைகளில், வேகமான ஆவிக்குரிய வளர்ச்சியில், மற்றும் பரிசுத்த ஆவியுடன் நிகழ்ந்த மகிமையான சந்திப்புகளில் அவர்களின் ஆவிக்குரிய வழிகாட்டல் மற்றும் ஆலோசனைகளுக்கு நன்றி சொல்லுகிறேன்.

மேலும், என் ஆவிக்குரிய வழிகாட்டிகளும், கிறிஸ்துவில் நெருங்கிய சகோதரர்களுமான பென் வாட்ஸ், டோனி சாவேஸ், மற்றும் ஸ்டீவ் ஜோன்ஸ் — உங்களுக்கும் நன்றி.

High Bridge Books நிறுவனத்தின் டாரன் ஷீரர் -ன் அற்புதமான திருத்தம், புத்தக வெளியீடு, மற்றும் சந்தைப்படுத்தல் உழைப்புக்கு மிக்க நன்றி. நீங்கள் உண்மையிலேயே சிறந்தவர்!

இறுதியாக, மிசோரி மாநிலத்தின் பிரான்சன் நகரிலும், ஃப்ளோரிடா மாநிலத்தின் சரசோட்டா நகரிலும் அமைந்துள்ள Faith Life Church-இன் போதகர் கீத் மூர் அவர்களுக்கு மிகுந்த நன்றியைச் செலுத்த விரும்புகிறேன். வெறும் இரண்டு ஆண்டுகளில், உங்கள் பிரசங்கத் தொடர்களும் Word Life Supply ஊழியமும், நான் கடந்த 60 ஆண்டுகள் தேவாலயத்தில் கற்றதை விட என் விசுவாசத்தை அளவுகடந்து வளர்த்துவிட்டன. இந்தப் புத்தகத்தின் பெரும்பாலான பகுதிகள், உங்கள் போதனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் எனக்கு வெளிப்படுத்தப்பட்டவையே. உங்களுக்கும், உங்கள் ஊழியத்திற்கும், நான் என்றும் நன்றியுடன் இருப்பேன்.

*தங்கள் வணிகத்தின் மூலம் தேவனை*
*மகிமைப்படுத்த*
*மனதார விரும்புகிறவர்களுக்கு.*

# அறிமுகம்

நீங்கள் கடும் லாபம் நோக்கி இயங்கும் நிறுவனத்தில் வேலை பார்க்கின்றீர்கள் மற்றும் அங்கு உள்ள தலைமைக்குழு தங்கள் வணிகத்தில் தேவனுக்கு மகிமை செய்ய விரும்புகிறார்கள் என்றால், இந்த புத்தகம் உங்களுக்காகவே!

இந்த புத்தகத்தின் இலக்கு-வாசகர்கள் என்னால் “2%ர்” என்று அழைக்கப்படுகிறார்கள். 2%ர் என்பது வணிகத்தில் பரிசுத்த ஆவியானவர் மூலம் வழிநடத்தப்படுபவர்கள், தங்கள் வணிக செயல்களில் அனைத்திலும் இறைவனின் ஆவியால் வழிநடத்தப்பட விரும்பும் ஆண் அல்லது பெண்.

ஒரு 2%ராக, உங்கள் சந்தையில் உங்களுக்கு கிடைக்கும் எல்லாத் திறன்களையும் மீறிய, அற்புதமான மற்றும் அதிர்ஷ்டமான ஒரு நியாயமற்ற அனுகூலத்தை நீங்கள் இவ்வளவு நாள் முழுமையாக பயன்படுத்தவில்லை என்றே நான் கருதுகிறேன்.

இந்த புத்தகத்தின் நோக்கம், தேவனுக்கு மகிமையாக உங்கள் வணிகத்தில் உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை வெளிப்படுத்துவதற்கு உதவுவதாகும்!

இசையமைப்பாளர் கீத் கிறீன் ஒருமுறை இவ்வாறு கூறினார்:

> “யாராவது ஒரு சிறந்த கதை எழுதினால், மக்கள் கலைஞரை பாராட்டுவார்கள், பேனாவை அல்ல. மக்கள் ‘அருமையான பேனா… இதைப் போன்ற பேனாவை எங்கே பெறலாம் என்று’ சொல்வதில்லை. நான் இறைவனின் கையில் உள்ள ஒரு பேனா மட்டுமே. அவர்தான் நூலாசிரியர். எல்லா புகழும் அவருக்கே உரியது.”

கீத் கிறீன் போல், நான் ஒரு பேனா மட்டுமே. இந்த புத்தகம் உங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்தும் எந்தவொரு தாக்கத்திற்கும், எல்லா புகழும் தேவனுக்கே செல்வதாக ஆகட்டும்!

—டாக்டர் ஜிம்.

# 1

# எது உங்களை வழிநடத்துகிறது?

*கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்.*

— யோசுவா 24:15.

எல்லாரும் ஏதோ ஒன்றால் வழிநடத்தப்படுகிறோம். அது உங்களுக்கு வெளிப்படையாக தெரிந்தாலும், தெரியாவிட்டாலும் — இந்தக் கணமே ஏதோ ஒன்று உங்களை வழிநடத்துகிறது. அது ஒரு கப்பலின் சுக்கானைப் போல உங்கள் திசையை வழிநடத்துகிறது; உங்கள் பயண திசையை நிர்ணயிக்கிறது; உங்கள் வாழ்க்கையை ஆழமாகப் பாதிக்கிறது. இறுதியில் உங்கள் வாழ்வில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

குழந்தையாக இருந்தபோது, உங்கள் பெற்றோர் அல்லது பராமரிப்பாளர்கள் உங்களுக்கு உணவு, உடை, மற்றும் இருப்பிடம் கொடுத்தார்கள். எது ஏற்புடையது, எது உங்களிடம் எதிர்பாக்கப்படுகிறது என்று கற்றுத்தந்தார்கள். உங்கள் பெற்றோர் உங்களை பாதுகாத்தார்கள், பராமரித்தார்கள், சில நேரங்களில் அன்பின் மிகுதியால் வழிவிலகச் செய்தார்கள். உங்கள் ஆரம்பக் கட்ட வளர்ச்சி காலங்களில் முதன்மையாக உங்களை வழிநடத்தியது உங்கள் பெற்றோர்தான்.

நீங்கள் பள்ளிக்குச் செல்லத் தொடங்கிய பிறகு, உங்களை வழிநடத்த பலரும் ஈடுபட்டிருக்கிறார்கள் என்பதை விரைவில் அறிந்துகொண்டீர்கள். உங்கள் நேரடி குடும்பத்தையும் அருகிலுள்ள சுற்றத்தையும் தாண்டி மற்றவர்களுடன் வாழ்வது எப்படி என்பதைப் பற்றிய புதியதும், சில நேரங்களில் அசௌகரியமான உண்மைகளை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்படீர்கள்.

நீங்கள் மேல்நிலைப்பள்ளி படிப்போ அல்லது கல்லூரி படிப்போ துவங்கியபோது, இந்த வெளிப்புறத் தாக்கம் தொடர்ந்து அதிகரித்துகொண்டே இருந்தது. கலவையான சமிக்கைகளை கொண்ட பல்வேறு குரல்கள் உங்களை வழிநடத்தத் தொடங்கி, அவைகள் உங்கள் நடத்தையை பாதிக்கின்றதான பல்வேறு அளவிலான அழுத்தங்களை போட்டது.

நீங்கள் இதை அறிந்துகொள்ளுவதற்கு முன்னமே, நீங்கள் வேலைபார்க்கும் அலுவலகத்திலிருக்கும் முதலாளிகள், உங்கள் வருங்கால மனைவிகள், வாழ்விணையர்கள், உங்களின் வாடிக்கையாளர்கள், சந்தைப்படுத்தும் நிபுணர்கள் போன்ற அநேக குரல்கள் உங்களை வழிநடத்த விரும்பி, உங்களை நிஜ உலகிற்குள்ளாக தூக்கி எரிந்து விடுகிறார்கள்.

இதில் கவனிக்கப்படவேண்டிய முக்கியமான விடையம் என்னவென்றால்: நீங்களும், நானும் ஏதோ ஒன்றால் வழிநடத்தப்படுகிறோம். நீங்கள் எதனால் வழிநடத்தப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கிறீர்களோ,

அதுவே உங்கள் வாழ்க்கை முழுவதிலும் — தற்காலிகமாக இருந்தாலும் சரி, அல்லது நிரந்தரமானதாக இருந்தாலும் சரி, ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தும். இது உங்கள் வியாபார அல்லது தொழில் வாழ்க்கையையும் சேர்த்தே பாதிக்கும்.

இந்தப் புத்தகத்தின் உரிமையாளராக இருக்கும் நீங்கள், உங்கள் வியாபாரத்தில் நிச்சயமாக ஒரு தலைவராக இருக்க வாய்ப்பு உள்ளது. நீங்கள் உங்கள் வியாபாரத்தில் உச்சநிலையில் இருக்கிறீர்களா, நடுவில் இருக்கிறீர்களா, அல்லது இன்னும் துவக்க நிலையில் இருக்கிறீர்களா என்பது முக்கியமில்லை. நீங்கள் எந்த நிலையிலிருந்தாலும், நீங்கள் பிறரின் வாழ்க்கையில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டவராக இருக்கிறீர்கள். ஆகையால், உங்களுக்குள், வழிநடத்தும் ஆற்றலும், மற்றவர்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் தலைமைத்துவ தாக்கமும், பெரிய சாத்தியங்களும் உள்ளன என்பது உறுதி.

## ஒரு தலைவர் செய்வது என்ன

இந்த புத்தகத்தின் முதல் பதிப்பின்படி (6/17/15), amazon.com பட்டியலின்படி,

- "வணிகப் புத்தகங்களுக்கு" – 43,03,934 முடிவுகள்
- "தலைமைத் திறனுக்கான புத்தகங்களுக்கு" – 1,78,180 முடிவுகள்
- "வணிகத் தலைமைக்கான புத்தகங்களுக்கு" – 25,511 முடிவுகள்
- கடந்த நாட்களில் 744 புதிய வெளியீடுகள் மற்றும் 180 விரைவில்

இந்த புத்தகங்களில் 98% அல்லது அதற்கு மேற்பட்டவை, ஒரு தலைவராக மற்றவர்களை எப்படி வழிநடத்த வேண்டும் என்பதற்கான 5, 7, 10 அல்லது 21

மிக முக்கியமான பண்புகள், திறன்கள் அல்லது தகுதிகள், ஒருவரின் அனுபவத்தின் அடிப்படையில் பகிரப்பட்டிருக்கும் என்று மிக நிச்சயமாக என்னால் சொல்லமுடியும். அவர்கள் பயன்படுத்திய சிறந்த நடைமுறை ரகசியங்களை பகிர்வதன் வாயிலாக, நீங்களும் அவர்களைப்போல் ஒரு தலைவராக உருவாக முடியும் எனக் கூறுகிறார்கள்.

கடந்த 30 ஆண்டுகளில், தலைமைத்திறனைப் பற்றிய ஆயிரக்கணக்கான புத்தகங்களையும் கட்டுரைகளையும் நான் வாசித்துள்ளேன். என் நூலகத்தில் உள்ள புத்தகங்களில் சிறந்தவற்றைத் தேடி, அவற்றின் உள்ளடக்கம் மற்றும் முக்கியக் குறிப்புகளை ஆராயும்போது, பல புத்தகங்கள் ஒரேமாதிரியான குறிப்புகளை ஒலிக்கிறதாகக் காணப்படுகிறது. அதில் பெரும்பாலானவை ஒரே மாதிரியான சிந்தனைகளையும், கருத்துகளையும் கொண்டிருக்கின்றன — வெறுமனே, எடுத்துரைக்கப்பட்ட முறைதான் மாறுபட்டிருக்கிறது.

ஒரு சிறந்த தலைவர் என்ன செய்வார் என்பதைப் பற்றி தினமும் எழுதப்படும் வலைப்பதிவுகள், குறுஞ்செய்திகள் மற்றும் பதிவுகளின் எண்ணிக்கையை நான் குறிப்பிட வேண்டுமா? என்று எண்ணுகையில், நான் ஏற்கனவே குறிப்பிட்டுவிட்டேன் என்று எண்ணுகிறேன்.

இன்று எல்லோருக்கும் எப்படிப்பட்டதான தலைவர் வேண்டும் என்பதைக்குறித்து மற்றவர்கள் சொல்வதும், குறிப்பிடுவதும், சிந்திப்பதும், அறிவிப்பதுமான விடையங்களை எல்லாம் நாம் கேட்ட, அதிகமான தகவல்களால் நிரம்பி நிற்கும் நிலையில் இருக்கிறோம்.

இப்படிப்பட்டதான சுவரிஷியமும், சில சமயங்களில் ஆழமான உள்ளடக்கத்துடனும் இருக்கும் படைப்புகள் எல்லாம், ஒரு முக்கியமான அல்லது நெருக்கடியான கேள்வியை எழுப்புகிறது: ஒரு தலைவர் செய்வது என்ன?

இது முற்றிலும் தவறான கேள்வியாகும். ஒரு தலைவர் செய்வது என்ன? அதாவது, அவர் நடந்துகொள்ளும் போக்கு, தொடர்பு கொள்ளும் நடைமுறை,

முடிவெடுக்கும் திறன் போன்றவை நீங்கள் அறிய வேண்டிய மிக முக்கியமான விடையங்கள் இல்லை. இதைவிட ஆழமானதும், இன்றியமையாததுமான மற்றோரு கேள்வி உண்டு — ஆனால் பெரும்பாலும் அதை யாரும் கேட்பது இல்லை.

## சரியான கேள்வி

இன்றைய தலைமையியல் தொடர்பான அனைத்து எழுத்துக்களையும் போதனைகளையும் நான் கவனமாக ஆராய்ந்தபோதும், உண்மையான மற்றும் சரியான கேள்வியை நேரடியாக எடுத்துரைக்கும் எதையும் என்னால் கண்டெடுக்க முடியவில்லை.

சரியான கேள்விக்கான பதில்தான் தவிர்க்கமுடியாத வகையில், ஒரு தலைவர் என்பது யார் என்றும், அவர் முன்னின்று வழிநடத்தும் ஒவ்வொருவருடைய எதிர்கால பாதையையும், இன்னும் சொல்லப்போனால் அவர்களுடைய விதியையும் நிர்ணயிக்கிறது.

இந்த இடத்தில கேட்கவேண்டிய சரியான கேள்வி என்பது, தலைவரை எது வழிநடத்துகிறது?

இப்போது சில தனி மனிதர் சார்ந்த கேள்விகளை பார்க்கலாம். நீங்கள் எப்போதாவது

- உங்களை தலைவராக மாற்றியது என்னவென்று யோசித்ததுண்டா?
- உங்களுடைய தலைமைப் பண்பு என்பது எதை சார்ந்து இருக்கின்றது என்று சற்றே பின்னோக்கி சென்று மதிப்பீடு செய்ததுண்டா?
- ஒரு வணிகம் செய்கிற நபராக உங்களை உண்மையாக வழிநடத்துவது எது என்பதை குறித்து சிந்தித்ததுண்டா?

உங்களை வழிநடத்துகிறது எதுவோ, அது இறுதியில் உங்கள் தலைமைத்துவத்திலும் மற்றும் உங்கள்

வியாபாரத்தில் நீங்கள் வகிக்கும் பங்கிலும் வெளிப்படுகிறது.

உங்களை வழிநடத்துவது எதுவோ, அதுதான் உங்களின் வேலைசெய்யும் திறன், வெற்றி பெறும் சக்தி, மற்றும் ஒரு மரபை விட்டுச் செல்லும் ஆற்றலின் அடிப்படையாக இருக்கிறது.

நீங்கள் இப்போது கேட்கப்போகும் கேள்வி என்பது அதிர்ச்சியூட்டுவதாகவோ, அல்லது தேவையில்லாத எச்சரிக்கையை எழுப்புவது போல தோன்றலாம். எப்படி இருந்தாலும் இந்தக் கேள்வியை நீங்கள் கேட்டுதான் ஆகவேண்டும். இறுதியில், உங்களை வழிநடத்துவது என்ன? அதைச் செய்த பிறகு மட்டுமே, உங்கள் தலைமைத் திறனை முன்னெடுக்க அதே பாதையில் தொடரவேண்டுமா, அல்லது அதைவிட ஆழமானதும் உற்சாகமூட்டும் புதிய பாணியில் பயணிக்க வேண்டுமா என்பதை சரியாகத் தீர்மானிக்க முடியும்.

நான் உங்களை ஒரு தீவிரமான மற்றும் வாழ்க்கையை மாற்றக்கூடியதுமான தலைமைத் தீர்மானத்தை எடுக்கச் சொல்லுவதற்கு முன், தலைவர்கள் வழிநடத்தப்படும் பொதுவான வழிகளில் சிலவற்றைப் பார்ப்போம்.

## 1.1 வணிக தலைவர்களை வழிநடத்தும் ஒன்பது பொதுவான வழிமுறைகள்

வணிகத் தலைவர்களை வழிநடத்தக்கூடிய நூற்றுக்கும் மேற்பட்ட வழிமுறைகளை எளிதாக பட்டியலிடலாம். ஆனால் பெரும்பாலும் அவை பின்வரும் வகைகளில் ஒன்றிற்குள்தான் அடங்குகின்றன.

இந்த பட்டியல்தான் “உங்களை வழிநடத்துவது என்ன?” என்று நான் குறிப்பிடும் பகுதிகளாகும். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக வணிகத் துறையில், எனக்கு கிடைக்கப்பெற்ற அனுபவத்தில், நான் கண்ட தலைவர்களை வழிநடத்தும் மிக முக்கியமான குறிப்புக்கள் தான் இவை.

*குறிப்பு: இந்தப் புத்தகத்தை எழுதும் போது, ஒவ்வொரு வகையையும் பிரதிபலிக்கும் தலைவர்கள் கூறிய வரிகளைப் பற்றி என் வலைப்பதிவு வாசகர்களிடம் கருத்துகள் கேட்டு இருந்தேன். அவர்களில் சிலருடைய கருத்துகளை மட்டும் இங்கு சேர்த்துள்ளேன். ஒவ்வொரு கருத்துரையாளர் கூட இந்தப் புத்தகத்தின் ஒரு இலவச பிரதியை பெறுவார்கள். பாருங்கள்... என் செய்திமடலுக்கு சந்தாதாரராகி, www.DrJimHarris.com-இல் என்னுடன் இணைவதன் வாயிலாக உங்களால் பயன் பெற முடியும்.*

## *1: நுண்மதியினால் வழிநடத்தப்படுதல்*

நுண்மதியின் மூலமாக வழிநடத்தப்படும் தலைவர்கள் தங்கள் மூளையைப் பயன்படுத்தி எல்லாவற்றையும் பகுப்பாய்வு செய்கிறார்கள். இவர்கள் அதிகமான அறிவு, தகவல், அறிக்கைகள் மற்றும் பகுப்பாய்வுகளைத் தேடுகிறார்கள். இறுதித் தீர்மானங்களை எடுப்பதற்குத் தர்க்கம் மற்றும் கணக்குப்பதிவுகளை நம்புகிறார்கள்.

இவ்வகைத் தலைவர்கள் பெரும்பாலும் தாங்கள் பகுப்பாய்வு செய்யும் திறன் மற்றும் விமர்சன சிந்தனை போன்ற ஆற்றலைப் பெரிதும் நம்பும் பழக்கத்தில் உள்ளவர்களாக இருக்கிறார்கள். இது அவர்களது முதன்மை மற்றும் விருப்பமான செயல்வழியாக இருக்கிறது.

நுண்மதியின் மூலமாக வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- “அருமையான யோசனை. இவ்வாறு செய்யலாம்.”
- “கூடுதலான மற்றோரு அறிக்கையை எடுத்துப் பார்ப்போம்.”
- “எண்கள் பொய் சொல்லாது. எண்கள் என்ன சொல்கின்றன?”

- “ஏன் இதைப் பற்றி நான் யோசிக்கவில்லை?”
- “நீங்கள் சிந்திக்கும் முறை எனக்கு பிடித்திருக்கிறது.”
- “எண்களை எனக்குக் காண்பியுங்கள். நம்பிக்கையால் அல்ல, அறிவின் அடிப்படையில்தான் நாம் முடிவெடுக்கிறோம்.” (கர்ட் ஃபாவ்லர், வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *2: பணத்தினால் வழிநடத்தப்படுதல்*

பணத்தின் அடிப்படையில் வழிநடத்தப்படும் தலைவர்கள், தாங்கள் ஈட்டும் அல்லது இழக்கும் பணத்தின் அளவை மையமாகக் கொண்டு செயல்படுகிறார்கள். உலகளாவிய நிதி சந்தைகள் முழுவதும் பணத்தை முதன்மையாக கொண்டு வழிநடத்தப்படுகின்றன. இலாபத்தை மட்டுமே குறிக்கோளாக கொண்டு இயங்கும் வணிகத்தில், பணம் சம்பாதிப்பது என்பது ஒரு அத்தியாவசியமான தேவையே.

ஆனால், பணத்தின் அடிப்படையில் வழிநடத்தப்படும் தலைவர்கள், பணப்புழக்கம், இலாபம், மற்றும் வருவாய் மீதான இலாப அளவு ஆகியவற்றை அவர்களது தீர்மானிக்கும் ஒவ்வொரு வணிகத்திற்காக தலைசிறந்த காரணிகளாகப் பார்க்கின்றார்கள்.

பணத்தின் அடிப்படையில் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- “இதில் நம்மால் நிறைய பணம் சம்பாதிக்க முடியும்.”
- “இந்த இலாப விகிதங்கள் எனக்கு மிகவும் பிடிக்கிறது.”
- “நாம் இன்னும் எங்கே செலவைக் குறைக்கலாம்?”

- "ஈட்டப்படும் வருவாயின் தரத்தின் மீது எனக்குப் பற்றல்ல. எண்கள் என்றால் எண்கள் தான், நானும் என்னுடையதை சம்பாதிக்கவேண்டும்." (சிட்னி போஸ்டியன், வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *3: புதுமையினால் வழிநடத்தப்படுதல்*

புதுமையின் அடிப்படையில் வழிநடத்தப்படும் தலைவர்கள், தங்கள் வியாபாரத்தை வளர்க்க எப்போதும் புதிய தொழில்நுட்பம், டிஜிட்டல் அல்லது படைப்பாற்றல்மிக்க தளங்களைத் தேடி செயற்படுகிறார்கள். புதிய மேம்பாடு, செயலி, மென்பொருள், இணையதளம், சந்தைப்படுத்தும் நுட்பம் அல்லது தனித்துவமான கோட்பாடு பயன்பாட்டுக்கு வந்தால், அதில் அவர்கள் மிகவும் மயங்கி விடுகிறார்கள் — இன்னும்சொல்லப்போனால் உணர்ச்சி மிகுந்த உற்சாகத்துடன் அதைக் கொண்டாடுகிறார்கள்.

எவ்வாறாயினும், தொடர்ச்சியான வளர்ச்சிக்காக மேம்பாடுகள் தேவை என்பதில் சந்தேகமில்லை. ஆனால், புதுமையின் அடிப்படையில் வழிநடத்தப்படும் தலைவர்கள் பெரும்பாலும் "புதியது எது?" என்பதையே தங்களது ஒவ்வொரு முயற்சிக்கும் அடிப்படையாகக்கொண்டே செயல்படுவார்கள்.

புதுமையின் அடிப்படையில் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "எலான் மஸ்க் என்ன செய்வார்?"
- "இப்பொழுதே மேம்படுத்தவேண்டும், இல்லையென்றால் நாம் நம்முடைய சந்தையின் பங்கும், வாடிக்கையாளர்களின் நம்பகத்தன்மையும் இழக்க நேரிடும்!"

- "புதுமைப்படுத்து இல்லையென்றால் அழிந்துவிடு!"
- "சில நேரங்களில் வாடிக்கையாளர்கள் எங்கே செல்ல வேண்டும் என்று நாம்தான் அவர்களை வழிநடத்த வேண்டும்."
- "இது மிகவும் இலகுவானதாக இருக்கும்!"
- "இதில் என்ன புதிதும், உற்சாகமும் இருக்கிறது?" (ஜேசன் பைன், வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *4: வாய்ப்பினால் வழிநடத்தப்படுதல்*

வாய்ப்பினால் வழிநடத்தப்படும் தலைவர்கள் தங்கள் முன் திறந்து இருக்கும் எப்படிப்பட்ட வாய்ப்பாயிருந்தாலும் ஆர்வமுடன் அந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்வார்கள். அவர்களுடைய வியாபாரத்தை ஒரு புதிய உயரத்திற்கு கொண்டு செல்லக்கூடிய எந்த ஒரு பெரிய வாய்ப்பு, திட்டமிட்ட கூட்டமைப்பு, அல்லது எதிர்பாராத சந்தர்ப்பம் ஆகியவைகளில் அவர்கள் முழு கவனத்தையும் செலுத்துகிறார்கள்.

வாய்ப்பினால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "நம்மால் முடிந்த வரை கிடைக்கின்ற வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்."
- "இந்த வாய்ப்பை நாம் இழக்க முடியாது."
- "வாவ்! என்ன ஒரு திறந்த வாய்ப்பு! போகலாம்!"
- "உண்மையிலேயே, இந்த வாய்ப்பு நம்முடைய நிறுவனத்தின் தொலைநோக்கு பார்வைக்கு சற்றே உடன்படாமல்

இருக்கலாம், ஆனாலும் இது முயற்சிக்கத் தகுந்ததுதான் என நினைக்கிறேன்." (கர்ட் ஃபாவ்லர், வலைப்பதிவு கருத்துரையாளர்)

- "சுவரில் எவ்வளவு அதிகமாக எறிந்தோமோ, அவ்வளவு அதிகமாக ஒட்டும்." (ஷேரன் கென்றூ, வலைப்பதிவு கருத்துரையாளர்)
- "நான் நேரடியாக இதை செய்ய துணிந்தால்... அப்பொழுது அது நிச்சயமாக நடக்கும்!" (ஜீசஸ் எஸ்ட்ராடா, வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *5: விலையினால் வழிநடத்தப்படுதல்*

விலையினால் வழிநடத்தப்படும் தலைவர்கள், இரண்டாவது குறிப்பில் சொல்லப்பட்ட பணத்தினால் வழிநடத்தப்படும் தலைவர்களுக்கு நெருங்கிய தொடர்புடையவர்கள். ஆனால் இங்கே ஒரு சிறிய வேறுபாடு உள்ளது — பணம் எவ்வளவு சம்பாதிக்கலாம் என்பதில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, எவ்வளவு குறைவாகச் செலவழிக்கலாம் என்பதில்தான் இவர்கள் கவனம் செலுத்துகிறார்கள். இவர்கள் எப்போதும் குறைந்த விலையைக் நாடிச் செல்பவர்களாக இருக்கிறார்கள்.

விலையினால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "இந்த விஷயத்தில் நீங்க நிச்சயமாக உங்கள் கணக்கை கூர்மையாக்கணும்."
- "இது தான் சிறந்த தேர்வு, ஏனெனில் இவர்கள் தான் மிகக் குறைந்த விலைக்குத் தருகிறார்கள்." (டாரன் ஷீறர், வலைப்பதிவு கருத்துரையாளர்)

- “எந்த விதமான விற்பனை நடந்தாலும், அது நல்ல விற்பனைதான்.” (ஆரிக் ஜான்ஸன், வலைப்பதிவு கருத்துரையாளர்)
- “எல்லாமே பேரம் பேசிப்பார்க்கக் கூடிய விஷயம்தான்.” (ஹோவர்ட் ட்ரேக், வலைப்பதிவு கருத்துரையாளர்)
- “எங்களுக்கு குறைந்த விலை மற்றும் நல்ல தரம் ஆகிய இரண்டும் வேண்டும்!” (ஆஞ்சலின் தீயோ, வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *6: நிபுணர்களால் வழிநடத்தப்படுதல்*

நிபுணர்களால் வழிநடத்தப்படும் தலைவர்கள், சமீபத்திய மேலாளரியல் அல்லது தலைமைத் துறையின் புதிய போக்குகள் மூலம் எளிதில் வழிநடத்தப்படுகிறவர்கள். ஒரு பேச்சாளர், எழுத்தாளர் அல்லது ஆலோசகரிடமிருந்து வரும் புதிய, சிறந்த யோசனையை எப்போதும் தேடி கொண்டிருப்பவராக இருக்கிறார். இவ்வகை தலைவர்கள், அவ்வாறு தங்களுக்கு கிடைக்கும் “புதிய” வியாபாரக் கருத்து தங்களது வியாபாரத்தில் எப்படி பயன்படுத்தப்படவேண்டும், அல்லது பயன்படுத்தப்படவேண்டாமா என்பதைக்கூட ஆய்வு செய்யாமல், அதனை விரைவாகச் செயல்படுத்தி விடுவார்கள்.

ஆம், இந்த கருத்து எனக்கு கொஞ்சம் வலியை உண்டுபண்ணுகின்ற ஒன்று, ஏனெனில் நான் உலகம் முழுவதும் வியாபார நிபுணர்களிடம் பேசுகிறேன், எழுதுகிறேன், அவர்களை வழிநடத்துகிறேன். ஆனாலும், என் வியாபார கூட்டாளிகள் “நிபுணர்களால் வழிநடத்தப்பட வேண்டும்" என்று நான் விரும்புவதில்லை. அது நானாகவே இருந்தாலும் சரி!

நிபுணர்களால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "ஒரு வியாபார இதழில் ஒரு முக்கியமான கட்டுரை வந்திருக்கு··· அதன்படி நாமும் செய்யணும் என சொல்லுகிறார்கள்."
- "வியாபார மாநாட்டில் ஒரு அருமையான யோசனை கிடைத்தது··· அதன்படி நாம் செய்யலாம்!"
- "எங்கள் போட்டியாளர்கள் இந்த புதிய புத்தகத்தைப் வாசிக்கிறார்கள். இதோ உங்களுக்கான அந்த புதிய புத்தகத்தின் நகல். நாமும் அவர்களைப் போல் முன்னேற வேண்டும்."
- "ஒட்டுமொத்த தொழில் துறையும் இதை செய்கிறது."
- "இந்தத் துறையில் சிறந்த நிபுணரைத் தேடிப் பிடித்து அவரை அல்லது அவர்களை இங்கு கொண்டு வரலாம்."
- "[வியாபார நிபுணரின் பெயரை நிரப்புங்கள்] அவர்களின் கருத்துப்படி, நாமும் இதை செய்யக்கூடாதா?" (ஜேசன் பைன், வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *7: அழுத்தத்தினால் வழிநடத்தப்படுதல்*

அழுத்தத்தினால் வழிநடத்தப்படும் தலைவர்கள், அவசரநிலை அல்லது நெருக்கடி சூழ்நிலைகளில் வரும்போதுதான் சிறப்பாக வேலை செய்ய முடியும் என்று கூறுகிறார்கள். வேலை சரியாக நடக்கும்போதும் கூட, மற்றவர்களை அதிகம் வேலை செய்ய வைக்கும் நோக்கத்தில் தேவையில்லாத நெருக்கடி சூழ்நிலைகளை உருவாக்க விரும்புகிறார்கள்.

அழுத்தத்தினால் வழிநடத்தப்படும் தலைவர்கள், உள்நோக்கு இல்லாமலே மற்றவர்களுக்கு தேவையற்ற மற்றும் தொடர்பில்லாத அழுத்தங்களை ஏற்படுத்துகிறார்கள்.

அழுத்தத்தினால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "இதை இப்போதே செய்யணும்! எந்த தவிர்க்கும் காரணமும் வேண்டாம்!"
- "நேரம் என்பதுதான் பணம்; நாம் இனிமேலும் நேரத்தை வீணாக்க முடியாது."
- "தோல்வி என்பது ஒரு தேர்வே இல்லை."
- "அதை எப்படி செய்தாலும் பரவாயில்லை — ஆனா இப்போதே முடிக்கணும்!" (ஜேசன் பைன், வலைப்பதிவு கருத்துரையாளர்)
- "முழு வேகத்தில் செயல்படுங்க!" (ராபின்ஸ் டங்கன், வலைப்பதிவு கருத்துரையாளர்)
- "கடினமாக வேலை செய்து இதை முடிக்கணும். முடிந்ததற்கு பின்பு ஓய்வு எடுக்கலாம்." (ஆரிக் ஜான்ஸன், வலைப்பதிவு கருத்துரையாளர்)

## *8: உணர்வுகளினால் வழிநடத்தப்படுதல்*

உணர்வுகளினால் வழிநடத்தப்படும் தலைவர்கள், எந்த ஒரு நடவடிக்கைக்கும் முன் தங்களுடைய உணர்வுகளையும், உணர்ச்சி நிலைகளையும் தொடர்ந்து மதிப்பீடு செய்கிறார்கள். இத்தகைய தலைவர்கள் அச்சம், பதட்டம், உற்சாகம், நிம்மதி, அல்லது பாதுகாப்பு போன்ற உணர்வுகளால் ஆழமாக பாதிக்கப்படுகிறார்கள் — சில நேரங்களில் அது அவர்களை மித மிஞ்சிய நிலைக்கு கொண்டு செல்கிறது. உணர்வுகளால் வழிநடத்தப்படும்

தலைவர்கள் பலவீனமானவர்கள் அல்ல; ஆனால் சில சந்தர்ப்பங்களில், தங்களுடைய வியாபார அனுபவத்தையும் ஞானத்தையும் விட, உணர்ச்சிகளுக்கு முன்னுரிமை அளித்துவிடுகிறார்கள்.

உணர்வுகளினால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- "இவற்றைக்குறித்து எனக்கு பயமாக இருக்கிறது."
- "இதில் எனது மனது இல்லை."
- "இது வேதனையை உண்டுபண்ணும்."
- "அருமை! இதுபோல எனக்கு ஒருபோதும் உற்சாகம் இருந்ததே இல்லை."
- "இது எனக்கு உண்மையாகவே மகிழ்ச்சியை தருகிறது!"
- "நடந்தப்பின் வருத்தப்படுவதைவிட, முன்பே பாதுகாப்பாக இருப்பது நன்று!" (ராபின்ஸ் டங்கன், வலைப்பதிவு கருத்தாளர்)

## *9: பெருமையினால் வழிநடத்தப்படுதல்*

பெருமையினால் வழிநடத்தப்படும் தலைவர்கள் தங்களையும், தங்கள் நிறுவனத்தையும் சிறப்பு வாய்ந்ததும், வித்தியாசமானதும், தனிச்சிறப்புடையதுமாகக் கருதுகிறார்கள். அவர்கள் தங்களை மற்றும் தங்கள் செயல்களை மிகுந்த தீவிரமாக எடுத்துக் கொள்கிறார்கள். பெருமையினால் வழிநடத்தப்படும் தலைவர்கள் பெரும்பாலும் அகந்தையுடனும், நீதிமான்களைப் போல் நடக்கும் மனப்பான்மையுடனும் இருக்கிறார்கள். அவர்கள் தவறு இழைத்தாலும், யாரிடமும், எந்தக் குழுவினரிடமும் பின்னடைவதை மறுக்கிறார்கள்.

பெருமையினால் வழிநடத்தப்படும் வணிகத் தலைவர்கள் இவ்விதமாக சில விடையங்களை கூறுகிறார்கள்...

- “அதை நாம் செய்ய வேண்டியதில்லை. நாம் வேற மாதிரி.”
- “அவர்கள் முயற்சிக்கலாம். நமக்கு அவசியமில்லை.”
- “வெளியிலே என்ன நடக்குது என்று எங்களுக்கு தெரியும். நீங்க இங்கே அலுவலகத்தில் இருந்து உங்க வேலையைத் தொடருங்க.”
- “இதை நமது பாணியில் தான் செய்யணும்.”
- “என் வழி மட்டுமே இல்லையென்றால் வேற வழியே இல்லை!” (ஹாவர்ட் டிரேக், வலைப்பதிவு பகிர்வாளர்)

## *நேர்மையான பரீட்சை*

இவற்றைப் படிக்கும்போது, இந்த வகை தலைவர்களைப்போல ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர் போன்று இருக்கும் சிலரை நீங்கள் துரிதமாக கண்டுபிடித்திருப்பீர்கள் என்ற நிச்சயம் எனக்கு உண்டு. ஆனால் அதைவிட முக்கியமான கேள்வி: “இதில் நீங்கள் எங்கே இருக்கிறீர்கள்?”

இதோ உங்கள் தொடக்க புத்தகப் பயிற்சி. உங்களை வழிநடத்துவது எது என்பதை விவரிக்கக்கூடியதாக இருக்கும் பெட்டிகளில் குறியை இடுங்கள்.

- நுண்மதியினால் வழிநடத்தப்படுதல்
- பணத்தினால் வழிநடத்தப்படுதல்
- புதுமையினால் வழிநடத்தப்படுதல்
- வாய்ப்பினால் வழிநடத்தப்படுதல்
- விலையினால் வழிநடத்தப்படுதல்

- நிபுணர்களால் வழிநடத்தப்படுதல்
- அழுத்தத்தினால் வழிநடத்தப்படுதல்
- உணர்வுகளினால் வழிநடத்தப்படுதல்
- பெருமையினால் வழிநடத்தப்படுதல்

## 1.2. அச்சுறுத்தும் யதார்த்தம்

ஒரு நேரத்தில் என்றாலும், “உங்களை வழிநடத்துவது எது?” என்ற பட்டியிலுள்ள ஒன்று அல்லது அதற்கும் அதிகமானவை நம்மை வழிநடத்தியிருக்கின்றன. யதார்த்தமாக சொல்ல வேண்டுமானால், பெரும்பாலான நேரங்களில் நம்மில் பலர் பல்வேறு அம்சங்களின் கலவையாகவே இருக்கிறோம்.

இப்போது, தயவுகூர்ந்து இதைப் பற்றிச் சிந்தித்து பாருங்கள்.

“உங்களை வழிநடத்துவது எது?” என்ற ஒன்பது குறிப்புகளும், உலகம் முழுவதிலும் உள்ள 95% அல்லது அதற்கும் அதிகமான இலாப நோக்குடன் இயங்கும் நிறுவனங்கள் பின்பற்றும் குறிப்புகளாகும்.

இதை வேகமாக வாசித்துவிட்டு உடனே அடுத்து இருப்பதை வாசிக்க செல்லாதீர்கள். ஒரு நிமிடம் எடுத்துக்கொண்டு இந்த வாக்கியத்தை சற்று ஆழமாய் சிந்தியுங்கள்.

இந்த ஒன்பது குறிப்புகளும், உலகளாவிய அளவில் பெரும்பாலான வியாபார நிறுவனங்கள் எவ்வாறு வழிநடத்தப்படுகின்றன என்பதற்கான எளிய எடுத்துக்காட்டுகள் இருக்கின்றது. இயேசுவை நம்பும் கிறிஸ்தவ தொழில் முனைவோர் என்று தங்களை அழைப்பவர்கள்கூட இதைத்தான் பின்பற்றுகிறார்கள்!

ஒரே வார்த்தையில் சொல்லவேண்டுமென்றால், இன்றைய வியாபாரத் தலைவர்கள் "என்ன" என்ற வார்த்தையைக்கொண்டு வழிநடத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு எல்லாமே கருத்து, பணம், வாய்ப்பு,

புதுமை, விலை, நிபுணர்களின் யோசனைகள் போன்றவையே.

இந்த வகையான குறிப்புகளின் அடிப்படையில்தான் தொழிமுனைவோர் தங்களது முடிவுகளை எடுக்கிறார்கள், வியாபாரங்களை அமைக்கிறார்கள், மேலும் இறுதியில் தங்களது இலக்குகளை அடைகிறார்கள். துரதிஷ்டவசமாக, நாமும், அதாவது தொழிலில் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் 2% விசுவாசிகளும் மற்றவர்களைப்போலவே இருக்கிறோம். இந்த விடையத்தில் நமக்கும் மற்றவர்களுக்கும் எந்த வேறுபடும் இல்லை.

நாமும் பெரும்பாலும் இவ்வேறுபாடற்ற உலகியல் விஷயங்களால்தான் வழிநடத்தப்படுகிறோம் — நம்முடைய தேவன் மீது நம்பிக்கை இல்லாமல் இருக்கும் போட்டியாளர்களைப் போலவே. ஏன் இப்படி?

ஏனெனில் உலகின் வியாபார நடைமுறைகள் அதிகமாக பரவிய, வல்லமைமிக்க, மற்றும் நன்கு பயிற்சி பெற்ற அமைப்பாக இருப்பதாலே, அந்த வழிகளால் வழிநடத்தப்படாமல் இருப்பது சற்றே கடினமாக இருக்கிறது.

நாமும், நமக்கு தொழில் உள்ள போட்டியாளர்கள் போலவே, உலகத்தின் முறைகளால் கட்டுப்படுத்தப்படும் அனைத்து வியாபார யுக்திகள், புத்தகங்கள், பகுப்பாய்வுகள், சந்தைத் தகவல்கள் ஆகியவற்றிற்கும் இணையான அடைகிற வழியை கொண்டிருக்கிறோம். அதினால், நாமும் அவர்களைப் போலவே, நம்முடைய நிறுவனங்களை அதீதமாக ஈர்க்கும் உலகியல் வழிகளில் நடந்து, பெரும் சோதனைகளுக்கு அவர்கள் அடிபணிவதை போன்றே பாதிப்பை எதிர்கொள்ளும் அபாயத்திற்கு உட்பட்டவர்களாகவே இருக்கிறோம்.

இப்போது உண்மையிலேயே அச்சுறுத்தும் நிஜத்தை சொல்கிறேன்:

நீங்கள் உலகத்தின் வியாபார வழிகளால் வழிநடத்தப்படுகிறீர்கள் என்றால், உங்களுக்கு உங்கள்

போட்டியாளர்களை விட உங்களுக்கு எந்த விதமான அனுகூலமும் இருக்காது!

மேலே நான் கூறிய ஒன்பது வழிகளையும் மட்டுமே நீங்கள் நம்புகிறீர்கள் என்றால், வியாபாரத்தில் உங்களுக்கு நியாயமற்ற அனுகூலத்தைக் கொடுக்கக்கூடிய அந்த ஒரே விஷயத்தை நீங்கள் இழந்து விடுவீர்கள்.

இப்போது நீங்கள் என்னிடம் கேட்கும் கேள்வியை என்னால் உணர முடிகிறது. "அப்படியா Dr. Jim... அப்படின்னா, நான் என் நுண்மதியைப் பயன்படுத்தக்கூடாதா? வாய்ப்புகளைக் கவனிக்கக்கூடாதா? பணம் சம்பந்தமான விஷயங்களை யோசிக்கக்கூடாதா? இதை தான் நீங்கள் சொல்ல வருகிறீர்களா?"

இல்லை, இல்லை, இல்லை, இல்லை! மீண்டும் சொல்கிறேன் — இல்லை!

தேவன் உங்களுக்கு நுண்மதியையும், தெளிவான சிந்தனையையும் கொடுத்துள்ளார். அவர் உங்களுக்கு இவற்றை கொடுத்ததின் நோக்கம் என்னவென்றால், அதைக்கொண்டு நீங்கள் பகுத்தறிவும், யோசனை செய்யவும், திட்டமிடவும், வளர்ச்சி பெறவும் கொடுத்தார். அவர் உங்களுக்கு உணர்ச்சிகளையும் கொடுத்துள்ளார், மற்றவர்களின் நிலைமையை புரிந்துகொள்ளும் உணர்வையும் கொடுத்துள்ளார். நீங்கள் இவற்றை எல்லாம் பயன்படுத்த வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

ஆனால் இப்போது நான் உங்களிடம் திறம்பட சவால் விடுகின்றேன்: உங்கள் வியாபாரத்தில் நியாயமற்ற அனுகூலத்தை முழுமையாக வெளிப்படச் செய்யும் ஒரு பெரிய மாற்றத்தை மேற்கொள்ளுங்கள்.

இந்த மாற்றம் ஏன் "நியாயமற்றது" என்று அழைக்கப்படுகிறது? ஏன் இது ஒரு தனித்துவமான அனுகூலம்?

ஏனென்றால் இது ஒரு விஷயத்தை மட்டுமே அடிப்படையாகக் கொண்டது: நீங்கள் “என்ன” (What) என்பதனால் வழிநடத்தப்படுவது ...

> “உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்..” (1 யோவான் 2:15–16)

... என்பதிலிருந்து “யார்” (Who) என்பவரால் வழிநடத்தப்படுவது என்ற நிலைக்கு மாற்றுங்கள்!

> “மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.” (ரோமர் 8:14)

*அத்தியாயம் 1 — ஆய்வு வழிகாட்டி (Study Guide)*

உங்கள் வியாபாரத்தில், பொதுவாக உங்களை வழிநடத்தும் முக்கியமான மூன்று வழிகள் என்ன?

1.

2.

3.

பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவது உங்கள் வியாபாரத்திற்கு “நியாயமற்ற அனுகூலம்” என்ற வகையில் இருக்கலாம் என்று நீங்கள் முன்பு யோசித்ததுண்டா? இது ஏன் உங்கள் வாழ்க்கைக்கும், வியாபாரத்திற்கும் மிகப்பெரிய உறுதுணையாக இருக்கக்கூடும்?

நீங்கள் எழுதிய பட்டியலை வைத்து ஜெபியுங்கள். தேவனிடம், “பரிசுத்த ஆவியைத் தவிர வேறு எதாவது என்னை வழிநடத்தத் தொடங்கும்போது அதை அறிந்துக்கொள்ள உதவுங்கள்” என்று கேளுங்கள்.

# 2

# பெரிய நகர்வு

*நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அபொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.*

- யோவான் 14: 16-17

பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் அந்த 2% தொழித்துறையினராக வாழ நீங்கள் ஒரு பெரிய நகர்வை அல்லது மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும்!

அது ஒரு பெரிய நகர்வு — மிகவும் பெரிய நகர்வு! வியாபார உலகத்தில் "என்ன" என்பதைக்கொண்டு வழிநடத்தப்படுவதிலிருந்து, "தேவனுடைய ஆவியால்" வழிநடத்தப்படுவதற்கு மாறுகிற நகர்வு!

நான் இதை நன்கு அறிவேன். ஏனெனில் இந்த மிகப்பெரிய மாற்றத்தை நானும் செய்திருக்கிறேன். நுண்மதியினால் வழிநடத்தப்படுதல், பணத்தினால் வழிநடத்தப்படுதல், புதுமையினால் வழிநடத்தப்படுதல்,

வாய்ப்பினால் வழிநடத்தப்படுதல், விலையினால் வழிநடத்தப்படுதல், நிபுணர்களால் வழிநடத்தப்படுதல், அழுத்தத்தினால் வழிநடத்தப்படுதல், உணர்வுகளினால் வழிநடத்தப்படுதல், பெருமையினால் வழிநடத்தப்படுதல் என்பவைகளிலிருந்து முழுமையாகவும், முழுக்க முழுக்க ஆவியால் மட்டுமே வழிநடத்தப்படுவது எனும் நிலைக்கு நான் சென்றதொரு மகத்தான நகர்வு.

இந்த மாற்றத்தை இந்த உலகம், அதாவது இயேசுவின் மீது நம்பிக்கையற்ற தலைவர்கள் புரிந்து கொள்ள முடியாமல் இருக்கிறார்கள். அவர்கள் புரிந்து கொள்ள இயலாததுக்கு காரணம் அவர்களால் முடியாதது என்று அல்ல, மாறாக அவர்கள் இயேசுவில் மீது நம்பிக்கையற்றவர்களாக இருப்பதால்தான். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் உள்ளே வாசம்செய்யாத காரணத்தால்தான், இந்த "நியாயமற்ற அனுகூலத்தை" பெற்றுக்கொள்ளும் திறன் அவர்களுக்கு இல்லை.

இந்த பெரிய மாற்றத்தை நீங்கள் தொடங்கும் நேரத்தில், தேவன் உங்களை வழிநடத்தும் இரண்டு அடிப்படையான வழிகளை திரும்பிப் பார்த்து புரிந்துகொள்வது மிகவும் முக்கியம்.

> அவர் பிரதியுத்தரமாக: மனுஷன் அப்பத்தினாலேமாத்திரமல்ல, தேவனுடைய வாயிலிருந்து புறப்படுகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்தேயு 4:4)

> விவேகத்துடன் காரியத்தை நடப்பிக்கிறவன் நன்மைபெறுவான்; கர்த்தரை நம்புகிறவன் பாக்கியவான். (நீதிமொழிகள் 16:20)

தேவன் உங்களை வழிநடத்தும் முதல் வழி அவருடைய வார்த்தையின் மூலமாகத்தான். அவருடைய நேர்த்தியானதும், பிழையற்றதுமான வார்த்தைகள்

நமக்கு கற்றுக்கொடுக்கிறது, உத்வேகமளிக்கிறது, எச்சரிக்கிறது, ஊக்கமளிக்கிறது, சரிசெய்கிறது. இன்னும் சொல்லப்போனால் இதைவிட இன்னும் பல காரியங்கள் செய்கிறது.

அனைத்தும் தேவனுடைய வார்த்தையிலிருந்தே தொடங்குகிறது.

> மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.... நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். (ரோமர் 8: 14, 16)

தேவன் உங்களை வழிநடத்தும் இரண்டாவது வழி பரிசுத்த ஆவியினால். இந்த புத்தகத்தை ஆழமாகப் படித்து, ஆராய்வதற்கு எடுத்துக்கொள்ளும் கால அளவுக்கும், நோக்கத்துக்கும் மிக அதிகமாக இந்த வேதப் பகுதியை நீங்கள் ஆழமாகவும் கவனத்துடனும் ஆராய வேண்டும்.

இந்த உண்மையை, ரோமர் 8:16 -ல் உள்ள முக்கியமான சொற்றொடரான "ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்…" என்பதைப் பற்றி நாம் இந்த புத்தகத்தின் எல்லா பகுதிகளிலும் மீண்டும் மீண்டும் பார்க்கப்போகிறோம். ஏனெனில் இதுதான் இந்த "பெரிய நகர்வுக்கு" முக்கியக் காரணமாக இருக்கிறது.

நீங்கள் இயேசுவை ஏற்றுக்கொண்டு மறுபடியும் பிறக்கும்போது, உங்கள் பிறப்பின்போது, மரித்த நிலையில் இருந்த உங்கள் ஆவி, தற்போது புதியதாக பிறக்கின்றது. இப்போது, உங்களுக்குள் இரண்டு ஆவிகள் உள்ளன: ஒன்று உங்களிடம் புதிதாக பிறந்த ஆவியும். மற்றொன்று தேவனுடைய பரிசுத்த ஆவி. இதன் காரணமாக உங்களிடம் புதிதாக பிறந்த ஆவி,

உங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியோடு இணைந்து சாட்சியளிக்கிறது.

"சாட்சியளிக்கிறது" என்பது, நமக்குள் வாழும் இணை சாட்சியாகிய தேவனுடைய ஆவி, அதாவது தேவனுடைய பிரசன்னம், நாம் எப்போதும் அழைக்கவும், தேடவும், விசாரிக்கவும், அவரால் வழிநடத்தப்படவும் முடியும் என்பதைக் குறிக்கிறது. அதுமட்டுமன்றி எந்த நேரத்தில் வேண்டுமானாலும்… எந்த இடத்தில் இருந்தாலும், இந்த ஆவியை நாம் அழைக்கலாம்.

நாம் ஒரு மிக முக்கியமான உண்மையை ஒப்புக்கொள்ளலாமா? அது என்னவென்றால்... நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றுக்கொண்டபோது, அது வெறும் "நரகத்திலிருந்து தப்பிக்க ஒரு இலவச டிக்கெட்" மாதிரியான ஒன்று மட்டும் அல்ல. வருத்தத்துடன் சொல்லுகிறேன், கோடிக்கணக்கான விசுவாசிகள்—அதிலும் தொழிலில் ஈடுபடும் அநேகர், தேவன் நம்மை நரகத்திலிருந்து மட்டுமே மீட்பதற்காகவே இருக்கிறாரென்று எண்ணுகிறார்கள்.

பரிசுத்த ஆவியானவர் எத்தனை விதங்களில் நமக்கு கற்றுக்கொடுக்கிறார், வழிநடத்துகிறார், பேசுகிறார், பாதுகாக்கிறார், நம்மில் செயல்படுகிறார் என்று பல அழகான பட்டியல்கள், கட்டுரைகள், வேத ஆராய்ச்சிகள் தேவாலயங்களிலும், புத்தகக் கடைகளிலும், இணையத்திலும் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவர் நம்மை பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் ஒரே வழியாக மட்டுமே இருக்கிறார் என்பதையே பெரும்பாலான விசுவாசிகள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அதிலும் நம்மில் மிகவும் சொற்பமானவர்கள்தான், தங்களுடைய தொழில் மற்றும் தொழில்முறை வாழ்க்கையில், எப்படி பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படவேண்டும் என்று கற்றுக்கொண்டிருக்கிறார்கள், பயிற்சி பெற்றுருக்கிறார்கள், ஊக்கம்மளிக்கப் பட்டிருக்கிறார்கள்.

ஆனாலும், பரிசுத்த ஆவியானவர் உங்கள் தொழில்முறை வாழ்க்கையின் எல்லா பகுதிகளிலும் உங்களோடு இணைந்து சாட்சியாக இருக்க ஆயத்தமாகவும், விருப்பம் உள்ளவராகவும் மற்றும் திறமை வாய்ந்தவராக இருக்கிறார்.

## 2.1. இது சாத்தியமா?

> *வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே நடத்திக்கொண்டுபோகிறான்.*
> *அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.*
>
> — யோவான் 10:3-4

சர்வதேச பொருளாதாரம். அதீத கோரிக்கையுள்ள வாடிக்கையாளர்கள். இன்னும் அதிகம் செய்ய, அதிகம் உருவாக்க, செலவுகளை குறைக்க இடையறாத அழுத்தம். இப்படிப்பட்டதான உலகளாவிய வணிக சூழலில் நீங்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட முடியுமா?

இதற்கான பதில் என்னவென்றால் ஓர் எதிரொலிக்கும் ஆம்!

அது உறுதியாக சாத்தியத்திற்கும் மேல்; அது நீங்கள் அடைவதற்கு மிக அருகில்தான் இருக்கிறது. சரியாக சொல்லவேண்டுமென்றால் அது உங்களுக்குள்ளாக, மிகவும் நெருக்கமாக இருக்கிறது!

முழு வேதாகமம் தேவனுடைய ஆவியால் வழிநடத்தப்பட்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பற்றிய நிகழ்வுகளால் நிரம்பியுள்ளது. கீழே குறிப்பிடப்பட்டவர்களிடம் ஆவியானவர் பேசி, வழிநடத்தினார்:

- அபிராகாம் தன்னுடைய சொந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்ல தயாராகும்படி,
- மோசேவிடம் முட்ச்செடியில் இருந்து பேசினார் – எகிப்திலிருந்து ஜனங்களை வெளியில் கொண்டு வரும்படி,
- யோசுவாவை நம்பிக்கையுடன் வாக்குப்பண்ணப்பட்ட தேசத்தை கைப்பற்ற,
- நெகேமியாவை எருசலேமின் குறிக்கப்பட்ட நேரத்தில் மீண்டும் கட்ட,
- எஸ்தரை, தனது உயிரை ஆபத்துக்கு உள்ளாக்கிய ராஜாவை எதிர்கொள்ள,
- ரூத்தை, தன் சொந்த குடும்பத்தை விட்டு, நகோமியின் தேவனை பிடித்து நிற்க,
- தாவீதை, கோலியாத்தை வென்று இஸ்ரவேலின் மகாராஜாவாக ஆக,
- சாலமோனை, இஸ்ரவேலரை ஞானத்துடன் வழிநடத்த,
- எலியாவை, பாகலின் கள்ளத்தீர்க்கதரிசிகளை எதிர்த்து வெற்றிபெற,
- எலிசாவை, எலியாவின் ஆவியை இரட்டைப் பங்கைக் கேட்க,
- யோனாவை, பகைமையுள்ள தேசத்தில் தேவனின் வார்த்தையை பிரசங்கிக்க,
- யோசேப்பு மற்றும் மரியாளை, திருமணத்திற்கு ஒப்புக்கொண்டு

கன்னியின் கருவில் பிறக்கும் தேவனுடைய குமாரனை பெற்றெடுக்க,

- சிமியோனும் அன்னாவும், இயேசுவை ஆலயத்தில் சமர்ப்பிக்கப்படும் சமயத்தில் அங்கு இருக்க,
- லூக்கா, தன் பெயரைச் கொண்ட சுவிசேஷத்தை எழுதும் பணிக்காக,
- பேதுரு, புதிய ஏற்பாட்டில் பதிவான முதல் இறை வார்த்தையை பிரசங்கித்து 3,000 பேரைக் இரட்சிக்க,
- அனனியா, எருசலேமில் பரிசுத்தவன்களின் எதிரியாக இருந்த சவுலை சந்திக்க,
- பவுல் – அவர் செய்த ஒவ்வொரு காரியத்திலும்,
- யோவான் வெளிப்படுத்தின விசேஷத்தை எழுதுவதற்கு,
- மற்றும் இன்னும் பலர்!

இவைகள் அனைத்தும் தேவனுடைய பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்ட நூற்றுக்கணக்கான வேதாகம நிகழ்வுகளில் காணப்படும் ஆண்கள் மற்றும் பெண்களின் ஒரு சில எடுத்துக்காட்டுகள் மட்டுமே!

கடவுளின் மைந்தன் கூட இவ்விதமாக கூறினார்.

> அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். (யோவான் 5:19)

வெளிப்படையாக சொல்ல வேண்டுமென்றால், 2% மக்களுள் இருப்பவராக நீங்கள் இருந்தாலும், ஆவியினால் நடத்தப்படும்போது நீங்கள் எதிலும் மாறுபட்டவர் அல்ல. உங்களுக்குள்ளும் அதே பரிசுத்த ஆவியானவர் வாழ்ந்துகொண்டிருக்கிறார்.

இன்றைய வியாபார உலகில் பரிசுத்த ஆவியினால் நடத்தப்படுவது சாத்தியமா?

ஆமாம், நிச்சயமாக சாத்தியம். (மத்தேயு 17:20) கூறுவது போல, அதற்கு ஒரு கடுகு விதை அளவிலான விசுவாசம் மட்டுமே தேவைப்படும் ஒரு பெரிய மாற்றத்தை உண்டாக்க!

## 2.2. யார் என்பதற்கு எதற்கு நகர வேண்டும்?

மிகபெரிய இந்த நகர்வை செய்வதற்கான ஆறு வலிமையான காரணங்களை இங்கே காணலாம்.

### *1: பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய மனதை அறிவார்.*

> *எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி,*

*ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.*

1 கொரிந்தியர் 2: 9-11

நம்மில் பலருக்கு, ஒரு உலகப் புகழ்பெற்ற தலைமை நிர்வாக அதிகாரி அல்லது வணிக நிபுணர் போன்றவர்களின் பேச்சைக் கேட்க ஒரு மாநாட்டில் பங்கேற்பது அருமையானது என்று தோன்றும். வெற்றியடைந்த ஒரு தலைவரிடமிருந்து அறிவும் அனுபவமும் பெறுவது ஒரு சிறந்த அனுபவமாக இருக்கலாம். அப்படிப்பட்ட வணிக நிபுணர்களின் பேச்சைக் கேட்பதில் தவறு எதுவும் இல்லை.

எனினும், என்னுடைய எச்சரிக்கை என்னவென்றால் — அவர்கள் சொல்வதையெல்லாம் தேவனுடைய வார்த்தையைக்கொண்டும் உங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியின் சாட்சியமும் வழியாக சோதிக்க வேண்டும் (இதைப் பற்றி இன்னும் விரிவாகப் பின்னர் பாப்போம்).

நீங்கள் எதிர்கொள்ளும் ஒவ்வொரு வியாபார சூழ்நிலைகளுக்கும், சவாலுக்கும், தடைக்கல்லுக்கும், வாய்ப்புக்கும், தீர்மானங்களுக்கும் ஒரு மனித நிபுணரிடம் தேடுவதற்குப் பதிலாக, உங்களுக்குள் வாழும் தேவனுடைய ஆவியைத் தேடுவது எவ்வளவாகச் சிறப்பானதாக இருக்கும்! இந்த இரண்டு தேர்வுக்கும் இடையிலான வேறுபாட்டிற்கு ஒப்பீடு ஏதும் இல்லை. ஒவ்வொரு முறையும் ஒரு மனிதரின் யோசனைகளுக்குப் பதிலாக, எனது தொழிலை தேவன் நடத்த விரும்புகிறார் என்பதற்காக, தேவனுடைய ஞானத்தை முதன்மையாக தேடுவோம்.

## *2: பரிசுத்த ஆவி, நம்முடைய வணிகத்திற்கான தேவனுடைய ஞானத்தை நமக்கு இலவசமாக அளிக்கிறார்.*

*நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.*

— 1 கொரிந்தியர் 2: 12

தேவன், உங்களுக்கும் உங்கள் வணிகத்திற்குமான தமது முழு ஞானத்தையும், திட்டங்களையும், நீங்கள் உங்கள் நுண்மதியால் புரிந்துகொள்ள முடியாதவைகளையும் கூட, ஏற்கனவே பரிசுத்த ஆவியிடம் வெளிப்படுத்திவிட்டார். நீங்கள் ஆவியானவரிடம் கேட்கும்போது, பரிசுத்த ஆவியானவர் விரும்புவதுபோல், அவைகளை உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

அதிலும் முக்கியமாக, பரிசுத்த ஆவியின் அறிவுரை முற்றிலும் இலவசம்! அந்த அறிவுரை ஏற்கனவே உங்களுக்குள் வாழும் பரிசுத்த ஆவியின் வழியாக உள்ளது, அது உங்கள் ஆவியுடன் சாட்சியாகச் செயல்படுகிறது. நீங்கள் செய்ய வேண்டியது ஒன்றே ஒன்றுதான். ஆவியானவரிடம் அதை கேட்பது! (அதை எப்படி செய்வது என்பதைக்குறித்து இந்தப் புத்தகத்தில் பின்னர் விரிவாக காண்போம்.)

## *3: பரிசுத்த ஆவியானவருக்கு எல்லாம் சத்தியமும் தெரியும்*

*சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி....*

— யோவான் 16:13

ஒரு 2% ஆகியவராக, இந்த பிரபஞ்சம் அறிந்த மிக சக்திவாய்ந்த ஆலோசகரை, நீங்கள் ஏற்கனவே உங்களுக்குள் உங்கள் உள்ளத்தில் வைத்திருக்கிறீர்கள். உங்கள் தொழில், உங்கள் ஊழியர்கள் மற்றும் சக ஊழியர்கள், உங்கள் விற்பனையாளர்கள், உங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூக உறுப்பினர்கள் போன்றவைகளை ஆவியானவருடைய சத்தியத்தின் வழியே நீங்கள் வழிநடத்தப்படலாம். உங்கள் தொழில் யாரையெல்லாம் கடந்து செல்லுகிறதோ, அவர்கள் அனைவரையும்கூட.

பரிசுத்த ஆவி ஒருபோதும் பொய் உரைப்பதில்லை, தவறாக வழிநடத்துவதில்லை, உண்மையை மறைத்து குறைத்து பேசுவதில்லை அல்லது நீங்கள் அறிய வேண்டிய எதையும் அவர் ஒருபோதும் தவறவிடுவதில்லை. அதைவிட மேலாக, பரிசுத்த ஆவியால் சத்தியத்தில் வழிநடத்தப்படுவது, உங்களின் வணிகத்திற்காக கடவுள் விரும்பும் அனைத்தையும் நீங்கள் பெறுவதற்கு தேவையான சுதந்திரத்தை உங்களுக்கு அளிக்கிறது (யோவான் 8:32).

## *4: உங்கள் தொழிலின் எதிர்காலத்தை பரிசுத்த ஆவி அறிவார்*

> *......வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.*

— யோவான் 16:13

யோவான் இந்த திருவாசகத்தில் இப்போது என்ன சொன்னார்? பரிசுத்த ஆவி "வரப்போகும் காரியங்களைக்" குறித்து உங்களுக்கு அறிவிப்பார்.

நீங்கள் இன்று, நாளை, மேலும் வருங்காலத்தில் உங்கள் தொழிலில் எதிர்கொள்ளவிருக்கும் எல்லாவற்றையும் முன்கூட்டியே அறிந்திருக்கும் ஒருவரை, உங்கள் பரிந்துரையாளராக, தினமும் முழுநேரமும் அருகில் வைத்திருக்கிறீர்கள் என்று கற்பனை செய்து பாருங்கள்.

அற்புதம்!

இது, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு தினமும் காலையில் எழுந்தவுடன் தேவையான அனைத்தையும் குறுஞ்செய்தி வாயிலாகவோ அல்லது மின்னஞ்சல் வழியாகவோ அனுப்புவார் போன்றது இல்லை.

ஆனால், தம்முடைய சரியான நேரத்தில், அவர் உங்களது தொழிலுக்கான தம்முடைய நோக்கத்தை நிறைவேற்றும் வகையில், படிபடியாக உங்களை வழிநடத்தி அழைத்துச் செல்லுவார்.

சில நேரங்களில், பரிசுத்த ஆவியானவரைக்கொண்டு தேவன் அளிக்கும் வழிகாட்டுதல்கள் தர்க்க ரீதியாக எந்த அர்த்தமும் இல்லாததுபோல தோன்றும். உதாரணமாக:

- “உன் மகனை மலைமேல் ஏறிச் சென்று பலியாகக் கொடு.” (ஆதியாகமம் 22:9)
- “ஏழு நாட்கள் அந்த நகரைச் சுற்றி எக்காலம் ஊதுங்கள்; பிறகு நகரின் மதில்கள் இடிந்து விழும்” (யோசுவா 6:3–4)
- “சேற்றில் ஏழு முறை மூழ்கினால் குஷ்டரோகத்திலிருந்து சுத்தமாவாய்.” (2 இராஜாக்கள் 5:10)
- “உன் கண்களில் உமிழ்நீர் மற்றும் மண்ணைச் சேர்த்து தடவினால் பார்வை திரும்பும்.” (மாற்கு 8:23)

பல சமயங்களில், பரிசுத்த ஆவியானவர் சொல்கின்றவற்றை செய்யும்போது அது அர்த்தமற்றது போன்று தோன்றும். இருந்தாலும், ஆவியின்

வழிகாட்டுதலைக் பின்பற்றியவர்கள், கடைப்பிடித்தவர்கள் எப்போதும் வெற்றி பெற்றார்கள், எப்போதும் ஜெயித்தார்கள், என்றும் ஆசீர்வதிக்கப்பட்டார்கள்.

## *5: பரிசுத்த ஆவி உங்களை பரிபூரணமான வாழ்வுக்கு வழிநடத்துகிறார்.*

> *உன் கர்ப்பத்தின் கனியும், உன் நிலத்தின் கனியும், உன் மாடுகளின் பெருக்கமும், உன் ஆடுகளின் மந்தைகளுமாகிய உன் மிருகஜீவன்களின் பலனும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். உன் கூடையும், மாப்பிசைகிற உன் தொட்டியும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கும். நீ வருகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய், நீ போகையிலும் ஆசீர்வதிக்கப்பட்டிருப்பாய்.*
>
> — உபாகமம் 28: 4-6

> *உனக்குக் கொடுப்பேன் என்று கர்த்தர் உன் பிதாக்களுக்கு ஆணையிட்டதேசத்தில், கர்த்தர் உன் கர்ப்பத்தின் கனியிலும், உன் மிருகஜீவன்களின் பலனிலும், உன் நிலத்தின் கனியிலும் உனக்குப் பரிபூரண நன்மை உண்டாகக்*
> *கட்டளையிடுவார். ஏற்றகாலத்தில் உன் தேசத்திலே மழை பெய்யவும், நீ கையிட்டுச்செய்யும் வேலைகளையெல்லாம் ஆசீர்வதிக்கவும், கர்த்தர் உனக்குத் தமது நல்ல பொக்கிஷசாலையாகிய வானத்தைத் திறப்பார்; நீ அநேகம் ஜாதிகளுக்குக் கடன்கொடுப்பாய். நீயோ கடன் வாங்காதிருப்பாய்.*
>
> — உபாகமம் 28: 11-12

தேவன் என்பவர் பரிபூரணத்தின் தேவன், வளர்ச்சியின் தேவன் – குறைவின் அல்லது சுருக்கத்தின் தேவன் அல்ல. தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்கவே அவர் விரும்புகிறார்.

பரிசுத்த ஆவியானவர் எப்போதும் உங்களை சிறந்த பாதைக்கே வழிநடத்துவார் – சிறந்த ஊழியர்கள், சிறந்த வாடிக்கையாளர்கள் மற்றும் சிறந்த வாய்ப்புகளை கொண்டு வருவார்.

அதேசமயம், பரிசுத்த ஆவி உங்களை நஷ்டங்களை ஏற்படுத்தக்கூடிய பொருளாதார முடிவுகள், தவறான கூட்டாளிகள் மற்றும் தேவையற்ற கூட்டமைப்புகள் போன்றவற்றிலிருந்து விலக்கி பாதுகாப்பார்.

உங்களையும், உங்கள் நிறுவனத்தையும் அழிவுக்கு இட்டுச் செல்லக்கூடிய பாதையில் பரிசுத்த ஆவியானவர் ஒருபோதும் அழைத்துச்செல்வதில்லை – (அப்படி அழைத்தால் கூட, அது நீங்கள் பார்க்க இயலாத இன்னும் பெரிய பாதிப்புகளிலிருந்து உங்களை காப்பாற்றுவதற்காகத்தான்!)

தொழில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது, தேவனின் பரிபூரண, நிறைவான வாழ்வு வாழ மிகச் சிறந்த வழியாகும்.

## *6: பரிசுத்த ஆவி உங்களுக்கான முதன்மை ஆலோசகர், மற்றும் பயிற்றுவிப்பாளர்*

> *உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*
>
> — நீதிமொழிகள் 3:5-6

நீங்கள் அந்த மாற்றத்தை அல்லது நகர்வை செய்ய தீர்மானித்தவுடனே (நீங்கள் ஏற்கனவே முடிவு செய்துவிட்டீர்கள் என நான் உணருகிறேன்), பரிசுத்த ஆவி உங்களுக்கு எப்போது…

- செல்ல வேண்டும்
- நிலைத்து இருக்க வேண்டும்
- நிறுத்த வேண்டும்
- கட்ட வேண்டும்
- முதலீடு செய்ய வேண்டும்
- சீரமைக்க வேண்டும்
- விர்க்க வேண்டும்
- ாமதிக்க வேண்டும்
- காத்திருக்க வேண்டும்
- விரிவுபடுத்த வேண்டும்
- நகர வேண்டும்
- யார் செய்ய வேண்டும்
- பணியமர்த்த வேண்டும்
- பணிநீக்கம் செய்ய வேண்டும்
- வாங்க வேண்டும்
- விற்க வேண்டும்
- ஓட வேண்டும்

என்று தெளிவாகக் கூறுவார்.

பரிசுத்த ஆவியானவர் எப்போதும் உங்கள் முதன்மை தொழில் ஆலோசகர், யோசனை நிபுணர் மற்றும் பயிற்றுவிப்பாளர் ஆக இருக்க வேண்டும்.

## 2.3 உங்கள் உண்மையான எதிரி

> *திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான்.*
>
> — யோவான் 10:10

உங்கள் உண்மையான எதிரி உங்கள் போட்டியாளர்களோ, விநியோகஸ்தர்களோ, வங்கிகளோ, அல்லது உங்கள் ஊழியர்களோ அல்ல. உங்கள் உண்மையான எதிரி பங்குச் சந்தை நிலைமைகளோ, உலகளாவிய போட்டிளோ அல்லது பணப்புழக்கத்தின் பற்றாக்குறைகளோ அல்ல.

உங்கள் உண்மையான எதிரி சாத்தான்!

அவன் தான் உங்களை தேவனுடைய குரல்/சத்தம் மூலம் நேரடி தொடர்பான பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலிலிருந்து விலக்க, குலைக்க, தலைகீழாக கவிழ்த்த முயற்சி செய்கிறான்.

சாத்தான் மிகவும் ஆவலுடன் விரும்புவது என்னவென்றால், இந்த உலகத்தின் வழியாய், அதாவது அவன் கட்டுப்படுத்த விரும்பும் வழியாய் (எபேசியர் 2:2) – நீங்கள் நடத்தப்பட வேண்டும் என்று தான். ஆனால் தேவன் ஆவலுடன் விரும்புவது, தம் பரிசுத்த ஆவியானவரால் – தாம் கட்டுப்படுத்தும் வழியால் (ரோமர் 8:14–16) – நீங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதே!

> "ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." (எபேசியர் 6:12)

இப்போது உங்கள் கவனத்தை தொழிலில் நீங்கள் சந்திக்கும் உண்மையான போராட்டத்திற்கு நேராக

திருப்ப வேண்டிய நேரம் இது. இது உங்கள் வீட்டிலும் நீங்கள் சந்திக்கும் அதே போராட்டம் தான்: நன்மைக்கு தீமைக்கும் இடையேயான போராட்டம். இப்போது உங்கள் எதிரிக்கு நினைவூட்ட வேண்டிய நேரம் இது — அவன் ஏற்கனவே தோற்கப்பட்டுவிட்டான்; 2,000 வருடங்களுக்கு முன் சிலுவையில் அவன் தோற்கடிக்கப்பட்டான்.

இப்போது அவனிடம் சொல்ல வேண்டியது என்னவென்றால் — அவன் உங்களையும் உங்கள் தொழிலையும் கட்டுப்படுத்த முடியாது, ஏனெனில் நீங்கள் இப்போது பரிசுத்த ஆவியானவரின் வழிகாட்டுதலால் நடத்தப்படுகிறவராக இருக்கிறீர்கள். இப்போது அவனிடம் உரக்கச் சொல்ல வேண்டியது என்னவென்றால் — இயேசுவின் நாமத்தில் அவன் ஓடிப்போக வேண்டும்! (யாக்கோபு 4:7)

## 2.4 உங்கள் தொழில் வாழ்க்கையின் மிகச் சிறந்த தீர்மானம்

> *நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.*
>
> — ரோமர் 12:2

நீங்கள் எடுக்கப்போகும் மிகச் சிறந்த தொழில் தீர்மானம் என்பது, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுகிற ஒரு தலைவராக உருவாகுவது தான்.

நீங்கள் எடுக்கும் வேறு எந்த தொழில் தீர்மானம் இதைப்போல…

- உங்கள் ஆவியை ஒரு உயர்ந்த நிலைக்கு தூண்டும், உயிர்ப்பூட்டும்
- உங்கள் அன்றாட வாழ்க்கையில் செயல்படுத்தவும் ஒருங்கிணைக்கவும் மிகுந்த சவாலாக இருக்கும்
- உங்கள் நிறுவனத்திலேயே அதிகமான ஆவிக்குரிய வல்லமையை வெளிப்படுத்தும்
- உங்கள் குடும்பத்தினரால், நண்பர்களால், ஊழியர்களால், வாடிக்கையாளர்களால் தவறாக புரிந்துகொள்ளப்படும், கூடவே பரிகாசப்படுத்தப்படும்
- இந்த பூமியிலும் நித்தியத்திலும் அதிகமான நன்மைகளைக் கொண்டிருக்கும்
- பிசாசும் அவனது சேனைகளும் கடுமையாக எதிர்க்கக்கூடியதாக இருக்கும்

நீங்கள் எடுக்கும் மற்ற எந்த தீர்மானங்களோடும் ஒப்பிட முடியாத அளவில், இந்த முடிவு அனைத்து முடிவுகளையும் தாண்டி நிற்கிறது.

இந்த தீர்மானம், உங்கள் நியாயத்தீர்ப்பு நாளில், இயேசு உங்கள் சார்பாக பிதாவிடம் சொல்லப்போகும் சாட்சிக்கும் விளைவுகளை ஏற்படுத்தும்.

கேட்கப்பட வேண்டிய கேள்வி என்னவென்றால்: “நீங்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுகிற தலைவராக இருக்கப்போகிறீர்களா? அல்லது உலகத்தினால் வழிநடத்தப்படுகிற ஒருவராகவே தொடரப்போகிறீர்களா?”

நான் நிச்சயமாக நம்புகிறேன், நீங்கள் ஏற்கனவே முடிவெடுத்து விட்டீர்கள். என் ஆவியில் நான் அதை உணருகிறேன் —நீங்கள் அந்த பெரிய மாற்றத்திற்குத் தயாராக இருக்கிறீர்கள்.

ஆனால், அந்த தீர்மானத்தை எடுக்கும் முன், அந்தப் பாதையில் வரப்போகும் தவிர்க்க இயலாத தடைகளை

எதிர்கொள்ளும் வகையில், நீங்கள் உங்களை ஆயத்தப்படுத்த வேண்டும்.

*அத்தியாயம் 2 - ஆய்வு வழிகாட்டி (Study Guide)*

1. உங்கள் நாட்டில், உங்கள் வியாபாரத்தில் முழுமையாக பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவது சாத்தியம் என்று நீங்கள் நம்புகிறீர்களா? ஏன் நம்புகிறீர்கள் அல்லது ஏன் நம்பவில்லை?

2. உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியால் முற்றிலும் நடத்தப்படுவதற்கான மிகப்பெரிய சவாலாக நீங்கள் எதை பார்க்கிறீர்கள்?

3. சாத்தான் உங்கள் வியாபாரத்தில் எப்படி தாக்கங்களை ஏற்படுத்துகிறான் என்று நீங்கள் பார்க்கிறீர்கள்?

4. சாத்தான் உங்கள் வியாபாரத்தை அழிக்க, சுரண்ட, சிதைக்க முயல்கிற முயற்சிகளை, பரிசுத்த ஆவியானவரால் நடத்தப்படுவதன் மூலம் எவ்வாறு மேற்கொண்டு ஜெயிக்க முடியும் என பட்டியலிடுங்கள்.

# 3

# வழித்தடைகள்

*நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை; கலக்கமடைந்தும் மனமுறிவடைகிறதில்லை;*
*துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.*

— 2 கொரிந்தியர் 4: 8-9

பவுல் சுவிசேஷத்தைப் பரப்புவதற்காக எதிர்கொள்ள வேண்டிய சோதனைகளைத் தெரிந்துகொண்டிருந்தார். ஆனாலும், அந்த சோதனைகள் அவரை ஆண்டவரிடம் பெற்ற அழைப்பை நிறைவேற்றுவதிலிருந்து விலக்கவில்லை.

நான் இப்போது நீங்கள் அடித்துக் கொல்லப்படுவீர்கள், சிறையில் அடைக்கப்படுவீர்கள், கப்பல்படுகை போன்ற அனுபவங்களைச் சந்திக்க வேண்டியதாயிருக்கும் என சொல்கிறேனா? இல்லை — ஆனால் அப்படியும் இருக்கக்கூடும்.

இந்த "உலகளாவிய பதிப்பை" படித்து கொண்டிருக்கும் உங்களில் பலர், கிறிஸ்தவர்கள் கடுமையாக சித்திரவதை செய்யப்படும் நாடுகளில் வாழ்கிறீர்கள். வாழ்க்கையின் அனைத்து துறைகளிலும்

சிரமங்களை எதிர்கொள்ள வேண்டிய சூழ்நிலைகள் இருக்கின்றன.

நாம் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டவர்களாக மாற முயற்சிக்கும் பொழுது, சில நேரங்களில் கடுமையான வலித்தடைகள் (roadblocks) நம்மை எதிர்த்து நிற்கும்.

தேவன், லாபம் ஈட்டும் எனது பேச்சு மற்றும் ஆலோசனை நிறுவனத்தை விட்டுவிட்டு, ஒரு விசுவாச அடிப்படையிலான வியாபார அமைப்பை தொடங்கும்படி என்னை அழைத்தபோது — அது அமெரிக்காவில் தான் நடந்து கொண்டிருந்தாலும் — நம்புங்கள், அதற்கேற்ப சவால்கள் இருந்தன.

பல வருடங்களாக என்னை அப்படிப்பட்டதான பேச்சாளராக அழைத்திருந்த புகழ்பெற்ற நிறுவனங்கள், நான் ஒரு கிறிஸ்துவ விசுவாசியாக வியாபாரம் செய்கிறேன் என்பதை அறிந்தபின்னர், என்னை ஒரு தொழுநோயாளியைப் போல கருதி என்னை அழைப்பதை விட்டுவிட்டார்கள்.

என்னை வாடிக்கையாளராக அழைக்கக்கூடிய பலர், நான் வரும்போது அவர்களது ஊழியர்களை கிறிஸ்துவின் மீது கொண்ட விசுவாசத்தில் மனம்மாற்ற முயற்சிப்பேன் என்று பயந்துபோய் ஓடிவிட்டார்கள்.

எனது புதிய இலக்கு, குறிப்பாக பங்குச்சந்தையில் — உங்களைப் போன்ற மற்ற 2% விசுவாசிகள் — என்னை ஒரு தொழில் செய்கிற விசுவாசியாக, புதிய வாசனையுடன் கூடிய செய்தியுடன் வந்தவராகவும் அறியவில்லை.

அதுவரை, கடந்த 20 ஆண்டுகளில் நான் உருவாக்கிய அனைத்து முக்கிய உரைகள், புத்தகங்கள், பயிற்சி பொருட்கள், வலைப்பதிவுகள் மற்றும் மற்ற அனைத்தும் மதசார்பற்ற அடிப்படையில் இருந்தன — இருப்பினும் தேவைக்கு ஏற்றபடி சில நேரங்களில் வசனங்களை சுட்டிக்காட்டியதுண்டு.

அந்தநேரத்தில், நான் 57 வயது நிரம்பிய ஆலோசகராக, வீட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு

வியாபாரத்துடன், ஆரம்பம் முதல் மீண்டும் தொடங்க வேண்டியிருந்தது.

என் சாட்சியின் ஒரு பகுதி இது: அடுத்த சில ஆண்டுகளுக்கு அன்றாட வாழ்க்கை வாழ நான் கடினமாக போராட வேண்டியிருந்தாலும், தேவன் எங்களுக்கு தேவைப்பட்ட அனைத்தையும் வழங்கினார். நாங்கள் ஒருபோதும் வீட்டு கடன் கட்ட தவறவில்லை, ஒரு வேலை உணவை உண்பதையும் தவறவில்லை, எங்கள் மகனின் பள்ளிக் கட்டணத்தையும் கட்டத் தவறவில்லை – எதுவும் இல்லாமல் இருந்ததே இல்லை (பிலிப்பியர் 4:19).

ஆம், "பெரிய மாற்றத்தை" மேற்கொண்ட பிறகு, நான் புதிய தடைகளை சந்தித்தேன். அதுபோல நீங்களும் சந்திப்பீர்கள்.

நான் எதிர்கொண்ட சில முக்கிய வலித்தடைகளை இங்கே பட்டியலிட்டுளேன் – அவற்றில் பல நீங்கள் ஏற்கனவே சந்தித்திருப்பீர்கள் அல்லது எதிர்கொள்ளப்போகிறீர்கள்.

ஆனால் உற்சாகமாக இருங்கள். இந்த அத்தியாயத்தின் இறுதியில், வியாபாரத்தில் அல்லது தொழிலில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்ட தலைவராக மாற நான் எதிர்கொண்ட தடைகளை மேற்கொள்ள உதவிய முக்கியமான ஒரு திறவுகோலை உங்களுடன் பகிர்ந்துகொள்வேன்.

## 3.1. இது இயற்கையானது அல்ல

*ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். ஆவிக்குரியவன்*

*எல்லாவற்றையும் ஆராய்ந்து நிதானிக்கிறான்; ஆனாலும் அவன் மற்றொருவனாலும் ஆராய்ந்து நிதானிக்கப்படான். கர்த்தருக்குப் போதிக்கத்தக்கதாக அவருடைய சிந்தையை அறிந்தவன் யார்? எங்களுக்கோ கிறிஸ்துவின் சிந்தை உண்டாயிருக்கிறது.*

— 1 கொரிந்தியர் 2: 14-16

நீங்களும் நானும், பெரும்பாலான சமயங்களில், தொழில் செய்வதற்கான ஒரு சில முறையை கற்றுக்கொண்டிருக்க வாய்ப்பு அதிகம் – அதாவது உலகத்தின் தொழில் செய்ய காணப்படும் இயல்பான முறை அது. இறையரசின் முறையல்ல.

நம்மை வழிநடத்தியவர்கள் அல்லது நமக்கு பயிற்சி அளித்தவர்கள் பெரும்பாலும் இந்த உலகத்தின் வியாபார முறைப்படி செயல்பட கற்றுத்தந்திருக்கலாம்:

- முடிவுகளை / தீர்மானங்களை எடுப்பது – நுண்மதியினால் வழிகாட்டுதலால் (head-led)
- லாபம் மற்றும் இழப்பை மதிப்பீடு செய்வது – வாய்ப்புகளின் அடிப்படையில் (opportunity-led)
- லாபத்தை அதிகரித்து செலவுகளை குறைப்பது – பணத்தின் வழிகாட்டுதலால் (money-led)
- உற்பத்தித் திறனை அதிகரிக்கும் புதிய மென்பொருட்கள் மற்றும் முறைகளை முன்வைக்கும் – புதுமையின் வழிகாட்டுதலால் (innovation-led)
- சமீபத்திய வியாபார யோசனைகளை ஒருங்கிணைப்பது – நிபுணர்களின் வழிகாட்டுதலால் (expert-led)

- விரைவான முடிவுகளை எடுப்பது – அழுத்தத்தின் வழிகாட்டுதலால் (pressure-led)

இவை அனைத்தும் உலக பாணியில் கற்றுக்கொள்ளப்பட்டவை — தேவன் நமக்குக் கொடுக்க விரும்பும் ஆவிக்குரிய, பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் வியாபாரத்திலிருந்து முற்றிலும் இவை வேறுபட்டவை.

பல வருடங்கள், சிலருக்கு பல தசாப்தங்கள் வரை உலகின் அடிப்படையிலான வியாபார யுக்திகளால் நாம் பழக்கப்பட்டிருப்போம். அதனால், ஒருபோதும் நாம் பின்வாங்கி, எந்த பாதையில் செல்வது சிறந்தது என்று தூய ஆவியிடம் கேட்பது இயல்பாக இருக்காது.

நல்ல மாற்றத்தை — குறிப்பாக முக்கிய மாற்றத்தைகூட செய்வது ஆரம்பத்தில் இயற்கைக்கு புறம்பாக கூட தோன்றும். ஏனென்றால் அது நாம் இதுவரை செய்யாத ஒன்று.

அது பரவாயில்லை. நீங்கள் தொடங்கும்போது, வெற்றி பெற ஆரம்பிக்கிறீர்கள், இயற்கைக்கு அப்பாற்பட்ட பலன்களையும் காண ஆரம்பிக்கிறீர்கள் என்றால், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது தான் உங்கள் வாழ்க்கையிலும் வேலைகளிலும் இயற்கையான முறையாக மாறிவிடும்.

## 3.2. இது வெளிப்படையாக இல்லை

*மார்த்தாளோ பற்பல வேலைகளைச் செய்வதில் மிகவும் வருத்தமடைந்து, அவரிடத்தில் வந்து: ஆண்டவரே, நான் தனியே வேலைசெய்யும்படி என் சகோதரி என்னை விட்டு வந்திருக்கிறதைக் குறித்து உமக்குக் கவையில்லையா? எனக்கு உதவிசெய்யும்படி அவளுக்குச் சொல்லும் என்றாள்.*

— லூக்கா 10:40

மார்த்தாளின் பார்வையை ஒரு நிமிடம் சிந்திப்போம்

மார்த்தாவுக்கு அது மிகவும் தெளிவாகவே இருந்தது — இத்தனை பேருக்குப் பெரிய விருந்தைத் தயார் செய்ய ஒரு அவசரம் தேவைப்படுகிறது. பெரிய கூட்டம். இயேசு போதித்துக்கொண்டிருக்கிறார். மக்களுக்கு பசி எடுக்க ஆரம்பித்துவிட்டது.

இயேசு போதனையை முடித்தவுடன் எல்லோருக்கும் உணவு தயாராக இருக்க வேண்டாமா? ... இல்லையா?

இவ்வளவு தெளிவான விஷயத்தை வேறு யாரும் ஏன் பார்க்கவில்லை? முக்கியமாக என் சோம்பேறி சகோதரி மரியாள் — தொடக்கத்திலிருந்தே உதவ வேண்டியவள், இப்போது வெளியே உட்கார்ந்து இயேசுவின் வார்த்தைகளை கேட்பதிலேயே நேரத்தை வீணாக்குகிறாள்! அவளுக்கு நன்றாக தெரிந்திருக்க வேண்டாமா!

மார்த்தாள் இயேசுவை குறுக்கிட வேண்டும் என்று முடிவெடுத்து, இயேசுவின் போதனையையே நடுவில் நிறுத்தச் சொல்லி, "இயேசுவே, மரியாளை சமையலறைக்குப் போய் உதவச் சொல்லுங்கள்!" என்று கூறினால்.

யோசித்து பாருங்கள் — இயேசுவின் போதனையை நடுவில் நிறுத்தி, பெரிய கூட்டத்துக்கு முன்னிலையிலேயே மரியாளை குறைசொல்லி, "இயேசுவே, நீங்களே அவரை அழைத்து, சமையலறைக்கு சென்று உதவச் சொல்லுங்கள்!" என்று கட்டளை போடுவது எவ்வளவு துணிச்சலான செயல்!

அது மிகவும் தெளிவாகத் தோன்றுகிறது அல்லவா?

ஆனால் நாம் எளிதாகத் தோன்றும் "காரியங்களினால்" வழிநடத்தப்படுவது எளிது. ஆனால், ஒருபோதும் அது பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலாக இருக்கும் என்று நினைக்க முடியாது. தெளிவானதை விட பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதே சிறந்தது— அதை நாம் உடனடியாகப் புரிந்துகொள்ள முடியாமலிருந்தாலும் சரி.

உலகியலான முறையில் வியாபாரம் செய்யும்போது, கீழ்க்கண்ட செயல்கள் நமக்குத் தெளிவாகத் தோன்றலாம்:

- தற்போதைய பணப்புழக்கத்தை சமாளிக்க, ஒரு விற்பனையாளருக்கு பணம் செலுத்துவதை சில நாட்கள் தாமதிக்கலாம்
- எப்போதும் தாமதமாகவே வேலைக்கு வருகிற ஊழியரை வேலையில் இருந்து நீக்கலாம்
- மிகுந்த வாய்ப்புகள் உள்ள அந்த கிராமத்திலோ நகரத்திலோ உங்கள் நிறுவனத்தை விரிவுபடுத்தலாம்
- நீண்ட காலமாக இருந்த விற்பனையாளருடன் இருக்கும் ஒப்பந்தத்தை நிறுத்தி, குறைந்த விலையிலான புதிய விற்பனையாளரை தேர்வு செய்யலாம்
- செலவுக்கழிப்புகள் நேரத்தில் பயிற்சி என்று ஆகும் செலவுகளை நீக்கலாம்

ஆனால் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவது இது போன்று எளிதில் தெரியக்கூடியது அல்ல. பரிசுத்த ஆவியானவர் வழியாகத் தேவனுடைய ராஜ்யத்தின் — அதாவது மனிதருக்குத் தெளிவாக இல்லாத — வழிகளை உணர்ந்து பின்பற்ற நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கும். இதைப் பற்றி இன்னும் விரிவாக பிறகு காணலாம்.

## 3.3. இது பிரபலமாக இல்லை

*அப்பொழுது, அவருடைய சீஷர்கள் அவரிடத்தில் வந்து: பரிசேயர் இந்த*

*வசனத்தைக் கேட்டு இடறலடைந்தார்கள் என்று அறிவீரோ என்றார்கள்.*

— மத்தேயு 15:12

*அப்பொழுது அவர்கள் உரத்தசத்தமாய்க் கூக்குரலிட்டுத் தங்கள் காதுகளை அடைத்துக் கொண்டு, ஒருமனப்பட்டு அவன்மேல் பாய்ந்து,*

*அவனை நகரத்துக்குப் புறம்பே தள்ளி அவனைக் கல்லெறிந்தார்கள். சாட்சிக்காரரர் தங்கள் வஸ்திரங்களைக் கழற்றி, சவுல் என்னப்பட்ட ஒரு வாலிபனுடைய பாதத்தினருகே வைத்தார்கள்.*

— அப்போஸ்தலர் 7: 57-58

*பெரோயாவிலும் தேவவசனம் பவுலினால் அறிவிக்கப்படுகிறதென்று தெசலோனிக்கேயரான யூதர்கள் அறிந்தபோது அங்கேயும் வந்து, ஜனங்களைக் கிளப்பிவிட்டார்கள்.*

— அப்போஸ்தலர் 17: 13

இந்த வசனங்கள் மிகக் கடுமையாகவும் தாக்கத்துடனும் ஒரு உண்மையைச் சுட்டிக்காட்டுகின்றன: பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் நீங்கள் பெற்ற வெளிப்பாட்டை, எல்லோரும் “அல்லேலூயா” என கரங்களை விரித்து வரவேற்க மாட்டார்கள்.

பலருக்கு — ஒருவேளை அனைவர்க்கும் இல்லை என்றாலும் — உங்கள் இந்த புதிய, நியாயமற்ற அனுகூலத்தின் வெளிப்பாட்டை புரிந்து கொள்ள

முடியாது. சிலர் உங்களை இழிவாகப் பார்த்து, உங்களை ஏளனமாகவும் பேசலாம்.

ஆவியால் வழிநடத்தப்படுகிற ஒருவர் என்று நீங்கள் சொல்வதைப் பற்றிச் சிலர் “அவர்களா?! தாங்கள் தேவனிடமிருந்து கேட்கிறார்கள் போல!” என்ற விமர்சனத்தைக் கூட முன்வைப்பார்கள். இது பொதுவான நிகழ்வாகவே பார்க்கப்படுகிறது.

ஆனால் நான் சொல்லவரும் முக்கியமான செய்தி அதுதானே? — தேவனிடமிருந்து கேட்கலாம், தேவனாலேயே வழிநடத்தப்படலாம் என்பதுதான் மைய செய்தி.

வேதாகமம் முழுவதும் தேவனின் சத்தத்தை கேட்ட மக்களின் ஒரு நீண்ட நெடிய, சக்திவாய்ந்த வரலாறு: ஆதாம், ஆபிரகாம், மோசே, யோசேப்பு, சாமுவேல், தாவீது, சாலமோன், எரேமியா, ஏசாயா, எலியா, அனைத்து அப்போஸ்தலர்கள், மேலும் முக்கியமாக — இயேசுவும் தான்.

வியாபாரத்தில் நாம் கொண்டிருக்கும் இந்த "நியாயமற்ற அனுகூலம்" என்பது எல்லோராலும் வரவேற்கப்படாமல் இருக்கலாம். ஆனாலும், உங்களை சந்தேகிக்கிறவர்களோ அல்லது ஏளனமாக பார்க்கிறவர்களோ உங்கள் பாதையில் வரும்போது கூட — நீங்கள் ஒரு அற்புதமான தேவனின் சத்தத்தை கேட்கும் கூட்டத்தில் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

## 3.4. உங்கள் விசுவாசம் போதுமானதாக இல்லையென்று சந்தேகமாக இருக்கின்றதா

*இயேசு அவனை நோக்கி: நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்றார். உடனே பிள்ளையின் தகப்பன்*

*விசுவாசிக்கிறேன் ஆண்டவரே, என் அவிசுவாசம் நீங்கும்படி உதவிசெய்யும் என்று கண்ணீரோடே சத்தமிட்டுச் சொன்னான்.*

— மாற்கு 9: 23-24

*நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.*

— மத்தேயு 26:41

*நானோ உன் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.*

— லூக்கா 22:32

இந்த வலித்தடை மிகவும் சவாலானதாக இருக்கலாம்.

சில நேரங்களில், உங்கள் விசுவாசத்தின் ஆழத்தைக் குறித்து நீங்கள் சந்தேகிக்கலாம்; "இந்த சவால்களை தாங்கி நிற்கும் அளவுக்கு நான் வலிமை வாய்ந்தவனா?" என்று உங்கள் உள்ளத்திலே கேட்கலாம். வேதாகமத்தில் உள்ள ஆவிக்குரிய பேராற்றல் வாய்ந்தவர்கள் — காலேபிலிருந்து பவுல் வரை—அவர்களோடு உங்களை ஒப்பிட்டு பார்க்கலாம், உடனே நீங்கள் குறைவாக இருக்கிறீர்கள் போல தோன்றலாம்… ஒப்பீடு அளவிலே உங்கள் விசுவாசம் வெற்றி பெறும் அளவுக்கு வலிமை வாய்ந்ததல்ல என நினைக்கலாம்.

இது சாத்தானின் மிக முக்கியமான வலித்தடைகளில் ஒன்றாகும் — அவன் உங்கள்மீது ஏறிய விரும்பும் முதன்மை குற்றச்சாட்டுகளில் இதுவும் ஒன்று.

அதிகமான தைரியத்துடன், சாத்தான் இயேசுவிடமே இந்தக் குற்றச்சாட்டைச் முன்வைத்தான் (மத்தேயு 4:3, 5, 8 பாருங்கள்).

போதுமான விசுவாசம் கொண்டிருக்க என்ன தேவை?

> அதற்கு கர்த்தர் சொன்னார்: "அதற்குக் கர்த்தர்: கடுகுவிதையளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால், நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி: நீ வேரோடே பிடுங்குண்டு கடலிலே நடப்படுவாயாக என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்." (லூக்கா 17:6).

உங்கள் விசுவாசம், இரட்சிப்பின் மூலம், உங்களை இயேசுவுடன் ஒரு நித்திய உறவிற்கு அழைத்தது — பரலோகத்தில் அவருடன் என்றும் வாழ்வதற்கான ஒரு வாக்குறுதியைத் தருகிறது. ஆகையால் கடுகு விதை அளவுக்குத் தான் உங்கள் விசுவாசம் இருந்தாலும், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் ஒரு வியாபாரத் தலைவராக இருக்கும்போது, அந்த விசுவாசம் போதுமானதாக இருக்கும்.

## 3.5. தவறு செய்து விடுவோமோ என்ற பயம்

> *அப்பொழுது பேதுரு: சேவல் கூவுகிறதற்கு முன்னே, நீ என்னை மூன்று தரம் மறுதலிப்பாய் என்று இயேசு தன்னிடத்தில் சொன்ன வசனத்தை நினைத்துகொண்டு, வெளியே போய், மனங்கசந்து அழுதான்.*
>
> — மத்தேயு 26:75

நீங்கள் மனிதன் தானே? நானும் மனிதன் தான். அதாவது நாம் சில நேரங்களில் தேவனுடைய மகிமையற்றவர்களா நடந்திருக்கிறோம் (ரோமர் 3:23).

இந்த புதிய பயணத்தை நீங்கள் தொடங்கும்போது, வழியில் சில தவறுகளை செய்வது இயல்பானது. ஆனால் நீங்கள் தவறு செய்தாலும் கூட, ஒரு விஷயத்தை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள் — நீங்கள் மன்னிக்கப்பட்டவர்கள்.

> நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)

நீங்கள் உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட ஆரம்பிக்கும்போது, சில சமயங்களில் தவறு செய்ய நேரிடலாம். ஆனாலும், பயணத்தைத் தொடருங்கள்.

நீங்கள் தொடர்ந்து பயணிக்கும்போது, அவருடைய ஆற்றல் உங்களுக்குள் அதிகரிக்கும்போது, நீங்கள் செய்யும் தவறுகள் குறைந்துகொண்டே போகும்.

நாம் இவ்வாறு தவறாக செயல்படுவதற்கான காரணம் என்னவென்றால் — நாம் தவறான ஆவிக்குரிய அலைவரிசையை கேட்கிறோம்!

நீங்கள் அவருடைய குரலை தெளிவாகக் கேட்கக் கற்றுக்கொள்ளும்போது, அவர் உங்கள் வளர்ச்சிக்கும் உங்கள் வியாபார வளர்ச்சிக்கும் சொல்லுகின்ற வார்த்தைகளை தவற விடுவதற்கு வாய்ப்புகள் மிக மிக குறைவு. சில சமயங்களில் தவறு செய்துவிடுவோம் என்ற பயம், நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் வாழ்க்கை பயணத்திலிருந்து விலகிவிடாதபடி பார்த்துக்கொள்ளுங்கள்.

## 3.6. நீங்கள் வலிமையாக ஆரம்பித்து, பின்னர் மங்கிவிடுகிறீர்கள்

> *அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசுவினிடத்தில் போக கடலின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து அமிழ்ந்துபோகையில்: ஆண்டவரே என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப்பிடித்து: அற்பவிசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது.*
>
> — மத்தேயு 14: 29-32

வேதாகமத்தில் இரண்டு நபர்கள் தண்ணீர்மேல் நடந்தார்கள்: இயேசுவும் பேதுருவும்.

பேதுரு வலிமையாக ஆரம்பித்தார். அவர் நம்பிக்கையுடன் படகிலிருந்து வெளியே இறங்கி, இயேசுவை நோக்கி தண்ணீர் மீது நடந்தார். அவர் இயேசுவின் வார்த்தைகளைக் கேட்டார். சுற்றியுள்ள சூழ்நிலைகள் — பொங்கி எழும் அலைகள், காற்று, கடல்சுழற்சி — எதையும் கவனிக்கவில்லை.

ஆனால், இயேசுவிடமிருந்து தன்னுடைய பார்வையை விலக்கினபோது, பேதுரு திடீரென மூழ்க (மங்க) ஆரம்பித்தார்.

புதியதும், சுவாரஸ்யமுமான ஒரு வியாபாரப் பயணத்தை வலிமையாக ஆரம்பிப்பது எளிது. குறிப்பாக, 2% வாழ்க்கை வாழ விரும்பும் ஒருவர், ஆண்டவருடன் சேர்ந்து ஒரு புதிய வியாபார பயணத்தைத் தொடங்கும்போது அது மிகவும் உற்சாகமாக இருக்கும்.

ஆனால், நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் ஒருவராக முழுமையாக அர்ப்பணிக்கும்போது, மீண்டும் பழைய பாதைக்கு திரும்பும் வாய்ப்பு இல்லாமல் போகிறது. ஏன் என்றால், நீங்கள் முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட பிறகு, இயேசு நீங்கள் எடுத்த தீர்மானத்தில் உறுதியாய் இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார்.

வியாபாரத்தில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதற்கு, இறுதிவரைக்கும் உங்கள் பந்தயத்தில் உறுதியாக நிலைத்திருக்கும் முழு அர்ப்பணிப்பு தேவையாய் இருக்கிறது.

பவுல் சொன்னதுபோல்:

> "…என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்…." (அப்போ. 20:24)

நான் விசுவாசத்தின் நாயகர்களில் முன்னோடியாக காலேபை பார்க்கிறேன். அவருடைய கதை, ஒவ்வொரு முறையும் நான் அதை வாசிக்கும்போது, எனக்குள் ஓர் உற்சாகத்தை எழுப்புகிறது.

அவருக்கு 40 வயது இருந்தபோது, யோசுவாவுடன் சேர்ந்து, இஸ்ரவேல் மக்களை வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்திற்குள் பிரவேசிக்க நம்பிக்கையுடன் நடக்க உற்சாகப்படுத்தினார். வாக்குத்தத்தம்ப்பண்ணப்பட்ட தேசத்தை அடைய முடியும் என்று உறுதியாக அறிவித்தார் (எண்ணாகமம் 14:7).

ஆனால் அவர்களுள் யோசுவா மற்றும் காலேப் மட்டும்தான் அந்த 40 ஆண்டுகளுக்கு வனாந்தரத்தில் உயிரோடு இருந்தனர், ஏனெனில் காலேபிடம் வேறு ஆவி இருந்தது (எண்ணாகமம் 14:24).

அவருக்கு 80 வயது ஆனபோதும் கூட, யோசுவாவுக்கு உடனிருந்து, இஸ்ரவேல் மக்களின் படைகளை வழிநடத்தி, ராஜ்யங்களை ஒன்றின்பின் ஒன்றாக வெற்றி கொண்டார்.

பின்பு, 45 வருடங்கள் கழித்து, தேவன் யோசுவாவை தேசத்தை பகிர்ந்தளிக்க அழைத்தபோது, யோசுவா காலேபிடம், எந்த நிலத்தை வேண்டுமானாலும் தேர்வு செய்யலாம் என்று அனுமதி அளித்தார்.

காலேபின் பதில் என்பது வலிமையாக ஆரம்பித்து, பின்னர் மங்காமல் நிலைத்திருக்கும் ஒரு பிரகாசமான முன்னுதாரணமாகும்.

> இப்போதும், இதோ, கர்த்தர் சொன்னபடியே என்னை உயிரோடே காத்தார்; இஸ்ரவேலர் வனாந்தரத்தில் சஞ்சரிக்கையில், கர்த்தர் அந்த வார்த்தையை மோசேயோடே சொல்லி இப்போது நாற்பத்தைந்து வருஷமாயிற்று; இதோ, இன்று நான் எண்பத்தைந்து வயதுள்ளவன். மோசே என்னை அனுப்புகிற நாளில், எனக்கு இருந்த அந்தப் பெலன் இந்நாள்வரைக்கும் எனக்கு இருக்கிறது; யுத்தத்துக்குப் போக்கும் வரத்துமாயிருக்கிறதற்கு அப்போது எனக்கு இருந்த பெலன் இப்போதும் எனக்கு இருக்கிறது. ஆகையால் கர்த்தர் அந்நாளிலே சொன்ன இந்த மலைநாட்டை எனக்குத் தாரும்; அங்கே ஏனாக்கியரும், அரணிப்பான பெரிய பட்டணங்களும் உண்டென்று நீர் அந்நாளிலே கேள்விப்பட்டீரே; கர்த்தர் என்னோடிருப்பாரானால், கர்த்தர் சொன்னபடி, அவர்களைத் துரத்திவிடுவேன் என்றான். (யோசுவா 14: 10-12)

85 வயது இளமையிலும், மற்ற பத்து உளவாளிகளை அச்சுறுத்திய அரக்கர்கள் நிறைந்த நாட்டையே காலேப்

நாடினார் (அவர்கள் பயத்தால் இஸ்ரவேலரை 40 ஆண்டுகள் வனாந்தரத்தில் சுற்றித் திரிய வைத்தனர்.)

வாழ்க்கையிலும், வியாபாரத்திலும் நான் காலேபைப் போன்று இருக்கவேண்டும் என்பதுதான் எனது ஆசை. அவர்தான் நான் பின்பற்ற விரும்பும் முன்னுதாரணமாக இருக்கிறார்!

வலிமையாக ஆரம்பித்து, வலிமையாகவே நிலைத்து, இறுதிவரை மங்காமல் நிலைத்திருப்பது எப்படி என்பதற்கு காலேப் ஓர் அரிய எடுத்துக்காட்டு.

எனது வியாபார பந்தயம் இன்னும் முடிவடையவில்லை. உங்களைப்போலவே, நான் முதன்முதலில் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட வேண்டும் என்று முடிவு செய்தபோது, வலிமையாகதான் தொடங்கினேன். அழுத்தங்கள், உறுதியில்லாத நிலைகள், இழந்த வியாபார வாய்ப்புகள், கூடவே என்னுடைய மாம்சத்தின் இயல்பும் — என் மனதில் சந்தேகம், குழப்பம், நெகிழ்ச்சி ஆகியவற்றை ஊட்ட முயன்றன.

ஆனால், பேதுருவைப் போல இயேசுவின் மீது இருந்த கண்களை விலக்கியதற்கு பதிலாக, நான் என் கண்களை இயேசுவின் மீது வைத்தேன். அவருடைய ஆவியின் சத்தத்திற்கு செவி சாய்த்தேன்.

பவுலைப் போல என் பந்தயத்தை நிறைவு செய்ய நான் தீர்மானித்தேன்.

காலேபைப் போன்றுதான் — வலிமையாக ஆரம்பித்து, வலிமையாகவே நிலைத்து, மங்காமல் இருக்கவேண்டும் என்று நான் தீர்மானித்தேன்!

என் ஜெபம் என்னவென்றால், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் உங்கள் வியாபாரப் பயணத்தில் நீங்கள் இன்னும் வலிமை பெற வேண்டும் என்பதுதான்.

## 3.7. எப்படி செய்வது என்று உங்களுக்கு தெரியாது

> *அவன் நடுங்கித் திகைத்து: ஆண்டவரே, நான் என்னசெய்யச் சித்தமாயிருக்கிறீர் என்றான். அதற்குக் கர்த்தர்: நீ எழுந்து, பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்யவேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும் என்றார்.*
>
> — அப்போஸ்தலர் 9:6

பவுல், தன்னுடைய ஊழியத்தில் புதியதொரு "நியாயமற்ற அனுகூலத்தை" எப்படி பயன்படுத்துவது என்று தெரியாமல் இருந்தார். அதை எப்படி பயன்படுத்த வேண்டும் என்று அவர் கற்றுக்கொள்ள வேண்டி இருந்தது.

நானும், பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் ஒரு தொழிலதிபராக எனது பயணத்தைத் தொடங்கியபோது, என்ன செய்ய வேண்டும் என்பதே எனக்குத் தெரியவில்லை. பவுலைப் போலவே, என்ன செய்ய வேண்டும், எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நான் கற்றுக்கொண்டே வந்தேன்.

தொழிலில் முழுமையாக பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படுவதற்கான எல்லா பதில்களும் என்னிடம் இருக்கின்றன என்று நான் ஒருபோதும் கூறமாட்டேன்.

ஆனால், நான் என்னுடைய அனுபவத்தின் மூலம் கற்றுக்கொண்டவற்றை உங்களுக்குக் கற்பிக்க முடியும். ஆகவேதான் நீங்கள் இந்தப் புத்தகத்தை வாசிக்கிறீர்கள் அல்லது கேட்கிறீர்கள்.

பரிசுத்த ஆவி இந்தப் புத்தகத்தை எழுதுமாறு எனக்குச் சொன்னார், ஏனெனில் அவர் எனக்கு கற்றுக்கொடுத்தவைகளை நான் உங்களுக்கு கற்றுக்கொடுக்கவேண்டும் என்றார். அவரால் வழிநடத்தப்படுவது எப்படி என்பதை நான்

கற்றுக்கொண்டிருந்தபோதுதான் அவர் என்னிடம் இவ்விதம் கூறினார்:

“நீ இப்படித்தான் எழுதவேண்டும் என்று நான் விரும்புகிறேன் — என் ஜனங்களை நான் உனக்கு கற்றுக்கொடுத்தவைகளை, அவர்கள் வாழ்க்கையிலும், தொழிலும், வியாபாரத்திலும், என்னை வழிநடத்த அனுமதிக்க எப்படி என்று கற்றுக்கொடுக்கவேண்டும்” என்று சொன்னார்.

நீங்கள் இப்போதுவரை நான் கற்றுக்கொண்டதிலிருந்து சிலவற்றை வாசித்துவிட்டீர்கள் அல்லது கேட்டுவிட்டீர்கள்.

அப்படியானால் — வாருங்கள், தொடர்வோம்!

## 3.8. உங்கள் வழித்தடைகளை கடக்க ஒரு திறவுகோல்

*வலித்தடை (பெயர்ச்சொல்): முன்னேற்றத்தை நிறுத்தும் அல்லது ஒரு குறிக்கோளை அடைவதற்குத் தடையாக அமையும் ஒன்று.*

உலக அடிப்படையில் வழிநடத்தப்படும் தொழில் தலைவராக இருந்து பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்படும் தொழில் தலைவராக மாறும்போது, நீங்கள் சந்திக்கக்கூடிய தடைகளை அடையாளம் கண்டுக்கொள்வது மிகவும் முக்கியம் — ஆனால், அந்த தடைகளை எப்படித் கடப்பது / தாண்டுவது என்பதைத்தான் அதிகமாக அறிந்திருக்க வேண்டும்.

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமை வெளிப்படாமல் இருக்கச் செய்ய, பிசாசு அடிக்கடி இந்த தடைகளை விதைத்துவிடுகிறான். சிறியது, பெரிது, பெரும் மலைபோன்ற தடைகளையும், அவன் கைவசம் உள்ள எல்லா ஆயுதங்களையும் பயன்படுத்தி உங்கள் பாதையில் தடைகள் உருவாக்க முயலுவான். நாம் முன்பு விவாதித்த ஏழு வலித்தடைகளையும், கூடவே அவனுக்கு

விருப்பமான சில புதிய நுணுக்கமான தடைகளையும், தொடர்ந்து நினைவூட்டுவான்.

அவற்றை எதிர்பார்த்து இருங்கள்.

நினைவில் கொள்ளுங்கள்: அவனுடைய தடைகள் பெரும்பாலும் தற்காலிகமானவை — (நீங்கள் அவற்றை நிரந்தரமாக ஏற்றுக்கொள்ளாதவரை). அவை அனைத்தும் தேவையில்லாத கவனச்சிதறல்களே — (ஏனெனில் உங்கள் பாதை இன்னும் பயணிக்கக்கூடியதுதான்!)

அவன் உங்களை மீண்டும் தனது உலக விதிமுறைகளுக்குள் இழுத்துச் செல்ல, அவனுடைய பாணியில் தொழில் செய்ய உங்களை கட்டாயப்படுத்த, தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வான்.

இந்த வலித்தடைகளை கடப்பதற்கு அல்லது மேற்கொள்ளுவதற்கு நான் கற்றுக்கொண்ட முக்கியமான ஒரு திறவுகோல் என்னவென்றால் — முதலில், இந்த வல்லமைவாய்ந்த வேதவசனத்தை மனப்பாடம் செய்துகொள்வதே.

> நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். (ரோமர் 12:2)

பின்பு, நான் அதை என் சொந்த வார்த்தைகளில் இவ்வாறு சொல்லிக் கொள்கிறேன்…

“நான் இந்த உலகத்தின் வியாபார முறைகளுக்கு ஒத்துப்போகவில்லை. மாறாக, பரிசுத்த ஆவியின் மூலம் என் மனதை புதியதாக மாற்றிக்கொண்டு, தேவனுடைய பரிபூரண சித்தத்தின்படி நன்மையானதும், ஏற்புடையதுமான மனத்தின்படி என் வியாபாரத்தில் வாழவும், வழிநடத்தவும் மாற்றம் பெற்று வாழ்கிறேன்.”

என்ன திறவுகோல் அது? உங்கள் மனதையைப் புதுப்பித்துக்கொள்ளுங்கள்!

போராட்டம் உங்கள் மனதில்தான் ஆரம்பிக்கிறது. பரிசுத்த ஆவியின் வல்லமையின் மூலம், தேவன் உங்களை வியாபாரத்தில் என்னவெல்லாம் ஆக்க விரும்புகிறார் என்பதை ஏற்க நீங்கள் ஆயத்தமா? ஆயத்தமில்லையா? என்பதிலிருந்து அந்தப் போராட்டம் தொடங்குகிறது.

பரிசுத்த ஆவியின் வல்லமையை உங்கள் வியாபாரத்திலும் கட்டவிழ்த்துவிட கற்றுக்கொள்ளும்போது, அந்தப் போராட்டம் முடிவடைகிறது.

அடுத்து என்ன? உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை முழுமையாக கட்டவிழ்த்துவிட நீங்கள் ஆயத்தமாக வேண்டும் — அதைச் செய்ய நாம் ஆயத்தமாவோம்!

*அத்தியாயம் 3 – ஆய்வு வழிகாட்டி (Study Guide)*

ஏழு வலித்தடைகளில், உங்களுக்கு மிகப்பெரிய சவாலாகத் தோன்றும் மூன்று வலித்தடைகள் எவை? ஏன் அவை உங்களுக்கு சவாலாக உள்ளன?

1.

2.

3.

இந்த சவால்களை நீங்கள் கடப்பதற்கு உங்கள் திட்டம் / எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் என்ன?

உங்கள் வலித்தடைகளை மேற்கொள்ளும் இந்தச் சவாலில், ரோமர் 12:2 உங்களுக்கு எப்படிப்படிப்பட்ட பொருள்நிறைந்ததாக இருக்கிறது?

# 4

# ஆயத்தமாவது எப்படி

*வெளியில் உன் வேலையை எத்தனப்படுத்தி, வயலில் அதை ஒழுங்காக்கி, பின்பு உன் வீட்டைக் கட்டு.*

— நீதிமொழிகள் 24: 27

ஆயத்தமாக இருப்பது என்றால்

- நீங்கள் செய்யவிருக்கும் அல்லது நீங்கள் எதிர்பார்த்தது நடக்கப்போகும் என்பதற்காக உங்களைத் தயார்/ஆயத்தம் செய்துகொள்ளுதல்
- ஒரு குறிப்பிட்ட நோக்கம், பயன்பாடு அல்லது செயலில் ஈடுபடுவதற்காக முன்னதாகவே ஆயத்தமாக இருப்பது
- ஏற்ற மனநிலையை அமைத்துக்கொள்வது
- முன்கூட்டியே திட்டமிடுவது
- யாராக இருப்பது / ஆயத்தப்படுத்துவது

நான் ஆறு வயதில் இருந்து விளையாட்டுக்களை விளையாடத் தொடங்கினேன். பெஸ்பால், கூடைப்பந்து, கோல்ப் என பல விளையாட்டுகளில் ஈடுபட்டபோது, ஒரு நல்ல விளையாட்டு வீரராக இருக்க, களத்திற்கு வந்தால் மட்டும் போதாது, மாறாக அதையும் தாண்டி நிறைய தேவைப்படுவதை விரைவில் புரிந்துகொண்டேன். ஒரு

அணியில் இடம் பிடிக்கவும், போட்டியில் விளையாடவும் நம்பிக்கை வைத்திருந்தேன் என்றால், அதற்கென்று சரியாக ஆயத்தப்பட என் நேரத்தையும், சக்தியையும், முயற்சியையும் முதலீடு செய்ய வேண்டியது அவசியம் என்பதையும் உணர்ந்தேன்.

நான் கோல்ப் விளையாடத் தொடங்கியபோது, என் அப்பா எனக்கு முதல்முறையாக கோல்ப் விளையாட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கி தந்தார். அந்த விளையாட்டு பெருட்களை வாங்கிய நேரத்தின் ஆரம்ப உற்சாகத்தை நான் இனிமையாக நினைவுகூர்கிறேன்: ஒரு டிரைவர், ஐந்து ஐரன், ஒன்பது ஐரன், மற்றும் ஒரு புட்டர். அதைப் பெற்றபோது, என் முதல் விளையாட்டு நாயகன் சாம் ஸ்நீட் போல நானும் ஆகிவிட்டேன் என எண்ணினேன்! ஆனால், முதலாவது சுற்றை விளையாடத் எப்படி தயாராக இருக்க வேண்டும் என்று எனக்கு ஒன்றும் புலப்படவில்லை.

என் அப்பா நிதானமாகவும் தெளிவாகவும் எனக்கு கற்றுத் தந்தார் — கிளப்பைப் பிடிக்கும் முறையை, சரியான ஸ்விங் பாதையை, எப்படிக் குறிவைத்து ஒருமனதாக கவனம் செலுத்த வேண்டும் என்பதை, மற்றும் எப்படி அதைப் பூரணமாக முடிக்க வேண்டும் என்பதையும். முந்தைய பெஸ்பால் வீரரான அவருக்கு, சரியான முறையில் தயார் செய்வது எவ்வளவு முக்கியம் என்பது நன்கு தெரிந்தது. ஆகவே, என் விளையாட்டு பற்றிய ஆர்வத்தை உருவாக்குவதில் அவர் நிபுணத்துவத்துடன் நடந்து கொண்டார்.

நான் வளர்ந்தபோது, விளையாட்டிலும் வாழ்க்கையிலும் சிறந்து விளங்க, தூய மனப்பாங்கும் தீவிரமான ஆயத்தமும் எவ்வளவு அவசியமென்று நான் இன்னும் ஆழமாக உணர ஆரம்பித்தேன்.

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தும் நோக்கில் நீங்கள் முன்னேறும்போது, இதுபோலவே நீங்கள் ஆயத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் உங்களைத் தயார் செய்யவேண்டும்.

இந்த தொழில், உங்கள் அடுத்த பயணத்திற்காக , உங்கள் மனத்தையும் ஆவியையும் தயார்ப்படுத்த, தேவையான நேரத்தையும் சக்தியையும் முதலீடு செய்யவேண்டும்.

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்க்க, நீங்கள் ஆயத்தம் செய்ய வேண்டிய ஐந்து முக்கியமான பகுதிகள் இதோ:

## 4.1. இது ஜெபத்திற்கு மேலானது

> *மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியா நாட்டுக்குப் போகப் பிரயத்தனம்பண்ணினார்கள்; ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.*
>
> — அப்போஸ்தலர் 16:7

இந்தப் பகுதியின் தலைப்பை பார்த்ததும், சிறிது அதிர்ச்சி அடைந்தீர்களா? ஜெபத்தைவிட முக்கியமானது ஏதாவது இருக்க முடியுமா? நாம் விசுவாசிகளாக ஜெபம் செய்வது மிக முக்கியமானது அல்லவா?

தயவுசெய்து புரிந்துகொள்ளுங்கள் — ஜெபத்தின் வல்லமையை நான் எந்த வகையிலும் குறைத்து பேசவில்லை! வியாபாரத்தில் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதற்கான அனைத்தும் ஜெபத்திலிருந்தே துவங்குகிறது. ஜெபம் என்பது ஒருபோதும் இரண்டாம் நிலை ஆவிக்குரிய வியாபாரத் திட்டமாகக் கருதப்படவே கூடாது.

மேலும், வியாபாரத்தில் தேவனுடைய ஆவியால் முழுமையாக வழிநடத்தப்படுவது என்பது ஜெபத்தைவிட மேலானது என்பதை நீங்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏன்?

மிகவும் அர்ப்பணிக்கப்பட்ட 2% விசுவாசிகளிடையே கூட, ஜெபம் என்பது ஒரு முன்பதிவான, கால

அட்டவணைக்குள் குறிக்கப்பட்ட செயலாக மாறி இருக்கிறது — நாம் தினந்தோறும் தவறாமல் செய்ய வேண்டிய செயல் பட்டியலில் இருக்கும் இன்னொரு பக்கம் மாதிரி. வியாபாரத்திற்கான ஜெபம் இப்படி ஆகிவிடுகிறது என்றால், “சரி, இப்போது காலை 6:45... சில நிமிடங்கள் ஜெபிக்க வேண்டிய நேரம்.” — இன்றைய அட்டவணையில் ஒன்று முடிந்துவிட்டது. அதேபோல, வியாபாரத்திற்கான ஜெபம் அடிக்கடி இப்படித்தான் மாறிவிடுகிறது: “ஐயோ, இன்று நான் ஜெபிக்க மறந்துவிட்டேன்··· வேலையை துவங்குவதற்கு முன்னால் ஒரு சிறு ஜெபத்தை விரைவாகச் செய்யவேண்டும்.”

மிக மோசமானது எதுவென்றால், ஜெபம் ஒரு பரிதாபகரமான, கடைசி நிமிட செயலாக இருக்கிறது. “தேவனே தயவு செய்து, — எங்கள் வியாபாரத்தை காப்பாற்றுங்கள்!” என்று ஆகி விடுகிறது.

ஆம், இந்த மூன்றையும் நான் செய்துள்ளேன் என்பதை ஒப்புக்கொண்டு என் கையை உயர்த்துகிறேன். நீங்களும் அப்படித்தான் இல்லையா?

நீங்களும் உங்கள் குழுவும், ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து நிறைய நேரத்தையும், ஆற்றலையும், விசுவாசத்தையும் முதலீடு செய்திருந்தாலும் (அப்படிச் செய்வதே சரியானது), ஜெபம் மட்டும் போதுமானதல்ல — நமது “நியாயமற்ற போட்டிக்குரிய அனுகூலத்தை” (unfair competitive advantage) முழுமையாக வெளிப்படுத்த ஜெபம் மட்டும் போதாது.

அந்த அனுகூலத்தை முழுமையாக வெளிப்படுத்தத் தயாராவதற்கு ஜெபத்தைவிட மேலானது எதுவென்றால், அது முழுமையான ஆவிக்குரிய விழிப்புணர்வாக இருக்கவேண்டும்!

## *ஆவிக்குரிய விழிப்புணர்வுடன் இருங்கள்*

பரிசுத்த ஆவி எப்போதும் உங்களுக்குள் மற்றும் உங்கள் சுற்றுப்புறத்தில் செயல்பட்டு கொண்டிருக்கிறார் — சில நேரங்களில் நுண்ணிய முறையிலும், சில நேரங்களில் தெளிவான முறையிலும். எப்போதும்.

உங்கள் வியாபாரத்தில் உள்ள “நியாயமற்ற அனுகூலத்தை” வெளிப்படுத்தத் தயாராகும்போது, இரண்டு முக்கியமான அளவுகளில் ஆவிக்குரிய விழிப்புணர்வு தேவைப்படுகிறது.

## *முதல் நிலை: தனிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு*

ஆவிக்குரிய விழிப்புணர்வு என்பது, பரிசுத்த ஆவி உங்களுக்குள் எவ்வாறு செயல்படுகிறார் என்பதைக் குறித்து திட்டமிட்டு செய்யப்படும் ஆய்வுலிருந்து ஆரம்பிக்கிறது. தனிப்பட்ட விழிப்புணர்வை வளர்க்க, கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் கூறுவதன் மூலம் நீங்கள் தொடங்கலாம்:

- இன்று பரிசுத்த ஆவி என்னிடம் என்ன கூறுகிறார்?
- இன்று யாரை அணுக வேண்டும் என்று பரிசுத்த ஆவி என்னிடம் சொல்கிறார்?
- நான் எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்றும், பரிசுத்த ஆவி வழிக்காட்டுவதை நான் எவ்வாறு உணர்வது?

இப்போது ஒரு 15 நிமிடங்கள் ஒதுக்கி, இந்தக் கேள்விகளுக்கான உங்கள் பதில்களை எழுதி வையுங்கள். அமைதியான இடத்தில் இதைப் பற்றி தியானியுங்கள். ஏன் இப்போது? இது தான் உங்கள் ஆயத்திற்கான முதல் முக்கியமான படி… உங்கள்

தனிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வை நுண்ணியமாகத் கவனித்து, பரிசுத்த ஆவியானவர் இப்போது உங்களிடம் என்ன பேசுகிறார் என்பதை கேட்கும் நிலைக்கு வருவதற்கான ஆரம்பம்.

இந்தப் பக்கத்தை பிரிண்ட் செய்து, உங்கள் உள்ளுணர்வுகளை எழுதிக் கொள்ளுங்கள்.

இன்று பரிசுத்த ஆவி என்னிடம் என்ன கூறுகிறார்?

இன்று யாரை அணுக வேண்டும் என்று பரிசுத்த ஆவி என்னிடம் சொல்கிறார்?

நான் எதிர்காலத்தில் என்ன செய்யவேண்டும் என்றும் பரிசுத்த ஆவி வழிக்காட்டுவதை நான் எவ்வாறு உணர்வது?

இந்த மூன்று கேள்விகளையும் தினமும் உங்களிடமே கேளுங்கள். இதை நீங்கள் தொடர்ந்து செய்து வரும்போது, உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வில் நோக்கத்துடன் இருப்பவராக விரைவாக மாறுவீர்கள்.

## *நிலை 2: தொழில்முறை ஆவிக்குரிய விழிப்புணர்வு*

நீங்கள் உங்கள் தனிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வை வளர்த்து நன்கு வடிவமைத்த பிறகு, அதைத் தொடர்ந்து தொழில்முறை ஆவிக்குரிய விழிப்புணர்வை நோக்கி கவனம் செலுத்தலாம்.

இதோ ஒரு தனிப்பட்ட எடுத்துக்காட்டு: சில ஆண்டுகளுக்கு முன்பு, ஒரு 2% தொழிலதிபரை சந்திக்க எனக்கு அழைப்பு வந்தது. அவர் ஒரு பெரிய அலுவலகக் கட்டிடத்தின் முழு மாடியை வாடகைக்கு எடுத்திருந்தார்; அதில் தேவையில்லாத இடங்களை மற்ற கிறிஸ்தவ வியாபாரங்களுக்கு உள்வாடகைக்கு விட்டிருந்தார். அவரது அலுவலகங்களை முதல் முறையாக நான் சுற்றிப் பார்ப்போது, ஒரு பரவலான தீய ஆவியின் இருப்பை உணர்ந்தேன். உடனே, இந்த அலுவலக இடத்தில் முன்பு யார் இருந்தனர் என்று அவரைக் கேட்டேன். அவர் கூறியதைப் வைத்து, முன்பு அந்த இடத்தில் "பிளான்ட் பேரன்ட்ஹூட்" (Planned Parenthood) என்ற அமைப்பின் பெரிய அலுவலகம் இருந்தது என்பதை அறிந்துக்கொண்டேன். அமெரிக்காவில் இந்த அமைப்பு குழந்தைகளை கருக்கலைப்பதை வெளிப்படையாக ஆதரிக்கும் ஒன்று. உடனே நாங்கள் ஜெபிக்கத் தொடங்கினோம், அந்த அலுவலகங்களை அபிஷேகம் செய்தோம், மேலும் அந்த இடங்களில் இருந்த தீய ஆவிகளை அகற்றினோம்.

முதல் நிலையாகிய தனிப்பட்ட ஆவிக்குரிய விழிப்புணர்வு பயிற்சியை நான் பல ஆண்டுகள் செய்த பின்னரே, இரண்டாம் நிலையான தொழில்முறை ஆவிக்குரிய விழிப்புணர்வை எப்படி பயன்படுத்துவது எனக் கற்றுக்கொள்ள ஆரம்பித்தேன்.

நீங்கள் பரிசுத்த ஆவியானவரால் முழுமையாக வழிநடத்தப்பட தயாராக இருக்க, உங்கள் கற்றல் பயணத்தைக் குறைக்கும் வழி இதோ:

இங்கே நான் பகிரும் சில கேள்விகள், பரிசுத்த ஆவியானவர் என் வியாபாரத்தின் உள்ளும் வெளியும் எவ்வாறு இயங்குகிறார் என்பதில் விழிப்புணர்வுடன் இருக்க எனக்குத் துணை செய்தன. இவையே உங்களுக்கும் உதவக்கூடும். தற்போதே 15 நிமிடங்கள் எடுத்துக்கொண்டு, இந்த இலட்சியமான தொழில்முறை ஆவிக்குரிய கேள்விகளுக்கான உங்கள் உள்ளுணர்வுகளை எழுதி வையுங்கள்.

பரிசுத்த ஆவியானவர் என் வியாபாரத்தில் எங்கு இயங்குகிறார் என நான் எங்கு உணருகிறேன்?

தற்போதைய சூழ்நிலையில் பரிசுத்த ஆவியானவர் எவ்வாறு இயங்குகிறார்?

என் வியாபாரம் சார்ந்த உள்ளேயும் வெளியேயும் யாரை பரிசுத்த ஆவியானவர் வழிநடத்துகிறார்?

சக ஊழியர்கள் – மேலாளர்கள், மேற்பார்வையாளர்கள், முன்னணி பணியாளர்கள், தற்காலிக ஊழியர்கள்

வாடிக்கையாளர்கள் – உள்ளூர், தேசிய, உலகளாவிய

சம்பந்தப்பட்டவர்கள் – விற்பனையாளர், விநியோகஸ்தர்கள், இயக்குநர் குழு, வாடிக்கையாளர் அல்லாத ஆதரவாளர்கள்

சமூகம் – நாங்கள் சேவை புரியும் புவியியல் பகுதிகள்

எதிர்வரும் செயல்பாடுகள், திட்டங்கள், தகவல்தொடர்புகள் அல்லது வியாபார உறவுகளில் நான் அதிகமாக பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட வேண்டிய இடங்கள் எவை?

*பலன்கள்*

காலப்போக்கில், நீங்கள் உங்கள் தனிப்பட்ட மற்றும் வியாபார ஆவிக்குரிய விழிப்புணர்வை அதிகரிக்க மேலும் மேலும் இலட்சியமுள்ளவராக மாறுவீர்கள்.

நீங்கள் இந்த புத்தகத்தை இவ்வளவு தூரம் வாசித்து வருகிறதன் மூலமாகவே, தேவன் உங்கள் வாழ்க்கையிலும் வியாபாரத்திலும் அவரோடு மேலும் இணைவதற்கான வழிகளைத் துவக்கி விட்டார்.

பல முறை, நான் திட்டமிட்ட ஜெப நேரத்திற்குப் பிறகு, உண்மையாகவே ஆனந்த கண்ணீர் விட்டிருக்கிறேன் — ஏனென்றால் அவர், என்னை சுற்றியுள்ளவர்களின் வாழ்க்கையில் தன் மகிமைக்காக செயல்படுகிறார் என்றும், தன் திட்டத்தில் என்னையும் இணைத்துக் கொண்டிருக்கிறார் என்பதற்காக!

தெளிவாகச் சொல்லவேண்டும் என்றால், என் தனிப்பட்ட மற்றும் வியாபார ஆவிக்குரிய தியானங்கள், தேவனுடைய ராஜ்யத்தைச் சென்றடைவதற்கான என் அர்ப்பணிப்பை, நான் செய்யும் பிற செயல்களைவிட அதிகமான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்த அனுபவத்தின் மூலமாக, நான் உறுதியாகக் கூறுகிறேன்: எதுவும் என்னைத் தடுத்து நிறுத்த முடியாது!

நீங்கள் பாருங்கள் — இது வெறும் ஜெபம் மட்டுமல்ல. அதற்கும் மேலானது!

ஜெபத்தையும், திட்டமிட்ட தனிப்பட்ட மற்றும் தொழில்முறை ஆவிக்குரிய விழிப்புணர்வையும் இணைத்துக்கொண்டால், நீங்கள் உங்கள் “நியாயமற்ற அனுகூலத்தை” வெளிப்படுத்த தயாராகும் முதலாவது படியை எடுத்துவிட்டீர்கள்!

## 4.2. இது வெறும் குரலல்ல, அதற்கும் மேற்பட்டது

> *அவன் (சிமியோன்) ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு*

*என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாணமுறைமையின்படி செய்வதற்குத் தாய் தகப்பன்மார் அவரை உள்ளே கொண்டுவருகையில்...*

— லூக்கா 2:27

*இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன்.*

— அப்போஸ்தலர் 20:22

நம்மில் அநேகர் தேவனுடைய சத்தத்தை எரிகிற முட்டச்செடியின் வாயிலாக (யாத் 3:1), ஒரு பெரிய ஒளியுள்ள மேகத்தின் வாயிலாக (மத். 17:5), அல்லது ஒரு கழுதையின் வாயிலாக (எண். 22:28) கேட்க வேண்டும் என்று மிகவும் விரும்புகிறோம்.

வேதத்தில் சில நிகழ்வுகளில், சிலர் தேவனுடைய குரலை தங்கள் இயல்பான செவிகளால் நேரடியாகக் கேட்டார்கள். ஆனால் இது விதிமுறை அல்ல; அது சில அபூர்வ நிகழ்வுகளாக இருந்தன. இன்று கூட, அதே நிலைதான் தொடருகிறது.

பரிசுத்த ஆவியானவர் உங்களுடன் வெளியரங்கமாக அவருடைய சத்தம் கேட்கும் வகையில் பேச முடியுமா? கண்டிப்பாக முடியும். அவர் அடிக்கடி அவ்வாறு பேசுவாரா? என்னுடைய விஷயத்தில் அது மிக குறைவுதான். ஏன் தெரியுமா?

ஏனெனில் அவர் எனக்குள் வாசம்செய்கிறார்! அவர் ஏற்கனவே என் உள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும்போது, அவர் என்னுடன் பேச ஒலிகள் ஏற்படுத்த வேண்டியதில்லை.

அவரது குரலை கேட்பது என்பது ஒரு சத்தத்திற்காக காத்திருப்பதைவிட மேலானது – அது என் உள்ளே

வாழும் ஆவியானவரிடம் எப்படி இன்னும் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்திக்கொள்வது என்பதை கற்றுகொள்ளுவதாகும்.

## *தேவன் உங்களோடு பேசுகிறார்*

நீங்கள் நிச்சயமாகவே, தேவன் உங்களுடன் பேசக்கூடியவராக இருக்கிறார் என்று நம்புகிறீர்கள். ஆனால், சில சமயங்களில் நீங்களே, “அவர் பேசுகிறாரா என எனக்குத் தெரியவில்லை… நான் அவருடைய குரலை கேட்கவில்லை” என்று சொல்லும் நிலைக்கு வரலாம்.

இப்போது ஒரு இலவச ஆலோசனை: அப்படி ஒருபோதும் சொல்லாதீர்கள்! ஒருபோதும்.

கர்த்தர் உண்மையிலேயே உங்களுடன் பேசுகிறார் என்பதை நான் உறுதியாகச் சொல்கிறேன் – விசுவாசியுங்கள்.

தேவன் எங்கு வேண்டுமானாலும் இருக்கக்கூடியவரெனில், அவர் எப்போதும், எல்லா இடங்களிலும் இருக்கிறவர்தான்.

தேவன் எல்லாவற்றையும் அறிபவராக இருந்தால், அவர் கடந்த கால நிகழ்வுகளையும், நிகழ்ந்து கொண்டிருப்பதையும், எதிர்காலத்தில் நடக்கவிருப்பதையும் முன்கூட்டியே அறிந்திருப்பார். அவருடைய ஆவி உங்களுக்குள் இருந்தால், அவர் எப்போதும் உங்களைச் சூழ்ந்திருந்தால், நீங்கள் அவருடைய பிரசன்னத்தினால் சூழப்பட்டவராகவே இருக்கிறீர்கள்.

கற்பனை செய்துபாருங்கள், உங்கள் வாழ்க்கைத் துணை, மகன் அல்லது மகள் எப்போதும் உங்களுடன் இருக்கிறார்கள் என்றால் — அவர்கள் நீங்கள் செல்லும் ஒவ்வொரு இடத்திலும், நீங்கள் கலந்துகொள்ளும் ஒவ்வொரு சந்திப்பிலும், உங்களுடன் பயணம் செய்யும் ஒவ்வொரு பயணத்திலும் இருப்பார்கள் என்றால் — அவர்கள் இருக்கிறார்கள் என்பதை நீங்கள் உணர

முடியுமா? நிச்சயமாக உணருவீர்கள்! அவர்கள் உங்களோடு பேசாமலிருந்தாலும் கூட, அவர்கள் உங்களோடு இருக்கிறார்கள் என்பதைக் உணர முடியும்.

அதேபோலவே, தேவனும் உங்கள் வாழ்க்கையில் பேசுகிறார் — அவர் தனது பிரசன்னத்தின் மூலம் பேசுகிறார். இதைத்தான் நான் “உள் அறிதல் என்று அழைக்க விரும்புகிறேன்.

## *உள் அறிதல்*

உள் அறிதல் என்பது உங்கள் மனதையும், உணர்வுகளையும், உடல் உணர்ச்சிகளையும் கடந்த ஒரு ஆழமான உள்ளார்ந்த நுண்ணுணர்வு. இது ஒரு ஆவிக்குரிய தூண்டுதல் அல்லது உந்துதல்.

நீங்கள் சத்தம் கேட்கும் குரல் இல்லையென்றாலும், இது தேவனிடமிருந்து வந்ததென்பதை உள்ளார்ந்த முறையில் அறிந்து விடுகிறீர்கள். நீங்கள் அறிந்துள்ளீர்கள் என்பதைச் சரியாகவே உணர்கிறீர்கள்.

நீங்கள் எப்போதாவது உங்களுக்கோ அல்லது மற்ற ஒருவருக்கோ இவ்விதமாக சொன்னதுண்டா? "எனக்கு தெரியும் நான் இதைச் செய்திருக்கக்கூடாது ..." அல்லது, " எனக்கு தெரியும் நான் இதைச் செய்திருக்க வேண்டும் ..." அல்லது, "இது தவறான தீர்மானம் என்பதை அறிந்தும், அதையே செய்துவிட்டேன்…" அப்படியென்றால், அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது? யார் உங்களிடம் செய்யச்சொல்லி இருந்தார்? அல்லது செய்யக்கூடாது என்று எச்சரித்தார்?

நீங்கள் ஒரு 2% ஆவிக்குரிய வழிநடத்தலுக்குள் நடந்துவரும் ஒருவர் என்றால், அந்த உள் அறிதல்/உள் உணர்வு, உங்கள் உள்ளே வாழும் பரிசுத்த ஆவியால்தான் வந்திருக்க வாய்ப்பு உள்ளது. இதுதான் 1 இராஜாக்கள் 19:12ல் நாம் பார்க்கும், மென்மையான, மெல்லிய, கேட்க முடியாத குரல்.

பரிசுத்த ஆவியின் சத்தத்தை சத்தமாக கேட்பதற்காக வெளிப்படையான குரல்களையோ

அல்லது எரியும் முட்டச்செடியையோ தேட வேண்டாம் என்று உங்களை நான் கேட்டுக்கொள்கிறேன். இது உங்கள் ஆவிக்குரிய காதுகளை பயிற்றுவிப்பதாகும். உங்கள் “நியாயமற்ற அனுகூலத்தை” வெளிப்படுத்துவது என்பது, ஒரு குரலை/சத்தத்தை கேட்பதைவிட மிக ஆழமானது.

## 4.3. முழு மனதுடன் இருங்கள்

> *என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றிவந்தபடியினாலும், அவன் போய்வந்ததேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.*
>
> — எண்ணாகமம் 14:24

முழு மனதோடு இருங்கள் என்பதின் விளக்கம்:

- ஏதாவது செய்வதில், அல்லது யாரையாவது ஆதரிப்பதில் சந்தேகமோ குழப்பமோ இல்லாமல் இருப்பது. → சந்தேகமின்றி, முழுமையான ஒப்புதலோடு செயல்படுவது.
- முழுமையாகவும், உண்மையாகவும் அர்ப்பணிக்கப்பட்ட, உறுதியுடன் அல்லது உற்சாகத்துடன் இருப்பது. → முழு உணர்ச்சியோடும், உண்மையோடும் அர்ப்பணிப்புடன் செயல்படுவது.
- முழுமையான, நேர்மையான அர்ப்பணிப்பைக் குறிக்கிறது. → முழு மன உறுதியுடன் செயல்படுவது.

- சந்தேகமோ, தயக்கமோ இல்லாத மனநிலையை உணர்த்துகிறது. → தயக்கம் இல்லாத, திறந்த மனதோடு இருப்பது.

வேதாகமத்தில் எனக்கு மிகவும் பிடித்த நாயகர்களில் ஒருவர் காலேப். காலேப் மற்றும் யோசுவா, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட தேசத்தை விசாரிக்க 12 உளவாளிகளில் இருவராக நியமிக்கப்பட்டார்கள். அவர்கள் ஒரு அறிக்கையுடன் மோசேயிடம் திரும்பி வர வேண்டியவர்களாக இருந்தார்கள். மீதமுள்ள 10 பேர் பயத்தில் மூழ்கி, யோர்தான் நதியை தாண்டித்தான் அந்த தேசத்தை பிடிக்க வேண்டும் என மோசேவிடம் வலியுறுத்திய யோசுவா மற்றும் காலேப்பை கொன்று விடவேண்டும் என்ற நிலைக்கு வந்தார்கள்.

ஆனால் யோசுவா மற்றும் காலேப், கர்த்தரின் வாக்குறுதிகளை நம்பினார்கள் மற்றும் முழு மனதோடு அவருக்கு அருட்பணியாற்றினார்கள். கர்த்தர் கட்டளையிடும் போது, போருக்கு செல்ல தயாராக இருந்தார்கள்.

உங்கள் வியாபாரத்தின் வழியாக பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தும் பயணம் தயங்கி தயங்கி செல்லுபவர்களுக்கோ அல்லது மனவலிமையற்றவர்களுக்கோ அல்ல! நீங்கள் அந்த பயணத்தை ஏற்றுக்கொள்ளும் வேளையில், முழு மனதோடு, எதிலும் பின்வாங்காமல், ஆவியால் வழிநடத்தப்படும் விதத்தில் முன்னே செல்லவேண்டும்.

## *இருபுறமும் சார்ந்து நிற்காதீர்கள்*

> *இதோ, ஜீவனையும் நன்மையையும், மரணத்தையும் தீமையையும் இன்று உனக்கு முன்னே வைத்தேன். நீ பிழைத்துப் பெருகும்படிக்கும், நீ சுதந்தரிக்கப்போகிற தேசத்தில் உன் தேவனாகிய கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கும்படிக்கும், நீ உன் தேவனாகிய கர்த்தரில் அன்புகூரவும், அவர் வழிகளில்*

> *நடக்கவும், அவர் கற்பனைகளையும் கட்டளைகளையும் நியாயங்களையும் கைக்கொள்ளவும், நான் இன்று உனக்குக் கற்பிக்கிறேன். ... நான் ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் உனக்குமுன் வைத்தேன் என்று உங்கள்மேல் வானத்தையும் பூமியையும் இன்று சாட்சிவைக்கிறேன்; ஆகையால், நீயும் உன் சந்ததியும் பிழைக்கும்படிக்கு, நீ ஜீவனைத் தெரிந்துகொண்டு,*
>
> — உபாகமம் 30: 15, 16 & 19

தெய்வீக வழியோ அல்லது உலக வழியோ — தேவன் நமக்குத் தெளிவாக ஒரு தேர்வை அளித்துள்ளார். அதுவும் வெறுமனே இல்லை — அதற்கான சரியான பதிலையும் அவர் தந்துவிட்டார்.

ஆனால் எந்த வழி என்று தேர்வு செய்வது அவருடையது காரியம் அல்ல — நம்முடையது. இது என் தொழில்முறை பயணத்தில் நடந்தவற்றை பற்றியதான வாக்குமூலம். நீங்கள் வாசிக்கும்போது இது உங்களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கிறேன்.

நான் ஒரு இளம் வயது வாலிபனாக இருக்கும்போது இரட்சிக்கப்பட்டேன். ஆனால் காலம் செல்ல செல்ல மெதுவாகவே தேவனிடமிருந்து மற்றும் கிறிஸ்துவின் உடலான திருச்சபையிலிருந்து விலகத் தொடங்கினேன். 16வது வயதில், ஞாயிற்றுக் கிழமைகளில் தேவாலயத்துக்குச் செல்லாமல் பெஸ்பால் விளையாட ஆரம்பித்ததிலிருந்து அது துவங்கியது. மீண்டும் முழுமையாகவே தேவனிடம் திரும்பிய போது, எனக்கு ஏறத்தாழ 40 வயது இருக்கும் — அதுவே என் தற்போதைய வியாபாரம் தொடங்கிய காலமும் ஆகும்.

என் புதிய வியாபாரத்தின் முதல் பத்து ஆண்டுகளில், நான் பல வியாபார புத்தகங்களை எழுதியிருந்தேன்.

அவற்றில் சில புத்தகங்கள் பாராட்டுகளைப் பெற்றவையும் விருதுகளையும் வென்றவையும் ஆகும்.

அப்போதுதான், கர்த்தர் என்னோடு கிரியை செய்யத் துவங்கினார். முழுமையாக உலகச் சிந்தனையிலேயே ஓடிக்கொண்டிருக்கும் ஒரு வியாபார பாதை என்பது, தேவன் விரும்பும் பாதையாக எனக்குத் தெரியவில்லை. ஆகவே, நான் எடுத்த முடிவு? இரண்டு பக்கமும் சார்ந்து நிற்பது!

பல ஆண்டுகளாக, நான் ஒரு காலடி உலக வியாபார முறையில் வைத்து, மற்றொரு காலடியை தேவனுடைய வழியில் வைப்பதற்குப் பாடுபட்டேன். இதற்கிடையில், நான் போதர்களுக்குக்கான அநேக மாநாடுகளில் பேசினேன், போதகர் குழுவில் இருந்த ஊழியர்களுக்கு வேதாகமத்தின் அடிப்படையில் நிர்வாக நெறிமுறைகளை பயிற்றுவித்தேன், மற்றும் பல தேவாலயங்களில் ஞாயிறு ஆராதனைகளிலும் பிரசங்கித்தேன்.

அந்தக் கால கட்டத்தில் இருபுறமும் சார்ந்து நிற்கும் நிலை போதுமானதாகத் தோன்றியது. ஆனால் 2009 ஆம் ஆண்டு, கர்த்தர் எனக்குத் தெளிவாக — சத்தமாக கேட்கும் குரலாக இல்லை, ஆனால் மிக வலிமையான உள் உணர்வாக — சொன்னார்: "முழுமையாக என் பக்கம் வா என்று."

அந்த தருணத்தில், எனக்கு ஒரு தீர்மானம் எடுக்க வேண்டிய நேரம் வந்தது: இருபுறமும் சார்ந்து நிற்கும் நிலையைத் தொடரவேண்டுமா? அல்லது நான் செய்யும் அனைத்தையும் தேவனுக்காகவும், அவருடைய மகிமைக்காகவும் முழுமையாக அர்ப்பணிக்க வேண்டுமா?

சில வாரங்கள் எடுத்துக்கொண்டாலும், இறுதியில் நான் என்னை அர்ப்பணித்து கதறி அழுதேன்: "கர்த்தாவே… எது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும்! நீங்கள் என்னை எதற்காக அழைக்கிறீர்களோ, என்ன செய்ய விரும்புகிறீரோ — நான் அதையே செய்வேன்."

அதுவே தேவனுடைய சித்தத்திற்கு நான் என்னை முழுமையாக அர்ப்பணித்த இடம். அவருடைய வழிக்கே அர்ப்பணித்த தருணம். என் வியாபாரத்தின் வழியாக முழு மனதோடு கர்த்தருக்காக வாழவும், உழைக்கவும் நான் தீர்மானித்த தருணமும் இதுவே.

உங்கள் தொழில்முறை பயணம் இவ்வளவு சவாலானதாக இல்லாமல் இருக்கலாம். ஆனால் முடிவானது ஒரே மாதிரியாக இருக்கும் — நீங்கள் மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும், உங்கள் வியாபாரத்தில் முழுமனதோடு கர்த்தருக்காகவே வாழும் தீர்மானம் அது.

அது உங்கள் தேர்வே. எல்லாவற்றையும் தேவனிடத்தில் கொடுத்துவிடுங்கள் அல்லது கொடுக்காதீர்கள். ஆனால், நீங்கள் செய்கிறவற்றில் அரைகுறை மனதோடு இருக்கிறீர்கள் என்றால், அது உங்கள் அழிவும், வீழ்ச்சியுமாகிவிடும் என்பதைக் கனிவாக எச்சரிக்கிறேன்.

> உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; நீ குளிருமல்ல அனலுமல்ல; நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும். இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப்போடுவேன்.
> (வெளிப்படுத்தல் 3: 15-16)

உங்கள் வியாபாரத்தில் “இருபுறமும் சார்ந்து நிற்கும் ” நிலை எப்படித் தோன்றக்கூடும்? சில எடுத்துக்காட்டுகள் இங்கே:

- யாராவது பார்த்து விடுவார்கள் என்பதற்காக பகலில் ஜெபிக்கத் தயங்குவது
- ஒரு தருணத்தில் சபிப்பது, அடுத்த தருணத்தில் தேவனை ஸ்தோத்திரிப்பது

- உங்கள் வியாபார அட்டையில் (Business card) வேத வசனத்தை அச்சிட்டு, மக்கள் உங்களை ஒரு உண்மையான கிறிஸ்தவனாக எண்ணுவார்கள் என்று நம்புவது
- தேவனுடைய காலவரம்பற்ற உண்மைகளை விட, சமீபத்திய வியாபார நெறிமுறைகளையே நம்புவது
- முதலில் உங்களுக்கே சம்பளம் வரவேண்டும் என்பதற்காக, விற்பனையாளர்களுக்கு தாமதமாக பணம் செலுத்துவது

இவற்றுள் ஏதாவது உங்களை தாற்பரிசோதனை செய்ய உதவியதா? அப்படியானால் நல்லது. இவை உங்களை வம்புக்கு இழுப்பதற்காகவோ அல்லது அவமானப்படுத்தவோ அல்ல, மாறாக இந்தப் பகுதிகளிலும் தேவனுடைய சித்தத்தை தெளிவாகத் தேடி, உங்கள் வியாபாரத்தில் முழுமனதோடு கர்த்தருக்காக வாழ உங்களை ஊக்கப்படுத்தவே சொல்லப்படுகின்றன.

*ஒரு சவால்*

இப்போது இந்தப் புத்தகத்தை ஓரமாக வைக்க மிகச் சிறந்த நேரம்! ஒரு நாள், ஒரு வாரம் அல்லது அதற்கும் மேலாக — நேரத்தை திட்டமிட்டு அமைதியான ஜெபமும் நோன்பில் (quiet time) செலவிடுங்கள். உங்கள் சந்தைநிலையத்தில் முழுமனதோடான ஒரு காலேபாக தேவன் உங்களை ஆயத்தப்படுத்திட அவரிடம் கேளுங்கள்!

சரி, இப்போது இந்தப் புத்தகத்தை மூடுங்கள். நீங்கள் இருபுறமும் சார்ந்து நிற்பவராக (fence-straddler) இருக்கும் நிலையை கர்த்தரிடம் அற்பணியுங்கள். அதுவரை நான் இங்கேதான் இருப்பேன்!

## *உங்கள் அனைத்தையும் கொடுங்கள்*

> *நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.*
>
> — கொலோசெயர் 3: 23-24

மீண்டும் வரவேற்கிறேன்! உங்கள் 'அமைதியின் நேரம்' ஓர் வல்லமையான அனுபவமாக இருந்து, உங்களுக்கு தெளிவு, அமைதி, உற்சாகம் ஆகியவற்றைக் கொடுக்கட்டும் என்று ஜெபிக்கிறேன்.

இப்போது, உங்கள் வியாபாரத்தில் முழுமனதோடு இருப்பதற்கான இரண்டாவது வழியை நாம் படிப்போம் — அதாவது உங்களுடைய அனைத்தையும், முழுமனதையும் இறைவனுக்காக அர்ப்பணித்தல்!

இது எளிதாகத் தெரிந்தாலும், நடைமுறையில் மிகவும் கடினம்.

இந்த உண்மையை விளக்க என்னுடைய ஒரு தனிப்பட்ட அனுபவத்தைப் பகிர விரும்புகிறேன்.

நான் ஐந்து வயதில் ஒழுங்குபடுத்தப்பட்ட பேஸ்பால் போட்டிகளில் விளையாடத் தொடங்கினேன். அதே நேரமே, பிச்சர் (pitcher) ஆக விரும்பினேன். ஏனெனில், பிச்சராக இருக்கும்போது, நீங்கள் கட்டுப்பாட்டில் இருப்பீர்கள். நீங்கள் பந்தை வேகமாக வீசலாம். உங்கள் குழுவினர் உங்களை நம்பி செயல்படுவார்கள். நீங்கள் வெற்றி பெற்றால் அதிக புகழும், தோல்வியடைந்தால் அதிக பழியும் உங்களுக்கே வரும். நான் என் இருபதுகளில் இருக்கும் வரை ஒழுங்குபடுத்தப்பட்ட பேஸ்பால் போட்டித்தொடர்களில் பிச்சிங் செய்தேன். இது வெறும் ஆர்வம் மட்டுமல்ல, அதற்கும் அதிகமானது.

நான் நான்கு ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளியில் பேஸ்பால் விளையாடியபோது, எனது பிச்சிங் சாதனை 23–7 (23 போட்டிகளில் வெற்றி, 7 தோல்வி) என இருந்தது — பரவாயில்லாமல் சிறப்பாகவே இருந்தது.

படிப்பை முடித்த பிறகு, மாநிலம் முழுவதிலும் இருந்து சிறந்த வீரர்கள் பங்கேற்ற ஒரு போட்டித்திறன் மிகுந்த கோடை போட்டித்தொடரில் விளையாடினேன். போட்டி முடிவின் போது, வென்ற ஒரே குழுவே அடுத்த சுற்றுக்கு செல்லும் தனித்திறன் மிக்க தொடரில் விளையாட வேண்டியிருந்தது. அதில் நாங்கள் இரண்டு போட்டிகளில் வெல்ல வேண்டும் என்பது விதி.

முதல் போட்டிக்காக பயிற்சியாளர் என்னை தேர்ந்தெடுத்தார். இரண்டாவது போட்டிக்கு, என் உயர்நிலை பள்ளி நண்பர் ஒருவரை (ஸ்டீவ்) தேர்ந்தெடுத்தார். முதல் நாள் முழுக்க நான் பிச்சிங் செய்தேன் — அது ஒரு நீண்ட, கடினமான போட்டியாக இருந்தது — ஆனால் நாங்கள் வென்றோம். பின்னர் 40 மைல்கள் வாகனத்தில் சென்று மறுநாள் திரும்பி வந்து மாநிலத்தின் சிறந்த குழுவை எதிர்கொண்டு விளையாட தயாரானோம்.

நாங்கள் விளையாட்டு மைதானத்திற்கு வந்தபோது, ஸ்டீவ் அங்கு இல்லை. போட்டிக்கு ஒரு மணி நேரம் முன் தான் தெரிந்தது — அவன் இன்று பந்து வீச வரமாட்டான் என்று முடிவெடுத்துவிட்டான் என்று. ஏன் அவன் வரவில்லை என்பது எங்களுக்கு தெரியவில்லை. ஆனால் அது இப்போது முக்கியமில்லை. எங்கள் அணியில் இருந்த ஒரே திறமைமிக்க ஆரம்ப பந்துவீச்சாளராக நான் மட்டுமே மீதமிருந்தேன். வழக்கமாக, ஒரு ஆரம்ப பந்துவீச்சாளருக்கு ஒரு போட்டிக்குப் பிறகு மூன்று முதல் நான்கு நாட்கள் ஓய்வு அளிக்கவேண்டும். ஒரு பிச்சரின் கையும் உடலும் சோர்வடைந்து இருக்கும்; அது மீண்டும் புத்துயிர் வேண்டும்.

எனது கை மற்றும் உடல் இன்னும் கடந்த இரவின் சோர்வில் இருந்து மீண்டுவரவில்லை. எனவே பயிற்சியாளர் என்னைப் பார்த்து கேட்க வேண்டிய

கட்டாயத்தில் இருந்தார்: "ஜிம், உன்னால் இன்று இரவு பந்து வீச முடியுமா?"

இங்கே ஒரு பின்னணி உங்களுக்குத் தெரியவேண்டும். ஸ்டீவ் மற்றும் நான் பல ஆண்டுகளாக ஒருவருக்கு எதிராகவும், ஒரே அணியிலும் விளையாடியிருக்கிறோம். நாங்கள் நல்ல தோழமையுள்ள போட்டியாளர்கள். ஒருவரை ஒருவர் தங்களை விட சிறந்த பந்துவீச்சாளர் என்று நிரூபிக்க விரும்பினோம். ஸ்டீவ்கு பிரபல கூட்டம் இருந்தது. அவன் பதட்டம் இல்லாமல் இருப்பான். ஆனால் நான் அந்த வகையிலல்ல. ஸ்டீவ் இடக்கை பந்துவீச்சாளர்; அவனது வேகப்பந்து கொடூரமாக இருந்தது. நான் வலக்கை பந்துவீச்சாளர்; எனது வளைந்த பந்து (curveball) அற்புதமாக இருந்தது; ஆனால் வேகம் குறைவுதான். விளையாட்டில் சிறந்தவர்களாக, எங்கள் இருவருக்கும் நல்ல நட்பு இருந்தது. இருவரும் எங்களுடைய அணி வென்றாக வேண்டும் என்று மிகுந்த அர்ப்பணிப்போடு இருந்தோம்.

அந்த எதிரி அணியை நான் ஒருமுறையும் தோற்கடித்ததில்லை. எனது பள்ளி மற்றும் கோடை தொடர் போட்டிகளில் ஐந்து முறை அந்த அணியிடமே தோற்றிருக்கிறேன். அவர்கள் என்னைக்கண்டு பயப்படவில்லை; நானும் அவர்களை கண்டு பயப்படவில்லை.

அந்த இரவுக்கான என் உந்துதல் அதிகமாக இருந்தது! அந்த அணியைத் தோற்கடிக்க வேண்டும், இரண்டு போட்டிகளையும் தொடர்ச்சியாக வெல்ல வேண்டும், மற்றும் நான் தான் சிறந்த வீரன் என்பதை நிரூபிக்க வேண்டும் என்று. (இந்த அளவு பெருமையை வெளிப்படுவதற்கு மன்னிக்கவும்.)

நான் போட்டியைத் தொடங்கினேன். மொத்த அணியும் வெற்றிக்காக உற்சாகமாக இருந்தது!

ஐந்து ஆட்டங்களுக்கு பிறகு, நாங்கள் 4–2 என்ற ரன்கள் வேறுபாட்டில் முன்னிலை வகித்தோம். ஆறாவது ஆட்டத்தின் தொடக்கத்தில் நான் மைதானத்தின்

பவிலியனில் (pavilion) இருந்து வந்து பந்து வீச தயாராக நின்றபோது, பயிற்சியாளர் என்னைக் கேட்டார்: “ஜிம், நீ எப்படி இருக்க?” அவர் எனது சோர்வை காண முடிந்தது. எனது சாதாரண வேகப்பந்து இன்னும் மெதுவாகிவிட்டது; என் வளைந்த பந்து கொஞ்சம் உயரமாக விழுந்தது.

நிச்சயமாக, நான் சொன்னேன், “ஏய் கோச்… நான் நல்லா இருக்கேன்,” என்று, எப்போதும் போலவே விரைந்து மைதானத்தில் பந்துவீசும் இடத்திற்கு சென்றேன்.

பயிற்சியாளர்க்கு அடுத்து என்ன நடக்கப்போகிறது என்று தெரியும். நானும் தெரிந்து கொண்டேன். ஆனாலும், ஒரு கடைசி முயற்சி செய்யவேண்டும் என்ற உறுதி என்னிடம் இருந்தது.

அப்புறம் என்ன நடந்திருக்கும் என்று நீங்களே ஊகிக்கலாம். எதிரணி என் பந்துவீச்சை தாக்க ஆரம்பித்தது — ஓவர் முழுக்க சிங்கிள்ஸ், டபிள்ஸ் அடிக்க ஆரம்பித்தார்கள். இதுபோல சோர்வடைந்தபோதும், முன்பு பல போட்டிகளில் நான் பேட்டர்களை pop-up, ground-out அல்லது fly-out செய்ய வைப்பேன். ஆனால் இந்த முறை அப்படியில்லை. நான் முழுமையாக சோர்வடைந்து காணப்பட்டேன்.

கடந்த 24 மணிநேரத்தில் 12.5 ஓவர்களை, 90 டிகிரி வெப்பத்தில் பந்துவீசி, என் உடல் முழுவதுமாக தளர்ந்துவிட்டது.

முதன்முறையாக அந்த போட்டியில் எதிரணி முன்னிலை பெற்றது. பயிற்சியாளருக்கு வேறு வழியில்லை. அவர் என்னை போட்டியில் இருந்து வெளியேற்ற வேண்டிய நேரம் வந்தது.

அவர் மைதானத்தில் நடந்துவரும் போது, நான் எனது முழு விளையாட்டு வாழ்க்கையிலும் ஒருபோதும் செய்யாத ஒரு விஷயத்தைச் செய்தேன்.

நான் அழ ஆரம்பித்தேன்.

கற்பனைசெய்து பாருங்கள் … பன்னிரெண்டு பட்டங்கள் கொண்ட, 23–7 என்ற சாதனையுடன்

மேற்படிப்பு முடித்த 18 வயது மேல்நிலை பள்ளியின் பேஸ்பால் அணியின் "மிகவும் மதிப்புமிக்க வீரர்," மைதானத்தில் நின்று அழுகிறேன்!

ஆனால் எனக்கு அது பற்றி வெட்கமில்லை. அந்தக் கணத்தில் என் உள்ளத்தின் ஆழத்தில் தெரிந்தது — நான் என்னால் முடிந்ததை எல்லாம் கொடுத்துவிட்டேன். என்னிடம் இருந்த எல்லாவற்றையும் நான் வெளியே விட்டுவிட்டேன். என் உடலையும், மனதையும், உள்ளத்தையும் முழுமையாக என் அணி நண்பர்களுக்காகவும், வெற்றிக்காகவும் ஒதுக்கிவிட்டேன்.

இறுதியில், புள்ளி அட்டையில் நான் தோல்வி அடைந்த பந்துவீச்சாளராகப் பதிவானாலும், ஒரு பெரிய அர்த்தத்தில், நான் வெற்றியாளன் தான்.

என் அப்பா அந்த போட்டியைப் பார்த்துக்கொண்டிருந்தார். இன்னொரு வீரரின் தந்தையும் அங்கிருந்தார். என் நண்பரின் தந்தை என் அப்பாவிடம் திரும்பி பார்த்து சொன்னார்: "ஜிம் பல போட்டிகளில் பந்துவீசுவதைப் பார்த்திருக்கேன். ஆனால் இன்று இரவு போல நான் ஒருபோதும் ஜிம்மை பற்றி இவ்வளவு பெருமையாக உணரவில்லை."

அப்பா பதிலளித்தார்: "நானும் இல்ல, எட்… நானும் இல்ல."

இந்தக் கதையை நான் சொல்வது என்னைப் பற்றி பெருமையாக பேச அல்ல. இந்தக் கதையை நான் பகிர்வது, உங்களை ஊக்குவிக்கவே — நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்து, நீங்கள் முழுமையாக உழைத்து, உங்கள் தொழிலில் அவருக்காக முழு மனதோடு செயல்படும்போது, அவர் உங்களிடம் பெருமை கொள்ளுவார் என்பதை நினைவூட்டவே. நீங்கள் உங்கள் முழுமையைச் செலுத்தும் பொழுதே, அவர் மகிழ்வார்.

> இறுதியில், நீங்கள் முழு மனதுடனும் அவரைச் சேவித்தால், நீங்கள் வெற்றியடைவீர்கள், மேலும் உங்கள் பரிசாகத் தரப்படும்

> சுதந்தரமாகிய பலனைக் நீங்கள் பெறுவீர்கள் (கொலோசெயர் 3:23–24).

அதனால், உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தும் பயணத்தில், முழு மனதுடனும் அவரைச் சேவிக்க வேண்டும் என்று உங்கள் இருதயத்தில் தீர்மானிக்க வேண்டும்!

எனவே, பரிசுத்த ஆவி செல்லச் சொன்னாலும் செல்ல வேண்டாமென்றாலும், வாங்கச் சொன்னாலும் வாங்க வேண்டாமென்றாலும், விற்கச் சொன்னாலும் விற்க வேண்டாமென்றாலும், ஒப்பந்தத்தில் கையெழுத்திடச் சொன்னாலும் இல்லையென்றாலும், ஒருவரை நியமிக்கச் சொன்னாலும் நியமிக்க வேண்டாமென்றாலும் — அவர் எதைச் செய்யச் சொல்கிறாரோ, அதையே செய்யுங்கள்.

முழு மனதுடனும்!

## 4.4. கர்த்தர் மீது நம்பிக்கை வை

> *உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.*
>
> நீதிமொழிகள் 3:5-6

**எச்சரிக்கை:** இந்த காலவரையற்ற உண்மையை புறக்கணிக்காதீர்கள்!

நீங்கள் ஒரு விசுவாசியாக, இந்த வசனத்தை பலமுறை கேட்டிருப்பீர்கள்; என்னைப்போலவே நீங்கள் அதை மனப்பாடமாக்கியிருக்க வாய்ப்புண்டு.

இந்த வசனத்தை சிறிது நேரம் ஆழமாக சிந்தித்துப் பார்க்க நாம் அழைக்கப்படுகிறோம், ஏனெனில் இது

உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியின் வல்லமையை வெளிப்படுத்துவதற்கான மையத்தில் இருக்கிறது.

இந்த வசனத்தின் ஐந்து முக்கிய அம்சங்களை சுருக்கமாகவும், கவனமாகவும் பிரித்து பார்க்க ஆரம்பிப்போம்.

## *கர்த்தர் மீது நம்பிக்கை வை*

நம்பிக்கை என்பது "ஒருவரின் அல்லது ஏதேனும் ஒரு பொருளின் குணம், திறன், வலிமை, அல்லது சத்தியத்தின் மேல் உறுதியான சார்பு" என வரையறுக்கப்படுகிறது.

"உறுதியான சார்பு" என்ற சொல்லை நான் மிகவும் விரும்புகிறேன்.

நீங்கள் இரட்சிக்கப்பட்டவராக இருந்தால், ஏற்கனவே உங்கள் இரட்சிப்புக்காக ஆண்டவரை மீது நம்பிக்கை கொண்டவராக இருப்பீர்கள். ஆண்டவர் தம்முடைய வாக்குறுதிக்கு உண்மையாயிருக்கிறார் என்பதில் நீங்கள் உறுதியான சார்பைக் கொண்டுள்ளீர்கள். அவர்மேல் உங்கள் நம்பிக்கையை தன்னம்பிக்கையுடன் வைக்கிறீர்கள்.

அதே போல, ஆண்டவர்மீதான நம்முடைய நம்பிக்கையும், அவர் நமக்குள் ஆரம்பித்த நல்வேலையை நம் தொழில்களின் வழியாக உறுதியாக முடிப்பார் என்ற உறுதியான சார்பே அந்த நம்பிக்கை ஆகும்.

## *உங்கள் முழு இதயத்துடன்*

நம்மில் பலரும் சிக்கிக்கொள்கிறதும், தயங்குகிறதும் இங்குதான்.

சாலமோன், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தால் இந்த வசனத்தை எழுதும்போது, தேவன் உங்களிடம் இப்படிச் சொல்ல வேண்டுமென்று கூறவில்லை:

- “உன் எல்லா பணத்தையும் கொண்டு என்மேல் நம்பிக்கை வை!”
- “உன் எல்லா தொழில் திட்டங்களையும் கொண்டு என்மேல் நம்பிக்கை வை!”
- “உன் எல்லா சந்தை ஆய்வுகளையும் கொண்டு என்மேல் நம்பிக்கை வை!”
- “உன் முழு ஞானத்தோடும் கொண்டு என்மேல் நம்பிக்கை வை!”
- “உன் உணர்ச்சிகளோடும் என்மேல் நம்பிக்கை வை!”

இந்த பட்டியல் முடிவில்லாமல் நீடிக்கலாம், ஆனால் உங்களுக்கு சொல்லுகிற கருத்து தெளிவாக இருக்கிறது.

தொழிலில் நீங்கள் செய்யும் அனைத்தும் உங்கள் இதயத்தைக் குறித்தது என்பதை நீங்களே மீண்டும் நினைவூட்டிக் கொள்ள வேண்டும். இது தேவன் உங்கள் இதயத்தைத் தம்முடைய மகிமைக்காக உருவாக்க, மாற்ற, வலிமை கொடுக்க, நீங்கள் அவருக்கு எவ்வளவு இடம் கொடுக்கிறீர்கள் என்பதை பற்றியது. ஆனால், தொழில்நிலையிலுள்ள அழுத்தங்கள் உங்களை முற்றிலும் சூழ்ந்துவிடும் — போட்டியாளர்கள் உங்களை தாக்குவார்கள், சந்தை உங்களுக்கு எதிராக இருக்கலாம், விநியோக சங்கிலி சவால்களைக் கொடுக்கும், உங்கள் ஊழியர்களே உங்களை மறுத்துவிடக்கூடும்.

இந்த நிலையில், நம்முடைய மனம் தளர்ந்து, மனித மனநிலைக்கு (சரீர சுபாவத்திற்கு) திரும்பி விடுவது மிக எளிது. அதனால்தான் இந்த வசனமும், இந்த நடைமுறை படிகளும், உங்கள் வெற்றிக்கும், உங்கள் தொழிலுக்கும் மிகவும் முக்கியமானவை. நீங்கள் ஆண்டவர் மீது நம்பிக்கை வைக்கும்போது, அனைத்தும் உங்கள் இதயத்துக்கே திரும்பி வருகிறது.

## *உங்கள் சொந்த புரிதலின் மீது சாராதீர்கள்*

என்னிடமும் எல்லா பதில்களும் இல்லை, உண்மையாகச் சொல்வதென்றால், உங்களிடமும் இருக்காது. பதில் இருக்கிறது என்று நினைத்தால்கூட, நம்முடைய முடிவுகள் பலவேளை முழுமையற்ற, தவறாக வழிநடத்தப்பட்ட, அல்லது அமல்படுத்த முடியாதவையாகவே இருக்கின்றன.

இருபது ஆண்டுகளாக, நான் தொழிலில் என்னுடைய பங்கு — புத்தகங்கள், முக்கிய உரைகள், பயிற்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழியாக, சிறந்த நிறுவனங்கள் தங்களைச் சிறப்பாக செயல்படுத்திய முறைகளை படிக்கவும், பரிசோதிக்கவும், ஆழமாக ஆய்வு செய்யவும், மற்றும் பகிரவும் என்பதுதான் என்று நம்பினேன். ஆண்டுகள் செல்ல செல்ல, பல வாடிக்கையாளர்கள் என்னிடம் சொன்னார்கள்: "அந்த வணிக நிபுணர் என்ன நினைக்கிறார்கள், இவர் என்ன நினைக்கிறார் என்பதைக் குறித்து எனக்கு கவலை இல்லை; நான் உனக்குப் பணம் செலுத்துவது, நீ என்ன நினைக்கிறாய் என்பதற்காகத்தான்!" அப்பொழுது, என் பார்வையில் நான் தான் அறிவாளி என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன்.

எனது பல விருதுகளை வென்ற புத்தகங்களும், சிறந்த வாடிக்கையாளர் பட்டியலும் இருந்தபோதும், என் உள்ளார்ந்த உண்மை என்னவென்றால் — எனக்கு உண்மையில் அதிகமாக ஒன்றும் தெரியாது என்பதே. என்னுடைய இந்த முயற்சி நிறைந்த வெளிப்புறத்தை யாரும் உடைத்து, நான் உண்மையில் எவ்வளவு குறைவாகவே தெரிந்து கொண்டிருக்கிறேன் என்பதை கண்டுபிடித்துவிடக்கூடாது என்ற பயத்தில் வாழ்ந்தேன் — ஏனென்றால் அது என் தொழிலையே சிதைத்துவிடும்.

நான் அனுபவித்ததைப்போலவே, நீங்களும், உங்கள் தொழிலை தேவன் விரும்பும் நித்திய தாகத்துடன் கூடிய நோக்கத்துக்குத் திசை திருப்ப தேவையான எல்லாவற்றையும் ஒருபோதும் முழுமையாக அறிந்து கொள்ள முடியாது.

## *உங்கள் அணைத்து வழிகளிலும் அவரை அங்கீகரியுங்கள்*

"அனைத்து" என்பதின் அர்த்தம் என்ன?

அது உண்மையாகவே... அனைத்தும்தான்!

அனைத்து என்றால் முழுமை — ஒரு பங்கல்ல, ஒரு சதவீதமல்ல. அதாவது: ஒரு கூட்டத்தை ஜெபத்தால் துவங்குவது மட்டுமல்ல. ஆசீர்வாதம் வேண்டி ஜெபிப்பதும் மட்டுமல்ல. போராட்டங்களிலும், பண நெருக்கடியிலும், ஊழியர் காயம் அடைந்த சமயத்திலும் மட்டும் அவரை நாடுவதல்ல. அனைத்தும் என்பது முழுவதும். முழுமையான ஒப்பந்தம்.

நான் இதனை மீண்டும் மீண்டும் ஏன் சொல்கிறேன்? ஏனெனில் சில நேரங்களில், தெளிவான ஒன்று கூட நமக்குத் தெளிவாக தெரியாமல் போய்விடுகிறது. நாம் ஆண்டவரை முழுமையாக நம்ப வேண்டும் என்பதை நன்கு அறிவோம். இது எனக்கு என் குடும்பத்தில், என் திருமணத்தில், என் பிள்ளைகளுடன், அதோடு என் திருச்சபை ஊழியத்தில் கூடச் செய்ய எளிதாக இருந்தது.

ஆனால் ஒப்புக்கொள்கிறேன் — என் தொழிலில் முழுவதையும் ஆண்டவரிடம் ஒப்படைப்பதில் நான் ஆண்டாண்டாகப் போராடியிருக்கிறேன். இப்போது என்னால் தெளிவாகச் சொல்ல முடியும் — என் தொழில் முழுவதுமே இயேசுவுக்கே சொந்தம். இப்போது அவர் அனைத்தையும் இயக்குகிறபோது, என் சொந்த அறிவை அல்லது என்னுடைய புரிதலை நம்ப வேண்டியதில்லை. நான் இப்போது அவருடைய புரிதலில்/ஞானத்தில் முழுவதுமாக சார்ந்து இருக்கிறேன்.

*அவர் நம்முடைய பாதைகளை வழிநடத்துவார்*

"செய்யும்" என்ற வார்த்தையின் அர்த்தம் — எதிர்காலத்தில் உறுதியானதாக நடைபெறப்போவதைக் குறிக்கும். ஆண்டவர் இப்படி சொல்லவில்லை:

- அவரால் முடியுமானால் செய்வார்
- அவருக்கு நேரம் கிடைத்தால்தான் செய்வார்
- நீங்கள் அவருடைய நல்லவர்களின் பட்டியலில் வந்த பிறகுதான் செய்வார்
- நீங்கள் கையாள முடியாத அளவுக்கு கடினமாகி விட்டபின் மட்டும் செய்வார்
- அவர் சிந்தித்துப் பார்த்த பிறகு செய்வார்
- அவருக்கு செய்யும் மனநிலை வந்தால் செய்வார்
- நீங்கள் ஒரு நிலையான ஆவிக்குரிய வளர்ச்சிக்கு வந்த பிறகுதான் செய்வார்

இதைக் கூச்சமின்றி சொல்லுங்கள்: "அவர் என் பாதைகளை வழிநடத்துவார்!" மீண்டும் சொல்லுங்கள். நீங்கள் தனியாக இருக்கிறீர்கள் — இப்போதே மீண்டும் சொல்லுங்கள்! உங்கள் பாதைகளை வழிநடத்துவது — அதுவே கடவுள் தரும் உன்னதமான பரிசு!உங்கள் உள்ளார்ந் அறிதல் வாயிலாக நீங்கள் கேட்பதையே நம்புங்கள்; சந்தேகிக்காதீர்கள்.

## 4.5. ஆயுதவர்கத்தை அணிந்துகொள்ளுங்கள்

*கடைசியாக, என் சகோதரரே, கர்த்தரிலும் அவருடைய சத்துவத்தின் வல்லமையிலும் பலப்படுங்கள். நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்துநிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய*

*சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

— எபேசியர் 6: 10 – 13

சாத்தான் இந்த உலகின் அதிபதி. தொழில்முறைகளின் கட்டமைப்புகளின் மீது முதன்மை கட்டுப்பாடு அவனுடையது. நீங்கள் உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை வெளிக்கொணர ஆரம்பித்தவுடனே, இந்த உலகத்தின் அதிபதி தாக்க முட்படுவான்! இது உறுதியான உண்மை.

கைல் விங்க்லரின் அற்புதமான புத்தகம் “Silence Satan: Shutting Down the Enemy’s Attacks, Threats, Lies, and Accusations” என்பதிலே, அவர் சொல்லுகிறார்:

"கிறிஸ்துவின் படையில் நாம் பெற்றிருக்கும் ஆயுதங்கள், நம்முடைய சிந்தனையை பாதுகாக்க உதவுகின்றன. சாத்தான் நம்முடைய வாழ்க்கைக்குள் புகுந்து, தேவன் நம்மை பயன்படுத்த முடியாது, நீங்கள் ஒருபோதும் சுகமடையமாட்டீர்கள், அல்லது உங்களுடைய பாவங்கள் மன்னிக்க முடியாத அளவுக்கு பெரியவை என்ற அபத்தமான காரணங்களை முன்வைத்து நம்மை குழப்புகிறான். இவைதான் அவன்

உபயோகிக்கும் சந்தேகங்கள், மனச்சோர்வுகள் — அவைகள் நம்மை வெற்றிமிக்க வாழ்க்கையில் நுழையத் தடுக்கும் தடைப்பொருள்களாக இருக்கின்றன."

இதே விஷயங்களை நாம் தொழில் வாழ்க்கையிலும் பார்க்கலாம். நீங்கள் உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை முன்னிலைப்படுத்த தொடங்கும்போது, சாத்தான் தன்னிடம் உள்ள அனைத்தையும் — உங்களிலும், உங்கள் குழுவின் மீது வீசுவான்.

பவுல் எழுதியுள்ள தேவனுடைய சர்வாயுதவர்கத்தைக் குறித்த விளக்கத்தில் இருந்து, நான் நீங்கள் கவனம் செலுத்த வேண்டிய மூன்று முக்கியமான கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன்:

## *1: முழு சர்வாயுதவர்கம்*

பகுதியான சர்வாயுதவர்கம் பயனற்றது. கற்பனை செய்து பாருங்கள், ஒரு சிப்பாய் போர் களத்திற்கு செல்லும்போது, தலைக்கவசம், முதுகுப்பை, காலணிகள், அல்லது ஆயுதம் இல்லாமல் செல்லுகிறார் என்று வைத்துக்கொள்ளுவோம். அதேபோல், ஒரு 2% விகிதம் வாழும் விசுவாசி — சாத்தான் கட்டுப்படுத்தும் சந்தை என்ற போர்க்களத்திற்குள், முழுமையான தேவனுடைய சர்வாயுதவர்கம் இல்லாமல், தாக்குதலுக்குத் தயார் இல்லாமல் நுழைந்தால் எவ்வாறு இருக்கும். அது ஆபத்தானதும், பயனற்றதும், முழு ஆயுதமில்லாமல் போருக்குள் நுழைவதும் வீணாகும்!

முழு தேவனுடைய சர்வாயுதவர்கத்தின் ஆறு பகுதிகள் பின்வருமாறு:

- **சத்தியம் என்னும் கச்சை** – மற்ற ஆயுதங்களுடன் இணைக்கப்பட்டுள்ள வார்த்தை
- **நீதியின் மார்கவசம்** – இதயத்தையும் ஆன்மாவையும் பாதுகாக்க; மேலும்

எதிரிக்கு நீங்கள் பாதுகாப்பில் இருக்கிறீர்கள் என்ற பிரகடனமாக ஒளிரும் சின்னமாக இருக்கிறது

- **ரட்சிப்பின் தலைக்கவசம்** – உங்கள் மனதையும், செவிகளையும், சிந்தனைகளையும் பாதுகாக்கிறது
- **சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை** – நிலை தடுமாறாமல் உறுதியாக நிற்கத் தேவையான காலணிகள்
- **விசுவாசத்தின் கேடகம்** – எதிரியின் எரியும் அம்புகளைத் தடுக்கவும், உடலின் முழு பகுதிகளையும் பாதுகாக்கவும்
- **ஆவியின் பட்டயம்** – தேவனுடைய வார்த்தை; இது தாக்கும் ஆயுதம்

இவை அனைத்தும் தேவனிடம் இருந்து பெற்ற முழுமையான பாதுகாப்பும், வெற்றிக்கான ஆயுதங்களும் ஆகும்.

பவுலின் அறிவுறுத்தல் — முழு சர்வாயுதவர்கத்தை அணியுங்கள், ஒரு பாகம் அல்லது இரண்டு பாகங்கள் மட்டும் அல்ல. முழுமையான பாதுகாப்பு உபகரணங்களில்லாமல், சாத்தான் உங்கள் பலவீனமான புள்ளியில் நுழைந்து தாக்கும் வாய்ப்பு அதிகம். அவனுடைய வழக்கமான உத்தி அதுதான் — நீங்கள் எங்கு பலவீனமாக இருக்கிறீர்களோ, அங்குதான் தாக்குவான்.

நீங்கள் கவனிக்க வேண்டியது: ஆறு பாகங்களில் ஐந்து பாதுகாப்புக்கானவை — ஒன்று மட்டுமே தாக்கும் ஆயுதம். இது உங்கள் மற்றும் உங்கள் தொழில்மீது நடக்கும் ஆவிக்குரிய போர் என்றால், ஏன் நீங்கள் ஒரே ஒரு தாக்கும் ஆயுதத்துடனே இருக்க வேண்டும்? தொடர்ந்து வாசியுங்கள்...

## *2: நிற்கவும்*

பவுல் தேவனுடைய சர்வாயுதவர்கத்தைக் குறித்து எழுதியுள்ள இடங்களில் (எபே. 6:10–20), நான்கு முறை அவர் கூறுவது — நாம் போராட வேண்டும் என்று அல்ல, நாம் நிலைத்து நிற்க வேண்டும் என்பதைத்தான். இது எனக்கு மிகவும் ஆழமான சிந்தனையாக தோன்றுகிறது — போரிடுவதற்காக சீருடை அணியும்போது, நாம் ஏன் சண்டையிட வேண்டியதில்லை?

இ-தைப் பற்றி விங்க்லர் மிகச் சிறப்பாக விளக்குகிறார்: பவுல் முழு சர்வாயுதவர்கத்தை அணியச் சொல்லும் நோக்கம் ...

"நீங்கள் கர்த்தருடைய வல்லமையில் வலிமை பெறுவதற்காக, நிலைத்து நிற்கத்தான். அவர் (பவுல்) கூறுவது — சர்வாயுதவர்கத்தை போராடுவதற்காக அணியுங்கள் என்றல்ல, ஆனால் நீங்கள் கிறிஸ்துவிலுள்ள உங்கள் அடையாளத்தை பாதுகாத்து, அழிக்க முயலும் தீய ஆவிகளுக்கு எதிராக நிலைத்து நிற்கவேண்டும் என்பதற்காகவே."

நீங்கள் தேவனுடைய சர்வாயுதவர்கத்தை கொண்டு உங்களை ஆயத்தப்படுத்தும்போது, இது போர் களத்தில் அணிவகுத்து செல்லும் எண்ணத்துக்காக அல்ல என்பதை உணருங்கள். இது கர்த்தருடைய வல்லமையை உங்களைச் சுற்றிப் போர்த்திக்கொண்டு, சாத்தானின் சூழ்ச்சிகளுக்கும், ஏமாற்றங்களுக்கும் எதிராக நிலைத்து நிற்கும் சக்தியை பெறுவதற்காகத்தான்.

## 3: *தந்திரங்கள்*

எதேன் தோட்டத்தில் (ஆதி 3), சாத்தான் சுத்தமான பொய்களையும் ஏமாற்றுகளையும் பயன்படுத்தி, ஏவாளையும் ஆதாமையும் ஏமாற்றினார். அதேபோல், இயேசுவை அவருடைய 40 நாட்கள் உபவாசத்தில் சோதிக்கும்போதும் (மத். 4) அதே உத்திகளை முயற்சித்தான். 6,000 ஆண்டுகளாக சாத்தானின்

தந்திரங்கள்/உத்திகள் ஒன்றும் மாறவில்லை. அவன் உங்களிடமும் அதேதான் செய்யப்போகிறான்.

அவன் உங்களுடைய சிந்தனைகளிலும் யோசனைகளிலும் கீழ்கண்டவைகளை ஊட்ட முயற்சி செய்வான்:

- “இது உன்னால் முடியாது.”
- “உன்கிட்ட குழுவோ, வளங்களோ இல்லையே.”
- “நீ இதுவரை முயற்சி செய்ததில் பைத்தியக்காரத் திட்டம்தான் இது.”
- “இது உன் தொழிலையே வீழ்த்திவிடும்.”
- “யாருமே உன்னுடன் சேர மாட்டார்கள்.”
- “உனக்கு புத்தி பேதலித்து போய்விட்டதா?”
- “உன் போட்டியாளர்கள் என்ன நினைப்பார்கள்?”
- “நீ நிறைய பணத்தையும், தொழிலையும் இழப்பாய்.”
- “யாரும் உன்னைப் பின்தொடர மாட்டார்கள்.”
- “இதை நிறைவேற்ற உனக்கு தேவையான தலைமைத்துவம் இல்லை.”
- “இது உண்மையிலேயே தேவனிடமிருந்து வந்ததா? உண்மையாக, உறுதியா?”
- “நீ இதைப் பற்றி தீவிரமாக இருக்கிறாயா… உண்மையாகவே?”
- “நீ ஒரு பைத்தியக்கார வணிக புத்தகத்தைப் படிக்கிறாய், அதனுடைய எழுத்தாளர் சொல்வது போலவே நிபுணர்களைப் பின்தொடர்ந்து ஒரு பெரிய தவறு செய்யப்போகிறாய்.”

இது போல் அவன் செய்யும் திட்டங்களை நீங்கள் புரிந்து கொள்ளலாம்.

இந்த வார்த்தைகள் — சில நேரங்களில் சாத்தான் உபயோகிக்கும் “எளிய ஆயுதங்கள்” — நீங்கள் எதிர்கொள்ளக்கூடிய மிகப்பெரிய ஆவிக்குரிய போராட்டங்களுடன் ஒப்பிடும்போது.

நீங்கள் எப்போதும் தாக்கப்பட மாட்டீர்கள். ஆனால் நீங்கள் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் ஒரு வணிகத் தலைவராக உங்களுடைய பயணத்தை ஆரம்பிக்கும்போது, முழு தேவனுடைய சர்வாயுதவர்கத்துடன் ஆயத்தமாக இருக்க வேண்டும்.

இது ஏன் முக்கியம் என்றால் — நீங்கள் உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை வெளிப்படுத்த தயாராகும் போதே, முழுமையான சர்வாயுதவர்கத்தை தினசரி அணிந்து, உங்கள் வலிமையால் அல்ல, கிறிஸ்துவின் வலிமையால் நிலைத்து நிற்கவேண்டும்.

இது நாம் சபையிலே எப்போதும் கேள்விப்படும் பழைய கதை போல: ஒரு வயதான பெண் சாத்தான் தன் கதவைத் தட்டுகிறதைப் பார்ப்பாள். அதற்கு அவள் அமைதியாக திரும்பி, ஒரு விஷயம் மட்டுமே சொல்லுவாள்: “இயேசுவே இது உங்களுக்காக!”

## *இன்னொரு விடையம் : எதிரி தப்பி ஓட வேண்டும்*

> *ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான்.*
>
> — யாக்கோபு 4:7

நீங்கள் இயேசுவின் நாமத்தில் உங்கள் தொழிலிலிருந்து சாத்தானை வெளியேறும்படி கட்டளையிடும்போது, அவன் கீழ்ப்படிய வேண்டும்!

அவனுக்கு மாற்றுவழி இல்லை!

அவனுக்கு வேறு வாய்ப்பு இல்லை!
ஆகவே:

- சாத்தானை அவன் அமைத்த சூழ்நிலையில் போராடாதீர்கள். அவன் ஏற்கனவே தோற்கடிக்கப்பட்டவன் என்பதை நினைவுபடுத்துங்கள், அவனை எதிர்கொள்ளுங்கள் — அவன் ஓடிவிட வேண்டியதுதான்! அவனுக்கு மாற்று வழி இல்லை!
- ஆவிக்குரிய போராட்டங்களை உங்கள் புத்திசாலித்தனத்தால் போராடாதீர்கள். இயேசுவைப் போலவே (மத். 4:1–11), தேவனுடைய வார்த்தையைக்கொண்டு போராடுங்கள்.
- சாத்தான் உங்களை தாக்க வருவான் என்ற எண்ணம் உங்களை அச்சுறுத்த இடம் கொடுக்க வேண்டாம். ஏனெனில், “உங்களில் இருப்பவர், உலகில் இருப்பவனைவிட பெரியவர்” (1 யோவான் 4:4).
- சாத்தான் உங்களோடு அல்லது உங்கள் குழுவோடு சுற்றிக்கொண்டு இருக்கவிடாதீர்கள். அவனை வெளியேறும்படி கட்டளையிடுங்கள் — அவன் உடனே வெளியேறுவான்!

சுருக்கமாக நினைவில் கொள்ளுங்கள்…

- இது ஜெபத்திற்கு மேலானது
- இது வெறும் குரலல்ல, அதற்கும் மேற்பட்டது
- முழு மனதுடன் இருங்கள்
- கர்த்தர் மீது நம்பிக்கை வை
- ஆயுதவர்கத்தை அணிந்துகொள்ளுங்கள்

ஆயத்திற்கான இந்த ஐந்து படிகளையும் முழுமையாக ஏற்றுக்கொண்டதும், பரிசுத்த ஆவியின் வல்லமையை உங்கள் தொழிலில் வெளிப்படுத்த தயாராக இருக்கிறீர்கள்.

இந்த படிகளை சாதாரணமாக படிக்கவோ அல்லது தவிர்க்கவோ செய்யாதீர்கள். உங்கள் இதயத்திலும் ஆன்மாவிலும் இவற்றை ஆழமாகப் பதித்துக்கொள்ளுங்கள், அதன் பிறகே உங்கள் போட்டிக்கான அனுகூலத்தை வெளிக்கொணருங்கள். அப்படிச் செய்வதன்மூலம், பரிசுத்த ஆவி தன் நிகரற்ற வல்லமையை உங்கள் தொழிலின் வழியாக வெளிப்படுத்தும் ஒரு வலுவான அடித்தளத்தை உங்களுக்கென நீங்களே கட்டமைப்பீர்கள்!

*குழு உரையாடல்*

பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதற்காக உங்கள் முன்னேற்பாடுகளைச் செய்யும் நேரத்தை எடுத்துக்கொள்வது ஏன் முக்கியம்? ஏன் நாம் நேரடியாக செயலில் இறங்காமல், தயார் செய்யவேண்டும்?

தனிப்பட்ட மற்றும் தொழில்முறை விழிப்புணர்வு தொடர்பான கேள்விகளுக்கான உங்கள் பதில்கள் என்னவாக இருந்தது?

இந்த முன்னேற்பாட்டு படிகளில் தற்போது உங்களுக்காக மிக முக்கியமானது எது? ஏன்?

# 5

# உங்கள் நியமற்ற அனுகூலத்தை கட்டவிழ்த்துவிடுங்கள்

*பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து...*

— அப்போஸ்தலர் 1: 8

நீங்கள் இப்போது ஒரு பெரிய மாற்றத்தை செய்ய முடிவு செய்துள்ளீர்கள். சாத்தியமான வலித்தடைகள் என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். எதிர்கொள்ளப்போகிற விஷயங்களுக்கு முன்னேற்பாடு செய்து விட்டீர்கள். இப்போது, நீங்கள் தயாராக இருக்கிறீர்கள்!

இந்த பகுதி, உங்கள் "நியாயமற்ற அனுகூலத்தை" வெளிக்கொணரும் ஆறு முக்கிய புள்ளிகளை கொண்டு உங்களை வழிநடத்தப் போகிறது. இவை அனைத்தும் ஒன்றுக்கொன்று அடித்தளமாக அமைந்து வலிமையான ஒரு செயல்முறையாக உருவாகுவதால், இதனை குறிப்பிடப்பட்ட வரிசையிலேயே பயன்படுத்துவதைக் நான் பரிந்துரை செய்கிறேன்.

இப்பகுதியைப் பயன்படுத்தும் உங்கள் முறையை இவ்வாறு பரிந்துரைக்கிறேன்:

முதலில், இந்த ஆறு புள்ளிகளையும் குறிப்பெடுக்காமல் ஒருமுறை வாசித்துவிடுங்கள். அவை உருவாக்கும் ஓட்டம், உள்ளடக்கம், மற்றும் ஆற்றலை உணருங்கள்.

இரண்டாவது, ஒவ்வொரு பகுதியையும் தனி தனியாக வாசியுங்கள். அந்த பகுதியில் உள்ள சிறிய பயிற்சிகளை செய்து முடிக்கவும். ஒரு நாளில் ஒரு பகுதிக்கே கவனம் செலுத்தவேண்டும் என்பதையும் பரிந்துரை செய்கிறேன். மிகவும் விரைந்து செல்ல வேண்டாம். பரிசுத்த ஆவி இந்த உண்மைகளை உங்கள் ஆவிக்குள் ஆழமாக பதியவைக்க அனுமதியுங்கள்.

மூன்றாவது, பரிசுத்த ஆவி இந்த உண்மைகளை உறுதிப்படுத்தும் அளவுக்கு நீங்கள் நேரம் எடுத்த பிறகு, நீங்கள் 6-வது அத்தியாயமான "தொடர்ந்து செயல்படுங்கள்" என்ற தலைப்பிற்குள் செல்ல தயாராக இருப்பீர்கள்.

## 5.1. பயிற்சி செய்

*பயிற்சி செய் (வினைச்சொல்): ஒரு செயலை மீண்டும் மீண்டும் செய்வது, அதில் சிறந்தவராக மாறுவதற்காக; அல்லது அதையே உங்கள் வாழ்வில் எப்போதும் செய்யும் ஒரு வழக்கமான செயலாகக் கடைப்பிடிப்பது.*

தொழிலில் பரிசுத்த ஆவியின் அதிகாரத்தை வெளிப்படுத்தும் முதல் முக்கியமான குறிப்பு பயிற்சி செய்வதுதான்.

போட்டித் திறனுடன் விளையாடும் எந்தவொரு வீரரும் கூட, பயிற்சி என்பது கட்டாயமானது என்பதை நன்கு புரிந்திருப்பார். எந்தவொரு விளையாட்டிலும் விளையாட்டு வீரர்கள், சிறந்தவர்களாக மாற, நூற்றுக்கணக்கான மணி நேரங்களை தீவிரமாகவும், வியர்வையோடு கூடிய கடினமான பயிற்சியில் செலவிடுகிறார்கள்.

தொழிலிலும்கூட, தொழில்முறை பயிற்சி மற்றும் மேம்பாட்டு திட்டங்கள் போன்றவை அதிக அளவு பயிற்சியை தங்களுடைய பணியாளர்கள் அவர்கள் வேலையை துவங்குமுன் கொடுக்கும். தொழில்முறை சேவை நிறுவனங்கள் கூட, வாடிக்கையாளர் அழைப்புகளை எப்படி கையாள வேண்டும் என்பது பற்றி, சேவை பிரதிநிதிகள் முதன்முறையாக ஒரு உண்மையான வாடிக்கையாளர் அழைப்பை ஏற்கும் முன், அதிக நேரம் பயிற்சிக்காக செலவழிக்கின்றன. தொழில்முறை விற்பனை பயிற்றுவிப்பாளர்களும், விற்பனையாளர்கள் வாடிக்கையாளர்களை எப்படி கவனமாக கேட்க வேண்டும், மற்றும் ஒப்பந்தத்தை எப்படி முடிக்க வேண்டும் என்பதை கற்றுக்கொடுக்க, பயிற்சி சார்ந்த போலி நேர்க்காணல்கள் நடத்துகிறார்கள்.

என் புத்தகமான “The Impacter: A Parable on Transformational Leadership”-இல், "உங்கள் திறன்களில் மேலிருக்கும் நம்பிக்கை என்பது, காலப்போக்கில் வளர்த்துக்கொண்டுள்ள உங்கள் திறமையின் ஆழத்திலிருந்து உருவாகிறது" என நான் சொல்லிக்கொடுக்கிறேன். நீங்கள் பயிற்சி மேற்கொள்ளும்போதெல்லாம், நீங்கள் இன்னும் திறமையானவராக மாறுகிறீர்கள். நீங்கள் திறமையைக் கற்றுக்கொண்ட அளவுக்கு, உங்கள் திறன்களில் நம்பிக்கையும் அதிகரிக்கிறது.

இந்த உண்மை, நாம் பரிசுத்த ஆவியின் வல்லமையை நம் தொழிலில் வெளிப்படுத்த முயலும்போதும் வெளிப்படுகிறது.

இதை நடைமுறையில் மேற்கொள்ள மூன்று சிறந்த வழிகள்: சாட்சியை அடையாளம் காணுங்கள், சிறியதிலிருந்து தொடங்குங்கள், நுணுக்கமாக திருத்திக் கொளுங்கள்.

## *சாட்சியை அடையாளம் காணுங்கள்*

உங்கள் போதகர் அல்லது ஆசிரியர் ஒரு வலிமையான உண்மையை பகிர்ந்துகொள்கிறார். அதைக் கேட்கும் தருணத்தில், உங்கள் உள்ளங்களில் ஏதோ ஒன்று சொல்லுகிறது – "ஆமாம்! இது உண்மைதான்! சரிதான்!" நானும் அநேக முறை இது போல சத்தமாக சொல்லுவதுண்டு!

பரிசுத்த ஆவியானவர் ஒரு உண்மையை கேட்டவுடனே, அதை உங்களுக்குள் உறுதிபடுத்துகிறார். உங்கள் ஆவியானது பேசப்பட்ட அந்த உண்மையை உணர்கிறது.

அந்த உணர்வு தான் உங்களுக்குள்ளே இருக்கும் சாட்சி.

ஒரு திருச்சபையில் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் சாட்சியாக உறுதிபடுத்துவது போலவே, நீங்கள் பணியிடத்திலும் அவருடைய சாட்சியத்தை அனுபவிக்கலாம்.

நீங்கள் பரிசுத்த ஆவியுடன் முழுமையாக இணைந்தவராக இருந்தாலும் கூட, உங்கள் உள்ளான சாட்சியத்தை உணர்வதற்கான பயிற்சியை தொடர்ந்து மேற்கொள்வது மிகவும் அவசியமானது.

உள்ளான சாட்சியத்தை உணர்வதற்கான பயிற்சியில் நாம் அதிகமாக ஈடுபடுவதை எந்த நேரத்திலும் அதிகரிக்க முடியாது.

பணியிடத்தில், உங்கள் உள்ளுணர்வு — அந்த அக்கறையுள்ள அமைதியான சாட்சி — முழுமையான சமாதானத்தில் இருந்த நேரங்களை நினைத்துப் பாருங்கள். அது எப்போது நிகழ்ந்தது?

உங்களுடைய உள்ளுணர்வு அமைதியுடன் இருந்த நேரங்கள்:

- நீங்கள் உங்கள் தொழிலை துவங்கியபோது?
- ஒரு பெரிய திட்டத்தை தொடங்கியபோது?

- அதிகமான நபர்களை வேலைக்கு அமர்த்தியபோது?
- துணை ஒப்பந்ததாரர்களை மாற்றியபோது?
- ஒரு பெரிய உபகரணத்தை வாங்கியபோது?
- ஒரு முக்கிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபோது?
- ஒரு பணியாளரிடம், அவருடைய முழுப் திறமையை பயன்படுத்தும்படி தூண்டியபோது?
- ஒரு ஆலோசகர் அல்லது பயிற்சியாளருடன் ஒப்பந்தம் செய்தபோது?

அதேபோல், சில நேரங்களில் பின்னோக்கிப் பார்த்து நீங்கள் இப்படி நினைத்திருக்கலாம்:

"நான் இதை செய்யக்கூடாது என்பதைக் தெரிந்திருந்தே செய்தேன்..."

- இந்த தொழிலை துவங்கியிருக்கக்கூடாது!
- அந்த பெரிய திட்டத்தை தொடங்கியிருக்கக்கூடாது!
- அதிகமான நபர்களை வேலைக்கு எடுத்திருக்கக்கூடாது!
- துணை ஒப்பந்ததாரர்களை மாற்றியிருக்கக்கூடாது!
- அந்த உபகரணத்தை வாங்கியிருக்கக்கூடாது!
- அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கக்கூடாது!
- அந்த பணியாளரை அவருடைய முழுப் திறமையை பயன்படுத்தும்படி தூண்டியிருக்கக்கூடாது!
- அந்த ஆலோசகர் அல்லது பயிற்சியாளருடன் ஒப்பந்தம் செய்திருக்கக்கூடாது!

இந்த அணைத்து நிகழ்வுகளிலும், பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே உங்களுக்குள் செயல்பட்டு கொண்டிருந்திருப்பது என்பது உண்மையே — சரியான முடிவுகளை எடுக்க உங்களை ஊக்குவிக்கவும், தவறான முடிவுகளை எடுக்காதபடி எச்சரிக்கவும்!

இந்த உள்ளார்ந்த சாட்சியை அடையாளம் காண்பது என்பது ஒரு திறந்த, நோக்கமுள்ள முயற்சியாக இருக்க வேண்டும். நீங்கள் இதை நோக்கமுடன் செய்யவில்லை என்றால், உங்கள் வணிக முடிவுகளில் பரிசுத்த ஆவியின் சாட்சியத்தைத் தொடர்ந்து நாடுவதில்லையென்றால், உலகம் வழிநடத்தும் பழைய வழிகளில் மீண்டும் தற்செயலாக விழும் அபாயம் உள்ளது.

நீங்கள் அதிகம் பயிற்சி செய்யும்போது, அந்த சாட்சியத்தைக் கவனிக்கும், புரிந்துகொள்ளும் திறன் அதிகரிக்கும். அது எளிதாக மாறும்.

## *சிறியதாக தொடங்குங்கள்*

> *எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்.*
>
> — மத்தேயு 6:11

பரிசுத்த ஆவியின் சத்தத்தை/குரலை புரிந்துகொள்ள நீங்கள் இப்போதுதான் கற்றுக்கொள்ளத் தொடங்கி இருப்பீர்கள் என்றால், இந்த பயிற்சி முறை ஒரு சிறந்த வழியாகும். நீங்கள் சிறிதாக தொடங்குவது எவ்வளவு எளிது என்பதற்கு நான் ஒரு எடுத்துக்காட்டு கொடுக்கிறேன். நான் இந்த “பயிற்சி” என்ற கருத்தை முதன்முதலாக கற்றுக்கொண்டபோது, நான் சிறியதாகதான் ஆரம்பித்தேன். அந்த அனுபவங்களில் ஒன்று இப்போது கூட என் நினைவில் மிக தெளிவாக இருக்கிறது.

நான் எப்போதும் வணிக நிறுவனங்களிலும், திருச்சபை குழுக்களிடமும் நம்முடைய நியாயமற்ற அனுகூலத்தைப் பற்றி உரையாற்றுவேன். அந்த உரைகளில் மிகவும் பிரபலமானதும், மனதில் நன்கு பதிந்ததும் எனது பயிற்சி எடுத்துக்காட்டுகளில் ஒன்று — ஒரு உணவகத்தில் உணவு ஆர்டர் செய்வதுதான்.

நம்மில் பெரும்பாலோரும் ஏதாவது ஒரு விருப்பமான உணவகத்திற்குச் செல்வோம். அங்கு நாம் எப்போதும் ஒன்று அல்லது இரண்டு உணவுகளையே விருப்பமாய் ஆர்டர் செய்வோம். அடுத்த முறை அந்த உணவகத்திற்கு சென்றால், எப்போதும் உங்களால் தேர்ந்தெடுக்கப்படும் உணவுகளை உத்தரவிடுவதற்குப் பதிலாக, ஒரு நிமிடம் பொறுங்கள். மெனுவை (menu) பார்த்துவிட்டு, பரிசுத்த ஆவியிடம் இப்படிச் சொல்லுங்கள்:

"நான் என்ன ஆர்டர் செய்யவேண்டும் என்று நீங்கள் விரும்புகுறீர்கள்"

நீங்கள் அடுத்த முறை ஒரு உணவகத்துக்குச் செல்லும்போது இந்த பயிற்சியைச் செய்ய நான் ஏன் பரிந்துரை செய்கிறேன்?

- பரிசுத்த ஆவி உங்கள் விருப்பமான உணவுகள் அனைத்தையும் ஏற்கனவே அறிவார்.
- மெனுவில் நீங்கள் அறியாத, ஆனால் நீங்கள் விரும்பக்கூடிய வேறு உணவுகளையும் அவர் அறிவார்!
- மேலும், சூடு அடங்கிய, கெட்டுப்போன, அல்லது நோயிழைக்கும் உணவுகளை ஆர்டர் செய்வதில் இருந்து உங்களைத் தடுக்கவும் அவரால் முடியும்.

நான் சமீபத்தில் எனது சொந்த திருச்சபையில் ஒரு செய்தியைப் பிரசங்கித்தேன். அதில், உணவகத்தில் உணவு தேர்வு செய்யும் சிறிய உதாரணத்தைப் பயன்படுத்தி, பரிசுத்த ஆவியின் குரலைக் கேட்பதை எப்படிப் பயிற்சி செய்யலாம் என்பதை எளிமையாக

எடுத்துரைத்தேன். அடுத்த ஞாயிறு அன்று, என்னுடைய செய்தியை கேட்ட ஒரு இளம்பெண் ஓடி வந்து என்னிடம் ஒரு வலிமையான சாட்சியை பகிர்ந்தார்.

அவர் என்னிடம் சொன்னதாவது, அவருடைய வயிறு மிகவும் உணர்ச்சிவயப்படக்கூடிய (sensitive) ஒன்று என்று. பெரும்பாலான உணவுகளும் அவருக்கு கடுமையான உடல் வலியையும் பல நாள் துன்பத்தையும் ஏற்படுத்தும். என் செய்தியை கேட்ட பிறகு, அவர் தன் கணவருடன் சேர்ந்து அவர்களுக்கு மிகவும் பிடித்த உணவகத்துக்கு போனார்கள். ஏன் அந்த உணவகத்துக்கு போனார்கள்? அந்த மெனுவில் அவர் வயிற்று வலி இல்லாமல் சாப்பிடக்கூடிய இரண்டு உணவுகள் இருப்பதை அறிந்தார்.

ஆனால், அந்த நாள் மட்டும், அவர் மெனுவை பார்த்துவிட்டு சொன்னாராம்: "சரி பரிசுத்த ஆவியானவரே, இன்று நான் ஜிம் சொன்னதைப் பயிற்சி செய்யப்போகிறேன். என்ன சாப்பிடனும், நீங்க சொல்லுங்க!"

அவர் துணித்து அந்த முடிவை பரிசுத்த ஆவியிடம் கொண்டுள்ள நம்பிக்கையால் எடுத்தார்.

அவர் அந்த சாட்சியின் முக்கிய பகுதிக்கு வந்தபோது, அவர் கண்கள் ஜொலிக்க ஆரம்பித்தது. ஒரு பெரிய புன்னகையுடன் அவர் உற்சாகமாக சொன்னார்: "நான் இதுவரை ஒருபோதும் சாப்பிடாத ஒரு உணவை ஆர்டர் பண்ணினேன்… ஆனால் எனக்கு எந்த பிரச்சனையும் வரவில்லை! இப்போ எனக்கு தெரியுது — எந்த உணவகத்துக்குப் போனாலும், பரிசுத்த ஆவி எனக்குப் பாதுகாப்பான, சுவையான உணவைக் காட்டுவார்! நீங்க எனக்கு சாப்பிடுவதில் ஒரு புது உலகத்தையே வெளிப்படுத்தி இருக்கீங்க!"

அவர் மிகவும் மகிழ்ந்தார்.

நிச்சயமாக, இதைச் செய்தது நான் இல்லை — அவர், சிறியதிலிருந்து ஆரம்பித்து பரிசுத்த ஆவியின் மேல் நம்பிக்கை வைக்க தொடங்கினதால்தான் இது நடந்தது.

நீங்கள் வேலை செய்யும் இடத்தில், எப்படிச் சிறியதிலிருந்து ஆரம்பிக்கலாம்? பரிசுத்த ஆவியிடம் இதற்கான சில எளிய வழிகள் என்னவென்று கேட்கலாம்:

- "இந்த மனிதரை இன்று சந்திக்கலாமா? அல்லது வேறு ஒரு நாளா?"
- "இந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொள்ளலாமா?"
- "இந்த வாடிக்கையாளரை இப்போது அழைக்கலாமா?"
- "இந்த சேவை அல்லது பொருளை நம்முடைய வியாபாரத்தில் சேர்க்கலாமா?"
- "இதை இப்போ செய்யலாமா, அல்லது பிறகு செய்யலாமா?"
- "நாளை காலை முன்கூட்டியே அலுவலகம் வரலாமா? அல்லது இன்று இரவிலவே தங்கி இந்தப் வேலைத்திட்டத்தை முடிக்கலாமா?"

இந்த அடிப்படை பட்டியலுக்கு மேலும் பல கேள்விகளை சேர்க்கலாம் — ஆனால் நான் சொல்ல வரும் கருத்து உங்களுக்குத் புரிந்திருக்கும். சிறியதிலிருந்து ஆரம்பிக்க வாய்ப்புகளாக ஏராளமாக இருக்கின்றன.

நீங்கள் சிறிய, குறைந்த ஆபத்துடைய சந்தர்ப்பங்களில் பயிற்சி செய்து, உங்களுக்குள் உள்ள “சாட்சியை” அடையாளம் காண நம்பிக்கையை வளர்த்துக்கொள்ள துவங்குங்கள். நம்பிக்கையோடு சொல்கிறேன்… நீங்கள் பரிசுத்த ஆவியை தேடுகிறீர்கள் என்பதை அவர் காணும்போது மகிழ்ச்சியடைவார். நீங்கள் தொடர்ந்து பயிற்சி செய்யும் போது, அவர் தன்னைத் மேலும் மேலும் உங்களுக்கு வெளிப்படுத்துவார்.

## *மேம்படுத்துதல்*

நீங்கள் ஆன்மிகச் சத்தங்களால் சூழப்பட்டிருக்கிறீர்கள். சாத்தான் உங்களிடம் தொடர்ந்து பேச முயற்சி செய்கிறான் — அவன் கட்டுப்படுத்தும் உலகத்திலிருந்து தளராத சத்தங்களும் செய்திகளும் உங்களைச் சுற்றி இடைவிடாமல் ஒலிக்கின்றன.

நீங்கள் பயிற்சி செய்யத் தொடங்கும்போது, சில வெற்றிகளையும், சில தோல்விகளையும் அனுபவிப்பீர்கள். நாம் வெற்றிகளை விட வலிமையான பாடங்களை தோல்விகளில் இருந்து அதிகம் கற்றுக்கொள்கிறோம். அந்த பயிற்சியின் வழியாக நாம் மேம்படுத்துதலைக் கற்றுக்கொள்ள வேண்டும் — அதாவது, வெற்றிகளிலும் தோல்விகளிலும் இருந்து சம அளவிலோ அதைவிட மேலாகவோ கற்றுக்கொள்ள வேண்டும்.

பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்பட்ட என் வாழ்க்கையின் மிக முக்கியமான இரண்டு சம்பவங்களை உங்களுடன் பகிர விரும்புகிறேன். அந்த நிகழ்வுகள் எனது ஆன்மிக செவிகள் மேம்பட கற்றுக் கொடுத்தன — பரிசுத்த ஆவியின் குரலை நன்கு வேறுபடுத்தி அறிந்து செயல்பட அது உதவியது.

முதலில், நான் பெற்ற ஒரு பெரிய வெற்றியைப் பகிர விரும்புகிறேன். அது என்னவென்றால் — நீங்கள் தற்போது உங்கள் கையிலே வைத்திருக்கிற இந்தப் புத்தகம் தான்!

The Impacter தொடரின் தொடர்ச்சிப் புத்தகத்தை எழுதி நிறைவு செய்ய நான் நெருங்கியபோதுதான், என்னால் மீற முடியாத ஒரு தடையை எதிர்கொண்டேன். அந்தத் தடையை நான் எனது மனதளவில் உருவாக்கினேனா? இல்லையெனில் அது பரிசுத்த ஆவியால் ஏற்படுத்தப்பட்டதா என்பதைக் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனாலும், துரிதமாக அந்தத் தடை என் சுயத்தினாலும் அல்ல, சாத்தானாலும் அல்ல, அது

உண்மையாகவே பரிசுத்த ஆவியின் சாட்சியின்மூலம் என்பதைக் தெளிவாக உணர்ந்தேன்.

ஒரு நாள் காலையில் பரிசுத்த ஆவியிடம் நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டபோது, அவர் என் உள்ளத்தில் (தெளிவான சத்தமாக அல்ல, ஆனால் உள்ளுணர்வாக) இப்படிச் சொன்னார்: “நான் உனக்கு எப்படி என் குரலைக் கேட்கக் கற்றுக் கொடுத்தேனோ, அதையே என் மக்கள், குறிப்பாக வணிகத்தில் இருப்பவர்களுக்கு கற்றுக் கொடுக்கும் ஒரு புத்தகத்தை எழுது.”

உடனே நான் எழுதிக் கொண்டிருந்த புத்தகத்தை ஒதுக்கி வைத்து, "நமது நியாயமற்ற அனுகூலம்" என்ற இந்த புத்தகத்தை எழுதத் தொடங்கினேன்.

இப்போது இந்த புத்தகத்தை நான் பரிசுத்த ஆவியின் வழிநடத்தலோடு எழுதிக்கொண்டிருக்கிறேன். இது எனது முந்தைய 14 புத்தகங்களை விட மிகவும் எதிர்பார்க்கப்படும், மிகவும் அருமையான, மிகவும் மகிழ்ச்சியளிக்கக் கூடிய புத்தகமாகவும், என் வாழ்நாளில் மிக முக்கியமான செயலாகவும் இது அமைந்தது.

இது உண்மையிலேயே பரிசுத்த ஆவியின் வழிநடத்தல்தான் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை — ஏனென்றால், முந்தைய பயிற்சிகளின் மூலமாக என்னால் இதை உறுதியாக உணர முடிந்தது. அதினால், எவ்வித தாமதமும் இல்லாமல் உடனே கீழ்ப்படிந்தேன்.

இப்போது அந்த பெரிய தோல்வி பற்றி கூறுகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன்னர், என் மனைவியும் நானும் எங்கள் மகனை பார்வையிட அவர் படிக்கின்ற கிறிஸ்தவ சிறுவர் பள்ளிக்கு மற்றொரு மாகாணத்திற்கு சென்றிருந்தோம். அந்தச் சந்திப்பு பயணத்தின் கடைசி நாளன்று, நான் என்னிடமிருந்த மிகவும் மதிப்புமிக்க உடைகளில் ஒன்றான ஒரு புதிய லூயிஸ்வில் பல்கலைக்கழக தேசிய சாம்பியன் பட்டம் - கூடைப்பந்து போலோ (polo) சட்டையை

அணிந்திருந்தேன். இந்த சட்டை எனக்கு என் சகோதரி மற்றும் சகோதரர் பரிசாகக் கொடுத்திருந்தனர்.

கென்டக்கி மாகாணத்திலுள்ள லூயிஸ்வில் நகரத்துக்கு கீழே உள்ள ஒரு சிறிய ஊரில் நான் வளர்ந்தவனாக இருப்பதால், மேலும் உயர்நிலைப் பள்ளிக்காலம் முழுக்க கூடைப்பந்து விளையாடியவனாக இருந்ததால், அந்தப் கூடைப்பந்து அணியின் பெரிய ரசிகனாக நான் இருந்தேன்.

லூயிஸ்வில் பல்கலைக்கழகம் தனது முதல் தேசிய சாம்பியன் பட்டத்தை வென்ற 18 ஆண்டுகள் கழித்து, அவர்கள் மீண்டும் ஒரு வெற்றியைப் பெற்றதால், அந்த சட்டையை அணிவது எனக்குச் சிறந்த மகிழ்ச்சியைத் தந்தது.

நாங்கள் அந்த பள்ளியிலிருந்து புறப்பட சில நிமிடங்களுக்கு முன், எங்கள் மகனின் நண்பர்களில் ஒருவர் எங்களிடம் வந்தார். நாங்கள் உரையாடத் தொடங்கினோம். அந்த உயரமான, மெலிந்த 17 வயதுடைய சிறுவன் என் சட்டையைப் பார்த்ததும் மகிழ்ச்சியில் குதித்தான். அவனும் லூயிஸ்வில் நகரத்திலிருந்தவன். என்னைப்போல அவனும் லூயிஸ்வில் பல்கலைக்கழகத்தினுடைய அணியின் பெரிய ரசிகன்.

நாங்கள் அந்த வீரர்களைப் பற்றியும், சாம்பியன்ஷிப் வெற்றியைப் பற்றியும் பேசினோம். மீண்டும் தேசிய சாம்பியன்களாக ஆனதில் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறோமென என்று பகிர்ந்துகொண்டோம்.

அந்த நேரத்தில் திடீரென, என் உள்ளத்தில் ஒரு குரல் (தெளிவான வெளிப்படையான குரலல்ல, ஆனால் உள்ளுணர்வு மூலம்) என்னிடம் சொன்னது: “அவனிடம் அந்த சட்டையை கொடு!”

எனது முதல் மறுமொழி என்னவென்றால்: "இது தேவனுடைய குரலாக இருக்க முடியாது. முன்பின் தெரியாத ஒரு பையனுக்கு, எனக்கு புதிதாக பரிசளிக்கப்பட்ட, எனக்கு மிகவும் பிடித்த சட்டையை

கொடுக்கவேண்டிய அவசியம் ஏன் இருக்க வேண்டும்?" என்றே எண்ணினேன்.

அந்த பையன் அருகில் இருந்து சற்று தூரம் சென்றவுடன், என் உள்ளத்தில் மீண்டும் ஒரு குரல் வந்தது: "அவனுக்கு அந்த சட்டையை கொடு. உன்னுடைய காரில் நிறைய சுத்தமான சட்டைகள் இருக்கின்றன அல்லவா?"

உண்மையைச் சொல்லவேண்டும் என்றால், நான் தயங்கினேன். எங்கள் மகனிடம் விடைபெற்று, அந்த மதிப்புமிக்க சட்டையை அணிந்தபடியே காரை இயக்கினேன்.

ஐந்து நிமிடங்களுக்குள்ளாகவே, நான் என் மனைவி பிரென்டாவைப் பார்த்து, நடந்ததைச் சொல்லி விட்டேன். அவர் உடனே பரிசுத்த ஆவியின் கருத்துடன் இணைந்து, "அந்த பையனுக்கே நீங்கள் அந்த சட்டையை கொடுக்கவேண்டும்" என்று சொன்னார்.

ஆனால் நான் திரும்பிச் செல்லவில்லை. நாங்கள் வீட்டுக்குத் திரும்பினோம். வீட்டுக்கு வந்தவுடன், அந்த சட்டையை கழற்றி, சுத்தம் செய்து, லூயிஸ்வில் நகரத்தைச் சேர்ந்த அந்த பையனுக்குப் தபால் மூலம் அந்த சட்டையை அனுப்பினேன். அதோடு, ஒரு கடிதத்தையும் இணைத்தேன் — அதில் நான் தாமதமாக கீழ்ப்படிந்தது தவறு என்பதையும், நான் ஆண்டவரிடம் மன்னிப்பு கேட்டுவிட்டேன் என்பதையும், அந்த பையனும் எனக்கு மன்னிப்பு அளிக்கவேண்டும் என வேண்டுகிறேன் என்பதையும், இந்த சட்டை அவனை ஆசீர்வதிக்கட்டும் என பிரார்த்தனை செய்தேன் என்பதையும் எழுதியிருந்தேன்.

பின்னர் என் மகன் என்னிடம் சொன்னது, அந்த பையன் அந்த சட்டையை மிகவும் நேசித்ததால், அதை அரிதாகவே கழற்றுவான் என்று.

இந்த அனுபவம் எனக்கு, “நான் அவனுக்கே அந்த சட்டையை கொடுத்திருக்க வேண்டும் என்பதைக் கண்டிப்பாக உணர்த்திய ஒரு கடுமையான பாடம்.” இதுபோன்று, நாம் அனைவரும் நம் வாழ்க்கையில் பலவற்றைச் சந்தித்திருக்கிறோம்.

என் தோல்வியின் வாயிலாக, நான் பல முக்கியமான பாடங்களை கற்றுக்கொண்டேன், அவை பின்வருமாறு:

- பரிசுத்த ஆவியின் தெளிவான, வல்லமையான உள்ளுணர்வைக் கண்டறிவது எப்படி என்பதைக் கற்றுக்கொண்டேன்
- தூண்டப்படும்போது உடனடியாக செயல்பட வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டேன்
- தாமதமாக கீழ்ப்படிவதற்கு பதிலாக, உடனடியாக கீழ்ப்படிவத்தின் ஆசீர்வாதத்தை அனுபவிக்க கற்றுக்கொண்டேன்

உங்களுக்குள் இருக்கும் சாட்சியைக் கண்டறியுங்கள். சிறியதாக தொடங்குங்கள். அதன் பிறகு, நுணுக்கமாக மேம்படுத்திக்கொள்ளுங்கள். இதற்கு பயிற்சி தேவை — நேர்மையான, தொடர்ச்சியான பயிற்சி.

போக போக, இந்த பயிற்சி உங்கள் ஆன்மிக செவிகளை பலப்படுத்தும் — பரிசுத்த ஆவியின் மென்மையான குரல் உங்களுக்குள் இன்னும் தெளிவாக கேட்கும்.

இதோ, உங்கள் பயிற்சியைத் தொடங்க உதவும் ஒரு செயல்திட்டம் :

## *பயிற்சி செயல்த்திட்டம்*

உங்கள் தொழிலுக்காக நீங்கள் எடுக்க வேண்டிய ஐந்து முக்கிய முடிவுகளை பட்டியலிடுங்கள். அவற்றை எடுக்கும் போது பரிசுத்த ஆவியின் குரலைக் கேட்டு வழிநடத்தும் வகையில் கேள்விகளை எழுப்புங்கள். அவர் சொல்லும் காரியங்களை கவனமாகக் கேட்டு பதில்களை பதிவு செய்யுங்கள்.

**தீர்மானம் #1:** ________________________________

நீங்கள் எப்படி கேட்கத் தொடங்கினீர்கள்?

நீங்கள் எப்படி மேம்படுத்தினீர்கள்?

நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

**தீர்மானம் #2:** ________________________________

நீங்கள் எப்படி கேட்கத் தொடங்கினீர்கள்?

நீங்கள் எப்படி மேம்படுத்தினீர்கள்?

நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

**தீர்மானம் #3:** ________________________________

நீங்கள் எப்படி கேட்கத் தொடங்கினீர்கள்?

நீங்கள் எப்படி மேம்படுத்தினீர்கள்?

நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

**தீர்மானம் #4:** ________________________________

நீங்கள் எப்படி கேட்கத் தொடங்கினீர்கள்?

நீங்கள் எப்படி மேம்படுத்தினீர்கள்?

நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

**தீர்மானம் #5:** ________________________________

நீங்கள் எப்படி கேட்கத் தொடங்கினீர்கள்?

நீங்கள் எப்படி மேம்படுத்தினீர்கள்?

நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

## 5.2. நீங்கள் செயல்படும் முன் சோதிக்கவும்

> *சோதனை (பெயர்ச்சொல்): ஒரு செயல் அல்லது முன்னேற்றத்தில் திடீரென ஏற்படும் தடை, அல்லது இடைநிறுத்தம் போன்ற நிகழ்வு; பரிசோதனை செய்வது அல்லது உறுதிப்படுத்துவது போன்ற செயல்.*

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை உங்கள் வியாபாரத்தில் கட்டவிழ்ப்பதற்கான இரண்டாவது காரியம் - நீங்கள் செயல்படும் முன் சோதிக்கவும்.

மக்கள் எப்படி முடிவுகளை எடுக்கிறார்கள் என்பது எப்போதும் எனக்கு ஆச்சரியமாக இருந்த ஒரு விஷயம். மக்கள் தாங்கள் எடுக்கும் முடிவுகளை எதன் அடிப்படையில் எடுக்கிறார்கள்? வலிமையான செய்திகள், சூழ்நிலைகள் போன்றவை முடிவெடுப்பதில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்துகின்றன?

மனித தொடர்பான மற்றும் உளவியல் சார்ந்த கூறுகளால் சிறு குழுக்களில் எடுக்கும் முடிவுகளின் மேல் எனது மேற்படிப்பு காலத்திலே மிக அதிக கவனமும் ஆராய்ச்சியும் செலுத்தினேன். இதற்காக பல ஆண்டுகள் ஆழமான ஆய்வும், ஆராய்ச்சியும் செய்தேன். அந்த ஆராய்ச்சியில் நான் கவனித்த முக்கிய விஷயங்கள்:

- ஒருமனதாக முடிவை எட்டும் முயற்சிகள்
- குழுக்களில் தலைமை பாணிகள் மற்றும் அதிகாரத்தின் பயன்பாடு
- சொற்கள் அல்லாத தொடர்பு இயக்கவியல்
- இனச்சார்பற்ற மற்றும் பண்பாட்டு வேறுபாடுகளைக் கொண்ட தொடர்புகள்
- குழுசார் சிந்தனை
- அரிஸ்டாட்டிலின் கருத்தியல், குறிப்பாக நெறிமுறைகள், உணர்வுகள், மற்றும் வார்த்தை ஆகியவற்றின் தாக்கம்
- தர்க்கத்தின் வல்லமை – ஊகத்தால், பிரிக்க வலியுறுத்துவதால், ஒப்பீட்டின் மூலம் முடிவுகளுக்கான செயல்முறை
- ஆண்கள் மற்றும் பெண்கள் இடையே உள்ள தீர்வு முயற்சிகளில் தொடர்பின்முலம் ஏற்படும் தாக்கம்

நம்பினால் நம்புங்கள்? மேலே சொன்ன கடைசி விஷயம் — அதாவது “தீர்வு முயற்சிகளில் தொடர்பு தயக்கம்” — இதுதான் என்னுடைய முதுகலை பட்டபடிப்பின் ஆய்வறிக்கையும், முனைவர் பட்டம் ஆய்வுமாக இருந்தது! தூங்க முடியாத நேரங்களில் படிக்கச் சிறந்த நூல்கள்!

இவ்வளவு வருடங்கள் முழுமையாக படித்து, உலகின் மிக சிறந்த கல்விச் சிந்தனையாளர்களிடமும், பல தொழில்முறை வெளியீடுகளினாலும் நான் கற்றுக்கொண்ட பிறகு, இன்று நான் ஒரே ஒரு முக்கியமான முடிவிற்கு வந்திருக்கிறேன்…

அடடா… நான் எல்லாம் தவறாகவே புரிந்துகொண்டுவிட்டேனே!

கடந்த 20 ஆண்டுகளில், நான் ஒரு விஷயத்தை ஆராய்ந்தேன்: எல்லா காலத்திலும் சிறந்த தலைவரும், தீர்வெடுக்கும் நிபுணருமான இயேசு எப்படிச் தீர்மானங்களை எடுத்தார்?

அந்த மிகச் சிறந்த தலைவரும், வியாபார நிபுணருமான இயேசு எப்போது…

- தம்முடைய சீடர்களிடம் ஒருமனதாக அல்லது பெரும்பான்மை வாக்களிப்பை நாடினாரா?
- சாக்ரடீஸ், அரிஸ்டாட்டில், அல்லது பிளேட்டோவின் எழுத்துக்களைப் படித்து அதனை பிரதிபலித்தாரா?
- தம்முடைய வார்த்தைகள் எவ்வாறு தனிப்பட்ட இயக்கவியல் என்று உளவியல் பாணியில் சிந்தித்தாரா?
- நுகர்வோர் விருப்பங்களை தெரிந்து கொள்ள கவனக்குழுக்களை அமைத்தாரா?
- உயர்தர ஆலோசகர்களிடமிருந்து விலையுயர்ந்த அறிவுரைகளை நாடினாரா?

இல்லை, இயேசுவின் தீர்மானம் எடுக்கும் முறையே முழுமையாக புதியது, புதுமைமிக்கது மற்றும் இதற்கு முன்பு யாராலும் கேட்கப்படாத வகையிலிருந்தது. அவர் எப்போதும், எல்லா சூழ்நிலைகளிலும், எதையும் செய்வதற்கு முன்பு தேவனின் ஆவியுடன் ஆலோசனை செய்து பிறகே செயல்பட்டார்.

> அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி: மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன் பிதாவானவர் செய்யக் குமாரன் காண்கிறதெதுவோ, அதையேயன்றி, வேறொன்றையும் தாமாய்ச் செய்யமாட்டார்; அவர் எவைகளைச் செய்கிறாரோ, அவைகளைக் குமாரனும் அந்தப்படியே செய்கிறார். பிதாவானவர் குமாரனிடத்தில் அன்பாயிருந்து, தாம் செய்கிறவைகளையெல்லாம் அவருக்குக் காண்பிக்கிறார்; நீங்கள்

> ஆச்சரியப்படத்தக்கதாக இவைகளைப் பார்க்கிலும் பெரிதான கிரியைகளையும் அவருக்குக் காண்பிப்பார் (யோவான் 5: 19-20)

இயேசு பிதாவாகிய தேவனின் ஆவியான பரிசுத்த ஆவியுடன் ஆலோசித்தார்!

> நான் சுயமாய்ப் பேசவில்லை, நான் பேசவேண்டியது இன்னதென்றும் உபதேசிக்கவேண்டியது இன்னதென்றும் என்னை அனுப்பின பிதாவே எனக்குக் கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நித்திய ஜீவனாயிருக்கிறதென்று அறிவேன்; ஆகையால் நான் பேசுகிறவைகளைப் பிதா எனக்குச் சொன்னபடியே பேசுகிறேன் என்றார். (யோவான் 12: 49-50)

> நான் பிதாவிலும், பிதா என்னிலும் இருக்கிறதை நீ விசுவாசிக்கிறதில்லையா? நான் உங்களுடனே சொல்லுகிற வசனங்களை என் சுயமாய்ச் சொல்லவில்லை; என்னிடத்தில் வாசமாயிருக்கிற பிதாவானவரே இந்தக் கிரியைகளைச் செய்துவருகிறார். (யோவான் 14: 10)

இயேசு எதையும் செய்வதற்கு முன் தன்னுடைய உள்ளார்ந்த ஆவியினை பரிசோதித்தார்.

நீங்கள் செயல்படுவதற்கு முன்பு எவ்வாறு சரிபார்ப்பது என்பதை பயிற்றுவிக்க உதவும் மூன்று எளிய வழிகள் இங்கே: வேகத்தை குறைத்தல், வெளிப்புறத்தை தடுத்தல் மற்றும் ஒரு இறுதி சரிபார்ப்பை செய்தல்.

## *வேகத்தை குறைத்தல்*

இந்த வணிக சொற்றொடர்களை எப்போதாவது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?

- "விரைவாக செய்பவர்கள்தான் மெதுவாக செய்பவர்களை விழுங்குகிறார்கள்."
- "விரைவாக நகருங்கள் இல்லையென்றால் அழிந்துவிடுவீர்கள்."
- "இது அவசரம்."
- "இது நேற்று முடிய வேண்டிய காரியம்."
- "வேகப்படுத்துங்கள்; எங்கள் வேகத்தை குறைக்க வேண்டாம்."
- "அவர்கள் போதுமான வேகத்தில் வேலை செய்யவே மாட்டார்கள்."
- "நம்மிடம் முழு நாள் இல்லை."
- "வெகு காலம் ஆகுது! சீக்கிரம் செய்!"
- "சொல்லாமலேயே செய்து விடு!"

நம்முடைய தொழில்முறை உலகத்தில், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணிநேரத்திலும், “இப்போதே முடிக்கவேண்டும்” என்ற அவசரமான வேலைகளாலும் முடிவுகளாலும் நாம் சுற்றிவளைக்கப்படுகிறோம். “இதுதான் தொழில்; இது நியாயம்தான்,” என்று ஒரு பொய்யான நம்பிக்கையுடன் சமரசம் செய்து கொள்ளுகிறோம்.

நானும் பல முறை இந்த பொறியில் விழுந்திருக்கிறேன். நான் ஒரு சிறிய வீடு கட்டும் நிறுவனத்தை நடத்திக்கொண்டிருந்தபோது, என் தச்சு பணியாளர்களுக்கு பணம் கொடுக்க வேண்டிய அவசர தேவை காரணமாக, இன்னொரு வங்கிக்கடன் வாங்க வேண்டும் என்பதற்காக வீடுகளில் அதிவேகமாக ஒரு கட்டத்தை முடிக்க விரைந்தேன். இதன் காரணமாக ஒரு வீட்டை கட்டி முடித்தபிறகு அடுத்ததுக்குப் போவதற்குப் பதிலாக, இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சம் என்று வீடுகளுக்கு இடையில் குதிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. நிறுவன உரிமையாளர் எனது இந்த “அமைப்பற்ற, குழப்பமான” செயல்முறையைப் புரிந்து கொள்ளவில்லை.

இப்போது பார்த்தால், நான் முழுமையாக பணத்தால் வழிநடத்தப்பட்டவனாக இருந்தேன் — அதாவது, எவ்வளவு சீக்கிரமாக கட்டட தொகை வாங்கலாம் என்பதற்காக ஓடிகொண்டிருந்தேன். ஏனெனில், எனது ஊழியர்கள் (நானும் உட்பட) மற்றும் துணை ஒப்பந்தக்காரர்கள் என அனைவருக்கும் சம்பளம் கொடுக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. அதற்கு வேறொரு வழி எனக்கு தெரியவேயில்லை.

இயேசுவைப் போலவே, யாராவது எனக்கு மெதுவாக செயல்பட கற்றுக் கொடுத்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று இப்போது நான் எண்ணுகிறேன்.

> அப்பொழுது விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயை வேதபாரகரும் பரிசேயரும் அவரிடத்தில் கொண்டுவந்து, அவளை நடுவே நிறுத்தி: போதகரே, இந்த ஸ்திரீ விபசாரத்தில் கையும் மெய்யுமாய்ப் பிடிக்கப்பட்டாள். இப்படிப்பட்டவர்களைக் கல்லெறிந்து கொல்லவேண்டுமென்று மோசே நியாயப்பிரமாணத்தில் நமக்குக் கட்டளையிட்டிருக்கிறாரே, நீர் என்ன சொல்லுகிறீர் என்றார்கள். அவர்மேல் குற்றஞ்சுமத்துவதற்கான காரணம் உண்டாகும்பொருட்டு அவரைச் சோதிக்கும்படி இப்படிச் சொன்னார்கள். இயேசுவோ குனிந்து, விரலினால் தரையிலே எழுதினார். அவர்கள் ஓயாமல் அவரைக் கேட்டுக்கொண்டிருக்கையில், அவர் நிமிர்ந்து பார்த்து: உங்களில் பாவமில்லாதவன் இவள்மேல் முதலாவது கல்லெறியக்கடவன் என்று சொல்லி, அவர் மறுபடியும் குனிந்து, தரையிலே எழுதினார். அவர்கள் அதைக் கேட்டு, தங்கள் மனச்சாட்சியினால் கடிந்துகொள்ளப்பட்டு, பெரியோர்முதல் சிறியோர்வரைக்கும் ஒவ்வொருவராய்ப்

> போய்விட்டார்கள். இயேசு தனித்திருந்தார், அந்த ஸ்திரீ நடுவே நின்றாள். (யோவான் 8: 3-9)

இங்கு நடந்த சூழ்நிலை என்னவென்றால்... அந்த நேரத்தில் இயேசு தேவாலயத்தின் முற்றத்தில் ஒரு பெரிய கூட்டத்துக்கு போதனை செய்து கொண்டிருந்தார். அப்போதே, சில மதத்தலைவர்கள் உள்ளே புகுந்து, ஒரு பெண்ணை ஜனங்களின் முன்னிலையில் மிகவும் கடுமையாக கீழ்த்தரமாக அவமதித்தார்கள். அந்தப் பெண்ணை அவர்கள் இழுத்துக்கொண்டு வந்து, அனைவருக்கும் முன்னிலையில் இயேசுவிடம் ஒரு கேள்விக்கு பதில் கூற சொல்லி வற்புறுத்தினார்கள்.

அவர்கள் கைகளில் கற்கள் இருந்ததை கண்டு எல்லோரும் புரிந்து கொண்டார்கள் — இது ஒரு அசாதாரண சூழ்நிலை. அந்த பெண்ணையாவது அல்லது இயேசுவையாவது கொல்லும் எண்ணம் அவர்களின் மனதில் இருந்தது.

அவர்கள் இயேசுவை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளினார்கள்: மோசேயின் சட்டப்படி அந்த பெண்ணை கொல்லவேண்டுமா? இல்லையெனில் சட்டத்தை மீறி அவளை விடுவிக்கவேண்டுமா?

அப்படியானால், உயிருக்கு ஆபத்தான அந்த நேரத்தில் இயேசு என்ன செய்தார்?

அவர் குனிந்து மண்ணில் எழுதினார் ... ஆனால் ஒரு வார்த்தை கூட பேசவில்லை!

அவரது மௌனம் அந்த மதத்தலைவர்களை மேலும் கொந்தளிக்க வைத்தது. அவர்கள் இயேசுவின் மௌனத்தை பொறுக்க முடியாமல், கோபத்தோடு மீண்டும் வற்புறுத்தினார்கள்: “நீங்கள் என்ன சொல்லப்போறிங்க? அவளை கொள்ளவேண்டுமா? விடுவிக்க வேண்டுமா? உடனே பதில் கூறுங்கள்!”

இயேசு அந்த இரண்டாவது, மேலும் தீவிரமான உயிருக்கு ஆபத்தான சூழ்நிலைக்கு எப்படி பதிலளித்தார்?

அவர் தொடர்ந்து மண்ணில் எழுதிக்கொண்டே இருந்தார்.

அவர் பதிலளிக்கத் தயாராக இருந்த அந்த ஒரே தருணத்தில், அவர் நிமிர்ந்து நின்று (என் சொற்களில்) கூறினார்: “நீங்கள் ஒருபோதும் பாவம் செய்யாதவர் என்றால், அவள்மீது முதலில் கல் வீசுங்கள்.” அதற்குப் பிறகு, அவர் மீண்டும் மண்ணில் எழுத உட்கார்ந்தார்.

அவர் முதன்முறையாக குனிந்து எழுத ஆரம்பித்தபோது அவர் என்ன செய்துகொண்டிருந்தார்? ஏன் அவர் அப்படி செய்தார்? ஏன் அவர் பேசவில்லை?

நான் நம்புவது என்னவென்றால் — அவர் தாமதித்தார். அவர் தன் உள்ளார்ந்த ஆவியோடு பேசினார்: “பரிசுத்த ஆவியே, நான் என்ன பேச வேண்டும்? என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டார்.

அவர் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலையே சரியாக செய்தார் என்று நான் நம்புகிறேன். அந்த வழிகாட்டுதல் இதையும் உள்ளடக்கியிருக்கலாம்: “ இப்போது சிறிது நேரம் அமைதியாக இரு. அவர்கள் மீது அழுத்தம் கொஞ்சம் கூடுதலாக உணரப்படட்டும்.”

இயேசு அளித்த பதிலுக்கு பூமியிலே எந்த மனித அறிவும், யோசனையும் போதாது. அது முற்றிலும் மெய்யான ஆவிக்குரிய விளக்கம் மட்டுமே. இயேசு அளித்த அந்த வியத்தகு பதிலுக்கான ஒரே இயல்பான விளக்கம் என்னவென்றால், அது மெய்யான, ஆவிக்குரிய உலகத்தைச் சேர்ந்த பரிசுத்த ஆவியால் வந்த பதில் என்பதுதான்.

அவரது அற்புதமான, இந்த உலகத்திற்கு வெளியே உள்ள பதிலுக்கான ஒரே தர்க்கரீதியான விளக்கம், அது உண்மையில் ஒரு அற்புதமான, இந்த உலகத்திற்கு வெளியே உள்ள ஆவியிடமிருந்து வந்தது என்பதே.

உயிருக்கு ஆபத்தான சூழ்நிலையில் இயேசு தனது ஆவியை சரிபார்க்க மெதுவாக செயல்பட்டது போல, நீங்கள் எதிர்கொள்ளும் எந்தவொரு வணிக சூழ்நிலையிலும் உங்கள் வேகத்தை குறைத்து உங்கள் ஆவியைச் சரிபார்க்கலாம்.

## *வெளிப்புறத்தை தடுத்தல்*

இயேசுவை சூழ்ந்திருந்த அந்த ஆண்கள் உடனடியாக ஒரு பதிலை எதிர்பார்த்து, அதை அழுத்தமாக கேட்டனர். அந்த அழுத்தம் வெளி உலகிலிருந்து வந்தது.

இயேசு அந்த சூழ்நிலையின் அழுத்தத்திற்கு இடம் கொடுத்திருந்தால், அவர் விரைவாகவும், மிக மோசமான முடிவையும் எடுத்திருக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் அதற்கு பதிலாக, உள்ளே பரிசுத்த ஆவியானவர் ஆட்சி செய்கிற இடத்திலிருந்து வழிநடத்தப்படுவதைதான் தேர்ந்தெடுத்தார்.

தொழிலில் உள்ள நாம் அனைவரும் இத்தகைய அழுத்தத்தை உணர்ந்திருக்கிறோம். நாம் அனைவரும் இது போன்ற விஷயங்களைச் செய்ய தள்ளப்பட்டுள்ளோம்...

- காலக்கெடு தேதிக்கு முன் ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திடுங்கள்
- வணிகத்தை வளர்க்க உதவுவதற்குப் பதிலாக, ஒரு காலியிடத்தை நிரப்ப ஒரு நபரை நியமிக்கவும்
- ஒரு ஒப்பந்தத்தை முடிக்க அதிக லாபத்தை கொடுங்கள்
- மற்றவர்கள் உங்களிடமிருந்து எதிர்பார்த்ததால் மட்டுமே ஒரு கூட்டத்தில் விரைவான முடிவை எடுங்கள்
- உங்களிடம் விருப்பம், நேரம் அல்லது நிதி இல்லாதபோது ஒரு கூட்டம் அல்லது மதிய உணவில் கலந்து கொள்ள ஒப்புக்கொள்ளுங்கள்
- சாத்தியமான வாடிக்கையாளர் இப்போது அதை எதிர்பார்த்ததால் விரைவான, ஒழுங்கற்ற திட்டத்தை ஒன்றாக இணைக்கவும்

இவை எல்லாம் வெளியில் இருந்து வரும் அழுத்தத்தின் விளைவாக நான் மேற்கொண்ட சில முடிவுகள். நீங்களும் இதுபோன்ற அனுபவங்களை எதிர்கொண்டிருப்பீர்கள் என்றே நம்புகிறேன்.

"அப்படியானால், ஜிம், வெளிப்புறத்தில் உள்ள அனைத்தையும் புறக்கணித்து, ஒரு வணிக முடிவை எடுப்பதற்கு முன்பு உள்ளே மட்டும் சரிபார்க்க சொல்கிறீர்களா?" என்று நீங்கள் கேட்கலாம். இல்லை, இல்லவே இல்லை.

கடவுள் நமக்கு படிக்க, ஆராய்ச்சி செய்ய, பகுப்பாய்வு செய்ய, சிந்திக்க, உண்மைகளைத் தேட, மதிப்பிட மற்றும் ஆராயும் திறனைக் கொண்ட ஒரு மனதைக் கொடுத்துள்ளார். கடவுள் நமக்கு கொடுத்த மனித அறிவை நம் திறமைகளுக்கு ஏற்றவாறு பயன்படுத்தி நம்மால் முடிந்த அனைத்தையும் புரிந்துகொள்ள வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்.

ஆனால், நீங்கள் செய்யக்கூடிய அனைத்தையும் செய்த பிறகு, செயல்பட இறுதி முடிவை எடுப்பதற்கு முன், கடவுளின் ஆவி வசிக்கும் உள்ளிருந்து மீண்டும் கேளுங்கள்.

பரிசுத்த ஆவி உங்களை உள்ளிருந்து தூண்டுகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். எதிரி உங்களை வெளியிலிருந்து அழுத்தம் கொடுக்க முயற்சிப்பான்!

உங்களைத் தூண்டும் பரிசுத்த ஆவியால் உங்களை அழுத்தம் கொடுக்க முயற்சிக்கும் வெளிப்புற குரல்களை நீங்கள் எப்போதும் முறியடிக்க வேண்டும்.

## *இறுதி சோதனை*

இறுதி சோதனை என்பது பெரும்பாலும் நீங்கள் பரிசுத்த ஆவியின் சத்தத்தை சரியாகதான் கேட்டிருக்கிறீர்களா என்பதை உறுதிபடுத்தும் ஒரு விரைவான நிலைத்தகவல் மாதிரியானதாகும். இது செயலை தாமதப்படுத்த அல்லது தள்ளிப்போட விரும்பும் எண்ணமல்ல. இது ஒரு எச்சரிக்கை மட்டுமே—

உள்ளார்ந்த நிலையில் இறுதியாக ஒரு முறை சோதிக்க நேரம் எடுத்துக்கொள்ளுங்கள் என்பதற்கான ஒரே அழைப்பு.

என் தொழில்சார்ந்த சேவையின் ஒரு பகுதியாக, நான் அமெரிக்கா முழுவதும் — சில நேரங்களில் சர்வதேச நாடுகளுக்கும் — பறந்து சென்று, வணிகத் தலைவர்களுக்கு ஆலோசனை தருகிறேன், உரையாற்றுகிறேன், மற்றும் அவர்களுடன் பணியாற்றுகிறேன்.

விமானத்தில் புறப்படும் முன் நான் அமர்ந்து காத்திருக்கும் போது, என் ஜன்னல் வழியாக பார்த்தால், விமானிகளின் ஒருவர் மெதுவாக விமானத்தின் வெளிப்புறத்தையும், இறக்கை பகுதிகளையும், தரையிறங்கும் சாதனங்களையும் சோதிக்கிறதை காண்கிறேன்.

இது ஒரு பயணியாகிய எனக்கு மிகவும் நிம்மதியான விஷயமாகும் — ஏனெனில் அந்த விமானி முக்கியமான இயக்கத் தளங்களைப் பற்றி இறுதி சோதனை செய்கிறார் என்பதே எனக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.

அந்த விமானியின் பாதுகாப்பு சோதனையால் விமானம் சில நிமிடங்கள் தாமதமாக புறப்பட்டாலும், நான் அதினால் எரிச்சல் அடைவேனா? எப்போதுமே இல்லை. அந்த விமானக்குழு, தங்கள் வேலையை மதித்து, இயன்ற அளவில் விமானத்தின் பாதுகாப்பான இயக்கத்தை உறுதி செய்திருப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுக்கிறது.

அதேபோல், என் தொழில் சார்ந்த பங்குதாரர்கள் அனைவருக்கும் நான் பரிந்துரைக்கும் விஷயம் என்னவென்றால் — தாங்கள் அடுத்த முக்கியமான முடிவை எடுக்கிறதற்கு முன், தங்கள் தரவுகள், அறிக்கைகள், ஆவணங்கள், குறிப்புகள் அனைத்தையும் ஒதுக்கி விட்டு, அமைதியான இடத்துக்குச் சென்று, “பரிசுத்த ஆவியாரே, இப்போது நான் என்ன

செய்யவேண்டும்?” என்று கேட்கும் அமைதியான நேரத்தைக் கொண்டிருக்க வேண்டும்.

பல நேரங்களில், இந்த இறுதி சோதனை கீழ்காணும் பயன்களை தருகிறது:

- அழுத்தமூட்டும் சூழ்நிலையிலிருந்து உங்களை நீக்குகிறது.
- உங்கள் முடிவு சிறந்ததுதான் என்பதை உறுதியாக உணர்த்துகிறது.
- அந்த முடிவு நலனுள்ளதாக இருப்பதைப்பற்றி உங்கள் ஆவியில் அதிக நம்பிக்கையும் தெளிவும் உருவாக்குகிறது

அதற்குப் பிறகு, அந்த முடிவைப் பற்றிய அமைதியான உணர்வுடன் நீங்கள் செயல்பட முடியும்.

## *நீங்கள் செயல்த்திட்டத்தை செயல்படுத்தும் முன் சரிபார்க்கவும்*

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்த்துவிடுவதற்கான இரண்டாவது முக்கியமான மூலைக்கல் என்னவென்றால் – செயல்படுவதற்கு முன் சரிபார்க்கவும். அதற்காக…

- வேகத்தை குறைக்கவும்
- வெளியிலிருந்து வரும் எல்லாவற்றையும் தடை செய்யவும்
- இறுதியாக ஒரு முறை சோதிக்கவும்

அடுத்த வாரத்தில், இந்த மூன்று முக்கியமான படிகளையும் உங்கள் முடிவெடுக்கும் செயல்பாட்டில் ஒருங்கிணைக்கவும். பின்னர் ஒவ்வொரு முடிவிற்கும் "செயல்படுவதற்கு முன் சரிபார்க்கவும்" என்பதை நீங்கள் எவ்வாறு செயல்படுத்தினீர்கள் என்பதை தெளிவுபடுத்த இந்த செயல் திட்டத்தைப்

பயன்படுத்தவும். பரிசுத்த ஆவி உங்கள் முடிவுகளை வழிநடத்துகிறார் என்ற உங்கள் நம்பிக்கையை வளர்க்க நீங்கள் என்றென்றும் பயன்படுத்தக்கூடிய எளிய செயல் இது.

**தீர்மானம் #1:** ______________________________

நீங்கள் எப்படி வேகத்தை குறைத்தீர்கள்?

வெளிப்புறத்தை எப்படி தடுத்தீர்கள்?

இறுதி சோதனை எதை உறுதிப்படுத்தியது?

**தீர்மானம் #2:** ______________________________

நீங்கள் எப்படி வேகத்தை குறைத்தீர்கள்?

வெளிப்புறத்தை எப்படி தடுத்தீர்கள்?

இறுதி சோதனை எதை உறுதிப்படுத்தியது?

**தீர்மானம் #3:** ______________________________

நீங்கள் எப்படி வேகத்தை குறைத்தீர்கள்?

வெளிப்புறத்தை எப்படி தடுத்தீர்கள்?

இறுதி சோதனை எதை உறுதிப்படுத்தியது?

**தீர்மானம் #4:** ______________________________

நீங்கள் எப்படி வேகத்தை குறைத்தீர்கள்?

வெளிப்புறத்தை எப்படி தடுத்தீர்கள்?

இறுதி சோதனை எதை உறுதிப்படுத்தியது?

**தீர்மானம் #5:** ______________________________

நீங்கள் எப்படி வேகத்தை குறைத்தீர்கள்?

வெளிப்புறத்தை எப்படி தடுத்தீர்கள்?

இறுதி சோதனை எதை உறுதிப்படுத்தியது?

## 5.3. ஒரு சாட்சியை தேடுங்கள்

> *சாட்சி (பெயர்ச்சொல்) – ஒரு நிகழ்வோ அல்லது உண்மையோ குறித்து உறுதியாகத் தெரிவித்தல்; அல்லது, அந்த நிகழ்வு குறித்த தனிப்பட்ட அனுபவமுள்ள ஒருவர்.*

உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்க்கும் மூன்றாவது திறவுகோல் சாட்சியை தேடுவதாகும்.

அமெரிக்காவில் எண்ணற்ற குற்றவியல் வழக்குகள், ஒரே ஒரு சாட்சியின் சாட்சியத்தின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்பட்டுள்ளன — அவர் குற்றம் நடந்த இடத்தில் இருந்தவர், எது நடந்ததோ அதைப்பற்றி தெரிந்தவர். அவர் அளிக்கும் சாட்சியின் மூலம், அவர் கண்ட காட்சியை அல்லது அனுபவித்த உண்மையை உறுதிப்படுத்த முடிகிறது. எதிர்சாட்சி வழியாக வரும் ஆதாரங்கள் எத்தனை இருந்தாலும், அந்த ஒரே

சாட்சியின் சாட்சி, சாட்சியமில்லாத பல நிபுணர்களின் குரல்களை எளிதாக மேற்கொள்ளக்கூடும்.

அதேபோல், உங்கள் ஆவியிலும் இது உண்மையாகவே உண்டு — அது உங்கள் ஒரே உண்மையான, சக்திவாய்ந்த, அனைத்தையும் அறிந்த, உங்கள் உள்ளார்ந்த பரிசுத்த ஆவியின் சாட்சி.

## *உண்மையான சாட்சி*

> *மெய்ச்சாட்சிக்காரன் பொய்சொல்லான்; பொய்ச்சாட்சிக்காரனோ பொய்களை ஊதுகிறான்.*
>
> — நீதிமொழிகள் 14:5

உங்களிடம் வேலை பார்க்கும் ஒருவர் பொய் சொன்னது உண்டா? ஒரு ஊழியரோ? மேலாளரோ? விற்பனையாளர் ஒருவரா? அல்லது, ஒரு வாடிக்கையாளரோ? நிச்சயமாக இப்படி நடந்திருக்கலாம். நீங்கள் ஒரு வணிகத்தில் 24 மணி நேரத்திற்கு மேல் இருந்திருந்தால், யாராவது ஒரு சிறிய அல்லது பெரிய பொய்யாவது உங்களிடம் சொல்லியிருப்பார்கள்.

ஆனால் அது பொய்யென்று உங்களுக்கு எப்படி தெரிந்தது? அந்த நபர் உண்மையைத்தான் சொல்லவில்லை என்பதை எது உங்களுக்கு தெரிவித்தது? அந்த பொய்யின் பின்னால் மறைந்து இருந்த உண்மையை நீங்கள் எப்படித் தெரிந்துகொண்டீர்கள்?

இதற்கான பதில் மிகவும் எளிது: நீங்கள் ஏற்கனவே உண்மையை அறிந்திருந்தீர்கள்!

அது ஒரு நிதி அல்லது செயற்பாட்டு தரவாக இருக்கலாம், ஒரு பரிவர்த்தனையின் வரலாறு, ஒரு அறிக்கையில் காணாமல் போன விவரம், அல்லது வேறு யாரோ ஒருவரைப்பற்றியதாக— உங்களுக்குள் ஏற்கனவே உண்மையை உணரும் உணர்வு இருந்தது.

பொய்யானதை அடையாளம் காண்பது எளிதாக இருந்தது.

பல சந்தர்ப்பங்களில், அது உங்களுக்குள் வாழும் உண்மையான சாட்சியான பரிசுத்த ஆவியானவர்தான் —அவர் அந்த கூற்றின் உண்மை அல்லது பொய்யை உறுதிப்படுத்தினார்.

ஆனால் சில நேரங்களில், நாம் எல்லோரும் ஏமாந்துவிடுகிறோம். நாம் ஏதோ ஒன்றை கேட்கிறோம், பிறகு நினைக்கிறோம்: "அது நன்றாக இருக்கின்ற மாதிரி இருக்கு… இது சரியில்லாத யோசனை மாதிரிதான் இருக்கு ... இருக்கும் போல தோணுது, ஆனால் நிச்சயமில்லை… தவறாக குற்றம்சாட்ட முடியாதே!"

நாம் எப்போது ஏமாறுகிறோம்? பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதற்குப் பதிலாக, நாம் பழைய பழக்கங்களுக்கு திரும்பும்போது — அதாவது, தூண்டப்படும் தலைமையால், யோசனையால், அல்லது உணர்வுகளால் வழிநடத்தப்படும்போது…

அப்படியென்றால், உண்மையான சாட்சியையும் பொய்யான சாட்சியையும் நீங்கள் எப்படித் வித்தியாசப்படுத்த முடியும்?

உண்மையான சாட்சி உங்களுக்குக் கொடுக்கும் விஷயங்கள்:

- சமாதானம் (பிலி. 4:7)
- ஐக்கியம் (எபே. 4:3)
- பொறுமை (கலா. 5:5)
- வலிமை (எபே. 3:16)
- ஆழமான அறிவு (1 கொரி. 2:10, 13)
- மகிழ்ச்சி (1 தெச. 1:6)
- ஆதரவு மற்றும் ஆறுதல் (அப்ப. 9:31)
- கனிகள் (கலா. 5:22–23)

பொய்யான சாட்சி உங்களுக்குத் தரும் விளைவுகள்:

- குளறுபடி
- அசௌகரியம்
- கவலை
- பலவீனம்
- குழப்பம்
- பயம்
- தெளிவில்லாத நிலை
- மன அழுத்தம்

நீங்கள் எடுக்கக்கூடிய சிறந்த முடிவுகள் எப்போதும் முதல் பட்டியலில் உள்ள அம்சங்களை அதிகமாக கொண்டிருக்கும், இரண்டாவது பட்டியலில் உள்ளவை அல்ல.

ஒரு முடிவுக்காக சாட்சியை தேடுகிறபோது, இந்த இரண்டு பட்டியலையும் அருகில் வைத்துக்கொள்ளுங்கள். இது, உண்மையான சாட்சியும் பொய்யான சாட்சியும் இடையே உள்ள வேறுபாட்டை விரைவாக புரிந்துகொள்ள உதவும்.

நினைவில் வையுங்கள்: பரிசுத்த ஆவியானவர் உங்களை எல்லா சத்தியத்திலும் வழிநடத்துவார் (யோவான் 16:13). நீங்கள் தேட வேண்டியது ஒரே ஒரு சாட்சி — பரிசுத்த ஆவியின் உண்மையான சாட்சியே.

## *ஒரு சாட்சி போதும்*

> *நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.*
>
> — ரோமர் 8:16

வணிகத் தலைமையைப் பற்றிய ஒரு பொதுவான கூற்று: "உச்சத்தில் இருப்பது தனிமையுடனான நிலை."

ஒரு வணிகத்தலைவராக, நீங்கள் தினசரி பல தீர்மானங்களை எடுக்கிறீர்கள். உங்கள் பதவி எவ்வளவு உயர் பதவியோ, உங்கள் முடிவுகளின் தாக்கமும் நிறுவனத்தின் மீது அதிகமாக இருக்கும். மேலும், முடிவு பெரியதாயிருக்கிறபோது, அந்த முடிவு எடுப்பதில் கலந்துகொள்ள உங்களால் அனுமதிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கை குறைவாகத்தான் இருக்கும். சில நேரங்களில், வணிகத்தலைமையில் இருக்கிறவர்கள் உண்மையாகவே தனிமையாக உணர்கிறார்கள். ஒரு விஷயத்தில் முழுமையாக தனியாக நிற்கும் தருணத்தில் அந்த தனிமை இன்னும் அதிகமாகவே இருக்கும்.

நீங்கள் நிறுவனத்தில் உச்ச நிலையிலிருந்தாலும் சரி, கீழ்மட்ட நிலையிலிருந்தாலும் சரி, சில நேரங்களில் ஒரு விஷயத்தில் நீங்கள் மட்டுமே ஒரு பக்கமாக நின்று கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். அந்த நேரங்களில், யாராவது உங்கள் பக்கம் வருவாரா, உங்களை ஆதரிப்பாரா, உங்கள் நிலைப்பாட்டை உறுதிப்படுத்துவாரா என்று நீங்கள் எதிர்பார்க்கக்கூடும்.

அத்தகைய நேரங்களில், நீங்கள் தேட வேண்டியது ஒரே ஒரு உண்மையான சாட்சி — பரிசுத்த ஆவியானவர். அவர் மட்டுமே போதுமானவர். இது போக்குவரத்து ஒளியை போன்றது. அமெரிக்காவில், போக்குவரத்து ஒளிக்கு மூன்று நிறங்கள் உள்ளன: சிவப்பு என்றால் நிறுத்தவேண்டும். மஞ்சள் என்றால் மெதுவாகவும் கவனத்துடனும் செல்ல வேண்டும். பச்சை என்றால் செல்லலாம்.

என் அனுபவத்தில், பரிசுத்த ஆவியானவர் சில நேரங்களில் சிவப்பு ஒளி போல நிறுத்த சொல்கிறார், சில நேரங்களில் மஞ்சள் ஒளி போல மெதுவாக முன்னேற சொல்கிறார், மற்றும் சில நேரங்களில் பச்சை ஒளி போல தைரியமாக போக சொல்கிறார்.

அப்படியானால், சாட்சியைத் தேடும் ஒரு வழி இதுதான்: நீங்கள் உணர்வது…

- **கவலை அல்லது தெளிவில்லாத நிலை என்றால்** – நிறுத்துங்கள்! இது ஒரு சிவப்பு ஒளி போல இருக்கலாம்.
- **எதுவும் உணரவில்லை என்றால்** – காத்திருங்கள் மற்றும் தொடர்ந்தும் தேடுங்கள். இது ஒரு மஞ்சள் ஒளி போல இருக்கலாம்.
- **அமைதியும் வல்லமையும் உணர்ந்தால்** – செல்லுங்கள், இப்போதே செல்லுங்கள்! இது பரிசுத்த ஆவியானவரின் பச்சை ஒளி – செயல்பட தயார்!

## *இரண்டு சாட்சிகள் மேலும் சிறந்தவை*

> *நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திற்காகத் தங்கள் பிராணனையும் ஒப்புக்கொடுக்கத் துணிந்தவர்களும் எங்களுக்குப் பிரியமானவர்களுமாயிருக்கிற பர்னபா பவுல் என்பவர்களோடுங்கூட ....*
>
> — அப்போஸ்தலர் 15:25

> *எவையெனில், விக்கிரகங்களுக்குப் படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்க வேண்டுமென்பதே.*
>
> — அப்போஸ்தலர் 15:28

*ஆகிலும் சீலாவுக்கு அங்கே தரித்திருக்கிறது நலமாய்க் கண்டது.*

— அப்போஸ்தலர் 15:34

ஸ்ட்ராங் அவர்களின் அகராதியில் "சாட்சி" என்பதை இவ்வாறு வரையறுக்கிறார்: "ஒன்றாக சாட்சியளிப்பது, அதாவது ஒரே நேரத்தில் உள்ள ஆதாரங்களால் உறுதிப்படுத்துவது; ஒருவருக்கு சாட்சி அளிப்பது; இணைந்த சாட்சியாக நிலைபெறுவது."

மேலே சொல்லப்பட்ட வார்த்தைகள் ஒவ்வொன்றிலும், விசுவாசிகள் ஒரே முடிவில் இணைந்து ஒருங்கிணைந்த-சாட்சிகளாக செயல்படுவதை நாம் காணலாம். "பரிசுத்த ஆவியானவருக்கும், எங்களுக்கும் நன்றாகவே தோன்றியது" என்ற வாசகம் இந்த ஒருங்கிணைந்த-சாட்சியின் சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக, "ஆம், இது ஒரு நல்ல முடிவாகும்" என்று கூறினார். அதன்பின் அவர்கள் அனைவரும் தங்கள் உள்ளார்ந்த சாட்சிகளோடு இணைந்து ஒருமனதாக ஒப்புக்கொண்டனர்.

நீங்கள் பரிசுத்த ஆவியானவர் மூலம் பெறும் தனிப்பட்ட சாட்சி நிச்சயமாக போதுமானதுதான். ஆனால், இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட விசுவாசிகளின் ஒருங்கிணைந்த சாட்சி கிடைத்தால், அது இன்னும் சிறந்ததாகும்!

இருவர் இணைந்த சாட்சியாக இருக்கும் சக்தியை விளக்கும் ஒரு எடுத்துக்காட்டை இங்கு காணலாம்:

சமீபத்தில், ஒரு பிராந்திய மாநாட்டில், நான் ஒரு பெரிய குழுவான கிறிஸ்தவ வணிகத்தலைவர்களை நோக்கி முடிவுரையை வழங்கினேன். அந்த உரையின் போது, இந்த புத்தகத்தில் கூறப்பட்ட சில முக்கிய கொள்கைகளை விரைவாக பகிர்ந்தேன். உரையின் நடுவில், நான் முதலில் திட்டமிட்டதைவிட இணைந்த சாட்சியை தேடுவது பற்றி திடீரென அதிகமாக பேச

வேண்டும் என்று பரிசுத்த ஆவியாரால் உள்ளிருந்து தூண்டுதலை உணர்ந்தேன்.

மாநாடு முடிந்து மூன்று நாட்கள் கழித்து, அந்த மாநாட்டில் கலந்துகொண்டவர்களில் ஒருவரிடமிருந்து ஒரு நீளமான, விரிவான மின்னஞ்சல் வந்தது. அவர் ஒரு பெரிய தொழிலதிபர் மட்டுமல்ல, அந்த மதிப்புமிக்க கிறிஸ்தவ வணிக அமைப்பின் நிறுவனரும் உறுப்பினராகவும் இருந்தவர்.

பிரச்சனையின் விரைவான மதிப்பாய்வுக்குப் பிறகு, அவர் தனது மின்னஞ்சலில் இவ்விதமாக எழுதியிருந்தார்:

> "நேற்றிரவு நான் வீட்டுக்குத் திரும்பிக்கொண்டிருந்தபோது உங்கள் செய்தி எனக்கு நினைவுக்கு வந்தது. நான் ரேடியோவை அணைத்துவிட்டு, வாயை திறந்து, 'இந்த சூழ்நிலையில் என்ன செய்யவேண்டும்?' என்று பரிசுத்த ஆவியானவரை கேட்டேன். அந்த நேரத்தில் எனக்கு ஒரு உள்ளார்ந்த தூண்டுதல் ஏற்பட்டது — என் உதவி அலுவலக மேலாளரிடம் (அவள் அருமையான பெண்; கர்த்தரை மிகவும் நேசிப்பவர்) இந்த விஷயத்தில் அவளது கருத்தை கேட்டுப்பாருங்கள் என. நான் இதுவரை ஒருபோதும் அவளிடம் இப்படி செய்ததில்லை!"

என் நண்பர் தொடர்ந்து விவரித்தார், அவர்கள் இருவரும் சேர்ந்து, ஒரு சக்திவாய்ந்த மற்றும் வேகமான இணை சாட்சியம் அளித்து ஒரு சிறந்த தீர்வைப் பெற்றனர். அவர் தனது மின்னஞ்சலை இவ்வாறு கூறி முடித்தார்:

> (சொல்ல வேண்டியதில்லை என்றாலும்) இந்த தீர்வை நான் ஒருவராக எடுத்திருந்தால், ஒருபோதும் கண்டுபிடித்திருக்க முடியாது.

> அந்த கூட்டத்தில் உங்களால் கற்பிக்கப்பட்ட கொள்கைகளை இதைவிட விரைவாக நடைமுறையில் பின்பற்றியவர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை, ஆனால் நான் நிச்சயமாக பின்பற்றினேன். கர்த்தருக்கு கீழ்படிந்து, எங்கள் குழுவிடம் பேச நீங்கள் எடுத்த முயற்சிக்கு நான் மனப்பூர்வமாக நன்றி கூறுகிறேன்!

இது ஒருங்கிணைந்த சாட்சியை தேடுவதற்கான ஒரு சிறந்த உதாரணமாகும். ஒரே பணியிடத்தில் வேறு ஒரு விசுவாசியின் சாட்சியைக் கேட்கும்பொழுது அவருக்குள்ள நம்பிக்கையும் மகிழ்ச்சியையும் உணர முடிகிறது.

உங்கள் பணியிடத்தில் விசுவாசமுள்ள சகோதரர்கள்/சகோதரிகள் கொண்ட ஒரு சக்திவாய்ந்த குழுவாக இருந்தால், உங்கள் நிறுவனத்தில் ஏற்படும் எவ்விதமான பிரச்சனையையோ சூழ்நிலையையோ நீங்கள் கடந்து செல்ல முடியும்.

ஆனால், பணியிடத்தில் ஒருங்கிணைந்த சாட்சியை தேடுவது எப்போதும் எளிதாகவோ விரைவாகவோ நடக்காது. சவால் என்னவென்றால், நீங்கள் ஒருங்கிணைந்த சாட்சியை நாடும்போது, உங்கள் முடிவுகள் ஒன்றோடொன்று ஒத்துப் போகவில்லை என்றால் என்ன செய்வீர்கள்? அவர்களின் பார்வை, உங்கள் பார்வைக்கு எதிராக இருக்கும்போது, அடுத்த என்ன செய்வது?

எனது சமூக ஊடகம் மற்றும் இணையதள திட்டத்திற்கான பயிற்சியாளர் ஒரு அருமையான, பரிசுத்த ஆவியால் நிறைந்த விசுவாசியும், சிறந்த விற்பனையான புத்தக எழுத்தாளரும் ஆவார். அவர் எனது வியாபார சேவையை என்னைவிட நன்கு அல்லது அதைவிட மேம்பட்ட முறையில் அறிந்தவர். என் டிஜிட்டல் மார்க்கெட்டிங் மற்றும் பிராண்டிங் செயல்களில் தொடர்ந்து வழிகாட்டி பயிற்சி அளித்து வருகிறார்.

பொதுவாகவே, பல சந்தர்ப்பங்களில் நான் அவரிடம் கேட்பேன்: “நான் இப்படி யோசிக்கிறேன். இதில் உங்களுக்கு எந்த சாட்சியும் இருக்கிறதா?”

பல முறை, நான் உணரும் எண்ணங்களை அவர் உடனடியாக உறுதிப்படுத்துவார். சில சமயங்களில், அவர் அதில் ஒத்துப் போகமாட்டார். பதிலுக்கு வேறு யோசனையையும் பரிந்துரையும் அளிப்பார்.

இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?

ஏனெனில், அவர் என் தளத்தை, என் இலக்குகளை, மேலும் தேவன் என்னைத் தேர்ந்தெடுத்து, தன் நேர்த்தியான திட்டத்தில் எப்படி அழைத்திருக்கிறார் என்பதையும் ஆழமாக அறிந்திருப்பதால், நான் மீண்டும் ஒரு முறை அந்த முடிவுக்கான எனது தனிப்பட்ட சாட்சியை தேடுகிறேன்.

பரிசுத்த ஆவியுடன் ஆழமாக செல்லும் அந்த அனுபவம், அந்த தீர்வுக்காக மட்டுமல்லாமல் என் வாழ்நாளுக்கே அவருடன் இன்னும் நெருக்கமானதும், சக்திவாய்ந்ததுமான உறவுக்குள் என்னை இழுத்துச் செல்கிறது. பல முறை, தேவனுடைய தீர்மானம் என் ஆவியில் உறுதியாக நிறைவேற, வெறும் சிறிது நேரம்தான் எடுத்துக்கொள்வேன்.

இறுதியில், முடிவு எடுப்பது எனது பொறுப்பே. பரிசுத்த ஆவியின் வழிநடத்தலுக்கிணங்க, என்னால் செய்யப்படவேண்டியதை செய்கிறேன். கர்த்தருடன் செலவிடும் கூடுதல் நேரம் எனக்கு அதிகமான உறுதியையும், சமாதானத்தையும், அர்ப்பணிப்பையும் அளிக்கிறது.

வியப்பான விஷயம் என்னவென்றால், நான் என் முடிவை நடைமுறையில் செயல்படுத்திய பிறகு, என் நண்பர் பலமுறை சொல்லுவார்:

“இப்போது நீ அந்த தேர்வை ஏன் எடுத்தாய் என்பதை கூடுதல் தெளிவாக என்னால் பார்க்க முடிகிறது என்று. அந்த கோணத்தில் நான் யோசிக்கவேயில்லை. இது உங்களுக்கு வேலை செய்யும் என்று எனக்கு தெரியும்.”

இறுதியில், நான் முதலில் நாடியிருந்த அந்த ஒருங்கிணைந்த சாட்சியையே நான் பெற்றுக்கொண்டேன். ஆனால், அதற்கு முன்பு, எனது தனிப்பட்ட சாட்சிக்கு ஏற்ப நம்பிக்கையுடன் ஒரு படி எடுத்துச்செல்லவேண்டியது இருந்தது.

## *சிறந்த குழுவை உருவாகும் உத்தி*

ஹே டாம், உன்னிடம் ஒரு உதவி கேட்டுக்கலாமா? நான் ஒரு பெரிய முடிவை எடுக்க இருப்பதாக இருக்கிறேன்... கர்த்தர் என்னை என்ன செய்ய சொல்லுகிறார் என்பதைக்குறித்து தெளிவாக கேட்கிறேன் என்பதில் உறுதி பெற விரும்புகிறேன். அவர் என்னிடம் சொல்வது இதுதான் என்று நான் உணர்கிறேன்... இதற்கு உங்களிடம் சாட்சி இருக்கிறதா?

உங்கள் நிறுவனத்தில் இருக்கும் இன்னொரு 2% விசுவாசியான டாம், இதை கேட்கும் போது சந்தோஷமாகவும் உற்சாகமாகவும் இருப்பார் என்பதை ஒருமுறை கற்பனை செய்யுங்கள்.

இவ்வளவு முக்கியமான கேள்விக்கு தன்னிடம் உதவி கேட்கப்பட்டால் கூட அவர் எவ்வளவு பணிவாகவும், அதிகமாகவும் உணருவார் என்று கற்பனை செய்து பாருங்கள்

டாமுக்கு "ஒருங்கிணைந்த சாட்சி" எனும் ஆற்றலைப்பற்றி தெரிந்திருந்தால், அவர் என்ன செய்ய வேண்டும் என்பதையும் நன்றாகவே அறிந்திருப்பார்.

குழு கட்டமைப்பிலிருந்து பணியிடத்தில் சக ஊழியர்களை உங்கள் ஒருங்கிணைந்த சாட்சிகளாக மற்றவர்களை அழைப்பது வரை பல நன்மைகளைப்பற்றி யோசித்துப் பாருங்கள். உங்கள் சக ஊழியர்களுடன் ஒருங்கிணைந்த சாட்சியை நாடுவது

- உங்கள் முடிவுகளில் நம்பிக்கையை ஏற்படுத்துகிறது.

- உங்கள் வியாபாரத்தின் வேதாகம அடித்தளம் உறுதிப்படுத்தப்படுகிறது.
- உங்கள் குழுவின் இருதயத்தையும், உற்சாகத்தையும் கேட்கும் உங்கள் விருப்பத்தை வெளிப்படுத்துகிறது.
- உங்கள் நிறுவனத்தில் ஆன்மீக பலத்தையும் உணர்திறனையும் வளர்க்கிறது.
- தங்களுடைய முடிவுகளிலும் இதையே செய்ய மற்றவர்களுக்கு நினைவூட்டுகிறது.
- மற்றவர்கள் உடன்படாத முடிவுகளில் கூட அவர்களுக்கு உறுதியளிக்கிறது.

இதுதான் இதுவரை கேட்டதிலேயே மிகவும் சக்திவாய்ந்த குழு ஒருங்கிணைப்பு கேள்வி: "உனக்கு இதில் எந்த சாட்சியும் இருக்கின்றதா?"

## *தனிப்பட்ட வாழ்வில் நடைமுறைப்படுத்துவது*

நீண்ட வருடங்களுக்கு முன், என் புத்திசாலியான, அழகான, பரிசுத்த ஆவியால் நிரம்பிய மனைவி பிரெண்டாவுடன் நான் முடிவுகள் எடுக்கும் முறையில் ஒரு புதிய அணுகுமுறையைத் தொடங்கினேன்.

பெரும்பாலான கணவர்களைப் போல, நான் அவளிடம் இவ்வாறு கேட்பதுண்டு ...

- “இதைப் பற்றி நீ எப்படி உணருகிறீர்கள்?”
- “இதைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?”
- “இதிலே உன்னுடைய கருத்து என்ன?”

ஆனால் இப்போது, ஒரு பெரிய முடிவை எடுக்கும் முன் நான் அவளிடம் கேட்பது ஒரே ஒரு கேள்விதான்: “உனக்கு இதில் எந்த சாட்சியும் இருக்கின்றதா?”

இந்த அணுகுமுறை, உடனடியாக, முடிவெடுக்கும் அவளுடைய பங்களிப்பை — உணர்வாலோ, எண்ணத்தாலோ, கருத்துகளாலோ

வழிநடத்தப்படுவதை தவிர்த்து, பரிசுத்த ஆவியால் மட்டுமே வழிநடத்தப்படும் நிலைக்கு மாறி விடுகிறது.

ஏனென்றால், எனக்குள் வாழும் பரிசுத்த ஆவியே அவளுக்குள்ளும் வாழ்கிறார். அதினால் இப்போது நாங்கள் ஒருங்கிணைந்த சாட்சியை நாடி முடிவுகள் எடுக்கிறோம்.

இதன் விளைவுகள் ஆச்சரியமளிப்பவையாக இருக்கின்றன. கேள்வியின் அமைப்பை மாற்றுவதன் மூலம், இப்போது நாங்கள் தம்பதியாக இன்னும் வல்லமையான முறையில் நடக்கிறோம்.

## *சாட்சியை நாடும் செயல் திட்டம்*

இங்கே ஒரு எளிய, நான்கு கேள்விகள் அடங்கிய சாட்சியை நாடும் செயல் திட்டம் உள்ளது. கீழ்க்காணும் கேள்விகளை வரிசையாக பதிலளிக்கவும்:

**தீர்மானம் #1** ________________________________________

இந்த முடிவிற்கோ செயலுக்கோ எனக்கு ஒரு தனிப்பட்ட சாட்சி இருக்கிறதா?

எனக்கு இதில் ஒருங்கிணைந்த சாட்சி தேவைப்படுகிறதா?

தேவைப்பட்டால், யாரிடம் நான் ஒருங்கிணைந்த சாட்சியை கேட்க வேண்டும்?

அவர்/அவளுக்கு இதைப் பற்றிய சாட்சி இருக்கிறதா?

எனது சாட்சியின்  அடிப்படையிலான தீர்மானம் :

**தீர்மானம் #2** ___________________________________

இந்த முடிவிற்கோ செயலுக்கோ எனக்கு ஒரு தனிப்பட்ட சாட்சி இருக்கிறதா?

எனக்கு இதில் ஒருங்கிணைந்த  சாட்சி தேவைப்படுகிறதா?

தேவைப்பட்டால், யாரிடம் நான் ஒருங்கிணைந்த சாட்சியை கேட்க வேண்டும்?

அவர்/அவளுக்கு இதைப் பற்றிய சாட்சி இருக்கிறதா?

எனது சாட்சியின்  அடிப்படையிலான தீர்மானம் :

**தீர்மானம் #3** ___________________________________

இந்த முடிவிற்கோ செயலுக்கோ எனக்கு ஒரு தனிப்பட்ட சாட்சி இருக்கிறதா?

எனக்கு இதில் ஒருங்கிணைந்த  சாட்சி தேவைப்படுகிறதா?

தேவைப்பட்டால், யாரிடம் நான் ஒருங்கிணைந்த சாட்சியை கேட்க வேண்டும்?

அவர்/அவளுக்கு இதைப் பற்றிய சாட்சி இருக்கிறதா?

எனது சாட்சியின்  அடிப்படையிலான தீர்மானம் :

**தீர்மானம் #4** ______________________________

இந்த முடிவிற்கோ செயலுக்கோ எனக்கு ஒரு தனிப்பட்ட சாட்சி இருக்கிறதா?

எனக்கு இதில் ஒருங்கிணைந்த  சாட்சி தேவைப்படுகிறதா?

தேவைப்பட்டால், யாரிடம் நான் ஒருங்கிணைந்த சாட்சியை கேட்க வேண்டும்?

அவர்/அவளுக்கு இதைப் பற்றிய சாட்சி இருக்கிறதா?

எனது சாட்சியின்  அடிப்படையிலான தீர்மானம் :

**தீர்மானம் #5** ______________________________

இந்த முடிவிற்கோ செயலுக்கோ எனக்கு ஒரு தனிப்பட்ட சாட்சி இருக்கிறதா?

எனக்கு இதில் ஒருங்கிணைந்த சாட்சி தேவைப்படுகிறதா?

தேவைப்பட்டால், யாரிடம் நான் ஒருங்கிணைந்த சாட்சியை கேட்க வேண்டும்?

அவர்/அவளுக்கு இதைப் பற்றிய சாட்சி இருக்கிறதா?

எனது சாட்சியின் அடிப்படையிலான தீர்மானம் :

## 5.4. ஆவியை அவித்துபோடாதிருங்கள்

*அணை (v): அணை; அடக்கிவிடு; எதையாவது முடிவுக்குக் கொண்டுவருதல்.*

உங்கள் தொழிலில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்த்துவிட உதவும் நான்காவது திறவுகோல், ஆவியை அணைத்துவிடக்கூடாது.

வியட்நாம் போரின்போது, நான் ஒரு இளம் வாலிபனாக இருந்தேன். பல ஆண்டுகள், ஒவ்வொரு இரவும் தொலைக்காட்சி செய்திகளின், அந்த நாளின் நாட்டுக்காக உயிர் தியாகம் செய்த நாயகர்களின் உயிரிழப்பு எண்ணிக்கையை நான் கேட்டுக்கொண்டே இருந்தேன்.

அந்தப் போரின் மிகவும் தாக்கமளிக்கும் பகுதிகளில் ஒன்று, "ஹனாய் ஹில்டன்" என்று கேலியாக அழைக்கப்பட்ட ஒரு பெரிய சிறைச்சாலையில் பலரை போர் கைதிகளாக வைத்திருப்பதைப் பற்றிய செய்தியாக இருந்தது. அந்த இடத்தில் போர் வீரர்கள் பல

ஆண்டுகளாக இரக்கமற்ற முறையில் சித்திரவதை செய்யப்பட்டனர்.

எனது நெருங்கிய நண்பரான டாக்டர் ஸ்டீவ் லின்னில், கடந்தப் பத்தாண்டுகளாக ஒரு அதிசயமான மருத்துவ மற்றும் உளவியல் நிபுணர்களைக் கொண்ட குழுவில் பணியாற்றி வருகிறார். அந்தக் குழு, வியட்நாம், டெசர்ட் ஸ்டார்ம் மற்றும் ஆபரேஷன் இராக்கி ஃப்ரீடம் போர்களில் போர்ச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த வீரர்களின் மனநிலை மற்றும் உடல்நிலை மீதான தாக்கங்களை ஆய்வு செய்தது. இந்த நூற்றுக்கணக்கான நாயகர்கள் – ஆண்களும் பெண்களும் – அடிக்கடி பென்சகோலா கடற்படை விமான நிலையத்தில் உள்ள ராபர்ட் இ. மிட்செல் மையத்தில் விரிவான உடல் பரிசோதனைகளுக்கும் மதிப்பீடுகளுக்கும் வருவார்கள்.

அவர்களது நீளமான ஆராச்சியில் கேட்கப்படும் முக்கியமான கேள்வி ஒன்று: "பல ஆண்டுகளாக கொடூரமான சித்திரவதை அனுபவித்தும் உயிர்வாழ்ந்த சிப்பாய்கள் மற்றும் உயிரிழந்த சிப்பாய்களுக்கு இடையேயான முக்கிய வித்தியாசங்கள் என்ன?"

இது வரை அவர்கள் கண்டுபிடித்த அதிசயமான முடிவுகளில் ஒன்று: மீண்டும் எழுந்து நிற்கும் திறனை கணிக்க, மற்றும் எந்தவொரு உளவியல் கோளாறும் இல்லாதிருப்பதைக் கணிக்க, முக்கியமான பண்பாக 'நம்பிக்கை' இருந்தது.

இந்த மீண்டு எழும் திறனுக்கான மிகப் பெரிய ஆதாரம் நம்பிக்கையே. பலருக்கு அந்த நம்பிக்கை தேவனில் இருந்தது. மற்றவர்களுக்கு, அது சிறந்த எதிர்காலத்தில் இருந்தது.

இப்படி ஒரு புத்தகத்தில் – அதாவது, வியாபாரத்தில் பரிசுத்த ஆவியை எப்படி வெளிப்படுத்துவது என்பதைப்பற்றிய புத்தகத்தில் – போரில் சிறை வைக்கப்பட்டிருந்த வீரர்களைப் பற்றிய ஆய்வுகளை ஏன் குறிப்பிட வேண்டும்?

முதலில், இதனை உள்ளடக்க பரிசுத்த ஆவியானவர் என்னை வழிநடத்தினார்.

இரண்டாவது, நிமிடம் தோறும், மணிக்கு மணியும், தினந்தோறும், ஆண்டாண்டுகளாக உடலிலும் மனதிலும் ஏற்படும் கடும் சித்திரவாதங்களை எதிர்கொண்டு, உயிருடன் மீண்டவர்கள் — தங்களுக்குள் வாழும் ஆவியை அடக்கவில்லை என்பதற்காகவே அவர்கள் உயிர்வாழ முடிந்தது.

ஆம், வியட்நாம் போரில் சிறைப்பட்டிருந்த பலர் விசுவாசிகள். அவர்கள் எதிர்கொண்ட மனிதாபிமானமற்ற சித்திரவாதங்களைக் குறித்த சில கதைகள் மட்டும்கூட, நான் சந்திக்கும் எனது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை சவால்களை மிகவும் சிறியதாகவும் அர்த்தமற்றதாகவும் உணர வைத்தது.

> எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள். எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆவியை அவித்துப்போடாதிருங்கள். (1 தெசலோனிக்கேயர் 5: 16-19)

நாம் உண்மையை ஒத்துக்கொள்ள வேண்டும்:

பரிசுத்த ஆவியை அவித்துப்போடுவது மிகவும் எளிதானது. ஞாயிற்றுக்கிழமைகள், பாரம்பரியமாக நாம் தேவாலயங்களில் கூடும் நாட்களாக இருக்கின்றன — நாம் பாட்டு பாடுகிறோம், தேவனுக்கு அவர் தந்த பரிசுத்த ஆவிக்காக நன்றி செலுத்துகிறோம், அவ்வப்போது பரிசுத்த ஆவியின் வழிகளையும், அற்புதங்களையும் பற்றிய செய்திகளையும் வேதவசனங்களையும் கேட்கிறோம்.

நாம் ஜெபிக்கிறோம், "ஆமேன்" என்கிறோம், ஏனெனில் உள்ளுக்குள் ஏதோ ஒரு உந்துதல், ஓர் ஆழமான கிளர்ச்சி, நம் ஆவிக்குரிய பயணத்தைப் பற்றி சிந்திக்க வைக்கும் உணர்வு எழுகிறது.

அராதனை முடிந்ததும், நாம் நண்பர்களுடன் சிரித்துக்கொண்டு கைகுலுக்குகிறோம், அற்புதமான செய்தி மற்றும் இசையைப்பற்றி பேசுகிறோம், "நாம் செய்கின்ற காரியங்களை கண்டுகொண்ட மாதிரியே பேசினாங்க!" என்று விளையாடி நகைச்சுவை செய்கிறோம். பின்னர் வீட்டிற்கோ உணவகத்திற்கோ போவதற்காக வெளியேறுகிறோம். ஆனால் சாலையில் தேவாலய மேடையை விட்டு வெளியேறிய அதே வேகத்தில், நாம் கேட்ட செய்திகளையும், வேதவசனங்களையும், பரிசுத்த ஆவியின் உந்துதல்களையும் அங்கேயே விட்டுவிட்டு சென்றுவிடுகிறோம். நம்மில் பலர், நம்முடைய வேலைகளில் பரிசுத்த ஆவியின் ஆற்றல் செயல்படுவதை அரிதாகவே காண்கிறோம் என்பதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது?

நமது ஆவிக்குரிய தலைவர்களின் போதனைகள், பதிவுகள் மற்றும் அறிவுரைகளை ஒரு நியமிக்கப்பட்ட ஞாயிற்றுக்கிழமை கட்டிடத்தின் இருக்கைகள் மற்றும் மண்டபங்களில் விட்டுச் செல்வது மிகவும் எளிதானது.

நாம் கடவுளின் ஆவியை மிக எளிதாக அவித்துவிட முடியும்.

பொதுவாக நாம் பரிசுத்த ஆவியை அவித்துப்போட கையாளுகின்ற மூன்று வழிகள் என்னவென்றால்: அவரை புறக்கணித்தல், அவரின் இயக்கத்தை அடக்குதல் மற்றும் அவரை துக்கப்படுத்துதல்

## *1. அவரை புறக்கணியுங்கள்*

*உங்களுக்கு கண்களிருந்தும் காணாதிருக்கிறீர்களா? காதுகளிருந்தும் கேளாதிருக்கிறீர்களா? நினைவுகூராமலுமிருக்கிறீர்களா?*

— மாற்கு 8: 18

புறக்கணிப்பு என்றால், ஒருவரை அல்லது ஒன்றை காணவில்லை போல் நடந்து, கவனம் செலுத்தாமலும், எதையும் செய்யாமலும் இருக்கிறதைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவியை அவித்துப்போடும் மிக எளிய வழிகளில் ஒன்று — அவரை புறக்கணிப்பது.

முன்பு நான் ஒரு வியாபார நிறுவனத்துடன் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது, அந்த நிறுவனத்தின் உரிமையாளர், என் "தி இம்பாக்ட்ர் " என்ற புத்தகத்தில் உள்ள தலைமைத்துவக் கொள்கைகளை நிறுவனம் முழுவதும் செயல்படுத்த ஒரு திட்டத்தை தயார் செய்யுமாறு ஒரு விற்பனையாளரிடம் உத்தரவு கொடுத்தார். அந்த திட்டம் உருவாக்கப்பட்டபோது, நான் அந்த புத்தகத்தின் ஆசிரியராகவும், ஒப்பந்தத்திற்குட்பட்டவராகவும், முழுமையாக அணுகக்கூடியவராய் இருந்தும், திட்டத்தின் இறுதியில் மட்டுமே கூட்டத்தில் அழைக்கப்பட்டேன்.

அந்த “புத்தகத்தின் ஆசிரியர்” (அதாவது நான்) அந்த அறையில் இருந்தார். அந்த ஆசிரியர் (அதாவது நான்) உதவ தயாராக இருந்தார் — ஆனால் புறக்கணிக்கப்பட்டார்.

நினைவில் வைத்துக்கொள்ளுங்கள், வேதாகமத்தின் ஆசிரியர் உங்களுக்குள் வாழ்கிறார். உங்கள் நிறுவனத்தில் அவரது சிறந்த ஞானத்தைக் கொண்டு எவ்வாறு சேர்ப்பது என்பதை உங்களுக்கு வழிகாட்டவும், வழிநடத்தவும் அவர் எப்போதும் தயாராகவும், அணுகக்கூடியவராகவும் இருக்கிறார்.

யோவான் 14:26 வசனத்தை நினைவில் வைத்துக்கொண்டு, பரிசுத்த ஆவியை இனிமேல் ஒருபோதும் புறக்கணிக்க வேண்டாமென உங்கள் மனதில் உறுதியெடுக்குங்கள்.

## *2. அவரின் இயக்கத்தை அடக்குங்கள்*

இயக்கத்தை அடக்குதல் என்றால், ஓர் பொருளை மூடிக்கொண்டு, அது வளராமல் அல்லது பரவாமல் தடுக்க முயற்சிப்பதை குறிக்கும். அதாவது, ஏதேனும் நடைபெறுவதை தடுக்க முயற்சிப்பது.

சில நேரங்களில், பதில் மிகவும் தெளிவாக தெரிகிறது. நாம் இந்த தீர்மானங்களை எடுக்க வேண்டும் என்பது வெகு தெளிவாகவே தோன்றுகிறது…

- அந்த உபகரணத்தில் முதலீடு செய்ய வேண்டும்
- அந்த வர்த்தக கண்காட்சியில் பங்கேற்க வேண்டும்
- அந்த புதிய விளம்பர திட்டத்தை துவக்க வேண்டும்
- அந்த ஊழியரை பணிநீக்கம் செய்யவேண்டும்
- அந்த சிக்கலை நாம் நேரடியாக கையாள வேண்டும்

வெளிப்படையாக தோன்றுவதால் வழிநடத்தப்படுவது எளிது. லூக்கா 10:40-ல், மார்த்தாள் ஒரு உணவுவை அவசரமாக சமைத்து கொண்டிருந்தபோது, இயேசுவின் போதனை நடந்து கொண்டிருந்த நிலையில், வீட்டிலிருந்த அனைவர் முன்னிலையிலும் மரியாதையில்லாமல் இடையூறு செய்தாள்.

மார்த்தாள், இயேசுவுக்கு இடையூறு உண்டாக்கி, தன் சகோதரியை இழிவுபடுத்தி, இயேசுவுக்கு அவர் என்ன செய்ய வேண்டும் என்பதை கட்டளையிட்டதினால் பரிசுத்த ஆவியை அடக்க முயன்றாள். மார்த்தாளுக்கு தெளிவாக தோன்றிய விடையம் எதுவென்றால், “இப்போது மக்களுக்கு உணவு தேவை” . அந்த சமயத்தில், மக்களுக்கு உணவு தேவை என்பதைவிட

முக்கியமானது என்பது இயேசுவினுடைய வார்த்தைகளை கேட்பது தான்.

மார்த்தாளும், அங்கே இருந்த அனைவரும் இந்த முக்கியமான பாடத்தை கற்றுக்கொண்டனர்: இயேசுவின் போதனைகளில் கவனம் செலுத்துவதே மிக முக்கியமானது; அவருடைய ஆவியானவர் நம்மூலமாக செயல்பட விரும்பும்போது அதற்கு தடையாக இருக்கக்கூடாது.

நம்முடைய வியாபாரத்தில் பரிசுத்த ஆவியைக எவ்வாறு அவித்துப்போடுகிறோம் என்றால்? ...

- எல்லா தரவுகளும் ஒரு முடிவை சொல்கின்றது, ஆனால் பரிசுத்த ஆவி வேறுஒன்றை சொல்லுகிறார்.
- எல்லா நிபுணர்களும் ஒரே கருத்தை சொன்னாலும், பரிசுத்த ஆவி வேரேயொரு கருத்தை கூறுகிறார்.
- உங்கள் எல்லா ஊழியர்களும் ஒன்றை சொல்கின்றனர், ஆனால் பரிசுத்த ஆவி மற்றோன்றை சொல்லுகிறார்.
- நீங்கள் ஆவியின் உறுதிப்பாடு கொண்ட மற்ற ஒருவரின் சாட்சியம் பெற மறுக்குறீர்கள்.
- நீங்கள் உள்ளிருந்து "உங்கள் சட்டையை அவருக்குக் கொடுங்கள்" என்று கேட்கிறீர்கள், ஆனால் அதை விரைவாக உங்கள் மனதில் இருந்து நீக்கிவிடுகிறீர்கள்.

இது மிக முக்கியம்: சாத்தான் விரும்பும் ஒரு முக்கிய விஷயம் உண்டு — நாம் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியை அவித்துப்போட செய்வது. ஆகவே, எப்போதும் விழிப்புடன் இருங்கள். அவர் பேசும்போது கேளுங்கள்.

## *3.அவரை துக்கப்படுத்துங்கள்*

> *அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.*
>
> — எபேசியர் 4:30

தவறு என்று தெரிந்திருந்தும், அதையே செய்துகொண்டிருக்கிறீர்களா?

பெரும்பாலான நேரங்களில் நீங்கள் சாப்பிட வேண்டியதை விட அதிகமாக சாப்பிடுகிறீர்களா? உங்கள் ஓய்வு நேரத்தில் உங்கள் மனைவி அல்லது குடும்பத்தினரை புறக்கணித்து, நீங்கள் விரும்புவதை மட்டும் செய்கிறீர்களா? உங்கள் குழந்தைகளிடம் இப்போது நீங்கள் மிகவும் சோர்வாக இருப்பதாக சொல்லி, நாளை மீண்டும் உங்களிடம் நினைவூட்டச்சொல்லி கேட்கிறீர்களா?

அல்லது, உங்கள் தொழிலில், எப்போதாவது உங்களை நீங்களே சமாதானப்படுத்திக் கொண்டீர்களா...

- பல ஆண்டுகளுக்கு முன்பே வேலையை விட்டு வெளியேற வேண்டிய பணியாளரை இன்னும் வைத்திருக்கிறீர்களா?
- குறுகிய கால பணப்புழக்கம் நல்லதாக இருக்க வேண்டும் என்பதற்காக உங்கள் விநியோகஸ்தர்களுக்கு சரியான நேரத்தில் பணம் செலுத்துவதை தாமதப்படுத்துகிறீர்களா?
- முக்கியமான ஒரு பணியாளர் தனது மனைவியை ஏமாற்றுவது அல்லது நிறுவனம் விதித்த நெறிமுறைகளை வெளிப்படையாக மீறுவது போன்றவை நடக்கும் போதும், அதைப் பார்க்காதவாறு

உங்கள் முகத்தை திருப்பிக்கொள்ளுகிறீர்களா?

- ஒரு நீண்ட கால வாடிக்கையாளர் உங்கள் ஊழியர்களை முரட்டுத்தனமாக அல்லது அவமரியாதையுடன் நடத்த அனுமதிக்கிறீர்களா?

துக்கப்படுத்துவது என்பதற்கான அர்த்தம்: ஒருவரை சோகமாகவோ வருத்தமாகவோ உணர செய்வது… அவருக்கு வேதனை ஏற்படுத்துவது. ஆம், நீங்கள் உங்கள் தொழிலின் மூலமாகவே பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தலாம். நீங்கள் அவமதிப்புகளின் மூலமாகவும் அவரை துக்கப்படுத்தலாம்.

> தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பானென்பதை யோசித்துப்பாருங்கள். (எபிரேயர் 10:29)

பரிசுத்த ஆவியாரை துக்கப்படுத்துவது எப்படி என்பது குறித்து நுட்பமாக உணர்வதற்கான எளிய வழிகளில் ஒன்று, மற்றவர்களின் செயல்களில் நான் நம்பமுடியாமல் தலைஅசைக்கும் தருணங்களை நான் உணர தொடங்கியபோதுதான்.

பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்க்கும் பயணத்தில் நான் விழிப்பாக இருக்கும்போது, நான் என்னிடம் கேட்டுக்கொள்கிறேன்: “இப்போது, அந்த சம்பவத்திற்கு ஏன் நான் தலையை அசைத்தேன்?”

அதிகமான சந்தர்ப்பங்களில், இது ஒரு இயல்பான எதிர்வினைதான்— சாலையில் ஒருவன் வாகனத்தில் முறையாக செல்லாமல் வழியை மறைக்கும் போது, இல்லாவிட்டால், ஒரு நபர் கடையில் தன்னைக் குறித்தே

யோசித்து முழு வழியையும் தடுக்கும்போது இது ஒரு நியாயமான எதிர்வினையாகும்.

வேலையில், இதுபோன்ற விஷயங்களைப் பார்த்து நீங்கள் தலையை ஆட்டுவதைக் காணலாம்...

- சிலர் கூட்டங்களில் என்ன சொல்கிறார்கள்
- ங்கள் சொந்தக்கூட்டங்களுக்கு தொடர்ந்து ாமதமாக வரும் தலைவர்கள்
- ஒரு நபர் அல்லது குழுவினருக்கு ஒதுக்கப்பட்ட பணியை முடிக்க விரும்பாதது
- சோம்பேறி வேலை
- கடைசியாக காபியை நிரம்பியவர், ஓய்வு அறையில் காலி காப்பி பாட்டிலை விட்டுவிட்டுச் சென்றிருப்பது

இந்தச் செயல்கள் என் மாம்சத்தை துக்கப்படுத்துகின்றனவா அல்லது எனக்குள் இருக்கும் ஆவியை துக்கப்படுத்துகின்றனவா என்று என்னை நானே கேட்டுக்கொள்கிறேன்.

பல சந்தர்ப்பங்களில், அது என் மாம்சம் மட்டுமே. உதாரணமாக, காலியான காபி பானையை எடுத்துக்கொள்ளுங்கள். என் இரட்சகர் இயேசு, பிறர் தன்னை உபசரிக்க வேண்டுமென்று அல்ல, மற்றவர்களை உபசரிக்கவே வந்தார் என்பதை நான் எனக்கு நினைவூட்டிக்கொள்ளுகிறேன். எனவே, நிலத்தை சுத்தம் செய்து, காபி பானையில் சுத்தமான தண்ணீரை ஊற்றி, அனைவருக்கும் சூடான காபியை காய்ச்சுவது மற்றவர்களுக்கு ஒரு ஆசீர்வாதமாகும்.

இது ஒரு எளிய ஆனால் மிகவும் பொதுவான உதாரணம், மாம்சத்தின் குறைபாடுகளை மாற்றி, எவ்வாறு மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது என்பதற்கு.

அது என் மாம்சத்தை துக்கப்படுத்தினால், முடிந்தால் அதை நான் சரிசெய்துவிட்டு, பின்னர் அதை மறந்துவிடுவேன்.

அது என் ஆவியைத் துக்கப்படுத்தினால், நான் ஏன் இப்படி உணர்கிறேன் என்பதற்கான முக்கிய காரணத்தை பெற நான் அதைப்பற்றி இன்னும் கொஞ்சம் சிந்திக்கிறேன். நான் பரிசுத்த ஆவியிடம் கேட்கிறேன்,

- "இதற்காக நீங்கள் ஏன் துக்கப்படுகிறீர்கள்?"
- "இதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?"
- "எதிர்காலத்தில் இது நடப்பதை நான் எவ்வாறு தடுக்க முடியும்?"
- "இதைப்பற்றி நான் என்ன கற்றுக்கொள்ள வேண்டும்?"
- "இதைப்பற்றி மற்றவர்களிடம் நான் என்ன சொல்ல வேண்டும் என்று நீங்கள் விரும்புகிறீர்கள்?"
- "இதைப்பற்றி நான் மனந்திரும்ப வேண்டுமா?"

உங்கள் வியாபாரத்தில் கடைசியாய் தேவையான ஒன்று என்னவெனில் — உங்களுக்குள்ளோ அல்லது உங்களை சுற்றியுள்ள ஒருவருக்குள்ளோ வருந்தும் பரிசுத்த ஆவி தான்.

துக்கப்படும் பரிசுத்த ஆவி என்பது நீங்கள் அல்லது உங்களை சுற்றியுள்ள வேறு யாராவது தவறான பாதையில் செல்லும்போது, உங்களுக்கு திருத்தம் தேவை என்பதற்கான நேரடி அறிகுறியாகும்.

## *ஆவியின் செயல் திட்டத்தை அவித்துப்போடாதே*

உங்கள் தற்போதைய வணிகப் பிரச்சினைகள், முன்னுரிமைகள் மற்றும் அழுத்தங்களைப்பற்றி

சிந்தித்து பாருங்கள். பரிசுத்த ஆவியை பொறுத்தவரை, நீங்கள் சமீபத்தில் எங்கே அவரை ...

**புறக்கணித்தீர்கள் –**

**இயக்கத்தை அடக்கினீர்கள் –**

**துக்கப்படுத்தினீர்கள் –**

இந்த சூழ்நிலைகளை நினைவில் வைத்து 10 நிமிடங்கள் ஜெபியுங்கள் பரிசுத்த ஆவியாரை இந்த விசயங்களைப் பற்றி உங்களோடு பேசும்படி கேளுங்கள். அவர் உங்களுக்குத் தரும் அறிவுறுத்தல்களை கீழே எழுதுங்கள். இந்த செயல் திட்டத்தை ஒரு பொறுப்புணர்வு கூட்டாளரிடம் (எ.கா., வாழ்க்கைத் துணை, சக ஊழியர், ஆன்மீக வழிகாட்டி, பயிற்சியாளர், முதலியன) கொடுங்கள். இந்த செயல்களில் உங்களுடன் ஒருங்கிணைந்த சாட்சியைத் தேடவும், உங்களுடன் ஜெபிக்கவும், அவற்றைச் செயல்படுத்துவதற்கு உங்களைப் பொறுப்பேற்கச் செய்யவும் உங்கள் பொறுப்புணர்வு கூட்டாளரிடம் கேளுங்கள்.

**செயல் 1:**

**செயல் 2:**

**செயல் 3:**

**செயல் 4:**

## 5.5. அசையாதிரு

*நகர்வு/அசைவு (வினைச்சொல்): ஏதோ ஒரு புள்ளி அல்லது இடத்திலிருந்து விலகி செல்ல; நிலை அல்லது தோரணையை மாற்ற.*

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்த்து விடுவதற்கான ஐந்தாவது திறவுகோல் – நீங்கள் அசையாமலிருப்பதே ஆகும்.

இது ஒரு கடினமான விஷயமாக இருக்கக்கூடும். ஏன் என்றால்…

- நீங்கள் பயிற்சி பெற்றிருக்கிறீர்கள்.
- இறுதி முடிவை எடுப்பதற்கு முன்பு உங்கள் ஆவியை சோதித்துப் பார்த்தீர்கள்.
- நீங்களே அல்லது மற்றவர்களுடன் சேர்ந்து உங்களுக்கு ஒரு வலுவான சாட்சி கிடைத்துள்ளது.
- ஆவியை அவித்துப்போடக்கூடாது என்று உங்கள் இதயத்தில் நீங்கள் தீர்மானித்திருக்கிறீர்கள்.

சாத்தான் முழு வீச்சில் தாக்குதல் நடத்தும் காலம் இது. சாத்தான் உங்களை சந்தேகங்கள், நிச்சயமற்ற தன்மை மற்றும் பதட்டத்தால் நிரப்ப தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வான். அவன் தன்னிடத்தில் உள்ள அனைத்து ஆயுதங்களையும் எடுத்து, உங்களை கொடூரமாகத் தாக்குவான்...

- எல்லா எண்களும் பொருந்தியதாக தெரியவில்லை.
- பெரும்பான்மையானவர்களின் கருத்து உங்களுக்கு எதிராக உள்ளது.
- நீங்கள் நுழையும் போது போட்டியாளர்கள் ஓடிவிடுகிறார்கள்.
- வெற்றி மிகவும் மோசமாகத் தெரிகிறது.
- பொது அறிவு இது ஒரு முட்டாள்தனமான நடவடிக்கை என்று கூறுகிறது.
- எல்லோரும், "அதைச் செய்யாதே!" என்று கூறுகிறார்கள்.

ஆனால் உங்களுக்குள் நியாயமற்ற அனுகூலம் வாழ்கிறது. இப்போது, இந்த முடிவு உங்கள் வணிகத்திற்கான கர்த்தருடைய சித்தம் என்பதை பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் உறுதிப்படுத்தியுள்ளார். இந்த முடிவு கர்த்தருடையது என்பதை நீங்கள் அறிவீர்கள். உங்கள் வணிகத்தில் (மற்றும் உங்கள் வாழ்க்கையிலும்) பரிசுத்த ஆவியின் வல்லமையை காண விரைவான, எளிதான மற்றும் மிகவும் பயனுள்ள வழி, இயேசு தண்ணீரை திராட்சரசமாக மாற்றுவதற்கு சற்று முன்பு மரியாள் ஊழியர்களுக்கு கொடுத்த வழிமுறைகளை பின்பற்றுவதாகும்:

> அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள். (யோவான் 2:5)

அவர் என்ன சொன்னாலும் அதைச் செய்யுங்கள்!

நீங்கள் அசைக்கப்படாமல் இருக்க உதவும் மூன்று சக்திவாய்ந்த வழிகள் இங்கே: கவனத்தைத் தவறவிடாமல் இரு, திரும்பப் பதிலளி, உறுதியாக நில்.

## *1. கவனத்தைத் தவறவிடாமல் இரு*

> *சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்.*
>
> — பிலிப்பியர் 3: 13-14

பல தொழிலதிபர்களுக்கு நான் "அணில் நோய்" என்று அழைக்கும் ஒன்று உண்டு. நீங்கள் ஒரு பொதுவான தொழில்முனைவோராக இருந்தால், உங்கள் மூளை எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும், சிந்திக்கும், கனவு காணும், ஆனால் வெற்றிக்கு தேவையான சிறிய விஷயங்களுக்கு அதிக கவனம் செலுத்தாதது. உங்களை பொறுத்தவரை, இது புதிய யோசனை, புதிய வாய்ப்பு, புதிய அணுகுமுறை, மிகப்பெரிய ஆற்றல் மற்றும் இப்போது உங்களுக்கு முன்னால் உள்ளவற்றில் சமீபத்திய மற்றும் மிகப்பெரியது குறித்தது.

உங்களை சுற்றி இருப்பது என்பது திறந்தவெளி பாப்கார்ன் போன்றது, யோசனைகள் மற்றும் கருத்துகளின் இடைவிடாத ஓட்டம் ஆகியவை நீங்கள் வேலை செய்யும் இடமெங்கும் வீணாக சிதறி, நீங்கள் போகும் இடங்களில் எல்லாம் குழப்பத்தை ஏற்படுத்துகின்றன.

ஆவியால் வழிநடத்தப்படும் ஒரு வியாபார ஆலோசகராக, நான் பல நேரங்களில் தலைவர்களுக்கு தங்கள் இலக்குகளை தெளிவுபடுத்த உதவுகிறேன். இது அவர்களின் பலங்களை அதிகபட்சமாக பயன்படுத்தவும், அவர்களின் பலவீனங்களை (அணில் நோய் போன்றவை) அர்த்தமற்றதாக்கவும் உதவுகிறது.

இயற்கையாகவே, இந்த அற்புதமான, ஆற்றல் மிக்க மற்றும் புத்திசாலித்தனமான ஆண்களும் பெண்களும் கர்த்தருடைய மகிமைக்காக வியாபாரத்தில் வெற்றிபெற வேண்டும் என்று தீவிரமாக விரும்புகிறார்கள். இருப்பினும், அவர்கள் இயல்பாகவே கவனம் செலுத்த தயாராக இல்லை, எனவே அவர்களை பொறுப்புணர்வுடனும் இலக்கில் நிலைத்திருக்க செய்வது ஒரு தொழில்முறை மற்றும் ஆவிக்குரிய சவாலாகும்.

இது அவர்களுக்கு ஒரு சவாலாக இருப்பதை நான் அறிவேன். அவர்களும் அதனை நன்றாக அறிவார்கள். முக்கியமாக, அவர்களின் எதிரியும் அதனை நன்றாக அறிவான்.

அதினால்தான், இந்த நேரத்தில் நீ அசையாமல் இருப்பது மிகவும் முக்கியமானது, ஏனெனில் இந்த முடிவை செய்ய வேண்டும் என்று தீர்மானித்ததற்கான காரணங்களை நீ அறிவாய் ...

- பரிசுத்த ஆவியால் உறுதிப்படுத்தப்பட்டு, இது ஆண்டவரிடமிருந்து வந்ததாகும்.
- இது பரிசுத்த ஆவி நீ செய்யவேண்டும் என்று விரும்பும் காரியம்.
- இது பரிசுத்த ஆவி நீ எப்படி செயல்பட வேண்டும் என்று விரும்பும் வழி.

சவால் பெரியதுதான், ஆனாலும் நீ கவனத்தில் நிலைத்திருக்க முடியும்.

> நோவா அப்படியே செய்தான்; தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் அவன் செய்து முடித்தான். (ஆதியாகமம் 6:22)

வேதாகமத்தில் முதன்முதலில் குறிப்பிடப்பட்டபோது நோவாவுக்கு 500 வயது (ஆதி. 5:32) என்றும், அவர் பேழைக்குள் நுழைந்தபோது அவருக்கு 600 வயது (ஆதி. 7:6) என்றும் நமக்குத் தெரியும். எனவே இந்த மிதக்கும்

நகரத்தை கட்டுவதற்கு அவரது குடும்பத்தினர் சுமார் 100 ஆண்டுகள் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் எடுத்திருக்கலாம்.

கற்பனை செய்து பாருங்கள்...

- 100 ஆண்டுகளுக்கு அதிகமாக, ஆண்டவரின் பணிக்காக உழைத்தபோது சமூகம் உங்களை தினமும் அவமதித்து, பரியாசம் செய்தது.
- மனச்சோர்வு, உடலளவிலான களைப்பு, மற்றும் ஆவிக்குரிய தாக்குதல்கள் உங்கள் உடல், மனம் மற்றும் ஆத்துமாவிற்கு எதிராக பல இரவுகள், வாரங்கள், மாதங்கள், மற்றும் பல ஆண்டுகள் கூட இருக்கலாம்.
- ஏராளமான நம்பிக்கையில்லாதவர்கள், உங்கள் பணி மற்றும் கடமையிலிருந்து உங்கள் கவனத்தைத் திருப்ப முயற்சித்தனர்.
- 100 ஆண்டுகளுக்கும் மேலாக ஒரே ஒரு இலக்கத்தில் மட்டும் கவனம் செலுத்திக்கொண்டு வாழ்ந்த நிலைத்தன்மை.

நோவாவைப் போலவே, ஒருமுறை நீ தீர்மானித்துவிட்டால், கவனத்தை தவற விடாமல் நிலைத்திருக்க வேண்டும். ஆம், இது செய்யக்கூடியது — உன்னால் அதைச் செய்ய முடியும்.

## *2. திரும்பப் பேசு*

*தேவனுடைய வார்த்தையானது ஜீவனும் வல்லமையும் உள்ளதாயும், இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும் ஆவியையும், கணுக்களையும் ஊனையும்*

*பிரிக்கத்தக்கதாக உருவக் குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும் யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது.*

— எபிரெயர் 4:12

ஆவியானவர் உன்னை வெற்றி பெற ஊக்குவிக்கிறார். பிசாசோ, நீ தோல்வியடைய விரும்புகிறான்.

பிசாசின் தீக்கனல் அம்புகளை அணைக்கும் சிறந்த வழிகளில் ஒன்று — அவனுக்கு எதிராக பேசுவது! கைல் விங்க்லர் தனது சைலன்ஸ் சாத்தான் என்ற புத்தகத்தில் இப்படிப் எழுதுகிறார்:

"கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஒருவரின் வாயிலாக தேவனுடைய வார்த்தை பேசப்படும் போது, அது தேவன்தாமே அதை பேசியதைப்போன்ற அதே வல்லமையை கொண்டுள்ளது என்று நான் நம்புகிறேன்.. அந்த வார்த்தைகள் தேவனுடைய அதிகாரம் நிறைந்ததாக இருக்க வேண்டும்; இல்லையெனில் அவை எதையும் செய்ய இயலாது. ஏனெனில், இவை நம்முடைய வார்த்தைகள் அல்ல — அது தேவனுடைய வார்த்தைகள்."

விங்க்லர் கூறுவதாவது, பிசாசுக்கு நேரடியாக தேவனுடைய வார்த்தையை பேசுவதில் மூன்று முக்கியமான பலன்கள் உள்ளன. முதல், வேதாகம வசனங்களை பேசுவது மனதையும் சிந்தனையையும் புதுப்பிக்கிறது. பேசப்படும் வார்த்தைகளில் வல்லமை இருக்கிறது, மேலும், "பிரபஞ்சத்திற்கு உயிர் கொடுத்த அதே வல்லமை உங்களுக்குப் புதிய ஜீவனை கொடுக்கும்" என்று அவர் குறிப்பிடுகிறார்.

இரண்டாவது, இது பிசாசை ஓடச்செய்கிறது. விங்க்லர் எழுதுகிறார்: "பொய்களின் பிதாவான பிசாசுக்கு, நம்முடைய பிதாவாகிய தேவனுடைய சத்தியம் இருக்கும்போது எந்த அதிகாரமும் இல்லை."

மூன்றாவது, வேதாகம வசனங்களைப் பேசுவது சாத்தானின் வாயை அடைக்கிறது. இது அவனை

நோக்கி கூச்சலிடுகிறது: “பிசாசே பின்வாங்கு! நான் தேவனுடைய சத்தியத்துடன் ஆயுதம் ஏந்தியிருக்கிறேன்.”

*3. உறுதியாக நில்*

> *இப்பொழுதும் நான் ஆவியிலே கட்டுண்டவனாய் எருசலேமுக்குப் போகிறேன்; அங்கே எனக்கு நேரிடுங்காரியங்களை நான் அறியேன். கட்டுகளும் உபத்திரவங்களும் எனக்கு வைத்திருக்கிறதென்று பரிசுத்த ஆவியானவர் பட்டணந்தோறும் தெரிவிக்கிறதைமாத்திரம் அறிந்திருக்கிறேன். ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன். இதோ, நான் உங்களுக்குள்ளே சஞ்சரித்து, தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கம்பண்ணினதைக் கேட்டவர்களாகிய நீங்களெல்லாரும் இனி என் முகத்தைப் பார்க்கமாட்டீர்களென்று அறிந்திருக்கிறேன்.*
>
> — அப்போஸ்தலர் 20: 22-25

எதிர்காலம் இருண்டதாக தோன்றியது. பவுல் எருசலேமுக்கு திரும்பிக் கொண்டிருந்தார் — அங்கு அவருக்கு கைது, அவருடைய கடைசி ரோமாப் பயணம், மற்றும் இறுதியாக அவரது மரணம் நிகழ்ந்தது. பவுலின்

பல சகோதரர் மற்றும் உதவியாளர்கள், எருசலேமுக்கு போகவேண்டாம் என்று எச்சரித்தனர். தீர்க்கதரிசி அகபு பவுலின் பட்டையை கட்டிக்கொண்டு தீர்க்கதரிசனம் உரைத்தார்:

> அவன் எங்களிடத்தில் வந்து, பவுலினுடைய கச்சையை எடுத்துத் தன் கைகளயும் கால்களையும் கட்டிக்கொாΣ்டு இந்தக் கச்சையையுடையவனை எருசலேமிலுள்ள யூதர் இவ்விதமாய்க் கட்டிப் புறஜாதியார் கைகளில் ஒப்புக்கொடுப்பார்கள் என்று பரிசுத்த ஆவியானவர் சொல்லுகிறார் என்றான். (அப்போஸ்தலர் 21: 11)

ஆனால் பவுல் ஒன்றும் அச்சப்படவில்லை. அவர் என்ன செய்ய வேண்டும், ஆண்டவர் அவரை எதற்காக அழைத்திருக்கிறார் என்பதெல்லாம் அவருக்கு தெளிவாக தெரிந்தது. யாரும் என்ன சொன்னாலும், என்ன செய்தாலும், அந்த பயணத்திலிருந்து அவரை ஒருவரும் தடுக்க முடியவில்லை.

அவர் மரணத்தைச் சந்திக்கும்போதும் உறுதியாக நின்றார்.

நீங்கள் தொழிலில் இயேசுவுக்காக வெளிப்படையாக நின்றால், அது மரணத்திற்கு ஏதுவான துன்புறுத்தலையும், கொண்டுவரும். ஆனாலும் ஆண்டவர் அதை செய்யத்தான் உங்களை அழைத்துள்ளார். கேள்வி கேட்காமல் செய்வது உங்களுடைய பங்கு.

இதுதான் சரியான நேரம்: உறுதியாக நில், அவருடைய சமாதானத்தில் ஓய்வெடு (பிலிப்பியர் 4:6–7), உன்னை தேவனுடைய சேனைகள் பாதுகாப்பதை அறிந்துகொள் (எபிரேயர் 1:14), அவருடைய வார்த்தை உங்கள் இதயத்திலும் வாயிலும் இருக்கிறது (1 கொரிந்தியர் 2:4–5), வெற்றி இறுதியில் ஆண்டவருக்கே சேர்ந்தது (1 யோவான் 5:4).

முடிவு என்னவென்றால் ...

- சிறியது—உறுதியாக நில்!
- பெரியது—உறுதியாக நில்!
- உலகத்தின் பார்வையில் ஆபத்தானது—உறுதியாக நில்!
- உங்கள் தனிப்பட்ட சாட்சியின் மீது முழுமையாக—உறுதியாக நில்!

பவுலைப் போலவே.

## *மற்றோரு விடையம்*

நான் முன்பு, பிரிவு 4.5, "ஆயுதவர்கத்தை அணிந்துகொள்ளுங்கள்"-ல் குறிப்பிட்டது போல, நீங்கள் எவ்வளவு சீக்கிரமாக ஆண்டவரின் முழு ஆயுதத்தையும் அணிகிறீர்களோ, அவ்வளவு வேகமாக நீங்கள் பிசாசின் கடைசி தாக்குதல்களுக்கு தயாராக இருக்க முடியும்.

இன்னும் ஒரு விடையத்தை எப்போதும் நினைவில் கொள்ளுமாறு நான் உங்களை அறிவுறுத்துகிறேன்: கடவுளின் முழு கவசத்தையும் அணிந்திருக்கும்போது உறுதியாக நிற்கவும் (எபே. 6:10–20). எதிரி நம் மீது வீசும் சூழ்ச்சிகளை தடுத்து அழிக்க நாம் தயாராக இருக்க வேண்டும் என்பதற்காக பவுல் இந்த வசனங்களில் மூன்று முறை "நில்/நிற்க " என்று குறிப்பிடுகிறார்.

நீங்கள் முழு கவசத்தையும் அணிந்து உறுதியாக நிற்கும்போது, நீங்கள் அசைக்கப்பட மாட்டீர்கள்!

## *"அசையாதிரு" செயல் திட்டம்*

இப்போது நேரம் எடுத்துக்கொண்டு இந்த செயல் திட்டத்தை நிரப்பி முடிக்கவும். இதை எப்போதும் அருகில் வைத்துக்கொள்ளவும்.

**1. கவனத்தை தவறவிடாமல் இரு** – உங்களின் மிக முக்கியமான வியாபார இலக்குகளை அடைவதில் எளிதாக கவனத்தை சிதறடிக்கும் 3 முதல் 5 விஷயங்களை பட்டியலிடுங்கள்.

திசைதிருப்பம் #1:

திசைதிருப்பம் #2:

திசைதிருப்பம் #3:

திசைதிருப்பம் #4:

திசைதிருப்பம் #5:

**2. திரும்பப் பேசு** - இப்போது நீங்கள் மனப்பாடம் செய்ய வேண்டிய 3–5 வேத வசனங்களை எழுதி, கவனம் செலுத்த உதவும் வகையில் மீண்டும் பேசுங்கள். உதாரணமாக, எனது திரும்பப் பேசு வசனங்களில் ஒன்று 1 கொரிந்தியர் 2:16b, இது "ஆனால் எனக்கு கிறிஸ்துவின் சிந்தை இருக்கிறது" என்று கூறுகிறது.

வசனம் #1:

வசனம் #2:

வசனம் #3:

வசனம் #4:

வசனம் #5:

**3. உறுதியாக நில்** – உங்களுக்கே உரியவையாக, நீங்கள் உரிமையாக கூறிக்கொள்ளும் 3–5 “உறுதியாக நில்” கூற்றுகளை உங்கள் சொந்த வார்த்தைகளில் உருவாக்குங்கள். அவற்றை தேவையான நேரத்தில் கூறிக்கொள்ளுங்கள். உதாரணமாக, எனது உறுதியான கூற்றுகளில் ஒன்று பவுல் கூச்சலிட்டது போன்றது: "நான் அசைக்கப்பட மாட்டேன்!" மற்றொன்று "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.!"

கூற்று #1:

கூற்று #2:

கூற்று #3:

கூற்று #4:

கூற்று #5:

**4.மற்றோரு விடையம்**

*ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்; சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும், பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங்களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவையும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்.*

— எபேசியர் 6: 13-17

தேவனின் ஆறு சர்வாயுதவர்க்கங்களையும் கீழே எழுதுங்கள். நீங்கள் வேலைக்குச் செல்லும்போது, இவற்றை சத்தமாக பேச வேண்டும் என்று உங்கள் இதயத்தில் நோக்கம் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் முழுமையாக கவசத்தை உடையவராகவும், வரவிருக்கும் வணிகப் போர்களுக்குத் தயாராகவும் இருக்க வேண்டும். நீங்கள் அவ்வாறு செய்யும்போது, உங்கள் வணிகத்தில் எதிரிக்கு எந்த இடமோ அதிகாரமோ இல்லை என்று எச்சரிக்கிறீர்கள்.

நமது நியாயமற்ற அனுகூலம்

*முழு கவசம்*

1.

2.

3.
4.

5.

6.

# 5.6. தைரியமான ஜெபங்களை செய்

> *தைரியமான (பெயரடை): ஆபத்து அல்லது கடினமான சூழ்நிலைகளுக்கு அஞ்சாதவன்; சில நேரங்களில் முரட்டுத்தனமாகவோ அல்லது மூடத்தனமாகவோ தோன்றும் அளவுக்கு மிகுந்த தன்னம்பிக்கையுடன் இருப்பவன்; அச்சமற்ற, துணிச்சலான ஆவியைக் காட்டுகிறவன் அல்லது அத்தகைய ஆவியைத் கோருகிறவன்.*

உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் வல்லமையை கட்டவிழ்க்கும் ஆறாவது முக்கியக் திறவுகோல் — தைரியமான ஜெபங்களை செய்வது.

யோசுவா, தேவன் போரிட சொன்ன ஒவ்வொரு படையையும் வெற்றி பெற்றுக் கொண்டே வந்தார். ஒரு சமயம், தேவன் அவரை ஒரு முழு இரவும் நடந்துசென்று, ஐந்து ராஜாக்கள் கூட்டிணைந்த படையை எதிர்த்து போராட தயாராக சொல்லினார். ஆனால், அந்த நாளின்

இறுதியிலும் போர் முடிவடையவில்லை. ஆகவே, அந்தப் போரில் முழுமையான வெற்றியைப் பெறவேண்டுமென ஆவலுடன் இருந்த யோசுவா, ஜெபித்தார்.

> கர்த்தர் எமோரியரை இஸ்ரவேல் புத்திரருக்கு முன்பாக ஒப்புக்கொடுக்கிற அந்நாளிலே, யோசுவா கர்த்தரை நோக்கிப் பேசி, பின்பு இஸ்ரவேலின் கண்களுக்கு முன்பாக: சூரியனே, நீ கிபியோன்மேலும், சந்திரனே, நீ ஆயலோன் பள்ளத்தாக்கிலும், தரித்துநில்லுங்கள் என்றான். அப்பொழுது ஜனங்கள் தங்கள் சத்துருக்களுக்கு நீதியைச் சரிக்கட்டுமட்டும் சூரியன் தரித்தது, சந்திரனும் நின்றது; இது யாசேரின் புஸ்தகத்தில் எழுதியிருக்கவில்லையா; அப்படியே சூரியன் அஸ்தமிக்கத் தீவிரிக்காமல், ஏறக்குறைய ஒருபகல்முழுதும் நடுவானத்தில் நின்றது. (யோசுவா 10: 12-13)

யோசுவாவின் படை, தைரியமான வல்லமை வாய்ந்த ஜெபத்திற்கு தேவன் அளித்த பதிலின் மூலம், தங்கள் சத்துருக்களை வெற்றி கொண்டது.

பல ஆண்டுகளாக, என் மனைவி, மகன், குடும்பம், நண்பர்கள், போதகர், மற்றும் சபைக்காக தைரியமான ஜெபங்களை செய்வது எனக்கு எளிதாக இருந்தது. ஆனால், என் வியாபாரத்திற்காக அப்படி செய்வது சற்றே அசௌகிரியமாக இருந்தது.

என் வியாபாரத்திற்காக நான் எப்போதும் ஜெபித்தேன். அதாவது, அதிகமான ஒப்பந்தங்கள், அதிகமாக பணம் செலுத்தும் வாடிக்கையாளர்கள், வழிதவறிய ஊழியர் திரும்புதல், அல்லது என்மீது மற்றும் என் நிறுவனத்தின் மீது சுமத்தப்பட்ட பொருளற்ற வழக்கை ஆண்டவர் நீக்கிவிடுதல் போன்றவற்றிற்காக ஜெபிப்பது எளிதுதான். மேலும், நாமே ஆரம்பத்திலிருந்தே பரிசுத்த ஆவியால்

வழிநடத்தப்படாமல் இருந்ததால் ஏற்பட்ட பெரிய பிரச்சினையிலிருந்து தப்பிக்க, ஜெபிக்காதவர் யார்?

எங்கள் வியாபாரங்களுக்காக எளிய, அடிப்படை ஜெபங்களை செய்வதின் முக்கியத்துவத்தை நான் குறைத்து மதிப்பிடவில்லை. ஆண்டவர், தமது எல்லா பிள்ளைகளின் ஜெபங்களையும் கேட்கிறார்.

ஆனால், நான் உங்களை ஊக்குவிப்பது — உங்கள் ஜெபங்களை இன்னும் உயர்ந்த நிலைக்கு மாற்றுங்கள், அது உங்கள் வியாபாரத்தில் தேவனுடைய இயற்கைக்கு அப்பாற்பட்ட, அதிசயமான கிருபையை வெளிப்படுத்தத் தொடங்கும் நிலை ஆகும்!

> இப்பொழுதும், கர்த்தாவே அவர்கள் பயமுறுத்தல்களை தேவரீர் கவனித்து, உம்முடைய பரிசுத்த பிள்ளையாகிய இயேசுவின் நாமத்தினாலே அடையாளங்களும் அற்புதங்களும் நடக்கும்படி செய்து, பிணியாளிகளைக் குணமாக்கும்படி உம்முடைய கரத்தை நீட்டி, உம்முடைய ஊழியக்காரர் உம்முடைய வசனத்தை முழுதைரியத்தோடும் சொல்லும்படி அவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்தருளும் என்றார்கள். அவர்கள் ஜெபம்பண்ணினபோது அவர்கள் கூடியிருந்த இடம் அசைந்தது. அவர்களெல்லாரும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டு, தேவவசனத்தைத் தைரிமாய்ச் சொன்னார்கள்.(அப்போஸ்தலர் 4: 29-31)

இது புதிய திருச்சபையின் அப்போஸ்தலர்கள் பதிவு செய்த முதல் ஜெபமாகும் — பெந்தெகொஸ்தே தினத்திற்கு பிறகு சில நாட்களிலேயே, மத தலைவர்கள் “நிறுத்தி விடுங்கள்” என்று மிரட்டிய உடனே செய்த ஜெபம் இது!

கடுமையான சோதனைகள், அடிகள் மற்றும் மரணத்தை கூட எதிர்கொண்ட முதல்

அப்போஸ்தலர்கள், இந்த சூழ்நிலையிலிருந்து வெளியேற எங்களுக்கு உதவும் வகையில், பாதுகாப்பான, அடக்கமான, நியாயமான பிரார்த்தனைகளை எளிதாக செய்து, பின்னர் அமைதியாக தங்கள் வேலையை செய்திருக்கலாம். நிச்சயமாக, யாரையும் புண்படுத்தவோ, சினமூட்டவோ, குழப்பமுண்டாக்கவோ அவர்கள் விரும்பவில்லை.

அவர்கள் பாதுகாப்பான, எளிதான பாதையை தேர்ந்தெடுக்க வாய்ப்பு இருந்தது. ஆனால் அவர்கள் வேறு வழியை தேர்ந்தெடுத்தனர் — அவர்கள் தங்களின் ஜெபங்களை மேலும் உயர்ந்த, பரிசுத்த ஆவியால் நிரம்பிய நிலைக்கு தங்களை உயர்த்திக் கொண்டனர்.

அவர்கள் தைரியமாக சிங்காசனத்தின் முன் சென்று இன்னும் அதிகமாக கேட்கத் தீர்மானித்தனர்! அதிக வல்லமை. அதிக அடையாளங்களும் அதிசயங்களும். அதிக தைரியம்!

அவர்களின் வீடு அதிர்ந்தது. அவர்களின் தன்னம்பிக்கை உயர்ந்தது. அவர்களின் விசுவாசம் அதிகரித்தது.

இன்றும் கூட, இந்த தைரியமான ஜெபத்தின் விளைவுகளை நாம் தொடர்ந்து காண்கிறோம் — உலகம் முழுவதும் சபையின் இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிசய வளர்ச்சி மற்றும் நித்திய தாக்கம்!

சமீபத்தில், நான் பாதுகாப்பான, சாதாரண, எதிர்பார்க்கப்பட்ட ஜெபங்களைக் கடந்து, என் வியாபாரத்திற்காக ஆழமான, ஆற்றல்மிக்க, தைரியமான ஜெபங்களின் உயர்ந் நிலைக்கு மாற தொடங்கினேன். இதில் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது.

அப்படியானால், இந்த மாற்றம் எப்படி இருக்கும்? இங்கே மூன்று உதாரணங்கள் உள்ளன.

> **பாதுகாப்பான ஜெபம்:** “கர்த்தாவே, இந்த மாதம் ஊழியர்களின் சம்பளம் கொடுக்க எனக்கு உதவி செய்யும்.”

**தைரியமான ஜெபம்:** “கர்த்தாவே, நீர் அறிந்தபடி, இந்த மாத ஊழியர்களின் சம்பளத்தை சந்திக்கவும், இந்த வியாபாரத்தில் புதிய வளர்ச்சிக்காக மீண்டும் விதைக்கவும் எனக்கு தேவையான $100,000 தொகையை கொண்டு வர, உமது ஊழிய தூதர்களை விடுவிக்கும்படி இயேசுவின் நாமத்தில் வேண்டுகிறேன்!”

**பாதுகாப்பான ஜெபம்:** “கர்த்தாவே, இந்த ஆண்டு எங்கள் விற்பனையை 20% உயர்த்த என்ன செய்வது என்பதை எங்களுக்கு காட்டும்.”

**தைரியமான ஜெபம்:** “கர்த்தாவே, எங்கள் வியாபாரத்தில் இரட்டிப்பு (அல்லது ஐந்து மடங்கு, பத்து மடங்கு) வளர்ச்சியுடன் எனக்கு நிச்சயமாக ஆசீர்வாதம் அளிக்கும்படி இயேசுவின் நாமத்தில் வேண்டுகிறேன்!”

**பாதுகாப்பான ஜெபம்:** “கர்த்தாவே, என் ஊழியர் டோனியின் திருமணத்தை சரி செய்ய உதவி செய்யும்.”

**தைரியமான ஜெபம்:** “கர்த்தாவே, டோனியும் அவரது மனைவியும் இருவரின் இருதயங்களிலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் நுழைந்து, அவர்களின் திருமணத்தை வல்லமையுடன் மற்றும் நிரந்தரமாக சுகப்படுத்தியதற்கு உமக்கு நன்றி செலுத்துகிறேன், இயேசுவின் நாமத்தில்!”

இப்போது, திரும்பிச்சென்று தைரியமான ஜெபங்களை மட்டும் வாசியுங்கள், பின்னர் உங்களிடம் கேளுங்கள்—

- உங்கள் தொழிலுக்காக, நீங்கள் எந்த ஜெபங்களை ஜெபிக்க விரும்புகிறீர்கள்?

- உங்கள் தொழிலுக்காக, உங்கள் ஊழியர்கள் எந்த ஜெபங்களை ஜெபிக்க வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?
- எந்த ஜெபங்களுக்கு தேவன் அதிகமாக பதிலளிக்க விரும்புவார் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்?

தைரியமாக ஜெபிப்பதற்காக நீங்கள் செய்ய வேண்டிய மூன்று விஷயங்கள் இதோ: கேள், எதிர்பார், நம்பு.

### *1: கேள்*

> *யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசிர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.*
>
> — 1 நாளாகமம் 4:10

ஆசீர்வாதம். எல்லை. வல்லமை. பாதுகாப்பு.

இவையே நீதிமான் யாபேஸ் தேவனிடம் கேட்ட நான்கு விஷயங்கள்.

பலருக்கு, இந்த ஜெபம் சுயநலமாக தோன்றலாம். ஆனால் 2% மக்களுக்கு (ஆவியால் நடத்தப்படும் தொழிலதிபர்கள்), இது தைரியமான தொழில் ஜெபங்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

தன் மிகுந்த விற்பனையடைந்த "தி பிரேயர் ஆப் ஜெபஸ்" என்ற புத்தகத்தில், ப்ரூஸ் வில்கின்சன் இப்படிச் சொல்கிறார்:

> “நீங்கள் உங்கள் தொழிலை தேவனுடைய வழியில் நடத்துகிறீர்கள் என்றால், அதிகமாக கேட்பது சரியானது மட்டும் அல்ல — அதை நீங்கள் கேட்கவேண்டும் என்று தேவன் காத்திருக்கிறார். உங்கள் தொழில் என்பது தேவன் உங்களுக்குப் பொறுப்பாக ஒப்படைத்துள்ள எல்லை (சூழல்/பரப்பளவு). தனிப்பட்ட வாழ்க்கையையும், வணிக சமூகத்தையும், பரந்த உலகத்தையும் அவரது மகிமைக்காக தொடுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க வாய்ப்பாக நீங்கள் அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று அவர் விரும்புகிறார். அந்த வாய்ப்பைப் பெரிதாக்கும்படி அவரிடம் கேட்பது அவருக்கு மகிழ்ச்சியை மட்டுமே தருகிறது."

நினைத்துப் பாருங்கள் — நீங்கள் அவரிடம் அதிகமாகக் கேட்க, தேவன் காத்திருக்கிறார்!

உங்கள் குழந்தை பூங்காவிற்கு அழைத்துச்செல்ல, கால்பந்தை உதைக்க, சைக்கிள் ஓட்ட, மோட்டார் சைக்கிள் அல்லது காரை ஓட்ட, அல்லது அந்த அழகான காதலியிடம் திருமண முன்மொழிவை எப்படி சொல்வது என்று கற்றுக்கொடுக்க கேட்க நீங்கள் எப்போதாவது காத்திருந்திருக்கிறீர்களா??

பல நேரங்களில், நம் உள்ளார்ந்த பதில், “ஆஹா… இறுதியாக கேட்டுட்டான்/கேட்டுட்டாள்!” என்பதாக இருக்கும். அவர்கள் கேட்டதை அவர்களுக்கு அளிக்க வேண்டும் என்ற ஆசை உங்களுக்கு எப்போதும் இருக்கும். ஆனால் அவர்கள் கேட்கும் வரை காத்திருக்க வேண்டும் என்பது தான் சிறந்தது என்று நீங்கள் அறிந்திருந்தீர்கள்.

தேவனும் அதையேதான் செய்கிறார். டாக்டர் வில்கின்சன் சொல்வதுபோல், “உங்கள் தொழில் என்பது தேவன் உங்களுக்கு ஒப்படைத்த எல்லை.” ஆகையால், உங்கள் முயற்சிகளை அவர் பெரிய அளவில்

ஆசீர்வதிக்க தயாராகவும், விருப்பம் உள்ளவராகவும் இருப்பது நியாயமே.

தேவன், நீங்கள் கேட்பதற்காகவும் — பெரியதாக கேட்பதற்காகவும் — காத்திருக்கிறார். தைரியமாக இருங்கள்!

## *2: எதிர்பார்*

> *அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.*
>
> 1 நாளாகமம் 4:10b

உங்களுக்கு புரிகிறதா? யாபேஸின் வேண்டுகோளுக்குக் கடவுள் எப்படி பதிலளித்தார்? இந்த வசனத்தை நான் பல வருடங்களாக தவிர்த்து வந்திருக்கிறேன். இப்போது என் மீதும் என் வணிகத்தின் மீதும் வளர்ச்சிக்கான நீதியான, தைரியமான ஜெபங்களுக்கு கடவுள் இப்படித்தான் பதிலளிக்கிறார் என்பதை நான் அடிக்கடி எனக்கு நினைவூட்டுகிறேன்.

2% ஆட்களாகிய நாம், யாபேஸின் மிகுந்த தைரியத்திலேயே கவனம் செலுத்துகிறோம் — மேலும் தொழிலுக்காகவும், பெரிதான எல்லைக்காகவும், வலிமையான வேலிக்காகவும், சத்துருவின் சாத்தியமான தாக்குதல்களிலிருந்து விடுதலைக்காகவும் நேராக தேவனிடம் கேட்கிறோம். ஆனால் தேவனின் பதிலின் முக்கியத்துவத்தை தவறவிடுகிறோம்.

தேவன், யாபேஸ் கேட்டதை நிறைவேற்றினார்! என்னுடைய வார்த்தைகளில் சொல்லவேண்டுமானால், தேவன் இப்படிப் பதிலளித்தார்: “மிகச் சரி… இதோ உன் வளர்ச்சி. நீ இறுதியாக என்னிடம் கேட்டதற்கு நான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்!”

இயேசுவும் யாக்கோபும் நமக்கு ஒரே விஷயத்தைக் கற்பித்தார்கள்:

> கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிற எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான்; தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். (மத்தேயு 7:7-8)

> நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. (யாக்கோபு 4:2)

எதிர்கால புத்தகங்கள் மற்றும் வீடியோ போதனைகளில் இதைப் பற்றி மேலும் கற்பிப்பேன். இப்போதைக்கு, யாபேஸ் ஒரு மரியாதைக்குரிய, நீதிமான் என்று விவரிக்கப்படுகிறார் என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். அதுதான் அவரை இயற்கைக்கு அப்பாற்பட்ட அதிகரிப்புக்கும் தேவனின் தயவுக்கும் தகுதிப்படுத்தியது.

2% நபராக, நீங்கள் கிறிஸ்துவின் நீதியைப் பெற்றிருக்கிறீர்கள் (1 கொரி. 1:30). கர்த்தரின் பார்வையில், நீங்கள் யாபேஸைப் போலவே நீதிமான்கள். எனவே, உங்கள் தைரியமான ஜெபங்களுக்கு பதிலளிக்கும் விதமாக உங்கள் வணிகத்திற்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட விளைவுகளை எதிர்பார்க்கலாம்.

கேட்பது மட்டும் போதாது. நீங்கள் எதிர்பார்க்க வேண்டும்!

*3: நம்பு*

> *கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். உன் வழியைக் கர்த்தருக்கு*

> *ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார்.*
>
> — சங்கீதம் 37:4-5

நீங்கள் கேட்கும் அளவுக்கு தைரியமாக இருக்க வேண்டும்.

நீங்கள் கேட்பதை எதிர்பார்க்கும் அளவுக்கு தைரியமாக இருக்க வேண்டும்.

இறுதியாக, உங்கள் ஜெபங்கள் பதிலளிக்கப்படுவதற்கு தகுதியானவை என்று நம்பும் அளவுக்கு தைரியமாகவும் இருக்க வேண்டும்.

இயேசுவுக்காக நமது சந்தையை மாற்றுவதற்கான நேரம் இது என்று அனைத்து 2% பேரும் - நாம் ஒவ்வொருவரும் - நம்ப வேண்டிய நேரம் இது.

நமது எல்லைகளை அதிகரிக்க வேண்டிய நேரம் இது!

இயற்கைக்கு அப்பாற்பட்ட வளர்ச்சியை காண வேண்டிய நேரம் இது!

நமது ஜெபங்களை மிக உயர்ந்த அளவிலான தைரியமாக மாற்ற வேண்டிய நேரம் இது!

> இயேசு, அவர்களைப் பார்த்து: மனுஷரால் இது கூடாததுதான்; தேவனாலே எல்லாம் கூடும் என்றார். (மத்தேயு 19:26)

இது நேரம்.

## *ஒரு முன்னெச்சரிக்கை*

> *என்னுடைய ஜெபங்களுக்கு ஒருபோதும் பதில் கிடைக்காத ஒரே நேரம் கோல்ஃப் மைதானத்தில்தான்.*
>
> — பில்லி கிரஹாம்

நான் விளையாடுவதை மிகவும் ரசிக்கிறேன். சுவிசேஷகர் பில்லி கிரஹாமும் அவ்வாறே செய்தார். எனவே வேடிக்கைக்காக, உலகெங்கிலும் உள்ள என் சக கோல்ஃப் வீரர்களுக்கு இந்த தைரியமான கோல்ஃப் ஜெபத்துடன் உதவுகிறேன்:

ஆண்டவரே, எனது அனைத்து 'ட்ரைவ்களும் பந்துப் பாதையில் விழட்டும், எனது முதல் புட்டுகள் அனைத்தும் கோப்பையில் விழட்டும், மேலும் எனது தவறான ஷாட்டுகள் அனைத்தும் இயேசுவைப் போலவே இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் தண்ணீரில் நடக்கட்டும்! ஆமென்!

## *தைரியமான ஜெபங்களுக்கான செயல்திட்டம்*

உங்கள் வியாபாரத்தைப் பற்றி பரிசுத்த ஆவியானவர் உங்களை இன்னும் தைரியமாக ஜெபிக்கத் தூண்டும் மூன்று பகுதிகளை கீழே எழுதுங்கள். உங்கள் "பாதுகாப்பான" ஜெபம் என்னவாக இருக்க முடியும் என்று குறிக்கவும். பிறகு, பரிசுத்த ஆவியுடன் நேரம் செலவிட்ட பிறகு, அவர் நீங்கள் ஜெபிக்க விரும்புவது என்ன என்பதை எழுதுங்கள்.

**கவனம் #1:** ____________________________________

பாதுகாப்பானது:

தைரியமானது:

**கவனம் #2:** ____________________________________

பாதுகாப்பானது:

தைரியமானது:

**கவனம் #3:** ____________________________________

பாதுகாப்பானது:

தைரியமானது:

இந்தப் பகுதி என் சக கோல்ஃப்
விளையாட்டாளர்களுக்கே மட்டும் ஒதுக்கப்பட்டுள்ளது!

**கோல்ஃப் கவனம்:** __________________________________

பாதுகாப்பானது:

தைரியமானது:

*குழு உரையாடல்*

உங்கள் "பயிற்சிசெய்" முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்? வருகின்ற இந்த வாரம் நீங்கள் வேறு எங்கு இதை நடைமுறைப்படுத்தலாம்?

உங்கள் "செயல்படுவதற்கு முன் சோதிக்கவும்" முடிவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். நீங்கள் என்ன கற்றுக்கொண்டீர்கள்?

உங்கள் "சாட்சியைத் தேடுங்கள்" செயல் திட்டங்களைப் பற்றி விவாதிக்கவும். உங்கள் சவால்கள் என்ன? மற்றவர்கள் எவ்வாறு பதிலளித்தார்கள்? சாட்சியை தேடுவதில் உங்களுக்கு ஆச்சரியமாகவோ அல்லது மகிழ்ச்சியாகவோ இருப்பது எது?

பரிசுத்த ஆவியை நீங்கள் அவித்துப்போடக்கூடிய சமீபத்திய வணிக சூழ்நிலையைப் பகிர்ந்து கொள்ளுங்கள். அந்த நேரத்தில் நீங்கள் அதை அங்கீகரித்தீர்களா? எதிர்காலத்தில் அதை நீங்கள் எப்படி அறிவீர்கள்?

உங்கள் "அசையாதிரு" செயல் திட்டங்களில் ஒன்றைப் பற்றி விவாதிக்கவும். இது ஏன் வணிகர்களுக்கு மிகவும் கடினமாக இருக்கும்?

உங்கள் வணிகத்திற்காக நீங்கள் இப்போது ஜெபிக்கிற 2–3 தைரியமான ஜெபங்கள் என்ன? நீங்கள் அவற்றை ஜெபிக்கும்போது உங்களுக்கு என்ன தோன்றுகிறது? நீங்கள் அவற்றை ஜெபிக்கும்போது உங்களுக்கு என்ன தயக்கம் இருக்கலாம், அதை எவ்வாறு சமாளிக்க முடியும்?

# 6

# தொடருங்கள்

*நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.*

— காலத்தியர் 6: 9

ஒரு விஷயத்தை தொடங்குவது எளிது. அதைத் தொடர்ந்து செய்வது... அதுதான் கடினமான பகுதி.

வியாபாரத்தில் உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை வெளிக்கொணரத் தொடங்கும் போது, உங்கள் வேகத்தை தக்க வைத்துக்கொள்ள உதவும் ஐந்து பகுதிகளை இந்த அத்தியாயம் வழங்குகிறது.

## 6.1. நன்மைகளை நினைவில் கொள்ளுங்கள்

*நன்மை (பெயர்ச்சொல்): ஒரு நல்லது அல்லது பயனுள்ள விளைவு; அன்பின் செயலாகும் ஒன்று; நல்வாழ்வை ஊக்குவிக்கும் ஒன்று.*

பல வருடங்களுக்கு முன்பு, எனக்கு வலது தோள்பட்டையின் "டெண்டினோசிஸ்—ஆஸ்டியோஆர்த்ரிடிஸ் அக்ரோமியோகிளாவிகுலர் மூட்டு மற்றும் சிறிய மூட்டு வெளியேற்றத்துடன்" இருப்பது கண்டறியப்பட்டது. சுருக்கமாக சொன்னால், என் வலது தோள்பட்டை கடுமையான வலியில் இருந்தது! வலி மிகவும் அதிகமாக இருந்ததால், என் பின்புற கால்சட்டை பாக்கெட்டில் இருந்த கைக்குட்டையை எடுக்க, நான் என் கையை பின்னால் நீட்ட முடியவில்லை. இரவில், நான் தூங்க முயற்சித்தபோது, என் வலது மேல் கையில் ஒரு கூர்முனை தள்ளப்படுவது போல் உணர்ந்தேன். எந்த நேரத்திலும் என் வலது கையை என் தோள்பட்டைக்கு மேலே நீட்ட முடியவில்லை.

ஃப்ளோரிடா மாநிலம், கல்ஃப் ப்ரீஸில் உள்ள உலகப் புகழ்பெற்ற ஆண்ட்ரூஸ் கிளினிக்-ல் இருக்கும் எலும்பியல் அறுவைச சிகிச்சை நிபுணர், எனக்கு மறுவாழ்வு மற்றும் உடற்பயிற்சி திட்டத்தை தொடங்க சொன்னபோது, அதன் நன்மைகள் குறித்து என்னை நம்ப செய்வது மிகவும் எளிதாக இருந்தது. நான் ஒரு நடை வலி நிவாரணியாக இருந்தேன், எனவே எனது தொடர்ச்சியான துன்பத்தை விட வேறு எதுவும் சிறந்தது.

இரண்டு வாரங்கள் லேசான உடற் சிகிச்சையை எளிதாக முடித்துவிட்டு, அதன் பிறகு வீட்டிலேயே செய்யக்கூடிய, தசை வலிமையை அதிகரிக்கும் தீவிரமான பயிற்சியைத் தொடங்கினேன். இந்தப் பயிற்சியை, முன்னாள் கல்லூரி கால்பந்து பயிற்சியாளரும், எனது நெருங்கிய நண்பருமான ஜான் சாக்சன் கண்காணித்தார். அதன் விளைவாக, நான் விரைவான மற்றும் கணிசமான முன்னேற்றத்தை கண்டேன், மேலும் உடல் வலிமை அதிகரித்தது, வலியும் பெரிதும் குறைந்தது.

ஒரு வாரத்தில் ஐந்து நாட்கள் பயிற்சி செய்வதை காலை வழக்கமாக மாற்றிக்கொண்ட பிறகு, நன்மைகளை நினைவில் கொள்வது எளிதாகி விட்டது.

என் வாழ்க்கையில் முதல் முறையாக, என் பைசெப்ஸ் மற்றும் ட்ரைசெப்ஸ் மீது தசைகள் உருவாகத் தொடங்கியது. எப்போதும் மெலிந்த உடல் அமைப்புடையவனாக இருந்த நான், இப்போது 60 வயதைக் கடந்திருந்தாலும், உண்மையான தசைகள் கொஞ்சம் கொஞ்சமாக உருவாகிக்கொண்டிருந்தன.

பயிற்சியின் நன்மைகள் நினைவிருக்கிறதா? எளிதாக. எனது வாராந்திர இலக்குகள் மற்றும் அளவீடுகள் மற்றும் துரிதப்படுத்தப்பட்ட பயிற்சிகளின் பதிவுகளைப் பாருங்கள். எனது உடற்பயிற்சியின் நன்மைகளால் நோட்புக் நிரம்பியுள்ளது. அதைத் தாண்டி, நான் இப்போது மிகவும் வலிமையாகவும், அதிக ஆற்றலுடனும், அதிக கவனம் செலுத்தியதாகவும், அதிக நம்பிக்கையுடனும் உணர்கிறேன். பயிற்சியின் வெளிப்படையான நன்மைகளை நினைவில் வைத்துக் கொண்டு, உணர்ந்து, நான் தொடர்ந்து முன்னேறி வருகிறேன்.

உங்கள் நியாயமற்ற அனுகூலத்தை வெளிப்படுத்துவதிலும் இதுவே உண்மை.

## *மறப்பது எளிது*

> *எங்கள் பிதாக்கள் எகிப்திலே உம்முடைய அதிசயங்களை உணராமலும், உம்முடைய கிருபைகளின் திரட்சியை நினையாமலும் போய், சிவந்தசமுத்திர ஓரத்திலே கலகம்பண்ணினார்கள்.*
>
> — சங்கீதம் 106:7

உங்கள் வியாபாரத்தில் நடக்கும் நல்ல விஷயங்களை நினைவில் வைத்திருப்பதைவிட, நடந்த அனைத்து மோசமான விஷயங்களையும் நினைவில் வைத்திருப்பது மிகவும் எளிது. உங்கள் அன்றாட வியாபார வாழ்க்கை, தடங்கல்கள், வழக்கமான

செயல்முறைகள், முறைகள் மற்றும் முடிவில்லா சவால்களாலும், அதனுடன் வரும் விரக்திகளாலும் நிரம்பியதாக இருக்கும்; இவை உங்களை, இன்று உள்ள பிரச்சனைகளில் மட்டும் கவனம் செலுத்துமாறு தள்ளுகிறது.

நாம் இயல்பாகவே வெற்றிகளையும் சாதனைகளையும் விட, தோல்விகள் மற்றும் போராட்டங்களை அதிகமாக நினைவில் வைத்திருக்கிறோம். இந்த இயல்பான தோல்விகளை உங்கள் நினைவுக்கு கொண்டு வருவது யார் என்று நீங்கள் ஒருபோதும் சிந்தித்ததுண்டா? பரிசுத்த ஆவியானவர் அல்ல ... அது நிச்சயம்!

நம்முடைய வியாபாரத்தில் முதல் எதிரி, இந்த உலகத்தின் பிரபுவான சாத்தான் தான் (எபே. 2:2). அவன் எல்லாவற்றிற்கும் மேலாக உங்கள் தொழிலில் கூட நல்லதை கொல்ல, திருட, அழிக்க விரும்புகிறான் (யோவான் 10:10). அவன் குறிப்பாக உங்களைப் போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையை பெற்ற, ஆவியால் நிரப்பப்பட்ட நிபுணர்களை குறிவைக்கிறான். பரிசுத்த ஆவியானவர் நம் வணிகங்களுக்குள்ளும், நம் வணிகங்கள் முழுவதும் செயல்பட்ட ஆசீர்வதிக்கப்பட்ட காலங்களை நாம் மிக எளிதாக மறந்துவிடுவதில் ஆச்சரியமில்லை.

உங்களைப்போலவே நானும் இதிலே போராடுகிறேன். பரிசுத்த ஆவியின் வழியாக, ஆண்டவர் எனது வியாபாரத்தை வழிநடத்திய எண்ணற்ற தெய்வீகமான, நல்ல, பரிசுத்தமான வழிகளை நினைவில் கொள்ள, நிறுத்தி சிந்திப்பதற்கு, எனக்கும் இன்னும் அதிகமாக கவனம் செலுத்தும் முயற்சி தேவை என்பதை நான் கற்றுக்கொண்டேன்.

விரைவாக எழுதுங்கள்… பரிசுத்த ஆவியானவர், உங்கள் வியாபாரம் அல்லது தொழிலில் தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு நிகழ்ச்சியை நீங்கள் நினைவில் வைத்திருப்பது பற்றி:

10 வருடங்களுக்கு முன்?

5 வருடங்களுக்கு முன்?

கடந்த வருடம்?

இந்த வருடம்?

கடந்த வாரம்?

நேற்று?

செய்ய எளிதான விஷயமாக இருந்தாலும், உண்மையில் கடினமாக இருக்கிறது. ஏன் தெரியுமா? நாம் பெரும்பாலும் வெற்றிகளை விட போராட்டங்களை அதிகமாகவே நினைவில் வைத்துக்கொள்கிறோம். பரிசுத்த ஆவியானவர் நமக்கு தெளிந்த மனதை (2 தீமோ. 1:7) கொடுத்திருந்தாலும், ஆண்டவர் — தமது ஆவியின் மூலம் — எத்தனை முறை எங்களை வழிநடத்தினார், பாதுகாத்தார், நம் வேலைகளில் முன்னேற்றம் கொடுத்தார் என்பதை மறந்து விடுவது மிகவும் எளிது.

உங்கள் புதிய, பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் முன்னேற்றத்தை தொடர, இதோ ஒரு எளிமையான மற்றும் வல்லமையுள்ள வழி.

## *உங்களுக்கான சிறந்த பத்து நன்மைகள் பட்டியல்*

> *அந்தக் காலம் வரும்போது நான் இவைகளை உங்களுக்குச் சொன்னேனென்று நீங்கள் நினைக்கும்படி இவைகளை உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன்; நான் உங்களுடனேகூட இருந்தபடியினால் ஆரம்பத்திலே இவைகளை உங்களுக்குச் சொல்லவில்லை.*
>
> — யோவான் 16:4

10 நிமிட இடைவெளி எடுத்துக்கொள்ளுங்கள். உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியை கட்டவிழ்த்துவிட்டதால் கிடைத்த 10 நன்மைகளை பட்டியலிட அவரிடம் உதவி கேளுங்கள்.

உங்கள் பட்டியல், பிறருடைய பட்டியல்களிலிருந்து வேறுபட்டதாக இருக்கும். பரிசுத்த ஆவியானவர் உங்கள் தனித்துவமான சூழலில் உங்கள் தனித்துவமான தாலந்துகள் மற்றும் திறமைகளுடன் உங்கள் தனித்துவமான நிறுவனத்தில் உங்கள் தனித்துவமான பொருப்பைப்பற்றி உங்களுடன் பேசுவார். இதில் வேதாகம வசனங்கள், ஊக்கமூட்டும் வார்த்தைகள், செயல்கள், அளவிடக்கூடிய பலன்கள் போன்ற பல்வேறு விஷயங்களும் சேர்ந்து இருக்கலாம்.

எனது தொழிலில் பரிசுத்த ஆவியை கட்டவிழ்த்து விடுவதன் மூலம் கிடைக்கும் முதல் பத்து நன்மைகள்...

1.

2.

3.

4.

5.

6.

7.

8.

9.

10.

சரி. இப்போ நீங்க இந்தப் பட்டியலை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

## *30 நாட்கள் நன்மைகளை கண்டறியும் சவால்*

> *கர்த்தருடைய செயல்களை நினைவுகூருவேன், உம்முடைய பூர்வகாலத்து அதிசயங்களையே நினைவுகூருவேன்;*
>
> — சங்கீதம் 77:11

அடுத்த 30 நாட்களுக்கு இந்தப் பட்டியலை எப்போதும் அருகில் வைத்திருங்கள். ஒரு நாளில் குறைந்தது இரு முறை அதை பார்த்து நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

உங்கள் கைப்பேசியில் ஒரு நினைவூட்டுப் பட்டியல் உருவாக்குங்கள். ஒவ்வொரு விஷயத்தையும் ஒரு நோட் கார்டில் எழுதுங்கள். அதை நீங்கள் அடிக்கடி பார்க்கக்கூடிய இடத்தில் ஒட்டி வையுங்கள்.

இந்தப் பட்டியலை வாசித்து அதில் தியானிப்பதன் மூலம், பரிசுத்த ஆவியின் வல்லமையை உங்கள் வணிகத்தில் மிகுதியான தாக்கத்தை உண்டாக்கும் வகையில் விரைவாக வெளிப்படுத்தும் ஆர்வத்தையும் ஊக்கத்தையும் உங்களுக்குள் உருவாக்குகிறீர்கள். ஏன் தெரியுமா? ஏனெனில், கடந்தகாலங்களில் அவர் இதனை ஏற்கனவே உங்களுக்காகச் செய்திருக்கிறார்.

## *நன்மைகளின் வல்லமை*

> *உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக; அவரே உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக்கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல, ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.*
>
> உபாகமம் 8:18

கர்த்தர் உங்கள் வியாபாரத்தில் நீங்கள் செழித்து வளர வல்லமையை தருகிறார். உங்கள் நன்மைகளின் பட்டியல் உங்களுக்கு ஒரு நிரந்தர நினைவூட்டலாக இருந்து, அவருடைய ஆவி உங்கள் எதிரிகளை வெல்வதற்கும், உங்கள் மலைகளை நகர்த்துவதற்கும், உங்களுள் செயல்பட்டு வருகிறதை நினைவூட்டும். அதே நேரத்தில், எல்லா மகிமையும் தேவனுக்கே உரியது என்பதை உங்களுக்கு தொடர்ந்து நினைவுபடுத்தும்.

## 6.2. பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்

*ஆதிமுதல் எல்லாவற்றையும் திட்டமாய் விசாரംத்தறிந்த நானும் உமக்கு உபதேசிக்கப்பட்ட விசேஷங்களின் நிச்சயத்தை நீர் அறியவேண்டுமென்று, அவைகளை ஒழுங்காய் உமக்கு எழுதுவது எனக்கு நலமாய்த் தோன்றிற்று.*

— லூக்கா 1:3-4

முந்தைய பகுதியில், “நன்மைகளை நினைவில் கொள்ளுங்கள்” என்ற தலைப்பில், கடந்த காலத்தைத் திரும்பிப் பார்த்து, பரிசுத்த ஆவியார் உங்கள் தொழிலில் கடந்த காலத்தில் எவ்வாறு செயல்பட்டார் என்பதை நீங்கள் நினைவுகூர்ந்தீர்கள்.

“பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்” என்பது எதிர்காலத்தை நோக்கியது. பரிசுத்த ஆவியாரை என் தொழிலின் முழுவதும் செயல்பட விடுவதால் கிடைத்த ஆசீர்வாதங்களைப் பதிவு செய்து வைத்துக்கொள்வதை நான் இவ்வாறு தொடங்கினேன்.

### *எனது மூன்று-பதிவு புத்தக முறை*

எனது பதிவு முறையில் 5”x8” அளவிலான கோடுகள் கொண்ட தோலினால் செய்யப்பட்ட மூன்று பதிவுப் புத்தகங்கள் உள்ளன: ஒரு வணிக குறிப்பேடு, ஒரு ஆவிக்குரிய குறிப்பேடு, மற்றும் ஒரு செய்தி குறிப்பேடு.

எனது பழுப்பு நிற வணிக குறிப்பேட்டில் பொதுவான வணிகக் குறிப்புகளை எழுதுவதற்கான திறந்த பகுதியும், என் வாடிக்கையாளர்கள் பற்றிய பதிவுகளும், புத்தகம் மற்றும் வலைப்பதிவு யோசனைகள், வணிகப்

பயன்கள் தொடர்பான பதிவுகள் போன்ற பிரிவுகளும் உள்ளன.

எனது கருப்பு நிற குறிப்பேடு, எனது தனிப்பட்ட ஆவிக்குரிய வளர்ச்சி குறிப்பேடு. இதில், பரிசுத்த ஆவியிடமிருந்து தினமும் பெறும் ஆவிக்குரிய உள்ளுணர்வுகள், வேதாகம ஆய்வு குறிப்புகள், மற்றும் என் தேவாலயத்தில் பகிரும் செய்திக்குறிப்புகளை பதிவு செய்கிறேன்.

எனது மூன்றாவது குறிப்பேடு (இதுவும் கருநிறம்) முழுமையாக நான் மதிக்கும், கற்றுக்கொள்ளும் சிறந்த வேதாகம போதகர்கள் மற்றும் ஆயர்கள் வழங்கும் பிரசங்கப் பாட்காஸ்ட்களை கவனித்து எடுக்கும் குறிப்புகளுக்காகவே அர்ப்பணிக்கப்பட்டது. இந்த குறிப்புகள், பிறர் செய்யும் ஊழியங்கள் மூலம் பரிசுத்த ஆவியால் எனக்கு கற்பிக்கப்படும் புதிய விஷயங்களின் பட்டியலை எனக்கு அளிக்கின்றன.

எனக்கு இந்த முறையே சிறப்பாகச் செயல்படுகிறது. வேலை செய்யும்போது, எனது பழுப்பு நிற வணிக குறிப்பேட்டை நான் அருகில் வைத்திருப்பேன். ஞாயிறு ஆராதனைகளில் பங்கேற்கும் போது, என் தனிப்பட்ட ஆவிக்குரிய குறிப்பேட்டை எடுத்துச் செல்வேன். பாட்காஸ்ட் கேட்கும்போது அல்லது டிவி / இணையத்தில் பிரசங்கங்களை பார்க்கும்போது, நான் அந்த பிரசங்க குறிப்பேட்டில் குறிப்புகளை எழுதுவேன்.

வாரத்திற்கு ஒருமுறை, இந்த குறிப்பேடுகளைப் பரிசீலித்து, முக்கிய வெளிப்பாடுகள், தீர்க்கதரிசன வார்த்தைகள், உள்ளுணர்வுகள், புதிய யோசனைகள், மற்றும் பரிசுத்த ஆவி என்னை நினைவூட்டச் சொல்லும் எதையும் மஞ்சள் நிறத்தில் ஹைலைட் செய்வேன்.

எனக்கு மிகவும் பிடித்த நேரங்களில் ஒன்று — இந்த குறிப்பேடுகளை எடுத்து, மஞ்சள் நிறத்தில் ஹைலைட் செய்யப்பட்ட பகுதிகளை மட்டும் வாசிப்பது. எனக்காக, அதுவே என் முறையின் உண்மையான சக்தி. இது, பரிசுத்த ஆவி என் வாழ்க்கையின் பல துறைகளில் என்னை எப்படி வழிநடத்துகிறாரென ஒரு

ஒழுங்குபடுத்தப்பட்ட பதிவாக உள்ளது. அதே நேரத்தில், இந்தப் பயணத்தைத் தொடர்வதன் நன்மைகளை நினைவில் வைத்திருக்கவும் உதவுகிறது.

இறுதியில், இந்த அனைத்து குறிப்பேடுகளும் மற்றும் குறிப்புகளும், பரிசுத்த ஆவியின் தாக்கத்தை என் வணிகத்தின் மூலம் மேலும் உயர்ந் நிலைகளுக்கு எடுத்துச் செல்ல, என்னை கட்டியெழுப்பி ஊக்குவிக்கின்றன.

பல நேரங்களில், அந்தப் பிரசங்கக் குறிப்புகள், கர்த்தர் என்னை பகிரச் சொல்வதற்கான ஒரு வணிகக் கருத்தோடு சரியாகப் பொருந்துகின்றன.

என் ஜெப நேரத்திலும், தியான வாசிப்புகளிலும் நான் பெறும் வெளிப்பாடுகள், என் ஆன்மாவை உயர்ந்த அளவிலான இணைப்பு மற்றும் உள்ளுணர்வுக்கு இட்டுச் செல்கின்றன.

வணிகக் குறிப்பேடு, என் ஆவியை, அவர் விரும்பும் பாதையில் செல்லும்படி, அவரின் ஆவியுடன் ஒருங்கிணைக்க உதவுகிறது.

இந்த மூன்று-குறிப்பேடு முறை உங்களுக்கு அதிகமாகத் தோன்றலாம், ஆனால் இது எனக்கு சிறப்பாக வேலை செய்கிறது.

## *இதோ ஒரு அருமையான யோசனை*

உங்களுக்கு எந்த பதிவு பராமரிப்பு முறை சிறந்தது என்று பரிசுத்த ஆவியிடம் ஏன் கேட்கக்கூடாது? (குறிப்பு #1: பயிற்சி செய்யுங்கள்!) அவருக்கு ஏற்கனவே தெரியும்!

அது எதுவாக இருந்தாலும், இப்போது துவங்குங்கள். காலப்போக்கில், உங்களுக்கு சிறப்பாகப் பொருந்தும், தொடர்ச்சியாக நடத்தக்கூடிய, உங்களை வழியில் நிலைத்திருக்க ஊக்கப்படுத்தும் ஒரு முறையை நீங்கள் செதுக்கிக் கொள்வீர்கள்.

அதுவே முக்கியம் — ஆரம்பியுங்கள், நிறுத்தாதீர்கள்!

அப்படி செய்தால், கடந்த காலத்தைப் பார்த்து, பரிசுத்த ஆவி எத்தனை முறை உங்கள் வணிக

முயற்சிகள், உங்கள் குழுவினர், உங்கள் வாடிக்கையாளர்கள், மற்றும் பல விஷயங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்பதை காண்பீர்கள்.

பிறகு, நீங்கள் தொடர்ந்து… தொடர்ந்து… தொடர்ந்து … செய்து கொண்டே இருப்பீர்கள்!

## 6.3. ஆவிக்குரிய காரியங்கள் அனைத்தும் கடவுளுடையவை அல்ல

> *அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக்கொண்டவர்களாயிருக்கிறார்கள். அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.*
>
> — 2 கொரிந்தியர் 11: 13-14

பரிசுத்த ஆவி என்னை, இந்த எச்சரிக்கை குறிப்பையும் சேர்க்க வழிநடத்தினார்: அனைத்துப் “ஆவிக்குரிய” காரியங்களும் தேவனிடமிருந்து வருபவை அல்ல.

நம் எதிரி பொய்களின் தந்தை; அவனில் உண்மை எதுவும் இல்லை (யோவான் 8:44–45). நீங்கள் உங்கள் வணிகத்தில் பரிசுத்த ஆவியை கட்டவிழ்க்க தீர்மானிக்கும் போது, சாத்தான் உங்களை நிறுத்தவும், தாமதப்படுத்தவும், மனத்தளர்ச்சி உண்டாக்கவும், கூடவே அழித்துவிடவும் முயற்சி செய்வான்.

எதிரியை தூரத்தில் வைத்திருக்க மூன்று வழிகள் இங்கே.

## *1. உண்மையை ஆராய்ந்து அறிக*

அமெரிக்காவில், நிதி துறையினர் போலி நோட்டுகளை அடையாளம் காண கற்றுக்கொள்வது, போலிகளைப் படித்து அல்ல — மாறாக உண்மையான நாணயத்தாள்களை ஆழமாக ஆராய்ந்து அறிதலின் மூலம். ஏன் உண்மையான நோட்டுகளை மட்டுமே படிக்க வேண்டும்? ஏனெனில் அவர்கள் உண்மையை (உண்மையான நோட்டின் பண்புகளை) நன்றாக அறிந்திருப்பதால், அதிலிருந்து வேறுபடும் எந்தச் சிறு விஷயத்தையும் பார்த்தவுடன் உடனே போலியை அடையாளம் கண்டு விடுவார்கள்; அப்போது மோசடி அங்கேயே முடிவடைகிறது.

அதேபோல், தேவனுடைய வசனத்தைப் படித்து அறிந்து கொள். நீங்கள் அவரது உண்மையை நன்றாக அறிந்திருக்கிறவராக இருந்தால், எதிரியின் பொய்களையும் ஏமாற்றங்களையும் உங்கள் வணிகத்தில் கண்டறிதல் மிகவும் எளிதாகிவிடும்.

## *2. இயற்கைக்கு அப்பாற்பட்டவற்றில் மட்டும் கவனம் செலுத்தாதீர்கள்*

வியாபாரத்திலோ அல்லது நம் வாழ்க்கையிலோ கடவுளின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைப் பார்த்து நாம் உற்சாகமடைவது எளிது. உண்மையில், பரிசுத்த ஆவி பெரும்பாலும் இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் நடத்துவார். இருப்பினும், பரிசுத்த ஆவியின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வெளிப்பாட்டில் மட்டும் கவனம் செலுத்த வேண்டாம் என்று நான் உங்களை எச்சரிக்கிறேன்.

உங்கள் பணியிடத்தில் பரிசுத்த ஆவி இயற்கைக்கு அப்பாற்பட்ட வழிகளில் தன்னை வெளிப்படுத்த முடியுமா? அடையாளங்கள் மற்றும் அதிசயங்கள்? சுகமளிக்கின்ற காரியங்கள்? இயற்கைக்கு அப்பாற்பட்ட நிதி உதவி? நிச்சயமாக, அவரால் முடியும்.

ஆனால் பெரும்பாலும், எனது வணிக அனுபவத்தில், பரிசுத்த ஆவியானவர் வேலையில் மிகவும் நுட்பமான ஆவிக்குரிய வழிகளில் செயல்படுகிறார். உதாரணமாக, நீங்கள் மென்மையான இதயம், குறைவான தனிப்பட்ட பதட்டங்கள், சிறந்த குழுப்பணி, அதிக கிருபை, அன்பு மற்றும் கருணை, மகிழ்ச்சியான ஊழியர்கள் மற்றும் அலுவலகத்தில் இன்னும் அதிக புன்னகையைக் காண்கிறீர்கள்.

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையைப் பற்றி கற்றுக்கொள்ளும்போது, அதை மட்டும் இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளாக (உதாரணமாக, உடல் சுகம் பெறுதல், எதிரியின் அடிமைத்தனத்திலிருந்து ஆவிக்குரிய விடுதலை பெறுதல் போன்றவை) தேடிக்கொண்டே இருப்பதில் சிக்கிக் கொள்வது எளிது.

ஒரு ஆயர் சொல்வது போல, " இயற்கைக்கு அப்பாற்பட்டவைகளைத் தேடி, ஆவிக்குரியவற்றைப் புறக்கணிக்காதீர்கள்." பரிசுத்த ஆவியானவரின் நுணுக்கமான அசைவுகளையும் கவனத்தில் கொள்ள, உங்கள் கண்களையும், காதுகளையும், இருதயத்தையும் திறந்து வைத்திருங்கள், ஏனெனில், நாம் நினைப்பதைக் காட்டிலும் அவை நிறைய நேரங்களில் நிகழ்கின்றன.

## *3. அது ஒத்துப்போகிறதா?*

> *சீர்கேடான வீண்பேச்சுகளுக்கு விலகியிரு; அவைகளால் (கள்ளப்போதகர்களான) அவர்கள் அதிக அவபக்தியுள்ளவர்களாவார்கள்;*
>
> — 2 தீமோத்தேயு 2:15

உங்கள் பணியிடத்தில் நீங்கள் உணருகிற ஒவ்வொரு ஆவிக்குரிய நிகழ்வையும், தேவனுடைய வார்த்தையோடும் பரிசுத்த ஆவியின் சாட்சியோடும் ஒப்பிட்டு பார்க்கவும். நீங்கள் காண்பதும் உணர்வதும்

தேவவார்த்தையோடு ஒத்துபோகின்றதாக இருந்தால், மேலும் உங்களுக்குள் பரிசுத்த ஆவியின் சாட்சி இருந்தால், அது பரிசுத்த ஆவியானவர் செய்கிற செயல் என்பதில் உறுதியாக இருக்கலாம்.

ஆனால், நீங்கள் காண்பதும் உணர்வதும் தேவவார்த்தைக்கு ஒத்துப்போகாமல், உள்ளுக்குள் எந்தச் சாட்சியும் இல்லாவிட்டால், அது மாம்சத்திலிருந்தோ அல்லது எதிரியிடமிருந்தோ வந்திருக்கக்கூடும். உங்கள் பணியிடத்தில் பரிசுத்த ஆவியானவரின் வழிகளையும், செயல்களையும் அறிந்து கொள்ளும் ஆவிக்குரிய உணர்வை வளர்த்துக் கொள்ளும் போது, அவரின் வழிகளையும், எதிரியின் வழிகளையும் நீங்கள் விரைவாகப் பிரித்தறிய கற்றுக் கொள்வீர்கள்.

## 6.4. பயிற்சியுடன் இருங்கள்

> *புத்திமான் இவைகளைக் கேட்டு, அறிவில் தேறுவான்; விவேகி நல்லாலோசனைகளை அடைந்து; நீதிமொழியையும், அதின் அர்த்தத்தையும், ஞானிகளின் வாக்கியங்களையும், அவர்கள் உரைத்த புதைபொருள்களையும் அறிந்துகொள்வான்.*
>
> — நீதிமொழிகள் 1:5-6

இங்கே, பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலால் நடத்தப்படும் ஒரு தொழில் ஆலோசகர், வழிகாட்டி, அல்லது உடன்படிக்கை குழுவுடன் சேர்ந்து செயல்பட வேண்டும் என்று நான் நேர்முகமாகவும் தயக்கமில்லாமல் உங்களை ஊக்குவிக்கிறேன்.

இந்த மூன்றில் ஏதேனும் ஒன்றுடன் பணியாற்றினாலும் அது நல்லது.

மூன்றிலும் சேர்ந்து செயல்பட்டால் அது அற்புதமாக இருக்கும்!

பல ஆண்டுகளாக நான் பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலுடன் தொழில் ஆலோசனைகள் வழங்கியதில் கற்றுக் கொண்ட ஒரு வருத்தமான உண்மை என்னவென்றால், மிகச் சில தொழில் தலைவர்களே வழிகாட்டுதலை ஏற்கத் தயாராக உள்ளனர். அவர்கள் மிகுந்த அகங்காரமுள்ளவர்களாகவோ, மிகுந்த “பிஸியாக” இருப்பவர்களாகவோ, அல்லது தங்களின் செயல்களுக்கு பொறுப்பேற்க வேண்டிய பயத்தால் தயங்குகிறவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், தாழ்மையான மனமும் கற்றுக்கொள்ளும் ஆவியும் உடையவர்கள், அனுபவமிக்க பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலுடன் இருக்கும் தொழில் ஆலோசகர்களைத் தேடி, அவர்களுடன் இணைந்து செயல்பட்டால், தங்கள் வாழ்க்கையிலும், தங்கள் தொழிலிலும், அப்படிச் செய்யாதவர்களைவிட மிக வேகமாக வளர்ச்சி அடைகிறார்கள்.

பல ஆண்டுகளாக, நானும் பல பரிசுத்த ஆவியின் வழிகாட்டுதலுள்ள தொழில்முறை நிபுணர்கள், பயிற்சியாளர்கள், வழிகாட்டிகள், மற்றும் பொறுப்புணர்வு குழுக்களின் கீழ் இருந்துள்ளேன். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவர்கள் என்னை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி, வேலை இடத்தில் கிறிஸ்துவுக்காக இன்னும் தைரியமாகவும், தீர்க்கதரிசன ஆவியுடனும், தாக்கமிக்க தூதராகவும் இருக்கத் தூண்டினார்கள்.

நான் போதிப்பதை நான் நடைமுறைப்படுத்துகிறேன்.
நீங்களும் அப்படியே செய்வீர்கள் என்று நான் பிரார்த்திக்கிறேன்.

## *என் 3-படிகள் கொண்ட பயிற்சி பொறுப்புணர்வு சூத்திரம்*

> *கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்களுக்குச் சொன்னார்.*
>
> — மாற்கு 4:9

நான் உங்களுக்கு எனது மிக வலிமையான, எளிமையான பயிற்சி சூத்திரங்களில் ஒன்றை கொடுக்க விரும்புகிறேன். இது மிகவும் எளிமையானதால், பல தொழில்முறை நபர்கள் இதை அலட்சியமாகப் பார்க்கிறார்கள். ஆனால், இந்த 3-படிகள் கொண்ட மாடலை ஏற்றுக்கொண்டவர்கள், 90 நாட்களுக்குள் தங்கள் வியாபாரத்தில் மாற்றத்தை உருவாக்கும் பலன்களை அனுபவித்துள்ளனர்.

முதலில், அடுத்த 90 நாட்களுக்கு அவர்கள் விரும்பும் குறிப்பிட்ட இலக்குகளை நாம் தீர்மானித்த பின், நான் இந்த வணிக நபர்களை கீழே உள்ள மூன்று எளிய கேள்விகளுக்கு பதிலளிக்கச் சவால் விடுகிறேன்:

- இலக்குகளை அடைய நீங்கள் தொடங்க வேண்டியது என்ன?
- இலக்குகளை அடைய நீங்கள் நிறுத்த வேண்டியது என்ன?
- இலக்குகளை அடைய நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டியது என்ன?

தொடங்கு.
நிறுத்து.
தொடர்.

பிறகு, என் ஆலோசனைச் செயல் என்கிற பங்கு, முன்னேற்றத்தைச் சரிபார்த்து, திருத்தங்களைச் செய்து, அவர்களின் இலக்குகளை முழுமையாக நிறைவேற்றும்

வரை வழிநடத்த உதவும் ஒரு பொறுப்புக்கூட்டாளர் என்கின்ற பங்காக மாறுகிறது.

நீங்களும் முயற்சி செய்து பாருங்கள்.

கீழே, உங்கள் வேலைஸ்தலத்தில், உங்கள் நியாயமற்ற போட்டித் திறனை வெளிப்படுத்த நீங்கள் தொடங்க, நிறுத்த அல்லது தொடர வேண்டிய 2–3 விஷயங்களை குறிப்பிடுங்கள்.

**நான் தொடங்க வேண்டியது என்ன?**

1.

2.

3.

**நான் நிறுத்த வேண்டியது என்ன?**

1.

2.

3.

**நான் தொடர்ந்து செய்ய வேண்டியது என்ன?**

1.

2.

3.

உங்கள் பட்டியலை மற்றொரு 2% ஆட்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். அந்த நபரையும், அவருக்கான

பட்டியலை உருவாக்கச் சொல்லுங்கள். பிறகு, நீங்கள் இருவரும் ஒருவருக்கொருவர் பொறுப்புக் கூட்டாளர்களாக இருந்து, ஊக்கப்படுத்தி, தேவையான திருத்தங்களைச் செய்து, கேள்விகள் கேட்டு, வெற்றிகளை கொண்டாடி செயல்படுங்கள்.

அதிலும் சிறந்தது — பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படும் தொழில்முறை ஆலோசனையை வழங்கும், கட்டண அடிப்படையிலான ஆலோசகரை தேடுங்கள். ஏனெனில், ஒரு ஆலோசகருக்காக நீங்கள் உங்கள் பணத்தை முதலீடு செய்தால், உங்கள் உறுதிமொழிகளையும், அவர்களின் ஆலோசனைகளையும் நிறைவேற்றும் வாய்ப்பு மிகவும் அதிகரிக்கும்.

## 6.5. இது அனைத்தும் தாக்கம் பற்றியது

> *ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.*
>
> — மத்தேயு 28:19–20

இறுதியில், நாடுகளை இயேசுவுக்காக சீஷர்களாக ஆக்கும் பணி பற்றியே அனைத்தும் அமைகிறது. இந்த வீழ்ந்துபோன உலகில், நற்செய்தி மூலமாக நாம் ஏற்படுத்தும் தாக்கத்தின் அடிப்படையில் தான், பூமியில் நாம் செய்த பணிகள் அளவிடப்படும்.

> “அன்றியும், அவர் அவர்களுடனே கூடிவந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங்கொடுத்தான்; நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார்.” (அப்போஸ்தலர் 1:4–5)

இந்த வாக்குத்தத்தம் உங்களிலும், என்னிலும் வாழ்கிறது. இப்போது, அந்த வாக்குத்தத்தத்தை உங்கள் வேலைத்தளத்தில் மேலும் வலிமையாக வெளிப்படுத்தி, நாம் அனைவரும் விரும்பும் அந்தச் சிறந்த தாக்கத்தை உருவாக்கலாம் — அதாவது கேட்கப்படவேண்டிய வார்த்தை…

> "அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமமும் உண்மையுமான ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின் மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்." (மத்தேயு 25:21)

இந்தப் புத்தகம், பரிசுத்த ஆவியின் வல்லமையை உங்கள் வணிகத்தில் கட்டவிழ்த்தப்படுவதன் மூலம், நீங்கள் நித்திய தாக்கத்தை அடையும் வழியில் இன்னொரு படி முன்னேற உங்களுக்கு உதவியிருக்கிறது என நான் ஜெபிக்கிறேன்.

*குழு கலந்துரையாடல்*

“பரிசுத்த ஆவியின் வல்லமையை” உங்கள் வணிகத்தில் கட்டவிழ்த்து விடுவதால் கிடைக்கும் “மிக முக்கியமான பத்து நன்மைகள்” பட்டியலை பகிர்ந்து கொள்ளுங்கள். மற்றவர்களின் பட்டியலிலிருந்து உங்களுக்கு உதவியாக இருக்கும் நன்மைகள் என்ன?

“பதிவு செய்து வைத்துக் கொள்ளுங்கள்” என்ற உங்கள் தற்போதைய திட்டம் என்ன? அதை நீங்கள் பின்பற்றுகிறீர்கள் என்பதை இந்தக் குழு எவ்வாறு கண்காணிக்க உதவும்?

“தொடங்கு – நிறுத்து – தொடரு” என்ற உங்கள் பட்டியல்களை பகிருங்கள். உங்கள் பட்டியலை ஒரு கண்காணிப்பு கூட்டாளியுடன் பகிர்ந்து, 30 நாட்களுக்கு ஒரு கண்காணிப்பு அட்டவணையை உருவாக்குங்கள்.

ஒரு வணிக அல்லது ஆவிக்குரிய பயிற்சியாளர் உங்கள் பரிசுத்த ஆவியுடனான நடையை எவ்வாறு மேம்படுத்த முடியும்?

உங்கள் புதிய ஆவிக்குரிய மற்றும் தொழில்முறை நடைப்பாதையில் நீங்கள் கற்றுக்கொண்ட அனைத்தையும் தொடர்ந்து முன்னெடுக்க எப்படி திட்டமிடுகிறீர்கள்?

# 1001 கேள்விகளுக்கான பதில்

*1001 கேள்விகளுக்கான பதில்... ஆவியால் நடத்தப்படுங்கள்!*

— பாஸ்டர் கீத் மூர்

# முக்கிய வேத வசனங்கள்

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை உங்கள் வியாபாரத்தில் கட்டவிழ்த்துவிட உங்களுக்கு உதவும் முக்கிய வேதாகம வசனங்கள் இங்கே உள்ளன. இந்த வசனங்களை அடிக்கடி வாசித்து மனப்பாடம் செய்யுங்கள். இவற்றை எப்போதும் அருகில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த வார்த்தைகளை உங்கள் இருதயத்தின் ஆழத்தில் பதித்து வைத்துக்கொள்ளுங்கள்.

> மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்.

— ரோமர் 8:14

> நாம் தேவனுடைய பிள்ளைகளாய் இருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்.

— ரோமர் 8:16

> நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அபொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார். உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப்

பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

— யோவான் 14:16–17

சத்திய ஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்; அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார்.

— யோவான் 16:13

என்னுடைய தாசனாகிய காலேப் வேறே ஆவியை உடையவனாயிருக்கிறபடியினாலும், உத்தமமாய் என்னைப் பின்பற்றிவந்தபடியினாலும், அவன் போய்வந்ததேசத்திலே அவனைச் சேரப்பண்ணுவேன்; அவன் சந்ததியார் அதைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

— எண்ணாகமம் 14:24

உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்.

— நீதிமொழிகள் 3:5–6

எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள். இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.

எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ்செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ஆவியை அவித்துப்போடாதிருங்கள்.

— 1 தெசலோனிக்கேயர் 5:16–19

ஆகிலும் அவைகளில் ஒன்றையுங்குறித்துக் கவலைப்படேன்; என் பிராணனையும் நான் அருமையாக எண்ணேன்; என் ஓட்டத்தைச் சந்தோஷத்தோடே முடிக்கவும், தேவனுடைய கிருபையின் சுவிசேஷத்தைப் பிரசங்கம்பண்ணும்படிக்கு நான் கர்த்தராகிய இயேசுவினிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றவுமே விரும்புகிறேன்.

— அப்போஸ்தலர் 20:24

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள்.

— 1 யோவான் 2:15–16

வாசலைக் காக்கிறவன் அவனுக்குத் திறக்கிறான்; ஆடுகளும் அவன் சத்தத்துக்குச் செவிகொடுக்கிறது. அவன் தன்னுடைய ஆடுகளைப் பேர்சொல்லிக் கூப்பிட்டு, அவைகளை வெளியே

நடத்திக்கொண்டுபோகிறான். அவன் தன்னுடைய ஆடுகளை வெளியே விட்டபின்பு, அவைகளுக்கு முன்பாக நடந்துபோகிறான், ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.

— யோவான் 10:3–4

எழுதியிருக்கிறபடி: தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காதுகேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை; நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்; அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷனுக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.

—1 கொரிந்தியர் 2:9–11

நாங்களோ உலகத்தின் ஆவியைப்பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்கு தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.

— 1 கொரிந்தியர் 2:12

நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம்

இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்..

— ரோமர் 12:2

நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து, எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.

— கொலோசெயர் 3:23–24

எவையெனில், விக்கிரகங்களுக்குப்படைத்தவைகளுக்கும், இரத்தத்திற்கும், நெருக்குண்டு செத்ததிற்கும் வேசித்தனத்திற்கும், நீங்கள் விலகியிருக்கவேண்டுமென்பதே.

— அப்போஸ்தலர் 15:28

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் Eொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள் அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.

— மத்தேயு 7:7

அன்றியும், நீங்கள் மீட்கப்படும்நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்.

— எபேசியர் 4:30

அவருடைய தாய் வேலைக்காரரை நோக்கி: அவர் உங்களுக்கு என்ன சொல்லுகிறாரோ, அதின்படி செய்யுங்கள் என்றாள்.

— யோவான் 2:5

யாபேஸ் இஸ்ரவேலின் தேவனை நோக்கி: தேவரீர் என்னை ஆசிர்வதித்து, என் எல்லையைப் பெரிதாக்கி, உமது கரம் என்னோடிருந்து, தீங்கு என்னைத் துக்கப்படுத்தாதபடிக்கு அதற்கு என்னை விலக்கிக் காத்தருளும் என்று வேண்டிக்கொண்டான்; அவன் வேண்டிக்கொண்டதை தேவன் அருளினார்.

— 1 நாளாகமம் 4:10

நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்துபோகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.

— கலாத்தியர் 6:9

# ஒரு அழைப்பு

இப்போது நீங்கள் "நமது நியாயமற்ற அனுகூலம்" என்னும் பயணத்தை நிறைவு செய்துள்ளீர்கள். இச்சமயம் உங்கள் இருதயத்தில் வெடித்து பரவ வேண்டிய ஒரு உண்மை — அது தேவனின் நன்மை. அவர் உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு சிறு விஷயத்தையும் எவ்வளவு அக்கறையுடன் கவனிக்கிறார், மேலும் நீங்கள் உங்கள் கைகளின் பிரயாசம் அனைத்தையும் மிகுந்த அளவில் ஆசீர்வதிக்கவும், வளப்படுத்தவும் விரும்புகிறார். அவர் உங்களை எந்த செல்வாக்கின் உச்சிக்குச் செல்ல வடிவமைத்திருந்தாலும், அந்தப் பயணத்தில் அவர் உங்கள் பாதுகாவலன், வழிகாட்டி, ஆசிரியர், நண்பர் மற்றும் பிதாவாக இருப்பதை விரும்புகிறார். ஏன் தெரியுமா? ஏனெனில் அவர் உங்களை நேசிக்கிறார், மேலும் உங்கள் வாழ்க்கைக்காக அற்புதமான ஒரு திட்டம் வைத்திருக்கிறார்.

அப்படியானால், இந்த அழைப்பு என்ன? நான் உங்களை, தேவனுடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மூலம், தேவனுடன் ஒரு தனிப்பட்ட உறவுக்குள் வர அழைக்க விரும்புகிறேன்.

இந்தப் புத்தகம் ஏற்கனவே இயேசுவுடன் உறவுடையவர்களுக்காக எழுதப்பட்டிருந்தாலும், இதை நீங்கள் படிக்கும்போது, உங்களுக்கு இயேசுவுடன் தனிப்பட்ட உறவு இல்லையென்று உணரக்கூடும். நீங்கள் தேவனைப் பற்றி அறிவீர்கள், ஆனால் அவர் உங்களை நேசித்த அன்பை உணர்ந்ததில்லை, அல்லது உங்கள் வாழ்க்கைக்கான அவரது திட்டத்தை அறிந்ததில்லை.

தேவன் கொடுக்க விரும்பும் அனைத்தும், இயேசுவுடன் உள்ள உறவின் மூலம் மட்டுமே கிடைக்கக்கூடும். வேதாகமத்தில் யோவான் 3:16-ல் நாம் இதை அறிகிறோம்: "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்."

தேவனுடைய பரிபூரண ஜீவனை நீங்கள் அனுபவிப்பதே தேவனுடைய திட்டம். இதை இயேசு தம் சீஷர்களிடம் தெளிவாகச் சொன்னார்: " நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்." (யோவான் 10:10).

நீங்கள் நினைக்கலாம்: "ஆனால் நான் பரிபூரணமான ஜீவனை அனுபவிப்பது போல எதுவும் தெரியவில்லை… குறைந்தபட்சம் என் உள்ளத்தில் அப்படியில்லை." அதற்குக் காரணம், "எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகினோம்" (ரோமர் 3:23). நாம் தேவனுடன் உறவு வைத்திருக்கவும், அவருடைய ஜீவனையும் அன்பையும் அறியவும் படைக்கப்பட்டவர்கள். ஆனால் நம்முடைய மன்னிக்காத மனம், கசப்பு, கிளர்ச்சி/கலகம், அல்லது அக்கறையின்மை — இவை அனைத்தும் தேவன் பாவம் என்று அழைப்பவை. அது, மற்ற மனிதர்களிடமிருந்து நம்மைப் பிரிப்பதுபோல, தேவனிடமிருந்தும் நம்மைப் பிரிக்கிறது.

வேதாகமம் சொல்லுகிறது, நமது பாவத்திற்கான தண்டனை மரணம் தான். ஆனால் சுவிசேஷத்தின் நற்செய்தி என்னவென்றால் — அந்த தண்டனையை இயேசு நமக்காகச் செலுத்தினார்… உங்களுக்காகவும்! "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8). வேதாகமம் அறிவிக்கிறது, இயேசு ரோம சிலுவையில் மரித்தார், ஒரு

கல்லறையில் அடக்கம் செய்யப்பட்டார், மூன்றாம் நாளில் உயிரோடு எழுந்தார். அவர் இவ்வாறு செய்தபோது, நமது பாவத்திற்கான விலையை மட்டும் அல்லாமல், மரணத்தையும் ஜெயித்தார். இதனால்தான் அவர் தம் சீஷர்களிடம் சொல்ல முடிந்தது: “அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.” (யோவான் 14:6).

எதையும் விட, ஒரு நல்ல தந்தை தன் பிள்ளைகளுடன் நெருக்கமாக இருக்க விரும்புவதைப் போலவே, உங்கள் பரலோகப் பிதாவும் உங்களுடன் நெருக்கமான உறவை விரும்புகிறார். நீங்கள் ஒருபோதும் தேவனுடைய அன்பை அனுபவித்திருக்கவில்லை என்றால், இப்போதே அதை அனுபவிக்கலாம்! நீங்கள் இயேசு கிறிஸ்துவை நம்பினால் — அவர் உங்கள் பாவத்திலிருந்து உங்களை மீட்பதற்காக மரித்தார், மற்றும் உயிர்த்தெழுந்தார் என்பதை விசுவாசித்தால் — நீங்கள் மீட்கப்படுவீர்கள். உண்மையில், இயேசு சொன்னார், நீங்கள் “மறுபடியும் பிறப்பீர்கள்” என்று. அதாவது, நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக ஒரு புதிய குடும்பத்தில் பிறக்கிறீர்கள். யோவான் 1:12 இவ்வாறு கூறுகிறது: “அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக்கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்.”

நீங்கள் இயேசுவின் ஜீவனை உங்களுக்குள் பெற்றுக்கொண்டு, தேவனுடைய பிள்ளையாக “மறுபடியும் பிறக்க” விரும்பினால், அது எளிதுதான். தேவன் நீங்கள் எங்கு இருக்கிறீர்கள் என்பதை அறிகிறார். அவர் உங்கள் வார்த்தைகளில் அல்ல, உங்கள் இருதயத்தில் அதிக அக்கறை கொண்டவர். நீங்கள் உங்கள் சொந்த வார்த்தைகளில் அவரை நோக்கி அழைக்கலாம்; அவர் உங்களை கேட்கிறார்.

உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், இதோ உங்களை வழிகாட்ட ஒரு எளிய ஜெபம்:

> இயேசுவே, எனக்கு நீங்கள் தேவை. என் பாவங்களுக்காக நீங்கள் சிலுவையில் மரித்தீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். என் இருதயத்தைத் திறந்து, உங்களை என் இரட்சகராகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்கிறேன். என் பாவங்களை மன்னித்து, எனக்கு நித்திய ஜீவனை அளித்ததற்கு நன்றி. என் வாழ்க்கையின் மீதான கட்டுப்பாட்டை உங்களிடம் ஒப்படைக்கிறேன். என் இருதயத்தின் சிங்காசனத்தில் வந்து அமர்ந்து, என் வாழ்க்கையில் நீங்கள் விரும்பியதைச் செய்யுங்கள். என்னை நீங்கள் விரும்பும் ஒரு மனிதராக மாற்றுங்கள்.

நீங்கள் இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவரை உங்கள் இரட்சகராகவும் ஆண்டவராகவும் அழைத்திருந்தால், நீங்கள் தேவனுடன் ஒரு புதியதும் உற்சாகமூட்டுவதுமான உறவுக்குள் நுழைந்துவிட்டீர்கள்! இதற்காக நாங்கள் உங்களுடன் சேர்ந்து மகிழ விரும்புகிறோம். தயவுசெய்து hello@DrJimHarris.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு எழுதுங்கள்; உங்கள் புதிய வாழ்க்கைக்காக நாங்கள் உங்களுடன் மகிழ முடியும்!

— பென் வாட்ஸ், போதகர் மற்றும் அப்போஸ்தல ஆசிரியர்

# டாக்டர் ஜிம் ஹாரிஸ் பற்றி

டாக்டர் ஜிம் உலகம் முழுவதும் உள்ள வணிகம், அரசு மற்றும் ஊழியம் சார்ந்த தலைவர்களுக்கு ஒரு ஆசிரியராகவும், தொலைக்காட்சி தொகுப்பாளராகவும், பரிசுத்த ஆவியால் நடத்தப்படும் ஆலோசகராகவும் சேவை செய்கிறார்.

"நமது நியாயமற்ற அனுகூலம்" என்னும் புத்தகத்தை எழுதுவதற்கு முன், டாக்டர் ஜிம் உலகின் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படும் பல நிறுவனங்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார். அதில் Walmart, IBM, Best Buy, State Farm (அமெரிக்கா மற்றும் கனடா), Johnson & Johnson, Ford Motors, Outokumpu Oy (பின்லாந்து), Nature’s Way Foods (இங்கிலாந்து) மற்றும் இது போல பல நிறுவனங்கள் அடங்கும்.

இன்று, டாக்டர் ஜிம் “The Unfair Advantage Show” என்ற நிகழ்ச்சியை நடத்துகிறார். இதில், வழக்கு ஆய்வுகள், நேர்காணல்கள், மற்றும் ஆழமான போதனைகள் மூலம், உங்கள் வியாபாரத்தில் பரிசுத்த ஆவியின் முழு வல்லமையையும் எப்படி வெளிப்படுத்துவது என்பதை நீங்கள் அறியலாம்.  இந்த நிகழ்ச்சியை JCCEOS.TV-இல், அவரது வலைதள சேனல்களில், அல்லது எந்த பெரிய பாட்காஸ்ட் தளங்களிலும் கேட்கலாம்.

டாக்டர் ஜிம் அவர்களின் முக்கிய ஆர்வம் — வணிகத் தலைவர்கள் தங்கள் நிறுவனங்களில் தேவனுடைய இராஜ்ஜியத்தின் வெளிப்பாடுகளை எப்படி ஒருங்கிணைக்கலாம் என்பதை கற்பிப்பதே. இதன் மூலம், அவர்கள் தங்கள் வணிகத்தில் 30, 60, கூட 100 மடங்கு வளர்ச்சி பெற்று, அனைத்தையும்

இயேசுவுக்காக கடைசி நாட்களில் ஆத்துமாக்களை அறுவடை செய்வதற்கான நிதியாக பயன்படுத்தலாம்.

டாக்டர் ஜிமை தொடர்புகொண்டு பின்தொடர:

- E-mail: Hello@DrJimHarris.com
- Web: www.DrJimHarris.com
- LinkedIn: www.linkedin.com/in/drjimharris
- YouTube: @drjimharris
- Twitter/X: @drjimharris
- Facebook: @drjimharris
- Instagram: @drjimharris

"நமது நியாயமற்ற அனுகூலம்" என்னும் புத்தகத்தை அதிக எண்ணிக்கையில் வாங்க, தயவுசெய்து High Bridge Books-ஐ www.HighBridgeBooks.com/contact மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.



DR. JIM HARRIS

## நமது *நியாயமற்ற அனுகூலம்* புத்தகத்திற்கான பாராட்டு

"உங்கள் தொழில் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியின் பங்கு குறித்த குழப்பங்களை டாக்டர் ஜிம் தெளிவுபடுத்துகிறார். உங்கள் வணிகத்தை மாற்றும் வல்லமையை விடுவிக்க, செயல்படுத்தக்கூடிய ஆவிக்குரிய கோட்பாடுகளை அவர் வழங்குகிறார்."
— கைல் வின்க்லர் / Silence Satan என்ற புத்தகத்தின் ஆசிரியரும் Shut Up, Devil! செயலியை உருவாக்கியவர்

"உங்கள் வேலை-வாழ்க்கையில் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரும் அனுபவத்திற்கு தயாராகுங்கள்."
— லெரே ஹெய்ன் / தலைவர் & தலைமை செயல் அதிகாரி, Windows of Heaven (Jesus' Storehouse)

"*நமது நியாயமற்ற அனுகூலம்* உங்கள் ஆவிக்குரிய வாழ்க்கையையும், உங்கள் வணிக வாழ்க்கையையும் உயர்ந்த நிலைக்கு எடுத்துச் செல்லும்."
— ஜிம் பிராங்கென்பெர்க் / நிறுவனர், iWork4Him Business Talk Show

"*நமது நியாயமற்ற அனுகூலம்* ஆவியானவரால் நடத்தப்படுவதின் மாறாத சத்தியத்தை, புதுமையான விழிப்புணர்வுடன் மீண்டும் உயிர்ப்பிக்கிறது."
— ஷேன் சாட்டர்ஃபீல்ட் / பிராந்திய துணைத் தலைவர், Marketplace Chaplains International, Inc.

"*நமது நியாயமற்ற அனுகூலம்* மென்மையாகவும், அதே சமயம் வலுவாகவும், என்னை இன்னும் நோக்கமுள்ள வாழ்க்கைக்குத் தூண்டும் தெளிவான பாதையை வரைந்து காட்டுகிறது."
— கேவின் W. மெகார்த்தி / The On-Purpose Person மற்றும் The On-Purpose Business Person ஆகியவற்றின் ஆசிரியர்

HIGH BRIDGE BOOKS
*Inspiring Thought Leaders*

ISBN 978-1-962802-29-1
90000
9 781962 802291